
# திருமண முறிவுகளைத் தவிர்க்கும் வழிமுறைகள்



தங்கராசா சிவபாலு



# திருமண முறிவைத் தவிர்க்கும் வழிமுறைகள்

ஆக்கியோன்

**தங்கராசா சிவபாலு**

B.Ed. Hons, M.A.,

**மணிமேகலைப் பிரசுரம்**

தபால் பெட்டி எண்: 1447,
7 (ப.எண்: 4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை — 600 017.
தொலைபேசி: 24342926, 24346082
மின் அஞ்சல் : manimekalai1@dataone.in
இணைய தளம் : www.tamilvanan.com

# நூல் விவரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | **திருமண முறிவைத் தவிர்க்கும் வழிமுறைகள்** |
| ஆசிரியர் | **தங்கராசா சிவபாலு** |
| உரிமை | ஆசிரியருக்கே |
| மொழி | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | 2010 |
| பதிப்பு விவரம் | முதற் பதிப்பு |
| தாளின் தன்மை | மேப்லித்தோ |
| நூலின் அளவு | கிரௌன் சைஸ் (12 X 18 செ.மீ) |
| அச்சு எழுத்து அளவு | 10.5 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | x + 230 = 240 |
| நூலின் விலை | ரூ. 90.00 |
| அட்டைப்பட ஓவியம் | ஓவியர் ஜமால் |
| லேசர் வடிவமைப்பு | ஸ்ரீ விக்னேஷ்வரா கிராஃபிக்ஸ், போன் : 2650 3802. |
| அச்சிட்டோர் | பிவி.ஆர். ஆப்செட், சென்னை–94. |
| நூல் கட்டுமானம் | தையல் |

# சமர்ப்பணம்

எனை ஈன்று புறந்தந்து பாலூட்டித் தாலாட்டி அறிவூட்டி
வளர்த்தெடுத்த தாய் தந்தையருக்கும்
பெற்ற பிள்ளைகளுக்கிணையாய் எனையணைத்து
கல்வியறிவு பெற உறுதுணையாய் இருந்த
சிற்றன்னை - சித்தப்பா குடும்பத்திற்கும்
இந்நூல் சமர்ப்பணம்

# பொருளடக்கம்


1. மணமுறிவு ஏன்? - 1
2. திருமணத்திற்கு முதலில் கவனத்தில் கொள்ள வேண்டியவை - 12
3. மணமுறிவான அல்லது பிரிந்துவாழும் பெற்றோரும் பிள்ளைகளும் - 23
4. குறைபாடுடைய பிள்ளைகள், பெற்றோரின் மணமுறிவுக்குக் காரணமாகின்றார்களா? - 28
5. தனித் தாய்மாரும் பிள்ளைகளும் - 33
6. பெற்றோர் பிரிந்து வாழ்வதால் பிள்ளைகளுக்கு ஏற்படும் உள, உடலியற் பாதிப்புகள் - 44
7. குடும்பப் பிணைப்பில் உணவு - 65
8. ஆண்களும் மணமுறிவும் பிரிந்திருத்தலும் - 78
9. பிள்ளைகள் மற்றும் மனைவிக்கான அல்லது துணைவிக்கான உதவிப்பணம் - 84
10. தனிப் பெற்றோரும் பிள்ளைகளும் - 91
11. தனிமையாகிவிட்ட பெற்றோரின் வெற்றி நடை - 97
12. மணமுறிவடைந்து பிரிந்து வாழும் பெற்றோரின், பிள்ளைகள் மீதான பாட்டன் பாட்டிக்கான (Grand Parents) உரிமை - 106

13. சக்களத்திச் சண்டையும்
குடும்பப் பிரிவினைகளும் - 127

14. ஓரினச் சேர்க்கை சட்டமாக்கப்படுவதால்
ஆண் பெண் திருமண உறவைப் பாதிக்குமா? - 132

15. பலதார மணமும் மணமுறிவும் - 152

16. இரண்டாந்தார மணமும் மணமுறிவும் - 161

17. சிறுவிடயங்களில் ஏற்படும்
சினமும் சீற்றமும் மணமுறிவுகளும் - 173

18. இலங்கை, இந்திய நாடுகளில் மணமுறிவும்
அதன் தாக்கங்களும் மரபு வழி
முறைகளும் மணமுறிவும் - 189

19. இந்திய மணமுறிவு ஆலோசனையில்
உள்ள சிக்கல்கள் - 195

20. பெண்கள் மீதான வன்முறைகள் ஒருபோதும்
சமாதானப்படுத்தப்படவோ அல்லது
ஏற்றுக்கொள்ளவோ முடியாதவொரு குற்றச்செயல் - 203

21. இந்திய திருமணச் சட்டமும்
முஸ்லிம் பெண்களின் நிலையும் - 214

22. இந்துக்களும் மணமுறிவும் - 224


❖ ❖ ❖

# அணிந்துரை

## பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி

றொறன்ரோ பாடசாலை குடியமர்வுச் சேவை ஆலோசகர்

றொறன்ரோவில் கடந்த பத்து ஆண்டுகளாகப் பாடசாலைகளிலும், சமூக சேவை அமைப்புக்களோடும் தொடர்ச்சியாகச் சேவை செய்து வருகின்ற அனுபவத்தின் அடிப்படையில் 'கனடாவில் வாழும் மக்களிடையே மணமுறிவுகள் எந்தளவுக்கு இடம்பெற்று வருகின்றன? அவற்றுக்குரிய அகப்புறக் காரணிகள் எவை?' என்பனபற்றி நன்கு அறியக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. அப்பின்னணியில் இந்நூலை நோக்கும்போது இது நம் சமூகத்தினருக்கு மிகவும் பயன்படத்தக்கதொரு சிறந்த நூல் என்பதை உறுதியாகக் கூறலாம்.

திருமணம் என்பது ஆணும் பெண்ணும் கருத்தொருமித்து இரு மனங்களும் ஒன்றாகக் கலந்து வாழ்வாங்கு வாழத் தலைப்படுவதற்கான சம்பிரதாயபூர்வமானதும் சட்டரீதியானதுமான ஓர் ஒப்பந்தமாகும். கருத்தொருமித்த இருவர் ஒருங்கிணைந்து மனையறமாம் நல்லறத்தில் ஈடுபட அடியெடுத்து வைக்கும் நாளே திருமண நாள். திருமணம் செய்யக் காத்திருப்போரும், திருமணம் செய்துகொண்டோரும் மணவினை முறைகள் பற்றிய கருத்துக்களையும். குடும்ப வாழக்கையின் விழுமியங்களையும் அறிந்திருத்தல் வேண்டும். வாழ்வின் அர்த்தங்கள், திருமண வாழ்வின் விழுமியங்கள், ஆண் பெண் உறவின் புனிதம், பிள்ளைச்

செல்வங்களின் அருமை, சமூகப் பொறுப்புணர்வு என்பன பற்றி நன்கு புரிந்துகொள்ளாதோரின் செயல்பாடுகளினாலேயே திருமணங்கள் முறிவடைந்து போகின்றன. ஆண்-பெண் உறவு என்பது பாலுறவுக்கு அப்பால் குடும்ப நன்மை, குடும்ப வளர்ச்சி, எதிர்காலச் சந்ததியினரின் நல்லியல்புகள் என்பனவற்றோடு பின்னிப்பிணைந்ததாகும். எனவே திருமணங்கள் முறிவடைவதற்கான காரணங்கள் எவை? அவற்றிலிருந்து தப்பித்துக் கொள்ளும் வழிமுறைகள் எவை? - என்பன பற்றி ஆய்ந்து, அறிவூட்டும் வகையில் இந்நூலாசிரியரின் குறிக்கோள் அமைந்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

கனடா, அமெரிக்கா முதலான மேற்குலக நாடுகளில் பெருமளவில் திருமணங்கள் முறிவடைவதற்கான காரணிகளும் அதற்குரிய புறக்காரணிகளும் பெருகிக் காணப்படுகின்றமையை சிவபாலு அவர்கள், இந்நூலிலே எடுத்துக்காட்டுக்களுடன் மிக விரிவாகத் தந்துள்ளார். மணமுறிவுகளின் மூலம் அவர்களது பிள்ளைகளின் எதிர்காலம் மிகவும் பாதிக்கப்படுகின்றன என்பதை அம்மாணவர்களின் பாடசாலை நடைமுறைகளிலிருந்தே அறியக் கூடியதாக உள்ளது. சிறுசிறு காரணங்களுக்காக திருமண முறிவினை மேற்கொள்ளுதல் தமக்கும், தமது பிள்ளைகளுக்கும், ஏன் சமுதாயத்திற்குமே தீங்கை ஏற்படுத்துவதாக அமைகின்றது என்பதனை பல ஆய்வுகள் புலப்படுத்துகின்றன என்பதைச் சம்பந்தப்பட்டோர் அறிந்து கொள்ளுதல் நன்மை பயப்பதாகும்.

பிள்ளைகளின் எதிர்காலம் வளமாகவும், செம்மையாகவும் அமைவதற்குப் பெற்றோரிடையே நிலவும் ஒற்றுமை, பிள்ளைகளிடம் காட்டும் அரவணைப்பு, ஆதரவு, கட்டுப்பாடு, வழிநடத்தல், அன்பு என்பன முக்கியமானவை. மணவினை முறிவடைந்தால் இவற்றைப் பிள்ளைகள் பெற்றுக்கொள்ள முடியாது. ஆதலால் திருமண ஒப்பந்தம்

முறிவடையாத வகையில் பாதுகாத்துக் கொள்ளவேண்டியதன் தேவையை இந்நூல் நன்கு விளக்குகின்றது.

பல்லினப் பண்பாட்டினைக் கொண்டுள்ள கனடாவில் திருமண முறிவு என்பது சாதாரணமான ஒரு விடயமாகக் காணப்படுகிறது. ஆனால் தமிழர் சமூகத்தைப் பொறுத்தவரை திருமண முறிவு என்பது ஒரு வெறுக்கத்தக்க, சமூகத்திற்கு ஒவ்வாத செயலாகவே கருதப்பட்டு வந்துள்ளது. புலம்பெயர்ந்த தமிழர்கள் அதிகமாக வாழும் கனடா போன்ற வெளிநாடுகளில் இன்று அந்தந்த நாட்டுச் சூழலுக்கேற்ப திருமண முறிவுகளும் அதிகரித்து வருவதனை இந்நூல் தக்க தரவுகளுடன் விளக்குகின்றது. கனடிய சமூகத்தில் இன்று நம்மவரிடையே மணமுறிவு அல்லது பிரிந்துவாழும் நிலைகள் மிகவும் மலிந்து வருகின்றன என்பதனை புள்ளிவிபரங்கள் காட்டி நிற்கின்றன. மணமுறிவு ஏற்படுவதற்கான காரணங்களாக, கணவன் மனைவியரிடையே பரஸ்பர புரிந்துணர்வின்மை, சமூகக் கட்டுப்பாடுகளை மீறுதல், திருமணத்திற்கு முன்னர் குடும்ப, சமூகப் பின்னணிகளை அறிய முற்படாமை, தம்பதிகள் திறந்த மனத்துடன் பழகாமை, ஒருவர் மீது ஒருவர் அதிக அளவிலான எதிர்பார்ப்புக் கொண்டிருத்தல், குடும்பத்தில் சந்தேகம் கொள்ளுதல், விருப்பமில்லாத திருமணம், அகப்புறக் காரணிகளால் ஏற்படும் மனஅழுத்தம், ஆண் - பெண் சமத்துவமற்ற நிலைமை, வீட்டு வேலைகளில் ஆண்கள் பங்கு பற்றாதிருத்தல், பிள்ளைகளின் கடமைகளில் அக்கறை கொள்ளாதிருத்தல், தீய பழக்கவழக்கங் களுக்கு அடிமையாதல், ஓரினச் சேர்க்கை காரணமாக துணைவன் துணைவியோடு ஈடுபாடு குறைதல், பாலியலில் திருப்தியின்மை, ஒருவரை ஒருவர் அடக்கி ஆள முற்படுதல், பொருளாதாரச் சிக்கல், பெண்களைப் பிள்ளைபெறும் இயந்திரமாகக் கருதுதல், தகாத நட்பு, சமூகப் பொதுநல உதவியைப் பெறுவதற்காகப் பிரிதல், மதமாற்றம், கனடிய மணமுறிவுச் சட்டம் ஒருசாராருக்குச் சாதகமாக

அமைந்திருத்தல், கலப்புத் திருமணம், மனைவி மீதான வன்முறைகள், பண்பாட்டுத் தாக்கங்கள் என்பன இந்நூலிலே நன்கு விளக்கப்பட்டுள்ளன.

மேலும், பிரிந்துவாழும் பெற்றோரும் பிள்ளைகளும் - குறைபாடுடைய பிள்ளைகள் பெற்றோரின் மணமுறிவுக்குக் காரணமாகின்றார்களா? - தனித் தாய்மாரும் பிள்ளைகளும், பிரிந்து வாழ்வதால் பிள்ளைகளிடையே ஏற்படும் உள - உடலியற் பாதிப்புக்கள், ஆண்களும் மணமுறிவும் பிரிந்திருத்தலும், தனிமையாகிவிட்ட பெற்றோரின் வெற்றிநடை, சொத்துச் சமத்துவம், கணவன் மனைவியரிடையே ஏற்படும் கோபங்களைத் தணித்துக் கொள்ளும் உத்திகள், இலங்கை இந்திய நாடுகளில் திருமண முறிவும் அதன் தாக்கங்களும் முதலான பல்வேறு விடயங்களும் இந்நூலிலே ஆராயப்படுகின்றன.

மணமுறிவுக்குத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டிருப் போரும், மணமுறிவால் பாதிக்கப்பட்டிருப்போரும் இந்நூலை ஒருமுறை வாசித்தால் - தாம் விட்ட தவறுகள் எவை? அவற்றை எவ்வாறு தவிர்த்திருக்கலாம்? - முதலான தம் பட்டுணர்வை அலசி ஆராய்வ தற்கும், தமது குடும்ப வாழ்க்கை பிறழாதும் மணமுறிவுகள் ஏற்படாதிருக்கவும் இந்நூல் நம் சமூகத்திற்குப் பயன்படத்தக்கதோர் அரிய நூலாகும்.


**- முனைவர் இளையதம்பி பாலசுந்தரம்,**

ரொறன்ரோ, 12, ஜூன் 2010

❖❖❖

# திருமண முறிவைத் தவிர்க்கும் வழிமுறைகள்





# 1

# மணமுறிவு ஏன்?

திருமணம் என்பது இருமனம் ஒன்றாகக் கலந்து வாழ்வாங்கு வாழத் தலைப்படுவதற்கான ஒப்பந்தம் என்பது பொதுவான கருத்தாகும். அது கருத்தொருமித்த இருவர் ஒருங்கிணைந்து செயற்படும் மனையறமாம் நல்லறத்தில் ஈடுபட அடியெடுத்து வைக்கும் நாளைக் குறிக்கின்றது. ஒரு ஆணும் ஒரு பெண்ணும் திருமண ஒப்பந்தத்தால் இணையும் ஒரு வைபமாக திருமணம் இடம்பெறுகின்றது. இத்திருமண முறைகள் பலதரப்பட்டன. நாட்டிற்கு நாடு மதத்திற்கு மதம் காலத்திற்குக் காலம் மாறுபட்ட முறைகளைக் கொண்டனவாக திருமண முறைகள் காணப்படுகின்றன. ஆண் - பெண்ணுக்கிடையேயான இவ் ஒப்பந்தத்தை கலியாணம், விவாகம், திருமணம் என்னும் வழக்கியல் சொற்கள் கூறுகின்றன எனினும் கலியாணம், விவாகம் என்பன வடமொழிச் சொற்களே.

இளமைத் துடிப்பும், இன்ப எண்ண அலைகளும் உள்ளத்தில் இன்பமும் ஒன்றுசேர்ந்து தம்பதிகளாக இணைந்து வாழ்வதற்கான

சமூக அங்கீகாரத்தைப் பெறும் நாளாக இது கருதப்படுகின்றது. **'காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்"** என்னும் ஔவைப்பாட்டியின் மூதுரைக்கு அமைய அன்பினால் விளையும் ஆதரவைப் பெருக்கி காதல் தனிச்சுவை பருகவும், மக்கள் செல்வம் பெருக்கி மழலை இன்பத்தில் திளைக்கவும் மனம் விழைந்து இணையும் அல்லது இணைய வைக்கும் நிகழ்வு இடம்பெறுவதனையே 'திருமணநாள்' என்னும் பதத்தால் அழைக்கின்றோம். எண்ணும் பொழுதினில் உவகை இன்பத்தில் திளைக்கின்ற - திருமண இன்பத்தைத் தருகின்ற - நெஞ்சத்து இனம் புரியாத இன்பக் கனவுகளை நிறைவாக்க, துணையினைப் பெற்று மகிழ்ந்திடும் நன்னாளே 'திருமணநாள்'. வாழ்க்கைத் துணையின் கரம் பற்றும் இங்கிதமான இன்பப் பொழுதைத் தருகின்ற மணவினை மேடையில் மங்களகரமான இசை ஒலிக்க, மந்திரம் செபிக்க, மேளவாத்தியங்கள் இசைக்க, பெரியோர்கள் வாழ்த்த, இடம்பெறும் வைதிகத் திருமணத்தின் இயல்புகள் கேலிக்கு இடமாக அன்றி அவை கருத்தாழமும், சிறப்பும், உண்மைத் தன்மையும் கொண்டவையாக அமைதல் வேண்டும்.

திருமண முறைகள் குறித்துப் பலவிதமான கருத்துக்கள் நிலவுகின்றன. திருமணத்தை ஆயிரங்காலத்துப் பயிர் என்று எம்முன்னோர் கூறிவைத்ததன் பொருளுக்கேற்ப வாழ்நாள் முழுவதும் இணைந்து கணவன் மனைவியாக வாழ முற்படுவோர் மனம் ஒத்து இணையும் பொன்நாள். அப்பொன்நாளில் இடம் பெறும் மணவினை முறைகளை நன்கு அறிந்து அவற்றின் கருத்துக்களை உள்வாங்கி வாழ்க்கை முழுமையும் பின்பற்றவேண்டிய விடயங்களை நினைவில் இருத்திக் கொள்ளவேண்டிய கடப்பாடு மணமக்களுக்கு முன்னே உள்ளது. மணமக்களுக்கு மணவினைக்கு முன்னரும் பின்னரும் நடைபெறும் சடங்குகள், சம்பிரதாயங்கள், மரபுகள் என்பன பற்றிய விளக்கத் தெளிவு அவசியமாகும். மாற்றுச் சமய சடங்குகளில் இந்த அம்சங்கள் வலியுறுத்தப்படுகின்ற போதிலும் எமது சமய சடங்குகளில்

இவை ஏனோதானோ என்று நிறைவேற்றப்பட்டு வருவது மனவருத்தத்திற்கு உரியதே. எடுத்துக்காட்டாக கத்தோலிக்க முறைப்படி திருமணம் இடம்பெறுவதற்கு முன்னரே மணமகனுக்கும் மணமகளுக்கும் மதகுருவானவரால் திருமண பந்தம் பற்றிய அறிவுறுத்தல்களும் ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. ஆனால் எமது திருமண முறைகளில் இத்தகைய அம்சங்கள் துளிகூட இடம்பெறாத நிலையினை நாம் அறிவோம். திருமணத்தின்போது இப்படிச்செய் அப்படிச்செய் என சொல்லி எந்தவித புரிந்துணர்வும் அற்றதாக செய்விக்கின்ற ஒரு நிலையினை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் இதுவரை மத நிறுவனங்களோ அன்றி மதகுருமாரோ இவற்றைப்பற்றி எந்தவித கவனமும் செலுத்தியதாக இல்லை. எமது பண்பாட்டு விழுமியங்களாகவோ அன்றி இடையில் வந்து புகுந்துகொண்டன வாகவோ உள்ளனவற்றை நாம் பின்பற்றுகின்றோம் என்று கூறினாலும் அவற்றில் காணப்படும் கருத்துக்கள் அல்லது உண்மைத் தன்மைகளை நாம் அறிந்து ஒழுகவேண்டாமா என்னும் கேள்வி எழுவது இயல்பே. திருமணத்திற்குத் தயாராகும் மணமகன் அல்லது மணமகள் தங்கள் திருமணத்திற்கான நிறைவேற்று முறைகளை அறிந்திருப்பது அவசியமே. வைதிகத் திருமண முறையிலே அருந்ததி காட்டுதல் அம்மி மிதித்தல் இரண்டும் முக்கிய அம்சமாகக் கொள்ளப்பட்டு வருகின்றது. எதற்காக அவை இடம்பெறுகின்றன என்பனவற்றிற்கான விளக்கம் அவர்களுக்கு அளிக்கப்படுவதில்லை. இன்று திருமணம் என்றால் படம்பிடிப்பதும், அலங்காரம் செய்வதும்தான் முன்னணியில் நிற்கின்றனவே ஒழிய சடங்குகள் புறம் தள்ளப்படுகின்றன. இப்படியெல்லாம் நடந்தன, அப்படியான மணவறை கட்டினோம், இப்படியான கூறைச்சேலை கட்டினோம் என்று பெருமையடிப்பதாகவே எமது திருமணங்கள் இடம்பெறுகின்றன. திருமணச்சடங்குகள் வீண் சம்பிரதாயங்களாக நடைபெறுகின்ற நிலையை எப்போது நாம் மாற்றிக்கொள்ளப் போகின்றோம் என்பது கேள்விக்குறியே! எமது திருமணத்தில் பின்பற்றப்படும் கிரியைகள் சடங்குள் சம்பிரதாயங்களின்

உள்ளார்ந்த கருத்துக்களை நாம் விளங்கி அவற்றை நல்ல முறையில் செய்து அதன் வண்ணம் ஒழுகத் தலைப்பட வைப்பதே இந்நூலின் நோக்கமாகும். திருமணம் இடம் கொள இணைந்துவிட்டு, துணைவியும் துணைவனும் ஒருவருக்கொருவர் பற்றுக்கோடாக வாழ்தலே வாழ்க்கை. ஒருவரை ஒருவர் பிரிந்து வாழுவதனால் இல்லறம் எமக்குக் காட்டி நிற்கும் பயனை அடையமுடியாது. தாம் கொண்ட நோக்கம் ஈடேற துணைநலம் இன்றியமையாதது. அதனை நற்சிந்தனையில் கொள்ளவேண்டும் என்னும் நோக்கோடு ஔவையாரும் துணையின் வலிமையின் மேன்மையைப் பின்வருமாறு எடுத்துரைக்கின்றார்.

> பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்
> விண்டுஉமி போனால் முளையாதாம்-கொண்டபேர்
> ஆற்றல் உடையார்க்கும் ஆகாது அளவின்றி
> ஏற்ற கருமம் செயல்.

அரிசியில் இருந்து உமி நீங்கிவிட்டால் அந்த அரிசி முளைக்கமாட்டாது. உமியோடு ஒட்டி இருக்கும் காலத்தில்தான் அதனால் முளைக்க முடியும். நெல் எனும் தன்மையை இழந்து அரிசியாகிவிட்டால் அதன் இயல்புத்தன்மை கெட்டுவிடும். இது போன்றே துணைநலம் என்பதும் ஒன்றோடு ஒன்று இணைந்து இருப்பதனாலேயே பயன் தருவதாக அமையும். இரண்டும் ஒன்றை ஒன்று நீங்கினால் உமி நீங்கிய அரிசிபோன்று அதன் முளைதிறன் அற்றுப் போவது போன்றதே மனைவாழ்க்கையும். கணவனும் மனைவியும் இணைந்திருப்பதே வாழ்விற்குச் சிறப்புத்தரும். ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிவதனால் இல்வாழ்வில் இழிந்த நிலைதான் தோன்றும். கணவன் மனைவி இயைந்திருப்பதே வாழ்வின் இயல்பு. அவ்வித வாழ்வே விழுப்பம் தரும் என்பதனை கணவன், மனைவி இருவரும் உணர்ந்து வாழ முற்படுதலே சிறப்புத்தரும். வாழ்வின் இலட்சியத்தை அடைந்து உயர்வையடைய இணைந்து இன்பத்தோடு செயற்படுதலே சிறப்பாகும்.

வேடனிடம் ஆண்புறாச் சிக்கிக்கொண்டதைக் கண்ட பெண்புறா தானும் தீயில் குதித்து மாண்ட கதையை நாம் கற்றிருக்கின்றோம். இணைபிரிந்து வாழாத்துயரில் உயிர் நீத்த மேன்மை இல்வாழ்வின் சிறப்பைக் காட்ட - அன்பின் உறைவிடத்தைக் காட்ட- பறவைமூலம் சித்தரிக்கப்பட்ட கதையானாலும் சதிபதியாகிவிட்டால் அவர்களிடம் ஏற்படும் பாசம், நேசம் எத்தகையது என்பதனை அந்தக் கதையின் கரு காட்டி நிற்கின்றது. ஆணுக்கோ அல்லது பெண்ணுக்கோ துன்பம் நேர்ந்தால் அதனைத் தாங்கி வாழுதல் மேலும் துன்பம் தருவது என்பதனை மறுக்கத்தான் முடியுமா? இதில் ஆணுக்கு ஒரு விதி பெண்ணுக்கு ஒருவிதி என்று எமது பண்பாடு பாகுபாடு காட்டி நிற்கவில்லை. ஈர் உடலும் ஓர் உயிருமாய் வாழத் தலைப்பட விழைந்தோரை வாழ்த்துதல் - அவர்களின் வாழ்வைப் பற்றுக்கோடு உடையதாக, பயனுள்ளதாக, சமூகம் அங்கீகரிப்பதாக அமைத்துக் கொள்ளத்தக்கதாக வேண்டி வாழ்த்துதல் - வாழ்த்தத் தலைப்படுவோரின் பாரிய பொறுப்பும் கடமையுமாகும்.

திருமணம் செய்துகொள்ளவுள்ளவர்களும், திருமணம் செய்து கொண்டோரும் மணவினை முறைகள் பற்றிய கருத்துக்களையும் அதன் பொருளையும் அறிந்திருத்தல் பயனளிப்பதாக அமையும். ஏனோ தானோ என்னும் மனப்பான்மையுடன் திருமணங்கள் இடம் பெறுவதனால் பல திருமணங்கள் முறிவடைந்து போகும் நிலை ஏற்படுகின்றமையை நாம் காண்கின்றோம். எனவே திருமணம் நடக்கும் வேகத்தைவிட அது முறிவடையும் வேகம் அதிகரித்து வருவதனைக் காணமுடிகின்றது.

திருமணங்கள் முறிவடைவது அதிகரித்து வருவதற்கான காரணிகள் என்ன என்பதனை நாம் அறிந்திருப்பது அவசியம். ஏதோ சிறு சிறு காரணங்களுக்காக திருமணமுறிவினை மேற்கொள்ளுதல் அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டுமல்ல சமுதாயத்திற்கே தீங்கை ஏற்படுத்துவதாக அமைகின்றது என்பதனை பல ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. பிள்ளைகளின் எதிர்காலம் வளமாக,

செம்மையானதாக அமைவதற்குத் தாய்- தந்தையரின் ஒற்றுமை, அரவணைப்பு, ஆதரவு, கட்டுப்பாடு, வழிநடத்தல், அன்பு என்பன முக்கியமானவை. மணவினை முறிவடைந்தால் இவற்றைப் பிள்ளைகள் பெற்றுக்கொள்ள முடியாது. உறவினர்களுடன் கூட இணைந்து வாழமுடியாத நிலை ஏற்படலாம். திருமண ஒப்பந்தம் ஏன் முக்கியமானது? அதனை வாழ்க்கை முழுமையும் ஏன் நாம் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்? ஆண், பெண் உறவு என்பது பாலுறவுக்கு அப்பால் குடும்ப நன்மை, குடும்ப வளர்ச்சி, எதிர்கால சந்ததியினரின் நல்லியல்புகள் என்பனவற்றோடு பின்னிப்பிணைந்தது. எனவே திருமணங்கள் முறிவடைவதற்கான காரணங்கள் எவை, அவற்றிலிருந்து தப்பித்துக் கொள்ளும் வழிகள் எவை என்பன பற்றி ஆய்ந்தறிதலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருமணங்கள் முறிவடைவதற்கு பல காரணிகளை முன்வைக்கலாம். பல்லின பண்பாட்டினைக் கொண்டுள்ள கனடிய மண்ணில் திருமணமுறிவு அல்லது பிரிந்துவாழுதல் என்பது புதிதானதொன்றல்ல என்பது பலரும் அறிந்த உண்மை. ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரை திருமண முறிவு என்பது ஒரு வெறுக்கத்தக்க, கீழ்த்தரமான ஒரு செயலாக கருதப்பட்டு வந்துள்ளது. திருமண முறிவு ஏற்படும் போது அந்த ஆணையோ பெண்ணையோ சமூகம் விலக்கிவைக்கின்ற அல்லது மதிப்பினைக் குறைத்து நோக்குகின்ற ஒரு நிலையினைக் காணமுடிகின்றது. இலங்கைக்கு ஐரோப்பியர்கள் வந்தபின்னரே திருமண உடன்பாட்டு முறியினை எழுதிவைக்கும் வழக்கம் தோன்றியது எனலாம். அதற்கு முன்னர் திருமணங்கள் எழுத்துமூலமாக ஆவணப்படுத்தப்பட்டவையாக இருக்கவில்லை. புரிந்துணர்வு, பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையிலேயே திருமணங்கள் இடம்பெற்றுள்ளன. இதற்கு சமூகம் மிக இறுக்கமான வரையறையினைத் தந்திருந்தது. சமூகத்திலுள்ள பெரியோர்கள், உறவினர்கள், பெற்றோர், உடன்பிறப்புக்கள்

விவாகமுறிவுகள் ஏற்படாது பாதுகாக்க மிக இறுக்கமாகச் செயற்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது. சமூகக் கட்டுப்பாட்டு நிலைமைகள் பரம்பரை பரம்பரையாக தொடர்ந்து பின்பற்றப் பட்டுவரும் நிலைமைகள் எமது சமூகத்தில் காணப்படுகின்றன. இக்காரணிகள் மணமுறிவுகள் ஏற்படாது தடை செய்யும் வகையில் உள்ளன. தமிழர் வாழ்வியலில் ஆண்வழிச் சமுதாயத்தின் சாயல் அதிகளவில் இருப்பதினால் ஆண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களோடு தொடர்புகளை வைத்துக் கொள்வதும் சமுதாய அமைப்பில் இடம்பெறுகின்றது எனினும் திருமண முறிவு ஏற்பட்டு முதல் மனைவியை விலக்கி வைக்கும் தன்மை மிக மிகக் குறைவே. ஆனால் கனடா போன்ற வெளியிடங்களில் - தமிழர்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களில் இன்று அந்தந்தச் சூழலுக்கேற்ப மனமுறிவுகளும், அதனால் மணமுறிவுகளும் அதிகரித்துவருவது நாம் காணக்கூடியதாக உள்ளது.

திருமண ஒப்பந்தம் என்பது வாழ்க்கையில் இணைந்து வாழுவதற்கான முதற்படியாகும். திருமணம் செய்த புதிதில் அவர்களிடையே ஏற்படும் பிணைப்பு- அன்னியோன்யமான நிலைமையினை மிக இறுக்கமாக ஏற்படுத்துவதற்கு தம்பதியினரிடையே ஏற்படுகின்ற விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு, பாசம், பக்குவம் என்னும் பல காரணிகளைக் காணலாம். பிள்ளைகள் கிடைத்தபின்னர் அந்தப் பிள்ளைகள் தாய் தந்தை இருவருக்குமிடையே ஒரு நெருக்கமான பிணைப்பின் பாலமாக அமைகின்றார்கள். பிள்ளைகளுக்காக தங்களின் தேவைகளை விட்டுக்கொடுக்கும் நிலைமையை பெற்றோர்கள் இசைந்து ஏற்படுத்திக்கொள்வது சர்வ சாதாரணமானது. இந்தப் பிணைப்பின் பின்னணி குடும்பம் என்னும் இறுக்கமான கட்டுப்பாட்டுக்குள் இருந்து விலகிச் செல்லவிடாது வைத்திருக்கும் முக்கிய ஒரு காரணியாக அமைந்துவிடுகின்றது. "ஒரு பிள்ளை பிறக்கும்போது அது எப்பொழுதும் தனது கையினிலே ஒரு பாணுடன் பிறக்கின்றது"[1] என தொறத்தி டே என்னும் அறிஞர் கூறுவது பொருந்தும்.

எல்லாக் குடும்பங்களும் ஏதோ ஒருவிதத்தில் பிரச்சினைகளை எதிர்நோக்கத்தான் செய்கின்றன. நோய்கள், காயங்கள், வன்முறைகள், குற்றச்செயல்கள் போன்றனவற்றிற்கு எந்தவொரு குடும்பமும் விதிவிலக்கானதல்ல. ஒரு குடும்பம் ஒரு குறுகிய சமூக அமைப்பு. கணவன், மனைவி, பிள்ளைகள் இறுக்கமான ஒரு குடும்ப அமைப்பு என்றாலும் அதற்கு அப்பாலும் கணவனின் பெற்றோர், சகோதரங்கள், மனைவியின் பெற்றோர் சகோதரங்கள் என குடும்ப அலகு சற்று விரிவுபட்டதாக அமைகின்றது. பொதுவாக தமிழ் சமூக மரபில் பெற்றோரைப் பேணிப்பாதுகாக்கும் முறைமை பிள்ளைகளின் தலையாய கடமையாகக் கொள்ளப்படுகின்றது. எனவே குடும்பம் என்ற வரையறை சமூகத்திற்குச் சமூகம் வேறுபட்டதாக அமைகின்றது. மேலை நாட்டு சமூக அமைப்பு முறையில் உள்ள கட்டுப்பாடுகள், உறவுமுறைகள், நடைமுறைகள், பழக்கவழக்கங்கள், மரபு முறைகளில் இருந்து கீழை நாடுகளின் சமூக அமைப்பு முறைகளில் வேறுபாடுகள் உள. பாசப்பிணைப்பு என்பது நெருங்கி வாழும்போது அதிகரித்துக் காணப்படும். ஒன்றாக வாழும் பண்பு கீழை நாட்டு மக்களிடம் இயல்பாக உள்ளது. மேலை நாட்டியல்பு வேறுபாடடைந்தமைக்கு அவர்கள் வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாற்றங்களே முக்கிய காரணிகள் ஆகும்.

குடும்ப அமைப்புக்களில் சில பொதுவான நிலைமைகளும் காணப்படுவது இயல்பே. ஒரு குடும்பத்தில் பிரச்சினைகள், மகிழ்ச்சிகள், இன்னல்கள், துன்பங்கள் ஏற்படுவது இயல்பே. ஒரு குடும்ப அங்கத்தவர் களிடையே ஏற்படும் சில பாதிப்புக்களுக்கு- பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளைத் தருதல், நியாயத்தினை எதிர்பார்த்தல், அல்லது வேண்டுதல் போன்றனவற்றினோடு தொடர்புறும்போது பிரச்சினைகளை ஒவ்வொரு குடும்பமும் எதிர்நோக்குகின்றது. சிலகுடும்பங்கள் ஒரு குடும்ப அங்கத்தவர் பிரச்சினையில் மாட்டிக்கொள்ளும் போது அதனை இரகசியமாக வைத்துக்கொள்கின்றன. சில குடும்பங்களில் பிரச்சினை வரும்போது மற்றவர்களிடமிருந்து மூடிமறைத்துக் கொள்வதற்காக

அவர்களிடையே அமைதியான ஒரு சுவரையே எழுப்பி விடுகின்றார்கள். இதனால் மற்றவர்களிடமிருந்த தொடர்புகளைத் தாமே துண்டித்துக் கொள்ளுகின்றார்கள். இவை ஒரு புற்று நோயாக இருக்கலாம், மனநோயாக இருக்கலாம், விவாகமுறிவாக இருக்கலாம், போதைப்பொருள் உபயோகமாக இருக்கலாம், கடன்தொல்லையாக இருக்கலாம், அல்லது எயிட்ஸ் போன்ற கொடியநோயாக இருக்கலாம். அவர்கள் மற்றவர்களோடு தொடர்புகளைத் துண்டித்துக்கொண்டு அமைதி காப்பவர்களாக இருந்துவிடுகின்ற நிலை இன்று சமுதாயத்தில் காணப்படுகின்றது. இதற்கு வெட்கமும் குடும்ப இரகசியங்கள் எங்கே வெளியே தெரிந்துவிடுமோ என்று மறைக்கின்ற நிலையும் காரணிகளாக உள்ளன. இவை தமிழர் சமூகத்தினரைப் பெருமளவு பாதிக்கின்ற செயல்களாகும். காதல் விவகாரங்கள் தமிழர் குடும்பங்களிடையே பெரும் புயலைக் கிளப்புகின்ற ஒரு விவகாரமாக அமைவதைக் காணலாம். ஒரு பிள்ளை தனது இனத்திற்கு வெளியேயான ஒரு பெண்ணை அல்லது ஆணை விரும்பியிருந்தால் அது குடும்பத்தில் பிரச்சினையைத் தோற்றுவிப்பதோடு. அதனைத் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளும் வழிகளை விடுத்து தவறான ஆபத்தான முடிவுகளுக்கு வருகின்ற நிலையும் ஏற்படுகின்றது. அண்மையில் ஒரு இந்திய சமூகத்தைச் சேர்ந்த ஒரு தந்தை தனது மகளின் குடிபோதை, ஆண்களோடு உறவு கொள்ளுதல் போன்ற காரணங்களுக்காக அவளைக் கொலை செய்துள்ளமை பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி. இவை போன்ற பல சம்பவங்கள் எமது சமூகத்தில் இடம்பெற்றாலும் அவற்றை எவ்விதம் அணுகுவது எனத்தெரியாது மூடி மறைக்கும் நிலைமைகள்தான் அதிகளவில் காணப்படுகின்றன.

இவ்விதமாக இரகசியங்களைப் பாதுகாக்க தங்களைச் சுற்றியே சுவரை எழுப்புகின்றவர்கள் இதற்காக பெருமளவு சக்தியை விரயம் செய்கின்ற அதே வேளை தங்கள் இன்பகரமான வாழ்வையும் இழந்து விடுகின்றார்கள். இவ்விதமாக வெட்கத்திற்கும் அமைதிகாப்பதற்கும் பெருந்தொகையான மக்கள் தங்களை

அர்ப்பணித்துள்ளார்கள். ஆண் பெண் உறவு என்பன ஒருவரை ஒருவர் ஏற்று அவர்களோடு எல்லா வழிகளிலும் இணைந்து வாழாதவிடத்துப் பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றன. இவை சில சந்தர்ப்பங்களில் கோபமாக, வெறுப்புணர்ச்சியாக, பயப்பிராந்தியாக வெளிப்படுகின்றன. அவ்விதம் வெளிக்கொண்டு வரும்போது அதனை ஏற்கும் பக்குவம் இதர குடும்ப அங்கத்தவர்களிடையே இல்லாத போது அது மேலும் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கக் காலாகவும் அமைந்துவிடும். அதேவேளை மனதிலிருத்திச் சதா அழுந்தி அழுந்தி வேதனைப்படுவதினும் அவற்றைப் பகிரங்கப்படுத்தி மனதின் சுமையை விடுவிப்பது சிறந்த பலனை அளிக்கவும் கூடும்.

தங்கள் குடும்ப அங்கத்தவர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்கும்போது குடும்பங்கள் என்ன பங்களிப்பைச் செய்யமுடியும் என்று பார்த்தால் அது உண்மையானதும் மேன்மையானதுமான பதிலைத்தருதலும், என்ன பங்களிப்பின் மூலம் உதவமுடியுமோ அந்த உதவிகளை நல்குவதன் மூலமும் செய்யமுடியும். ஆனால் இவற்றைச் செய்யும்போது எந்தவிதமான வெட்கமோ அல்லது குற்ற உணர்வோ கொள்ளுதல் கூடாது. இரகசியம் என்பது உண்மையிலேயே அரைப்பங்கு நேர்மையற்ற செய்கையாகவே உள்ளது. அது தங்கள் நேரான பார்வையை மழுங்கடித்துத் தவறான பாதைக்கு இட்டுச்செல்கின்றது என்பதனை உணர்ந்துகொண்டால் பிரச்சினைகளை இலகுவாகத் தவிர்த்துக்கொள்ளலாம்.

இவ்விடத்தில் தாயகத்தில் இடம்பெற்ற ஒரு உண்மைக் கதையைக் கூறுவது பொருத்தமானது என எண்ணுகின்றேன். ‘எனது நண்பரின் சகோதரிக்கு அவர்களின் உறவினரான ஒரு இளைஞரை மணமுடித்து வைத்தனர். அவர் குடும்ப வாழ்வுக்கு ஏற்ற ஆணின் தன்மை அற்றவர். ஆனால் அதனை அவர் யாரிடமும் சொல்லமுடியாத நிலையில் பெற்றோரின் வற்புறுத்தலால் திருமணம் செய்துகொண்டார். ஆனால் திருமணம் செய்து கொண்ட பெண்பிள்ளையோ இதனை

அறிந்து சதா துன்பத்தில் அழுந்தினார். ஓராண்டுகளை எப்படியோ ஓட்டிவிட்ட அவருக்குப் பெற்றோர், உறவினர்கள், நண்பர்களால் ஏன் குழந்தை இல்லை என்ற கேள்வி முன்வைக்கப்பட்ட போது உண்மை வெளிப்பட்டது. இதனை அறிந்து கொண்ட மாப்பிள்ளையின் சகோதரன் அந்தப்பெண்ணை ஏற்று அவருக்கு வாழ்வளித்தார். அவர்கள் இன்று மிகச் சந்தோசமாக பிள்ளைகள் பெற்று வாழ்ந்து வருகின்றனர். ஆண்மைத் தன்மையே இல்லாத ஒரு ஆணால் ஒருபோதுமே ஒரு பெண்ணைத் திருப்திப்படுத்த முடியாது.





# 2

# திருமணத்திற்கு முதலில் கவனத்தில் கொள்ள வேண்டியவை

இணைய உள்ளவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டிய முக்கிய வினாக்கள் திருமண வாழ்வை நீடிக்க வழிவகுக்கின்றன.

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்பதனை அடியொற்றி எழுந்தது "இன்னாருக்கு இன்னாரென்று எழுதி வைத்தானே இறைவன் அன்று" என்பது கண்ணதாசனின் கருத்துமிக்க பாடல்வரி.

மணமுறிவிற்கான பல காரணிகள் பற்றி நாம் இதுவரை ஆராய்ந்துள்ளோம். மணமுறிவுக்கு கணவன் மனைவியரின் நெருக்கம், அவர்கள் ஒருவரை ஒருவர் விளங்கிக்கொண்டு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையோடு நடந்துகொள்ளுதல் முதலியன முக்கியமானவையாகும். எனவே கணவன் மனைவியர் ஒருவரை ஒருவர் தம் உயிராக நேசிக்கும்போது அவர்கள் மத்தியில் ஏற்படும் பிணக்குகளுக்கு இலகுவாகத் தீர்வுகளைக் காணமுடிகின்றது. எனவே

ஒருவரை விரும்பும் முன்னர் இருவரும் ஒருவருக்கொருவர் பல கேள்விகளைக் கேட்டுக்கொள்ள வேண்டும். திருமணம் செய்து கொள்ள உள்ளவர்கள் தங்களுக்குள் பல கேள்விகளையும் தீர்வுகளையும் காண முற்பட வேண்டும் என சட்டவல்லுநர்களும், கணக்கியலாளர் களும் அறிவுரை பகர்கின்றனர். அந்த அடிப்படையில் Robert J. Nachshin and Scott N. Weston என்னும் சட்டவல்லுநர்களும் CPA Alan Dlugash எனும் கணக்காளரும் பின்வரும் கேள்விகளை நீங்கள் மணமுடிக்குமுன்னர் உங்களுக்கு துணைவராக வரப்போகின்றவரிடம் கேட்கவேண்டும் என்னும் அறிவுரையினை முன்வைக்கின்றார்கள்.

1. **உங்களுக்குப் படுகடன் நிலுவை உண்டா?** - உங்களுக்குத் துணைவராக வருபவர் கடன் சுமையோடு உள்ளாரா என்பதனை அறிந்துகொள்ள வேண்டியது முக்கியமானது. அது உங்களை அந்தக் கடன்படு நிலைக்குப் பொறுப்பாளராக்கிவிடும். உங்கள் இணைவின் பின்னர் அதில் சரிபாதிப் பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய வராவீர்கள். சீதனம் வாங்கிச் சகோதரங்களுக்கு வழங்கும்-திருமணமாகாத சகோதரிகளுக்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளவேண்டிய கடப்பாடு ஆண் சகோதரங்களுக்கு உண்டு. அது தமது சமூகத்தின் எதிர்பார்ப்பும் குடும்பத்தின் எதிர்பார்ப்பும் ஆகும். பல குடும்பங்களில் இந்த சகோதரத்திற்கான பொறுப்பு அவர்களை சிரமங்களுக்கும் கஷ்டங்களுக்கும் ஆளாக்கிவிடுவது நாமனைவரும் அறிந்ததே. சீதனம் வாங்கிக் கொடுப்பது மட்டுமன்றி பின்னர் உள்ள சகோதரங்களுக்கும் செய்யவேண்டிய, பெற்றோரையும் பார்க்கவேண்டிய பாரிய பொறுப்பும் ஆண்பிள்ளைகளுக்கு உண்டு. அது நமது சமூகத்தினாலும், பெற்றோராலும் எதிர்பார்க்கப்படும் ஒன்றாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது.

2. **நீங்கள் குறட்டை விடும் வழக்கம் உடையவரா?** குறட்டையொலி நித்திரையைக் குழப்பும். மற்றவருக்கு இடைஞ்சலாக அமையும். கணவன் மனைவியரில் ஒருவர் குறட்டை விடுவதாயின் அதனால் மற்றவர் பாதிக்கப்படுவார். இளமைப் பருவத்தில் குறட்டைஒலி எழுவது குறைவே. ஆனால் வயது ஏற ஏற, உடல்பருமன் கூடக்கூட குறட்டை ஒலி அதிகரிக்கின்றது. இதனால் மேலை நாடுகளில் பல குடும்பங்கள் மணமுறிவுக்குச் சென்றுள்ளன. நமது சமூகத்தினர் இதனைப் பெரிதாகப் பொருட்படுத்துவதில்லை எனினும் மேலை நாடுகளில் வாழுகின்ற நம்மவரிடையே இந்தப் பழக்கம் தொற்றிக் கொள்வதினால் மணமுறிவுக்குச் செல்லும் நிலையைத் தோற்றுவிக்கின்றது. இவ்விதமான பல பழக்கங்களால் நீங்கள் பாதிக்கப்படலாம். நகங்களைக் கடித்தல், மூக்கினில் விரல்களை வைத்தல், மீசையை முறுக்குதல் போன்ற பல பழக்கங்கள் உங்களையும் பாதிப்பதாக அல்லது விரும்பப்படாத ஒன்றாக அமையலாம்.

3. **விசேட தினமொன்றில் உணவு சமைப்பதா அல்லது வெளியே உண்பதா?** - இது இன்று பல குடும்பங்களில் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் ஒன்றாக உள்ளது. பெண்கள் வேலைக்குப் போய்வந்தாலும் அவர்கள்தான் சமைத்து ஆகவேண்டும் எனப் பல ஆண்கள் நினைக்கின்றார்கள். அவ்விதமே சில பெண்கள் ஆண்கள்தான் சமைக்கவேண்டும் என நினைக்கின்றார்கள். இவ்விடயங்களில் விட்டுக்கொடுத்து ஒருவரின் சிரமங்கள், எதிர்நோக்கும் கஷ்டங்களை அறிந்துகொண்டு செயற்படுதல் நன்று. எனவே இந்தவிடயங்களில் உங்கள் துணைவராக வர இருப்பவர் இணக்கப்பாட்டுடன் நடந்துகொள்வாரா என்பதை அறிந்து கொள்ளுதல்வேண்டும்.

4. **பிள்ளைகள் எத்தனை உங்களுக்கு வேண்டும்?** - இந்தக் கேள்வி மிக முக்கியமான ஒன்று. இரண்டு பிள்ளைகள் போதும் என்ற எண்ணம் பரவலாக இன்று ஏற்றுக் கொள்ளப்படுகின்றது எனினும் சிற்சில குடும்பங்களில் பிள்ளைகள் இன்றி இருப்பதற்கு சில பெண்கள் விரும்புகின்றார்கள். இரு பிள்ளைகளின் பின்னர் கருத்தடை அறுவைச் சிகிச்சையினைச் செய்து கொள்கின்றார்கள். இதனால் ஒரு பிள்ளைக்கு ஏதாவது நடந்துவிட்டால் பின்னர் பிள்ளையின்றி வாழ்க்கை முழுமையும் துன்பப்படவேண்டிய நிலை ஏற்படுவதனைத் தவிர்க்கமுடியாதவர்களாக பலர் இன்று வாழ்ந்துவருவது கருத்திற்கொள்ளத்தக்கது. பெண்களுக்குத் தான் இதில் முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும். பிள்ளையை வயிற்றில் சுமந்து பெற்றெடுக்கும் நோக்காட்டையெல்லாம் அவர்கள்தான் அனுபவிக்கின்றார்கள் என்பதினையும் கருத்தில் கொள்ளுதல் முக்கியமானதாகும். உங்களுக்கு வாரிசுதான் முக்கியம் என்ற கருத்து இருக்கும்போது உங்களின் துணைவர் ஒன்றும் வேண்டாம் என்றால் என்ன செய்வீர்கள் என்பதனைத் தீர்மானிக்கவேண்டியது முக்கியமானது.

5. **கடவுள் நம்பிக்கை பற்றி உங்கள் வரையறை எத்தகையது?** - இதில் “கடவுள் நம்பிக்கை எனக்கில்லை” என்ற கருத்து ஒருவருக்கு உண்டானால் அது மற்றவரை எவ்விதம் பாதிக்கும் அல்லது உணர்வைக் கிளறும் என்பதனை நீங்கள் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

6. **உங்களின் மிக விருப்பமான உணவகம் எது? அல்லது உணவு என்ன?** - உங்கள் துணைவருக்கும் உங்களுக்கும் உணவில் வேறுபாடு உண்டானால் அது தினம் தினம் பிரச்சினையைத் தோற்றுவிக்கும் என்பதனை மனதில் கொள்ளவேண்டும். ஒருவருக்கு மச்சம் (மீன்) பிடிக்கவில்லை

என்றால் மற்றவருக்கு மச்சம்தான் தேவையென்றால் அது சிக்கலைத் தோற்றுவிக்கும்.

7. **காதல்மிகு ஒரு மாலைப்பொழுது, ஒரு திரைப்படம், உடல் வருடுதல் போன்றவற்றில் உங்களின் உளப்பாங்கு அல்லது எண்ணம் எத்தகையது?** இவற்றில் ஒருவரின் விருப்பு வெறுப்புக்களோடு மற்றவர் இணைந்து போகின்றவரா என்பதனை அறிந்துகொள்ளவேண்டியது முக்கியமானது. பல குடும்பங்கள் இன்று பிரிந்துபோவதற்கு இத்தகைய எண்ணவேறுபாடுகள், பேதங்கள் காலாகின்றன.

8. **அதிக செலவாளியா அல்லது அதிகளவில் மிச்சம் பிடிப்பவரா?** - இதுவும் குடும்ப வாழ்வில் மிக முக்கியமானது. ஒருவர் அதிகளவில் செலவிடுவதும் இன்னொருவர் மிகவும் கருமித்தனமுடையவராக - மிச்சம்பிடிப்பதே நோக்கமுடைய வராக இருப்பதும் குடும்பத்தில் பிணக்குக்கள் அடிக்கடி தோன்றக் காரணமாக இருக்கும். கடை வீதியில் சதா சுற்றித்திரிந்து தேவையற்ற பொருட்களை வாங்கிக் குவிக்கும் ஒருவரோடு உங்களால் இணைந்து போகமுடியுமா என்பதனைக் கருத்திற் கொள்ளுதல்வேண்டும். அதிகளவு சேமிப்புப் பழக்கமுடையவர் மன அமைதியோடு இருப்பாரா என்பதும் முக்கியமானது.

9. **நீங்கள் காதலிக்கும் ஒருவர் அல்லது மணமுடிக்க உள்ள ஒருவர் எத்தகைய வாகனத்தை ஓட்டுகின்றார்?** - அது தரமானதா அல்லது அழகானதா? நீங்கள் தரத்தையா அல்லது நடைமுறையையா - எதை அனுசரிக்கின்றீர்கள்?

10. **நீங்கள் மணமுடிக்க உள்ளவர் அல்லது காதலர் மதுபோதைப் பழக்கத்தினால் எப்போதாவது கைதுசெய்யப்பட்டுள்ளாரா?** -

-இவ்வித பழக்கம் உங்களை அவரை ஒதுக்கிவிட்டுப் போக வைக்குமா? அல்லது அவரை மீட்டெடுக்க முனைவீர்களா?

11. **வீட்டில் எத்தகைய வேலைகளை அல்லது பணிகளை நீங்கள் செய்ய விழைகின்றீர்கள்?** - ஒன்றுமே விருப்பமில்லை என்றால் வெறுப்பு என்பதனை திரும்பத்திரும்பச் சொல்லுவீர்களா?

12. **யார் கணவனா? அல்லது மனைவியா வேலையிலிருந்து வீட்டிற்குத் தாமதமாக வருவது?** என்பதும் தம்பதியினரிடையெ முக்கியமானது. நீங்கள் வெளியில் சென்று விட்டு வீட்டிற்கு வருவது முந்தியா பிந்தியா? - உங்கள் துணைவர் படிப்படியாக தாமதமாக வரத்தொடங்கினால் நீங்கள் உங்கள் காதல்கிளர்வில் அதனைப் பொருட்படுத்துவீர்களா என்பதனையும் அறிந்துகொள்ளவேண்டும்.

13. ஒரு சொல்லில் நீங்கள் முதியவர்களை அல்லது வயதானவர்களை எப்படி விவரிப்பீர்கள்? - கிழடு, முண்டம், பழசு போன்ற சொற்களைப் பிரயோகித்தால் நீங்கள் வயதாகும்போது உங்கள் கணவனோ மனைவியோ அவ்விதம் உங்களை நினைவுகூர்வார் என்பதனை யோசித்துப் பார்க்கலாம்.

14. **நீங்கள் அவரைத் துணைவராகத் தேர்ந்தெடுத்ததற்கான காரணிகள் எவை?** - இவை ஒவ்வொன்றும் உங்களுக்குச் சுமையாக - உங்கள் தேவைகள், விருப்புக்களுக்கு அமைய வில்லையானால் உங்களின் தொடர்பு எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என்பதனை நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நீங்கள் இந்தக் கேள்விகளில் திருப்தியடைந்தால்...

15. ஆம், சரி - நீங்கள் அவரை மணமுடிக்கச் சம்மதிக்கிறீர்கள் என்றாலும் உங்களுக்குக் கிடைக்கும் திருமணப் பரிசின்

பெறுமதிக்கான பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்வீர்களா? என்பது கேள்விக்குறியே!

- என மேற்படி கணக்காளர் அறிவுரை நல்கியுள்ளார். கணவன் மனைவியாக வாழ்க்கை முழுமையும் வாழ விரும்பும் ஆண் பெண் இருவரும் முன்கூட்டியே இவ்வித சந்தேகங்களுக்கு நிவர்த்தி காணவேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்கள். ஆனால் இவற்றை அறிந்துகொள்வது சாதாரணமான ஒன்றல்ல. சேர்ந்து பழகுவதன் மூலமே சிலவற்றை அறிந்துகொள்ள முடிகின்றது. உள்ளம் என்பது ஊமை, அந்த ஊமையிடம் விடையை எப்படி எதிர்பார்க்கலாம்?

இதனால் எமது சமூகத்தில் திருமணப் பேச்சு என்றதும் பலகோணங்களிலும் ஆணைப்பற்றியும் பெண்ணைப்பற்றியும் அலசி ஆராய்ந்தபின்னரே திருமணம் முடிவு செய்யப்படுகின்றது. பேசித் தீர்மானிக்கும் திருமணங்கள் நீடிப்பதற்கு இவை முக்கிய காரணிகளாக அமைகின்றன.

கனடிய சமூகத்தில் இன்று நம்மவரிடையே மணமுறிவு அல்லது பிரிந்துவாழும் நிலைகள் மிகவும் மலிந்து வருகின்றன என்பதனை புள்ளிவிவரங்கள் காட்டி நிற்கின்றன. இவற்றிற்கான காரணிகள் என்ன என்பதனைச் சுருக்கமாக நோக்குதல் பயனுடைத்து.

- ❖ கணவன் மனைவியரிடையே பரஸ்பர புரிந்துணர்வின்மை.
- ❖ சமூகக்கட்டுப்பாடுகளுக்கு குடும்ப அங்கத்தவர்கள் கட்டுப்பட மறுத்தல் அல்லது மீறுதல்.
- ❖ திருமணத்திற்கு முன்னரோ அல்லது பின்னரோ குடும்ப, சமூகப் பின்னணிகளை அறியமுற்படாதமை.

- கணவன் மனைவி இருவரும் திறந்த மனதோடு விடயங்களை அணுகாமை.
- கணவனிடம் மனைவியும் மனைவியிடம் கணவனும் இயல்புக்கு மீறிய அளவுக்கு எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருத்தல். இவை நிறைவேறாத நிலையில் மனமுறிவும், மன அழுத்தமும் ஏற்படுகின்றது. இதனால் மாற்றுவழியைத் தேட முற்படுதல்.
- கணவன் மனைவியர் இருவரும் ஒருவரை ஒருவர் சந்தேகக் கண்கொண்டு பார்த்தல்.
- தான் விரும்பாதவிடத்து பெற்றோரின் வற்புறுத்தலால் திருமணம் செய்தல். (விரும்பாப் பெண்டாட்டி கால்பட்டால் குற்றம் கைபட்டால் குற்றம் என்பது பழமொழி)
- வேலைப்பளு, பொருளாதாரச் சுமை போன்றவற்றால் மனவழுத்தம், மனவுளைச்சல், அயர்வு, சோர்வு.
- பெண்ணைப் பெண்ணாக மதியாத நிலை. பெண்களுக்கும் உணர்வுகள் உண்டு, அவர்களும் மனிதப் பிறவிதான் என்பதை உணர மறுக்கும் ஆண்கள். பரம்பரை பரம்பரையாக ஒரு சமுதாயத்தில் கைக்கொள்ளப்படும் ஆண், பெண் சமத்துவமற்ற நிலைமை (அடிமையாக நடத்த முற்படுதல்).
- பெண்கள் வேலைக்குச் சென்று ஆண்களைப் போன்று உழைத்தாலும் அவர்களுக்கு உள்ள வீட்டுவேலைகளில் ஒத்துழைக்காமை. அவற்றை அவர்கள்தான் செய்யவேண்டும் என்ற மனவன்மம். ஆண்கள் வீட்டுவேலைகளைச் செய்யக்கூடாது - அது பெண்களின் வேலை என்னும் மனப்பாங்கு.

- பிள்ளைகளின் நலனில் அக்கறையில்லாது அவர்களைக் கவனிக்காது பொதுநிகழ்ச்சிகளுக்குச் செல்லும் பெற்றோர் - குடும்பத்தைக் காட்டிலும் இதர நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.

- குடிப்பழக்கம், சூதாட்டம், வேறு விதமான ஈடுபாடுகள், நண்பர்களோடு காலம்கழித்தல், காலதாமதமாக வீடு வருதல்.

- ஆணினச் சேர்க்கை, பெண்ணினச்சேர்க்கை காரணமாக துணைவன், துணைவியரோடு ஈடுபாடு குறைதல்.

- பாலியலில் திருப்தியடைய முடியாத உடல்வலுவின்மை, வைத்தியரை நாட வெட்கம்.

- ஆண்களைப் பூரண கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முற்படுதல்.

- பொருளாதார இடர்- வேலையின்மை, வீட்டுச் செலவினங்களுக்குப் போதிய பணமின்மை.

- பெற்றோர், மாமன், மாமி உறவினர்கள் தலையீடு (தனிக்குடித்தனம் செல்ல விட மறுத்தல். மகன் அல்லது மகள் நல்ல வேலை, உழைப்பு முதலானவற்றை இழக்கவிரும்பாமை.

- பெற்றோர் தங்களிடம் அன்பு குறைந்துவிடும் என்று பயம் கொள்ளுதல்.

- சமூகக் கட்டுப்பாடுகள் அற்ற நிலை, பண்பாட்டு விழுமியங்களை அறியாமை, ஏற்றுக்கொள்ளாமை, புரிந்துணர்வின்மை.

- ஆண்கள் எதுவும் செய்யலாம், பெண் வீட்டில் அடங்கி வாழவேண்டியவள் என்னும் ஆண்மைவாதம்.

- பெண்கள் வேலைசெய்யவேண்டும்; பிள்ளைபெறும் இயந்திரமாக இயங்கவேண்டும்; சமையலும் செய்யவேண்டும்; பெற்றோரையும் கவனிக்கவேண்டும் என்னும் காலத்திற்கு ஒவ்வாத நடைமுறைகள்.
- இலவச தொலைபேசி வாய்ப்பு பல குடும்பங்களைச் சீரழிய வைக்கின்றது.
- தகாத நண்பர்கள், நண்பிகளின் சேர்க்கை.
- சாதாரண நோய்கள் காரணமாக பிரிந்திருத்தல்.
- சமூகப் பொதுநல உதவியைப் பெறுவதற்காகப் பிரிதல்.
- பிள்ளைகளிடம் உளத்தாக்கத்தை ஏற்படுத்தல், கல்வியைப் பாதித்தல், அவர்கள் கட்டுப்பாடற்றவர்களாக வளரக் காரணமாக அமைதல்.
- பிள்ளைகள் வளரும்போது தாய்மார் தங்கள்பக்கம் ஈர்த்துக்கொள்வதற்காக அவர்களிடம் தந்தையைப் பற்றிச் சதா குறைகளைச் சொல்லிக்கொண்டிருத்தல்.
- மதமாற்றம் பலகுடும்பங்களைச் சீரழிக்கின்றது. பெண்களை மாற்றினால் குடும்பத்தையே மாற்றலாம் என்பதால் அவர்களைப் பாவித்தல்.
- பிள்ளைகளைக் கட்டுப்படுத்துதலில் கணவன் மனைவியிடையே முரண்பாடு.
- கனடிய மணமுறிவுச் சட்டங்கள், நடைமுறைகள், ஒழுங்குகள் ஒருசாராருக்குச் சாதகமாக அமைந்திருத்தல்.
- கலப்புத் திருமணங்கள் - பண்பாட்டு மாற்றங்கள், புரிந்துணர்வின்மை.

- வரவுக்கு மிஞ்சிய செலவினங்கள், ஆடம்பரம், மற்றவர்களைப்போல் நடக்கவேண்டும் என்னும் உளப்பாங்கு. எடுத்துக்காட்டாக அவனில் பார்க்க நான் கூடிய பவுண்எடையில் தாலிகட்டவேண்டும், பெரிய வீடு வாங்கவேண்டும். விலைகூடிய கார் வாங்கவேண்டும் என்னும் எண்ணங்களால் சீரழிந்து குடும்பத்தில் பிரச்சினைகள் தோன்றுகின்றன.

- பெற்றோருக்கு - உறவினர்களுக்குக் காசு அனுப்புதலால் பிரச்சினைகள் ஏற்படுதல்.

- பிள்ளைகள் வளர்ந்து வரும்போது தம் பக்கம் சேர்ப்பதற்காக துணைவரைப் பற்றி பிள்ளைகளிடம் கூறுதல், பிள்ளைகளின் விருப்புக்களை நிறைவேற்ற முண்டியடித்தல், பிள்ளைகளின் தவறுகள், நெறிப்பிறழ்வு போன்றவற்றைக் கண்டிக்காது விடுதல், கண்டும் காணாது விடுதல், சில பெற்றோர் சில தவறான போக்குக்களை ஊக்குவித்தல்.

மேற்கூறிய காரணிகள் கணவன் மனைவியரது இடைவெளியை மேலும் அதிகரிக்கச் செய்து மணமுறிவுக்கு இட்டுச் செல்லும் என்பதைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.





# 3

# மணமுறிவான அல்லது பிரிந்துவாழும் பெற்றோரும் பிள்ளைகளும்

பெற்றோர் பிரிந்துவாழும் சம்பவங்கள் கனடிய சமுதாயத்தில் சாதாரணமான ஒன்றாகக் காணப்படுகின்றது. தமிழர் சமுதாயத்தில் இந்தச் செயல் தகாத செயலாகவே கணிக்கப்பட்டு வந்துள்ளது. தாயகத்தில் பல காரணிகளினால் பிரிந்துவாழும் நிலைமை மிக மிகக் குறைவே. பிரிந்து வாழத் தலைப்பட்டாலும் பெற்றோர் அல்லது உறவினர்கள் அல்லது ஊரவர்கள் சமரசம் கண்டு இணையவைத்தல் அல்லது தொடர்ந்து சேர்ந்து வாழவைத்தல் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. பிரிந்து வாழுவோரைச் சமூகம் மதிக்காது விடுகின்ற தன்மையும் சதா அதனைப்பற்றி விசாரித்துக்கொண்டிருப்பதும் தொல்லை தரும் விடயமாதலாலும் கணவன் மனைவி என்போர் ஒருவரில் ஒருவர் தாங்கி வாழும் நிலைமையும் காணப்படுவதோடு பிள்ளைகள் பிறந்தபின் ஏற்படும் பாசப்பிணைப்பும் உறவினைப் பிரியவிடாது பாதுகாக்கும் அம்சங்களாகக் காணப்படுகின்றன. ஆனால் கனடியமண்ணில் தொடர்மாடிக் கட்டிடங்களில் உள்ள பக்கத்து வீட்டில் என்ன நடக்கின்றது என்பது தெரியாத நிலையில் வாழுகின்ற நிலைமையில்

சமூகக் கட்டுப்பாடு, உறவினரின் தொடர்பு, அறிவுரைகள் என்பன கிடைப்பது என்பதற்கான வாய்ப்புக்கள் இல்லாத நிலையிலேயே குடும்ப வாழ்வு காணப்படுகின்றது.

எனது வீட்டிற்கு அண்மையிலிருந்த ஒரு குடும்பத்தில் மூத்த மகனைத் தனது உடன்பிறந்த சகோதரியின் மகனுக்கு மணமுடித்துக்கொடுத்தார் ஒரு தந்தை. மகனின் விருப்போ மணமகளின் விருப்போ அங்கு பெறப்படவில்லை. பெரியவர்கள் பேசிச்செய்து கொண்டார்கள். மணப்பெண்ணுக்கு இத் திருமணத்தில் பூரணதிருப்தி. மணமகனுக்கோ சற்றும் விருப்பமில்லை. மணமகனோ எனது வயதை ஒத்தவர். நான் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்த வேளை இந்தத் திருமணம் முடிவடைந்திருந்தது. நான் விடுமுறைக்குச் சென்றபோது இவர்களின் திருமணம் முடிவடைந்துவிட்டதாக அறிந்தேன். பெண்வீடும் மாப்பிள்ளை வீட்டுக்குமிடையே ஒரேஒரு வேலி மட்டும். ஒரு விடுமுறை முடிந்து அடுத்த விடுமுறைக்கு நான் சென்றபோது அவர்கள் பிரிந்துவிட்டார்கள் என்று கேள்விப்பட்டேன். நண்பனான அவரிடம் கேட்டபோது எதுவுமே அவர்கூற மறுத்துவிட்டார். எனக்கு விருப்பமில்லை என்ற பதில்தான் வந்தது. உறவினர், நண்பர்களின் புத்திமதி, அறிவுரை எதுவுமே அவரின் செவிவழி செல்லவில்லை. அவர் விடாக்கண்டராக வேண்டாம் என்ற பதிலை மட்டுமே சொல்லிவந்தார். ஏன் என்பது எவருக்குமே புரியாத புதிராகவிருந்தது. இவ்விதம் இரண்டு ஆண்டுகள் ஓடிமறைந்தன. அவர் யாருக்குமே தெரியாது இன்னொரு மணப்பெண்ணைத் தேர்ந்துகொண்டார். அவர் தனது தாய் தந்தையருக்கு விருப்பமில்லாதவிடத்தும் அங்குபோய்த் தங்கிவிட்டார். யாராலும் எதுவும் செய்யமுடியவில்லை. முதற் செய்த பெண்ணோடு திருமண முறிவைச் செய்துவிட்டு அவர் மற்ற பெண்ணோடு வாழத்தலைப்பட்டார். பிள்ளைகளும் பெற்று அவர் சந்தோசமாக வாழ்வதை நான் அடுத்த வருடமே அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இவ்விதமாக தங்கள் மனதில் பதித்துக்கொண்ட அல்லது வரித்துக்கொண்ட பெண்களோடு வாழவே சிலர் விரும்புவது

தடுக்கமுடியாதவொன்று. சிலவேளை முதல் திருமணத்தில் பிள்ளைகள் கிடைத்திருந்தால் அந்தத் தொடர்பு தடைப்பட்டிருக்கலாம். ஆனால் அது ஏன் என்பது இன்றும் இரகசியமே.

இவ்விதமாகத் தங்கள் உள்ளக்கிடக்கைகளை வெளியே சொல்லாது பூட்டிவைத்து தங்கள் இன்ப துன்பங்களைத் தங்களோடு மறைந்துபோக வைப்பவர்கள் பலர். ஆனால் கனடிய மண்ணிலும் இத்தகைய சில சம்பவங்கள் தாய் தந்தையருக்குக் கட்டுப்பட்டு இடம்பெற்றுள்ளதனை நான் அறிவேன். எனக்குத் தெரிந்து ஒருவரின் மகள் தாய்மண்ணில் இருக்கும்போது உறவுக்காரரான ஒரு பையன் பெற்றோரின் நிர்ப்பந்தத்திற்காக பதிவுத்திருமணம் செய்துகொள்வதற்காக அவரை உடன்படிக்கையில் இங்கு வரவழைப்பதற்குப் பத்திரங்கள் அனைத்தும் பூரணப்படுத்தி தனது தாயிடம் கொடுத்தார். அவரின் வற்புறுத்தலின்பேரில் இது நடந்தது. ஆனால் அந்தப்பெண் வந்தபோது அவரை அழைத்துவரவோ அன்றிச் சேர்ந்து வாழவோ அவர் விரும்பவில்லை. அவருக்கும் இன்னொரு பெண்ணுக்குமிடையே தொடர்புகள் முன்கூட்டியே இருந்துள்ளன. அவர் அப்பெண்ணுடனே வாழத்தலைப்பட்டுள்ளார். பின்னர்தான் இந்த விடயம் வெளியே தெரியவந்துள்ளது. இதனால் அப்பாவியான வந்தவரோ நல்லவேளையாக அவரது தாய்தந்தையர் இங்கு இருந்தமையால் அவர்களோடு வாழ்ந்துவந்தவருக்கு மிக அண்மையில் திருமணம் நடந்து முடிந்துள்ளது. அவர் நான்கு ஐந்து ஆண்டுகள் திருமணம் செய்யமுடியாத பிரச்சினைக்கும் கவலைக்கும் உள்ளானது மட்டுமன்றிப் பெற்றோருக்குமே பெரும் கவலையைத் தந்த சம்பவமாக அமைந்தது. இவ்வித செயல்கள் பிள்ளைகள் இல்லாத குடும்பங்களுக்குப் பாதிப்பைத் தருவதில்லை ஆனால் பிள்ளை பிறந்த பிற்பாடு பிரிதல் என்பது பிள்ளைகளின் எதிர்காலத்தை மிகவும் பாதிக்கும் செயல் என்பதனைப் பிரிந்து வாழத்தலைப்படும் தாயோ அன்றித் தந்தையோ நினைத்துக்கூடப் பார்க்க முன்வருவதில்லை. அவர்கள் பிரிவதற்கு முன்னர் தங்கள்

பிள்ளைகளின் எதிர்காலத்தைப்பற்றிச் சற்றுச் சிந்தித்துப் பார்ப்பார்கள் ஆனால் இந்தப் பிரிவினை முயற்சியினைத் தவிர்த்துக்கொள்ளலாம்.


எனக்குத் தெரிந்து ஒருவர் மனைவியின் நச்சரிப்பும், செயற்பாடுகளும் தாங்கமுடியாததால் வீட்டைவிட்டு வெளியேறினார். அவர் தனது பிரிவம், தனிமையும் சற்றுத் தனது மனைவியைச் சிந்திக்க வைக்கும்; அதனால் அவர் தன்னை நாடி வருவார்; அவரது பிடிவாதத்தன்மை குறையும் என எண்ணினார். ஆனால் அந்தப்பெண்ணுக்கோ வைராக்கியம் இன்னும் கூடியது. காரணம் கனடிய மண்ணில் தனித் தாய்மாருக்கு உள்ள சலுகைகளும், பெண்களுக்கான வாய்ப்புக்களும் என்றும் கூறலாம். உழைப்பு இல்லை என்றாலும் பிள்ளைகளுக்கும், தாய்க்கும் வாழ்க்கைக்குரிய செலவை ஈடுசெய்யக்கூடியளவு பணத்தினை உதவித் தொகையாக காப்பகங்களில் அல்லது சமூகநிதித் தாபனங்களில் (welfare) இருந்து பெறக்கூடியதாக இருப்பதும் ஒரு காரணமாகும். பெண்களால் கொடுக்கப்படும் முறைப்பாடுகளை ஆண்களை விசாரியாது அப்படியே நம்பும் நிலை அமைவதும் ஒரு காரணியாகும். எடுத்துக்காட்டாக 'எனது கணவர் குடிக்கிறார், அடிக்கிறார், போதைப்பொருளுக்கு அடிமை-என்னைக் கொடுமைப்படுத்துகின்றார்' என ஒரு பெண் முறையீடு செய்தால் அது பொய்யாக இருந்தாலும் உண்மை என்றே நம்பும் நிலைதான் உண்டு. இது பல குடும்பங்கள் பிரிந்துபோகக் காலாக அமைந்தும் விடுகின்றது. இதனால் பாதிக்கப்படுவது பிள்ளைகளே.

இவ்விதமாகப் பிரிந்த ஒரு குடும்பத்தில் கணவர் தன் பிள்ளைகளைப் பார்க்கக்கூடத் தடை விதிக்கப்பட்டிருந்ததினால் எவ்வளவோ முயற்சித்தும் பிள்ளைகளைப் பார்க்க அனுமதிக்காத காரணத்தால் மனம் உடைந்துபோன அவர் தான் வாழ்ந்துகாட்டவேண்டும் என்னும் வைராக்கியத்தோடு வேறு ஒரு திருமணத்தினைச் செய்து இன்பகரமாக வாழ்ந்து வருவதனைக் காணமுடிகின்றது. ஆனால் முந்திய மனைவியினால் சொல்லப்பட்ட போதைவஸ்த்துப் பாவித்தல்,

மதுபானத்திற்கு அடிமையாதல் என்பன அவரிடம் காணப்படவில்லை. எனவே இது ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளாத நிலைமைதான் காரணம் என்று உய்த்துணரத்தோன்றுகின்றது. ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுத்துப் பிள்ளைகளின் நலனைமட்டும் நினைத்திருந்தால் அந்தக் குடும்பம் பிரிந்திருக்கவேண்டிய நிலை தோன்றியிருக்காது. அது மட்டுமன்றி பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும். ஆனால் அவர்கள் இன்று பல்கலைக்கழகக் கல்வியைத் தொடரமுடியாதபடி தொழில் நுட்பக்கல்லூரிக்கு அனுப்பப்படக் காரணம் பெற்றோரின் கவனிப்பற்ற செயலே எனலாம்.

பிள்ளைகள் தாயின் அரவணைப்பில்தான் அதிகளவு வாழுகின்றார்கள் எனினும் தந்தையரின் அரவணைப்பிலும் பல பிள்ளைகள் வாழ்வதினை நாம் காண்கின்றோம். சிலர் தம் துணை இறந்தபின் தனித்துவத் தந்தையாகப் பிள்ளைகளுக்காக மறுமணம் செய்யாது வாழுவது தமிழர் சமூக வாழ்வியலில் புதிதானதொன்றல்ல. ஆனால் மேலைத்தேயங்களில் இத்தகைய தந்தையர் பிள்ளைகளைக் கவனித்து வளர்க்க, பெண்கள் பிள்ளைகளை உதாசீனம் செய்துவிட்டு தங்கள் சுயநலனைக் கவனித்துக் கொண்டிருப்பதினையும் நாம் காண்கின்றோம். தந்தையரோடு வாழும் பிள்ளைகளின் நிலை எத்தகையது என்பது பற்றிய ஆய்வுகளின் அடிப்படையில் பெற்றோரும் பிள்ளைகளும் அவர்களின் நிலைகளும் பற்றி விரிவாகப் பார்ப்போம்.





# 4

# குறைபாடுடைய பிள்ளைகள், பெற்றோரின் மணமுறிவுக்குக் காரணமாகின்றார்களா?

குறைபாடுடைய பிள்ளைகளைப் பெற்றெடுப்பது என்பது தந்தையின் அல்லது தாயின் குறைபாடு அல்ல என்பது மருத்துவ ஆய்வுகளின் வெளிப்பாடு. இதனை அறிந்துகொள்ளாது அல்லது குறைபாடுடைய பிள்ளைகளை வளர்ப்பது சிரமம் என்னும் காரணத்தினால் பெற்றோர் (தாய்-தந்தை) இருவரில் ஒருவரிடம் மட்டும் பிள்ளைகளைத் தவிக்கவிட்டுவிட்டு மற்றொருவர் தப்பித்து ஓடும் நிலை மேலை நாடுகளில் மட்டுமல்ல இந்தியா, இலங்கை போன்ற பல நாடுகளிலும் இடம் பெறுவதினைக் காணமுடிகின்றது. தாய் - தந்தை இருவருமே அந்தப் பிள்ளைக்குப் பொறுப்பும் உரிமையும் உடையவர்கள் என்பதனை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். தமது சுகபோக வாழ்வை அது பாதிக்கும் என்ற தன்னல நோக்கும், உடல் குறைபாடுடைய பிள்ளைகள் தமக்கு இழுக்கு என்னும் மனப்போக்கும் சில பெற்றோர் எண்ணத்தில் ஏற்படுவதால் அதற்குரிய தீர்வாக பிரிவு அல்லது

மணமுறிவை மேற்கொள்ளும் பாதகத்தைச் செய்வது உலகின் பல பாகங்களிலும் நடக்கிறது.

பிள்ளைகள் வயிற்றில் கருவுற்றவுடன் தாய்க்கு ஏற்படும் திடீர் அதிர்ச்சிகள், நோய்கள், ஊட்டச்சத்தற்ற உணவு, போதிய ஓய்வு கிடைக்காமை, மனவிரக்தி முதலியன கருவில் உள்ள பிள்ளையின் வளர்ச்சியினைப் பாதிப்பதோடு மட்டுமன்றி உடல் நலக்குறைபாடுடைய அல்லது உள நலக்குறைபாடுடைய பிள்ளைகள் பிறக்கவும் காரணிகள் ஆகின்றன.

குழந்தைகள் கருவில் இருக்கும் போது செய்யப்படும் மருத்துவ தொழில் நுட்ப பரிசோதனைகள் மூலம் குழந்தைகளுக்கு உள்ள குறைபாடுகள், நோய்கள் என்பன கண்டறியப்படுகின்றன. இவ்விதம் கண்டறியப்படும் நோய்களில் புறத்தோற்றம் தரும் குறைபாடுகள் சில மருத்துவ சிகிச்சைமூலம் குணப்படுத்தக்கூடியதாக அமைகின்றது. சில குணப்படுத்துவது கடினமாகும். புறத்தோற்றத்தில் தெரிகின்ற இத்தகைய குறைபாடுகளை கரு உற்பத்தியாகி 3அல்லது 4மாதங்களில் மருத்துவர் நுணுகி ஆராய்ந்து அவைபற்றிய அறிவுரைகளை பெற்றோருக்குக் கூறும் வாய்ப்பு இப்பொழுது காணப்படுகின்றது.

மூளையோடும் முள்ளந்தண்டோடும் தொடர்புடைய பரம்பரையான குறைபாடாக இருந்தால் அவைபற்றிய பதிவேடுகளை ஒழுங்கமைத்து பெற்றோருக்கு மிகவும் நுட்பமாக அறிவுறுத்தலை வைத்தியக்குழு நல்குவதன் மூலம் அவ்விதமான உடல் குறையுள்ள பிள்ளைகளைப் பெற்றெடுத்து வளர்ப்பதில் உள்ள கஷ்ட நஷ்டங்கள் ஆலோசனைகளாக வழங்கப்படும். பேற்றோர் சம்மதிக்கும் வேளையில் அந்தக் குழந்தை தொடர்ந்து வளராதபடி கருவிலேயே நிறுத்திவிடுகின்ற அல்லது குலைத்து விடுகின்ற நடைமுறையினை வைத்தியர்கள் மேற்கொள்ளுவார்கள். இவ்வித முன்னோடியான ஆலோசனைகளைப் பின்பற்றும் பெற்றோருக்கு குடும்பத்தில் கவலை, பிரிவினை ஏற்படாது

தடைசெய்கின்ற தன்மை ஏற்படும். அதனால் குடும்ப உறவு நல்லுறவாக நிலைபெறும். ஆனால் வைத்தியர்களின் ஆலோசனையைக் கேட்காத பெற்றோர் பின்னர் வாழ்நாள் முழுமையும் கவலையுற வேண்டியநிலையுடன் அதன்வழி குடும்பத்தில் பிரச்சினைகளும் தலைதூக்குவதனைக் காணலாம். இது ஈற்றில் தடுக்க முடியாதபடி மணமுறிவுக்குக் கொண்டுசெல்வதனையும் அறியலாம்.

குடும்பம் ஒற்றுமையாக அமைவதற்கு அங்கு இன்பகரமான சூழ்நிலை இடம்பெறவேண்டும். அதற்கு கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பது மட்டுமன்றி அவர்களிடையே எழும் பிரச்சினைகள் குறித்து தினமும் கலந்துரையாடவும் வேண்டும். சிலவற்றை ஆண்கள் சமாச்சாரம் என்றோ அன்றி பெண்கள் சமாச்சாரம் என்றோ புறம்தள்ளி வைக்க முற்படக்கூடாது. எல்லா விடயங்களையும் மனம்விடுத்துக் கதைத்து அதற்கான பரிகாரங்களைத் தேடித்தான் ஆகவேண்டும். அப்போதுதான் குடும்பத்தில் இங்கிதம் தவழும். ஆண்டவன் முதன்முதல் தந்த கருவை அழிப்பதா என்று வைத்தியர்களிடம் முரண்பட்டால் அது சிலவேளைகளில் மணமுறிவுக்கே கொண்டு செல்லும் என்பதனை ஒவ்வொருவரும் சிந்தித்துப்பார்த்தல் அவசியமாகும்.

மூளை - முள்ளந்தண்டுப் பிரச்சினையுடன் பிறந்த பல குழந்தைகளுடன் பல பெற்றோர்கள் வாழ்க்கை முழுமையும் கஷ்டப்படுவதினை நமது நாடுகளில் மட்டுமல்ல மேலைநாடுகளிலும் காணமுடிகின்றது. கணவன் வியாபாரம் செய்ய மனைவி அரசாங்க நிறுவனம் ஒன்றில் வேலை செய்யும் குடும்பத்தில் இரண்டு பெண்குழந்தைகளுக்குப் பின்னர் ஓர் ஆண் குழந்தை ஆசை தீர்க்கும் மகனாக வந்து பிறந்தார். ஆனால் அவர் வளர்ந்து வரும்போதுதான் முள்ளந்தண்டு மூளைவளர்ச்சி பாதிப்புள்ள பிள்ளை என்பது கண்டுபிடிக்கப்பட்டது. பிள்ளை படுக்கையிலேயே படுத்து கிடக்கின்ற

நிலையில் தாயாரை வேலையை விட்டு நிற்கும்படி சொன்னாலும் கேட்பதாக இல்லை. இந்த நிலையில் கணவன் மனைவியரிடையே ஒரு மனப்போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருப்பதனை அவதானிக்க முடிகின்றது. அங்கு இன்பகரமான குடும்ப சூழ்நிலை நாசமாய்ப் போய்க் கொண்டிருக்க கடவுளின் மேல் பழியைப் போட்டுக்கொண்டு தம்மை வருத்திக் கொண்டு பெற்றோர் இருப்பதைக் காணமுடிகின்றது.


இவ்விதமான குழந்தைகள் பிறப்பதை 60 விழுக்காட்டிலிருந்து 75 விழுக்காடுவரை குறைத்துக்கொள்ள முடியும் என வைத்தியர்கள் ஆலோசனை நல்குகிறார்கள். அதாவது போலிக் ஆசிட்டை கர்ப்பமாவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னரும் கர்ப்பமான பின்னர் மூன்றுமாதங்களும் உட்கொள்வதனால் இத்தகைய கோளாறுகளைக் குறைத்துக்கொள்ளலாம் எனக் குறிப்பிடுகின்றனர். எனவே பெற்றோர் இது விடயத்தில் வைத்தி யரின் ஆலோசனைகளை முழுமையாக நாடினால் குடும்பத்தில் மகிழ்வு நிலவும். இது பல இடர்பாடுகளைத் தவிர்க்கக் காரணமாக அமைகின்றது.


மூளைக் குறைபாடுடைய பிள்ளைகளை வைத்திருந்து அவர்களைப் பேணிப்பாதுகாத்து வளர்ப்பது சாதாரணமான விடயமல்ல. அண்மையில் ஒரு 5 வயதுப் பிள்ளையின் உடல்தோற்றம் 7 வயதுப் பிள்ளையை ஒத்ததாக இருந்தது. ஆனால் கதைக்கவோ விளையாட்டுப் பொருட்களை மற்றப்பிள்ளைகள் விளையாடுவதுபோன்று விளையாடவோ மாட்டாத நிலையில் இருப்பதனை அறிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. அவர் ஒருவயதுப் பிள்ளையின் பக்குவத்தில்தான் அவரது மூளை வளர்ச்சி காணப்படுவதாக வைத்தியர்கள் குறிப்பிட்டுள்ளனர். அவரது நிலை பெற்றோரை மிகவும் சிரமத்திற்கு ஆளாக்குவதனைக் காணமுடிந்தது.

இவ்வித நிலைமைகள் பெற்றோரிடையே மனவிரக்தியை ஏற்படுத்தி ஒருவரோடு ஒருவர் தர்க்கித்துக் கொள்ளுகின்ற அல்லது

எரிந்து விழுகின்ற போக்கினை ஏற்படுத்துகின்றன. இவை குடும்பப்பிரிவினைக்குப் பல இடங்களில் இட்டுச்சென்றுள்ளதனையும் தனித்து விடப்பட்ட தாய்மார்களே இந்தப் பிள்ளைகளைப் பராமரிக்கின்ற நிலைமையினையும் காணமுடிகின்றது.

குடும்பம் என்பது கணவன் மனைவி இருவரினதும் புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, பிள்ளைகள் மீது கொண்டுள்ள பற்று, பாசம் என்பனவற்றோடு பின்னிப் பிணைந்தது. பிள்ளைகளின் குறைபாட்டிற்குத் தாயையோ அன்றித் தந்தையையோ குறைகூறாது இருவருமே பொறுப்பேற்று அவர்களைப் பேணிப் பாதுகாப்பதோடு குடும்ப உறவை மேலும் வலுப்படுத்தி வாழவேண்டியவர்கள் பெற்றோர்களாகிய அவர்களே.





# 5

# தனித் தாய்மாரும் பிள்ளைகளும்

கனடா போன்ற மேலை நாடுகளின் குடும்ப வாழ்க்கை முறை தெற்காசிய நாடுகளை விட பல வழிகளிலும் வேறுபாடுடையது என்பது பற்றி நாம் அனைவரும் அறிவோம் எனினும் தனித்தாய்மாருக்குப் பல வசதிகள் வாய்ப்புக்கள் இங்கு இருப்பதினால் அவர்கள் உல்லாசமாக வாழுகின்றார்கள் என்ற எண்ணம் பலருக்கு ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு.

கனடிய அரசு வழங்கும் சலுகைகள் தனித்தாய்மாருக்கு மிக அதிகம் என்று சொல்லக் கூடியதாக உள்ளது. குழந்தைகளுக்கான வரிச் சலுகை நிதி, உபகார நிதி போன்றன கிடைப்பதனால் வேலை செய்யாது உல்லாசமாகக் கழிப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம். அதிலும் ஒரு பிள்ளைக்கு மேலாக இருப்பின் இந்தச் சலுகைகள் மிக அதிகம் என்றே கூறலாம். நான்கு ஐந்து பிள்ளைகளுக்குத் தாயாக உள்ள ஒரு இளம் பெண் பிள்ளைகளைப் பாடசாலையிலும், பராமரிப்பு நிலையங்களிலும் விட்டுவிட்டு கல்விகற்க அல்லது பகுதிநேர

வேலைக்குச் செல்லும் வாய்ப்பு அதிகமாக உள்ளமையால் அவர்கள் உல்லாசமாகப் பொழுதைக் கழிக்கின்றார்கள் என்பது ஒருபுறத்தில் உண்மையாக உள்ளது. பிள்ளைகளைப் பராமரிக்கும் தாய்மை நிலையை பராமரிப்பு நிலையங்களில் உள்ளவர்களிடம் ஒப்படைப்பதால் வளரும் பிள்ளைகளின் மனநிலை பாதிப்புக்கு உள்ளாகும் தன்மையினை அவர்கள் கருத்திற்கொள்வதில்லை. அந்தத் தனித்தாய்மாரின் பிள்ளைகள் பிற்காலத்தில் வன்முறையாளர்களாக, நெறிதவறி வாழ்வோராக, சமூகவிரோதிகளாக மாறுகின்றார்கள் என்பது ஆய்வறிக்கைகள் மூலம் அறியக்கிடக்கின்றது.

தனித் தாய்மாருக்குக் கிடைக்கும் சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்காக பல பெற்றோர் தாம் பிரிந்து வாழ்வதாக அரசுக்குக் காட்டிக்கொண்டு இருவருமே வெவ்வேறு இடங்களில் வதிவதன் மூலம்-அரசாங்கத்தின் சமூக நிதியுதவியைப் பெறும் குறுக்குவழிப் பணந்தேடலால் தமது பிள்ளைகளின் வாழ்வைப் பாழடிப்பதோடு தாம் ஒன்றாக இருந்து அனுபவிக்வேண்டிய குடும்ப வாழ்க்கையினையும் வீணடிக்கின்றனர். இவர்கள் சதா பயந்த நிலையில் இருப்பது மட்டுமன்றி பிள்ளைகளுக்கும் பொய்சொல்லவைக்கும் பழக்கத்தையும் தம்மையறியாமலே ஏற்படுத்தக் காலாக அமைகின்றனர்.

ஒரு தொடர்மாடிக் கட்டிடத்தில் வாழ்ந்த ஒரு தனித்தாய்க்கு மூன்று பிள்ளைகள். கணவன் எங்கு சென்றார் எனத் தெரியாது என்று குடிவரவுத்திணைக்கழத்திற்கு அறிவித்திருந்ததால் அவர் தனித்தாயாருக்கான சலுகைகளைப் பெற்றுக்கொண்டிருந்தார். அவரின் கணவர் கனடாவிற்கு வந்ததும், கணவனை வேறு இடத்தில் இருக்க வைத்ததால் அவரும் அரச சமூக நிதி உதவியினைப பெற்று வந்தார். ஒரு நாள் கணவன் மனைவியிடம் வந்து இருந்த வேளை ஒரு பார்சல் அவர்களுக்கு தபால்காரர் கொண்டு வந்ததை உள்ளிருந்து அவதானித்தவர்கள் தொப்பியுடன் வந்தவர் பொலீசாரோ, சமூகசேவைத் திணைக்களத்தைச் சார்ந்தவரோ என ஊகித்துக்கொண்டு கதவைத்

திறவாததோடு, கணவன் பயத்தில் மாடியில் இருந்து பாய்ந்து தப்ப முயற்சித்துள்ளார். அதிர்ஷ்டவசமாக அந்த பொதியைக் கொண்டுவந்த தபால் ஊழியர் திரும்பிச் சென்றதனால் கணவன் உயிர் தப்பினார். இச்சம்பவத்தினை அவர்களின் மூன்று பிள்ளைகளும் அவதானித்துக்கொண்டு இருந்துள்ளனர். தாய் தந்தையரின் பிறழ்வான நடத்தை பிள்ளைகளின் மனதில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதனை அந்தத் தாய்தந்தையர் உணர்ந்து கொள்ள காலம் எடுத்தாலும அதன் தாக்கத்தின் பலனைக் காலம் அவர்களுக்கு நினைவூட்டும் எனலாம்.

தனித்துவாழும் எல்லாத் தாய்மாரையும் ஒரே சீராக எடைபோட முடியாது என்பதும் நாம் நினைவிலிருத்திக் கொள்ளவேண்டும். பல பெண்பிள்ளைகள் பருவக்கோளாறு, ஏமாற்றம், அறியாமை போன்ற காரணிகளினால் தம்மை இழந்துவிடுவதினால் திருமணமாகாமலே பிள்ளைகளுக்குத் தாயாகும் நிலை மலிந்துவிட்ட நிலை இன்று உலக நாடுகள் பலவற்றில் காணப்படுகின்றது. மேலை நாடுகளில் குடும்பக்கட்டுப்பாடு, சமூகக்கட்டுப்பாடு என்பன இல்லாத காரணத்தினாலும், சட்டம் எல்லாவற்றிற்குமே நெகிழ்ந்து கொடுப்பதினாலும் கட்டிளமைப் பருவத்தே பாலியல் உறவில் ஈடுபட்டுவிடுவதினால் பல இளம்பிராயப் பெண்பிள்ளைகள் தமது பள்ளிப்பருவத்திலே தாய்மை அடைந்து தவிக்கின்ற நிலையினைக் காணலாம்.

21.11.2004 திகதி Parents World என்னும் பத்திரிகையில் **So You Want To Be A Teenage Mother, Think Again** என்ற தலையங்கத்தில் ஒரு இளம் தாயால் எழுதப்பட்ட ஒரு உருக்கமான கட்டுரை ஒன்றினை வாசிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ள சோகமான கதை பின்வருமாறு அமைந்துள்ளது. “நான் 9ம் வகுப்பு கற்க இடைநிலைப் பள்ளிக்குச் செல்வதற்குத் தயாரான வேளை அதாவது 14வயதாக இருக்கும்போது எனக்கும்

ஒரு 19 வயதான ஆணுக்கும் பழக்கம் ஏற்பட்டது. அவரோடு நான் பழகிவந்ததனால் ஒரு முறை தன்னை மறந்த நிலையில் உடலுறவு கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது. நான் மறுப்புத் தெரிவிக்காது தொடர்பு கொண்டுவிட்டேன். இது ஒரு ஞாயிற்றுக் கிழமையாக இருந்தமையால் குடும்பக் கட்டுப்பாட்டுக்கான உபகரணங்களை வாங்கும் கடைகளும் பூட்டப்பட்டு இருந்தன என்பதோடு விளைவினை சிந்திக்காது அந்த நிலைக்கு உந்தப்பட்டேன். நான் கர்ப்பமுற்றதை தன்னோடு உறவு கொண்ட அந்த நபருக்குக் கூறினேன் எனினும் அவரால் எனக்கு உதவமுடியாது என்பதனை உணர்ந்துகொண்டேன். கருவை அழித்துவிட நான் விரும்பவில்லை. குழந்தையைப் பெற்று வளர்ப்பது என்று முடிவெடுத்தேன். எனது தந்தை, எனது அக்கா யாருடனாவது தகாத உறவுகொண்டு கர்ப்பவதியானால் அவரை வீட்டைவிட்டுத் துரத்திவிடுவேன் என்று அடிக்கடி கூறுவார். இதுவும் எனக்குப் பயமாக இருந்தது. ஆனால் எனது தாய் எனக்கு ஆதரவு தந்தார். நான் கிட்டத்தட்ட ஏழுமாதங்கள் அந்தக் கருவை மறைத்துத் திரிந்தேன், பாடசாலையில் பலர் என்னைக் கேலிசெய்தார்கள். பலவிதமாகக் கதைத்தார்கள். ஒருமுறை எனது ஒன்றுவிட்ட சகோதரி என்னிடம் வந்து எனது மேற்சட்டையை உயர்த்திவிட்டார். அப்போதே அவர் எனது வயிற்றினைக் கண்டுகொண்டார். எனக்குச் சில நண்பிகள் ஆதரவு வார்த்தைகள் கூறினார்கள். என்னுடன் உறவுகொண்டவருடன் எனது நாளாந்தப் பிரச்சினைகளைக் கதைத்தேன். பாடசாலையில் மருத்துவ விடுவிப்புப் பெற்றுக்கொண்டு சென்றபின்னர் சற்று ஓய்வாக இருந்தேன். வீட்டில் 90வீதமான நேரம் துயில் கொண்டேன். குழந்தை பிறந்த பின்னர் எனக்குப் பாடசாலையில் கோடை விடுமுறை வந்தது. அது சற்று ஓய்வாக எனக்கு இருந்தது. மீண்டும் பாடசாலையில் நான் சேர்ந்துகொண்ட போது எனது பாண்டு ஆசிரியர் என்னை அதிலிருந்து உதைத்து வெளியே அனுப்ப முயற்சித்தார். அவர் நீ வீட்டில் இருந்து பிள்ளையைப் பார்க்கத்தான் உனக்குத் தகுதி உண்டு எனது பாண்டு குழுவில் இருப்பதற்கு முடியாது என்று குறிப்பிட்டார். எனது தாயார்

இந்த விடயத்தை கல்விச் சபைக்கு எடுத்துச் சென்றார். அவர்கள் அந்த ஆசிரியர் அப்படிச் செய்யமுடியாது என்று கூறினர். ஆனால் என்னால் எல்லா இடத்திற்கும் - அல்லது விருந்துகள் கேளிக்கைகளுக்குச் செல்ல முடியாதிருந்தது. என்னை யாரும் அழைப்பதும் இல்லை. நான் எனது நண்பிகளிடம் எனது ஆதங்கத்தைக் கூறி அழுவதைத்தவிர வேறு எதனையும் செய்யமுடியாதவளாய் இருந்தேன். எனது வயது மாணவியரைப் போலன்றி, நான் எங்குமே செல்ல முடியாதவளாக இருந்தேன். படத்திற்குக் கூடப் போகமுடியாதவளாக இருந்தேன்.

எனக்கு 16 வயதாக இருந்தபோது முதலாவது வேலையைப் பெற்றுக்கொண்டேன், எனது குழந்தைக்கான பொருட்களுக்குக்கூட என்னால் செலவுசெய்ய போதாமல் இருந்தது. ஆனால் எனது வயது இளம்பெண்களோ தங்கள் தாய்தந்தையரின் பணத்தினைத் தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கச் செலவு செய்துகொண்டிருந்தார்கள். நான் அவற்றை வாங்கவும் முடியாது மனம் வருந்தினேன். எனக்கு உண்மையிலேயே நல்ல இரு நண்பர்கள் இருந்தார்கள். ஒன்று எனது ஒன்றவிட்ட சகோதரன் மற்றவர் எனது பிள்ளையின் தந்தையான காதலன். நாங்கள் மூவரும் சிலவேளைகளில் எங்காவது செல்வோம். எப்பவாவது ஒரு முறைதான் எனக்குச் செல்லும் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்தவகையிலே நான் சற்று அதிர்ஷ்டத்தினைப் பெற்றிருந்தேன். இவ்வித செலவுகளுக்கு என்னிடம் போதியளவு பணம் இருக்கவில்லை. அவர்கள் இருவரும் எனது குழந்தையின் சின்னச் சின்ன அழகிய செயல்களைப்பற்றி நான் கூறுவதை மிக இரக்கத்தோடு கேட்பார்கள். அவர்கள் எனக்கு எல்லாவற்றிற்கும் மேலாக கதைப்பதற்கு ஆட்கள் தேவை என்பதனை உணர்ந்திருந்தார்கள். நான் ஒரு காரை வாங்கி ஓட்டத் தொடங்கியதும் எனது காதலனுடன் சிலவேளைகளில் இரவு உணவிற்கு அல்லது டிஸ்னி மூவிகளுக்கு மட்டும் போவேன்.

எனது நண்பிகள் சுற்றுலாக்களுக்கும் வெவ்வேறு களியாட்டுக்களுக்கும் செல்ல நான் உபகார நிதி, குழந்தைப் பராமரிப்பு நிதி போன்ற அலுவல்களைக் கவனிக்கவேண்டிய பாரிய வேலைகள் காத்திருந்தன. ஒரு வகையில் நான் அதிர்ஷ்டம் செய்தவள். ஏனென்றால் எனது அம்மா எனது மகளைப் பார்த்துக்கொள்ளுவார். இந்த வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. எப்படியோ நான் எனது படிப்பை முடித்து பட்டத்தையும் பெற்றுக் கொண்டேன். இன்பமாகக் கழிக்கவேண்டிய இளமைப்பருவம் பிள்ளையின் போத்தல்களோடும், பராமரித்தலோடும் கழிகின்றது. மற்றவர்கள்போல் என்னால் எங்கும் சுதந்திரமாகத் திரியமுடியவில்லை. மற்றவர்களும் என்னை ஒதுக்கி விடுகின்றார்கள்.

இந்த நிலையை என்னைப் போன்ற எந்தவொரு பதின்மப்பருவத்துப் பெண்களும் எதிர்கொள்ளத் தயாராயின் எதிர்கொள்ளலாம். ஆனால் தாய்மை அடைந்தால் இளமையில் அனுபவிக்கவேண்டிய பலவற்றை இழக்க வேண்டி வரும் என்பதனையும் உணர்ந்துகொள்ளவேண்டும்" - என்று தனது மனக்குமுறலைக் கொட்டித்தீர்த்துள்ளார் அந்த பால்மணம் மாறாத தாயாகிவிட்ட இளம் யுவதி.

இவ்வித இடர்பாடுகளை, பல சோகம் நிறைந்த கதைகளை எம்மவரிடையே பலர் இன்று அனுபவிக்கும் நிலை ஏற்பட்டுவருகின்றது என்பதனைக் கவனத்திற்கொள்ளுதல் முக்கியமானது. கண்டதும் காதல் கொண்டதும் கோலம் என்ற நிலையில் பல இளம் பெண்கள் தங்கள் எதிர்காலத்தைப் பாழடித்து தனித்தாயாராக அலைப்படும் நிலையினை நன்கு உணரவேண்டியது மிக முக்கியமானதாகும். காமுகர்களால் இம்சிக்கப்பட்டு நடுத்தெருவில் விடப்படும் பல இளம் பெண்கள் தங்கள் கல்வியினை இடைநடுவில் விடுத்து, தாய் தந்தையரை விரோதித்து எதிர்காலத்தை மாய்த்து தமது இன்பமயமான வாழ்வைப் பாழடிக்கும் நிலை தோன்றியுள்ளமையை எதிர்கொள்ளவேண்டியவர்கள் பிள்ளைகள்

மட்டுமல்ல பெற்றோரும் கூட. பிள்ளைகள் எங்கே செல்கின்றார்கள், அவர்களின் கல்வி பெறுபேறுகள் என்ன என்பனவைபற்றில் கண்ணும் கருத்துமாகச் செயற்படவேண்டியவர்கள் அவர்களே.

கனடா போன்ற மேலை நாடுகளின் குடும்ப வாழ்க்கை முறை தெற்காசிய நாடுகளை விட பல வழிகளிலும் வேறுபாடுடையது என்பது பற்றி நாம் அனைவரும் அறிவோம் எனினும் தனித்தாய்மாருக்குப் பல வசதிகள் வாய்ப்புக்கள் இங்கு இருப்பதினால் அவர்கள் உல்லாசமாக வாழுகின்றார்கள் என்ற எண்ணம் பலருக்கு ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு.

ஈழத்தில் நீண்டகாலமாக இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களால் தனித்தாய்மாரின் எண்ணிக்கை என்றும் இல்லாதவாறு தமிழ்ப் பிரதேசங்களில் பல்கிப்பெருகியமை அனைவரும் அறிந்ததே. பல்லாயிரக்கணக்கான ஆண்கள் சிறைக்கைதிகளாக முகாம்களுக்கு



அழைத்துச் செல்லப்பட்டு அங்கு அவர்கள் காணாமல் போனதன் காரணமாக பிள்ளைகளோடு தாய்மார் தம் கணவன்மாரைக் காண்பதற்காக இராணுவமுகாம்களுக்கும் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் போன்று உதவி நிறுவனங்களுக்கும் அரசாங்க அதிபர் பணிமனைகளுக்கும் அலைந்து திரிந்தமையை காணமுடியும். கடந்த மார்கழி, ஞாயிற்றுக்கிழமை 19.12.2004 அன்று தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரால், இவ்விதமாக விதவைகளாக்கப்பட்ட தாய்மாரின் துயர்துடைப்பு நிதிக்காக 'தீயின் வெட்கம்' என்னும் நாடகத்தினை ஒரேநாளில் இருதடவைகள் மேடையேற்றியிருந்தனர். இந்த நிதி சேகரிப்புக்கான தேவை அங்கு மிகவதிகமாகத் தேவைப்படுவதே காரணம் என்பதை உணர்த்தி நிற்கின்றது. கனடிய மண்ணில் தனித்தாய்மார் அனுபவிக்கும் வாய்ப்புக்கள் வசதிகள் தமிழீழத்தில் இல்லை என்பது நாம் அனைவரும் அறிந்ததே.

கனடாவில் தனித்தாயருக்கு குறைந்த கட்டண வாடகைக் குடியிருப்புக்கள், இலவச பிள்ளை பராமரிப்பு, கல்வியைத் தொடரக்கூடிய வாய்ப்புக்கள், வரிச்சலுகைகள், குழந்தைகளுக்கான வரிச்சலுகை வாய்ப்புக்கள் என்பன கிடைப்பதுபோன்று எம்நாட்டுத் தாய்மாருக்குக் கிடைப்பது இல்லை என்பதனை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். அவர்கள் யாருடைய தயவிற்றான் தங்கி இருக்கவேண்டிய நியதி காணப்படுகின்றது. தற்போதுள்ள நிலைமையில் எந்தவொரு தொழிலையும் செய்யமுடியாதவர்களாக தனித்தாய்மார் மட்டுமல்ல அங்குள்ள குடும்பத்தினர் பின்தள்ளப்பட்டுள்ளனர். விவசாயம், கடற்றொழில் என்பன கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. தங்கள் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தமுடியாத நிலை காணப்படுகின்றது. யுத்தம் காரணமாக இடம்விட்டு இடம் ஓடியவர்கள், கொஞ்சம் கொஞ்சமாகச் சேகரித்து வைத்திருந்த பொருட்களையெல்லாம் இழந்து நிர்க்கதியாக நிற்பவர்கள் எந்தவித ஆதரவுமின்றி அவதியுறுவதனால் பிள்ளைகளுக்கான நிறை உணவினைத் தானும் தரமுடியாதவர்களாக

உள்ளனர். இந்த அவதியுறும் நிலை - வெளிநாட்டுத் தொடர்புகள் சற்றுமே இல்லாத குடும்பத்தினரின் நிலை பரிதாபகரமானதாக உள்ளது.

1985ம் ஆண்டு கொப்பேகடுவ என்னும் இராணுவத் தளபதியின் தலைமையில் முல்லைத்தீவில் உள்ள குமுளமுனை என்னும் கிராமம் சுற்றி வளைக்கப்பட்டு அங்குள்ள அனைத்து ஆண்களும் பாடசாலையில் மறித்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு அதில் சிலர் முல்லைத்தீவு இராணுவ முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அண்ணன் தம்பி ஐந்து குடும்பஸ்த்தர்கள் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர். அத்தோடு அந்தக் குடும்பத்தினரோடு நட்பாக இருந்து தொழில் புரிந்த மலையகத்தைச் சேர்ந்த இன்னொரு இளம் குடும்பத்தவரும் கொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் சிலர் மதவாச்சியிலுள்ள முகாமிற்கு அழைத்துச்செல்லப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்ட அப்பாவிகளாவர். பதவியாவிலிருந்து இந்தக் கிராமத்திற்கு வேளாண்மை அறுவடை செய்வதற்காக வந்திருந்த சில சிங்களத் தொழிலாளர்கள் காணாமல் போனதே இதற்குக் காரணமாகும். ஆனால் ஏதுமறியாத அப்பாவிகளான இவர்களின் மனைவியர் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களின் பிள்ளைகள் பரிதாபகரமான தாக்கத்திற்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.

வன்னியின் கிராமங்கள் அனைத்திலுமே இத்தகைய அடாவடித்தனத்தால் பலர் கொல்லப்பட்டனர். துணுக்காய்ப் பிரதேசத்தில் இராணுவத்திற்கு உளவுசொல்லும் ஒருவர் தண்டனைக்குள்ளாக்கப் பட்டமையினால் பழிக்குப்பழி என்னும் ரீதியில் மாங்குளத்திலிருந்து வந்த பொலீஸ் ஜீப்பிலிருந்தவர்கள் மல்லாவியில் நின்றவர்கள் மீது கண்மூடித்தனமாகச் சுட்டதில் மூன்று குடும்பஸ்த்தர்களும், மூன்று வாலிபர்களும் உயிரிழந்தனர். இந்த அப்பாவிகள் ஏதுமறியாத பொதுமக்களாவர். இதனால் இவர்களின் மனைவியர் விதவைகளாக்கப்பட்டனர். இவ்விதமாக ஒதியமலை என்னும் நெடுங்கேணிப் பகுதியில் உள்ள ஒரு குக்கிராமத்தில் நுழைந்த

இராணுவம் அங்குள்ள ஆண்களைக் கட்டிவைத்து சுட்டுத்தள்ளியுள்ளது. இதனால் அந்தக் கிராமத்திலுள்ள பல பெண்கள் விதவை களாக்கப்பட்டதோடு, பிள்ளைகளையும் இழந்தனர்.


செட்டிகுளம் என்னும் விவசாயக் குடியேற்றக் கிராமத்தில் நுழைந்த இராணுவம் பாடசாலையில் இருந்த ஆசிரியர்களைக் கூட விட்டுவைக்கவில்லை. அவர்களை மதவாச்சி இராணுவமுகாமுக்கு அழைத்துச்சென்று தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். இதனால் தந்தையின் முகம் தெரியாது பிள்ளைகளையும், விதவைகளான பெண்களையும் தமிழ்ப்பிரதேசம் அதிகளவில் பெற்றுக் கொண்டது.


இவ்வித கொடுமைகளைக் கண்டும் கேட்டும் வளர்ச்சியடைந்த பிள்ளைகளின் மனதில் விரக்தி மனப்பான்மை குடிகொண்டுள்ளதோடு அவர்கள் இராணுவத்திற்கும், அரசாங்கத்திற்கும் எதிரான வன்முறைகளில் ஈடுபடவும் தூண்டிவிட்டது அரசாங்கமும் இராணுவமுமே என்றால் தவறில்லை.

தனித்து விடப்பட்ட விதவைத்தாய்மார் ஒருபுறமும் பயத்தினால் தம் உயிரைப் பாதுகாப்பதற்காக வெளிநாடுகளுக்கு ஓடிச்சென்ற இளம் குடும்பத்தவர்கள் ஒருபுறமுமாக தனித்தாயாரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதற்கு பல காரணிகள் எம் நாட்டில் காணப்படுவதற்கு மாறாக வளர்ச்சியடைந்து நாகரிகம் கண்ட நாடுகளில் தனித்தாயாரின் நிலைமைகள் பல்வேறு மாறுபட்ட காரணிகளினால் அதிகரித்துச் செல்கின்றமையினை அவதானிக்கலாம்.

பாலியல், பொருளாதாரம், சலுகைகள், சமூக நிலைமைகள் என்பன தனித்தாயாரின் வரம்பைக் கட்டுப்படுத்தும் காரணிகளாக அமைகின்றன. தனித்தாய் என்ற எல்லைக்குள் அவர்கள் தங்களை வரையறுத்துக் கொள்ளுவதற்கு இவை காரணமாக அமைகின்றன. வளர்ச்சியடைந்த நாடுகளில் இன்று தலைவிரித்தாடும் கொடுமைகளில் ஓரினச் சேர்க்கை சமூகத்தில் பெரும் பிரச்சினையினைக்

கொண்டுவருகின்றது. தனிமனித உரிமை என்ற போர்வையில் இயற்கைக்கு மாறாக ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணும் திருமணம் செய்ய உரிமை வேண்டும் என்னும் கோரிக்கை இன்று வட அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளில் வளர்ந்து வருவது சமூகத்திற்கு மட்டுமன்றி சமய தாபனங்களுக்கும் ஏன் அரசுக்குமே தலையிடியினைக் கொடுக்கும் விடயமாகக் காணப்படுகின்றது.





# 6

# பெற்றோர் பிரிந்து வாழ்வதால் பிள்ளைகளுக்கு ஏற்படும் உள, உடலியற் பாதிப்புக்கள்

திருமண முறிவுகளுக்கான காரணிகளைப் பொதுவாக நோக்கும் போது ஒன்றோ பலவோ தனித்தனியாகவோ ஒருமித்தோ இடம்பெறுவதினை நாம் சர்வசாதாரணமாகக் காணலாம். தாயகத்தில் பெற்றோரின் தலையீட்டினாலேயே திருமணங்கள் இடம்பெறுகின்றன. இதன் காரணமாக பல திருமணங்களில் இடர்வினைகள் இடையிடையே வந்துபோவதும் ஊர்ப்பெரியோர்களின் தலையீடு காரணமாக அவை சரிப்படுத்தப்பட்டு சுமுகநிலைக்குக் கொண்டுவருவதும் சாதாரணவிடயங்கள். எடுத்துக்காட்டாக எனது நண்பர் ஒருவர் மிக நீண்டகாலமாக மனைவியைப் பிரிந்து தனது பெற்றோருடன் வாழ்ந்து வந்தார். காரணம் கேட்டால் அவர் தனது எண்ணத்திற்கு இயையாத மனைவியுடன் வாழ்வது எப்படி? எனக்கேட்டார். தான் தனது பெற்றோருடன்தான் வாழவேண்டும் என விடாப்பிடியாக இருக்கும்போது அவர் மனைவியோ தான் தனது பெற்றோருடன்தான் இருக்கவேண்டும் என்பதில் உறுதியாக நின்றதனால் இந்த மனக்குழப்பமும் பிரிவும்

ஏற்பட்டதைக் காணமுடிந்தது. ஒவ்வொருவரும் நன்கு சிந்திக்காததால் அந்தக் குடும்பம் பிரிந்து வாழ்ந்தது. ஒரே ஒரு ஆண்மகனோடு பெண் தனது தாய்வீட்டில் வாழ்ந்துவந்தார். இவர்கள் இருவரும் தங்கள் குடும்பம், தங்கள் பிள்ளை, தனது மனைவி, தனது கணவன் என்ற எண்ணங்களைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, தனது தாய் தந்தை, சகோதரங்கள் என்ற எண்ணப்பாங்கிற்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்தமையே காரணமாக அமைந்தது. பத்தோ பன்னிரண்டோ ஆண்டுகள் தங்கள் தாய்தந்தையருக்காகவே இவர்கள் வாழ்ந்தார்கள் என்பது உண்மை என்றாலும் தங்களது பிள்ளைகள், குடும்பம் என்பதை புறம் தள்ளிவிட்டு வாழ்ந்தமையை நான் அறிவேன். தனது சகோதரர்களை நன்னிலைப்படுத்தவேண்டும் என்பதால், அவர்களுக்கு தலைமை தாங்கி வழிகாட்டி நெறிப்படுத்தவேண்டிய பொறுப்பை ஊதாசீனப்படுத்த முடியாத நிலையில் கணவன் மனைவியரிடையே பிரிவு ஏற்பட்டது எனினும் அவர்களின் வாழ்வில் அது பாரிய இழப்பையும் துன்பத்தையும் தந்தது எனலாம். சகோதரி, சகோதரனின் திருமணங்கள் இடம்பெற்ற பின்னரே தனது பிள்ளை மனைவி என்ற எண்ணம் அவரிடம் தலைதூக்கத் தொடங்கியபின்னரே அவர் மீண்டும் தனது மனைவியுடன் இணைந்து வாழ முற்பட்டார். இதன் பயனாக அவர்கள் மீண்டும் இணைந்து கொண்டனர். அதன் பின்னர் அவர்களின் மகன் மிகவும் மகிழ்ச்சிகரமாக வாழத்தலைப்பட்டதை அவதானிக்கமுடிந்தது. தந்தையின் அன்புக்கும் அரவணைப்புக்கும், பாசத்திற்கும், பாதுகாப்பிற்கும் ஏங்கிய அந்தப் பிஞ்சு உள்ளம் பெற்றோரின் இணைவினால் மலர்ந்தது. சோகம் நீங்கி இன்பமாக தன்னம்பிக்கையுடன் செயற்படத் தொடங்கியது. பாடசாலைக் கல்வியிலும் சிறப்பாக ஈடுபட முடிந்தது என்பதைப் பெற்றோரும், மற்றோரும் உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. எல்லா வசதிகள் இருந்தாலும் தாய் தந்தை இருவரதும் அன்பும், அணைப்பும், பாதுகாப்பு உணர்வும், பாசப்பிணைப்பும் எந்தவொரு பிள்ளைக்கும் மிக, மிக முக்கியமானது என்பதனை குழந்தை உளவியலாளர்கள் வற்புறுத்திவருகின்றனர்.

குடும்பச் சூழ்நிலை அல்லது பின்புலம் பிள்ளைகளின் கல்விகற்றல் செயற்பாட்டில் ஆதிக்கம் செலுத்துவதினை நாம் காண்கின்றோம். ஓரே வகுப்பிலுள்ள பிள்ளைகள் மத்தியில் பல்வேறுபட்ட தன்மையினைக் கற்றல் செயற்பாட்டில் உளவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். **"எமது மாணவர்கள் பல்வேறுபட்ட சமூக பொருளாதார சூழலிலிருந்து வருகின்றார்கள். இவை அவர்களின் உளவியற் செயற்பாட்டில் தாக்கத்தினைக் கொண்டிருப்பது உண்மை. அவர்களின் செயற்திறன், செயலூக்கம் என்பனவற்றில் வேறுபாட்டினை ஆண் பெண் எனும் பாகுபாட்டின் அடிப்படையிலும் கொண்டிருப்பதனைக் காணலாம். ஆவர்களின் பின்புலம் அவர்களை 'இடரில்' தள்ளிவிடுகின்றது என்பது நவீனத்துவம் மிக்க இந்த தொழில்நுட்பச் சமூக அமைப்பில் அவர்கள் தங்கள் கல்வியினைப் பூரணப்படுத்த முடியாத ஆபத்தினை எதிர்நோக்க வைக்கின்றது"** என சிலாவின், கார்வெயிற், மாட்வென் (1989)ஆகியோரின் ஆய்வு எடுத்துக் காட்டுகின்றது.

குடும்பப் பின்னணி அல்லது பின்புலம் என்பது பிள்ளைகள் வாழுகின்ற குடும்பச் சூழலைக் குறிப்பிடுவதனை நாம் கூர்ந்து அவதானிக்க வேண்டியுள்ளது. கணவன், மனைவியினரிடையே எற்படும் நாளாந்த சச்சரவுகள் பிள்ளைகளின் முன்னால் இடம்பெறும்போது அது அவர்களின் உளத்தில் பாரிய தாக்கத்தினையும் வடுவினையும் ஏற்படுத்துகின்றது. இதனால் அவர்கள் பயந்த சுபாவம் உள்ளவர்களாகவும், மனக்குழப்பம் உள்ளவர்களாகவும், ஏதோவொன்றை இழந்துவிட்டவர்கள் போலவும் காணப்படுவார்கள். இதனால் அவர்கள் தங்கள் முழுக்கவனத்தையும் கற்றலில் செலுத்தத் தவறிவிடுகிறார்கள். முழுமையாக அவர்களால் ஈடுபடமுடியாத நிலையும் காணப்படுகின்றது என்பதனை மனித நடத்தைகள் பற்றி மேற்கொண்ட ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. குடும்பங்கள் பிரிந்து வாழுகின்ற அல்லது மீண்டும் இணைந்து வாழுகின்ற சூழ்நிலை மாற்றங்கள்

ஏற்படுவதனால் குழந்தைகளின் மனதில் மாற்றங்கள் ஏற்படுவது இயல்பே என்பதனை பல் ஆயிரக்கணக்கான பிள்ளைகள் மீது மேற்கொள்ளப்பட்ட 'தனிஆள்' ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

இவற்றைவிட தாய்மையடைந்த இல்லத் தலைவி கருத்தரித்த காலத்திலிருந்து மகப்பேறு கிடைக்கும் வரைக்கும் உள,உட நலன் சிறந்தமுறையில் பேணப்படவேண்டியவராவார். மகிழ்ச்சிகரமாக நல்ல சத்துள்ள உணவினை உட்கொள்ளவேண்டிய கடப்பாடு அவருக்கு உண்டு. தேக ஆரொக்கியம், இன்பமான மனநிலை பிள்ளையின் வளர்ச்சியில் முக்கியமானதாகும். தாய்மைக்காலத்தில் தாயின் உளத்தில் ஏற்படும் தாக்கங்கள், கலைகள், நோய்கள், அதிர்ச்சித் தகவல்கள் என்பன பிள்ளையைப் பாதிக்கின்றது. இவ்வித தன்மைகள் பிள்ளைகள் விவேகமானவர்களாகவும், அதே வேளை மூளை வளர்ச்சி குறைபாடுடையவர்களாகவும் மாறக் காரணிகள் ஆகின்றன. எனவே தம்பதியினரிடையே உள்ள ஈடுபாடு தாய்மைக்காலத்திலிருந்தே பாதிப்பை ஏற்படுத்துவதனை மருத்துவ, விஞ்ஞான உளவியல் ஆய்வுகள் எடுத்துக் காட்டுகினறன. தொடர்ந்தும் குழந்தைப்பருவம், பிள்ளைப்பருவம், கட்டிளமைப்பருவம் என பிள்ளையின் வளர்ச்சிப்பருவங்கள் உடலியல் மாற்றத்தினை மட்டுமன்றி உளவியல் மாற்றத்தையும் அவர்களிடையே ஏற்படுத்துகின்றது. இம் மாற்றங்களுக்கேற்ப பெற்றோர் பிள்ளைகளின் தேவைகளை அறிந்து அதற்கேற்ப உதவுதல் அவர்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். ஆனால் பிரிந்து வாழும் குடும்பச் சூழ்நிலை இவ்வித ஆரோக்கியமான சூழ்நிலையை பிள்ளைகளுக்குத் தருவதில்லை என்பதனால் அவர்களுக்குத் தேவையான உடலியற் தேவைகள் மாத்திரமன்றி உளவியற் தேவைகளும் பூரணப்படுத்தப் படாத நிலையினைத் தோற்றுவிக்கின்றது. இதனால் அவர்கள் பெரியவர்களாக வளரும் போது அவர்களின் அடிமனதில் பதுங்கியிருந்த உள்ளார்ந்த ஏக்கங்கள், தேவைகள் முன்னுரிமை பெறுகின்றன. இதனால் அவற்றை அவர்கள் எந்த வழியிலாவது பெற்றுக்கொள்ள

முனைகின்றார்கள். இதனால் அவர்கள் தவறான நடத்தைகளுக்கு இட்டுச்செல்லும் தன்மையைப் பெறுகின்றார்கள். இளமைப்பருவத்திலும் சரி, வளர்ந்து பெரியவர்களானாலும் சரி அவர்கள் குற்றங்கள் இழைப்பதற்கு இளமைக்கால வாழ்க்கை முறை அடிப்படையானதாக அமைந்துள்ளது. பல குற்றவாளிகளை ஆய்வு செய்ததிலிருந்து அவர்கள் இளமைப் பருவத்தே தாய் தந்தையை இழந்தவர்கள், அல்லது வஞ்சிக்கப்பட்டவர்களாக இருப்பதினைக் காணலாம். எனவே பிரிந்து வாழ்தல், அல்லது நிரந்தரமாக விவாக முறிவு ஏற்படுதல் என்பது பிள்ளைகளைப் பாதிக்கின்றது என்பதற்கு நாம் வாழும் பல்கலாச்சார நாட்டில் பலவிதமான அதிர்ச்சித் தகவல்கள் நாளாந்தம் வந்துகொண்டே இருக்கின்றன.

விவாக முறிவினை கைக்கொண்ட பின்னர் வேறு திருமணங்கள் செய்வதனால் முதல் மணத்தினால் கிடைத்த பிள்ளைகளின் மனதில் பலவிதமான மாற்றங்களைப் புதுச்சூழல் தோற்றுவிக்கின்றது. புதிதாகத் தேர்ந்தெடுத்துக் கொண்ட துணையுடன் அவர்கள் வாழ்க்கையை ஆரம்பிக்கும்போது பல மாற்றங்களை தங்கள் பிள்ளைகளை மறந்த நிலையில் மேற்கொள்வதனால் பிள்ளைகளின் மனதில் தவறான எண்ணக் கருக்களை விதைத்து விடுகின்றார்கள். தந்தையின் அல்லது தாயின் பிரிவினால் ஏங்குகின்ற பிள்ளை அந்த ஏக்கத்தை இன்னொருவரிடம் பெற்றுக்கொள்ளமுடியாத நிலையில் உளத்தாக்கத்தோடு வளர்கின்றது. சிற்றன்னை அல்லது சிறிய தந்தையாக வரும் மாற்றான் தாய் அல்லது தந்தை மனப்பான்மை அவர்களைப் பாதிப்பதினை நாம் அறிகின்றோம்.

மறுமணத்தில் இணையும் கணவன் மனைவியிடையே உடலுறவு, பாலியல் ஈடுபாடு முதல் மணத் தம்பதியரிடம் இருந்ததை விட தீவிரமானதாக உள்ளதாக ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. எனவே இந்த நிலை சிற்சில வேளைகளில் பிள்ளைகளின் முன்பாகவே இடம்பெறுவதனால் அவர்கள் பாலியல் உந்துதலால்

இளமைப்பருவத்திலேயே தவறாக நடக்கும் நிலைக்குத் தள்ளப்படு கின்றார்கள்.

பொதுவாக பெற்றோரின் அக்கறையான கவனிப்பு, பராமரிப்பு, அன்பு, அரவணைப்பு, பாதுகாப்பு, கட்டுப்பாடு என்பன ஒவ்வொரு பிள்ளைக்கும் முக்கியமானதாகும். இவை உரிய வேளையில், தகுந்த முறையில் கிடைக்கவில்லையானால் அப்பிள்ளைகள் வாழ்வில் ஏதோ ஒன்றை இழந்தவர்களாக, பின்னர் நெறி தவறிப்போகும் பாங்கினைக் கொண்டவர்களாக மாறப் பெற்றோரும் அவர்கள் வாழுகின்ற பின்புலமுமே காரணிகள் ஆகின்றன. எனவே ‘பிள்ளைகளைப் பெற்றுவிட்டால் போதுமா? பேணி வளர்க்கவேண்டும் தெரியுமா?’ என்பதனை மனதில் கொண்டு விவாக விலக்கலுக்குச் செல்லும் பெற்றோர் ஒன்றுக்குப் பல தடவைகள் சிந்தித்துச் செயற்படவேண்டியது முக்கியமானது. பிள்ளைகளுக்காக சில விட்டுக்கொடுப்புக்களை தந்தை, தாய் என்ற தானத்திலிருந்து சிந்திப்பதனூடாக இணைந்து வாழமுடியும் என்பதனை உணரவேண்டும். பிள்ளைகளின் பிணைப்பு, அவர்களின் அரவணைப்பு, வளர்ச்சி, அவர்களின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கத் தலைப்படுதல் வேண்டும். எப்படி மணமுறிவை நிறுத்தலாம் எனபது பற்றி நூற்றுக்கணக்கான நூல்கள் வெளியாகியுள்ளன. கணவன் மனைவியை 100மூ திருப்திப்படுத்த முனைய வேண்டும், அவ்விதமே மனைவி கணவனை 100மூ திருப்திப்படுத்த முனைய வேண்டும். மாறாக பாராமுகமாக, ஒருவரை ஒருவர் உதாசீனம் செய்வதாலோ அன்றி அவர்களின் விருப்பு வெறுப்புக்களைப் புரிந்துகொண்டு அதற்குச் செவிசாய்க்காவிட்டாலோ அது நல்ல குடும்பமாக அமையாது என்பது உண்மை. உடலியல், உளவியல் தேவைகள் பூரணப்படுத்தப்படாதமை போன்றே உறவினர், அயலவர்களின் தொடர்புகள், செயற்பாடுகளை நாம் ஒப்பு நோக்க முனைவதாலும் வீணான மனக்கிலேசத்திற்கு ஆளாகின்றோம் என்பதனை நாம் உணரத் தலைப்படவேண்டும். கற்பனை உலகத்தில் இருந்து விடுபட்டு உண்மை நிலையை உணர்ந்து வாழத்தலைப்பட்டால் மனமுறிவோ அன்றி மணமுறிவோ ஏற்படாது.

பிரிந்து வாழும் அல்லது மணவிலகலைப் பெற்றுக்கொண்ட பெற்றோரின் பிள்ளைகளில் பெரும்பாலானவர்கள் வேதனை, விரக்தி, கவலை, எதிர்காலம்பற்றிய ஐயம் காரணமாக உளத்தாக்கத்திற்கு உள்ளாகி மனமுறிவினை(frustration) அல்லது மன அழுத்தத்தைப்(depression) பெற்றுக்கொள்ளும் நிலைமைகள் அவர்களின் எதிர்காலத்தையே பாதிக்கின்றது என்பதற்கு பலகாரணிகள் கூறப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக முன்னைநாள் ரொறன்ரோ மேயர் மெல்லாஸ்மென் அவர்களுக்கும் அவரது பொதுச்சட்டப் புரிந்துணர்வு அடிப்படையில் வாழ்ந்தபோது பிறந்த இருபிள்ளைகள் தாயாரோடு வளர்ந்து இன்று பெரியவர்களாக 40வயதைக் கடந்துவிட்ட நிலையில் மெல்லாஸ்மன் அவர்கள் தங்களை இளமைக்காலத்தே கவனிக்காது விடுத்த காரணத்தினால் தங்கள் வாழ்க்கையில் சிரமத்தை எதிர்கொண்டோம் அதற்கு இழப்பாக நட்ட ஈடு வழங்கவேண்டும் எனத் தந்தைக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தி வழக்குத்தாக்கல் செய்திருந்தமை அனைவரும் அறிந்த இரகசியம். இவர்கள் பெரியவர்களாக வளர்க்கப்பட்ட பின்னரும் அவர்களுக்கு இளமையில் ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றி நினைவு கூருகின்ற நிலையைக் காணும்போது சாதாரண எத்தனையோ தனித்துவிடப்பட்ட அல்லது தனித்துப்பிரிந்து வாழுகின்ற தாய்மாரின் தனித்துவமான கவனிப்பினிலேயே அவர்கள் வளர்கின்ற நிலையினை நாம் காணக்கூடியதாக விருக்கின்றது.

இவ்விதமாக மூன்று பிள்ளைகளின் தாயொருவர் அவரின் முதல் கணவன் வெளிநாடு ஒன்றிற்குச் சென்றுவிட்டதால் இவரைக் கனடாவிற்குப் பிள்ளைகளுடன் செல்ல அனுமதித்து அவர் பிள்ளைகளோடு இங்கு வந்துசேர்ந்த போது கணவன் இவளுடன் வந்து இணைந்துகொள்ள மறுத்துவிட்டார். அதற்கு அந்தப் பெண்ணின் நடத்தை ஒரு காரணம் எனக் கூறப்பட்டது. மூன்றாவது பிள்ளை

அவர் வெளிநாடு சென்றபின்னர் பிறந்துள்ளது. இதனால் அவர் இணைந்து வாழ மறுத்துவிட்டார். ஆனால் அந்தப் பிள்ளைகளைப் பராமரிக்கும் பாரிய பொறுப்பு இந்தத் தாயிடம் தனியே விடப்பட்டது மட்டுமன்றி இளமை மாறாத அந்தத் தாய் அந்தப் பிள்ளைகளுடன் இருக்கும்போது இன்னொரு ஆண்துணையைத் தற்காலிகமாக நாடிக்கொண்டதனை அறியும் போது பிள்ளைகள் கண்டும் காணததுமாக இருப்பதனையும் தாயின் நடத்தை அவர்களைக் கட்டுப்படுத்தமுடியாத நிலைக்கு இட்டுச்செல்வதனையும் காணக்கூடியதாக அமைந்துள்ளது. அவரின் மூத்தவர் பெண்பிள்ளை, இரண்டாவதும் மூன்றாவதும் ஆண்பிள்ளைகள். இருந்தாலும் ஒரு அறையைக் கொண்ட வாடகை வீட்டில் 13 வயதுப் பெண்பிள்ளையைப் பற்றிய அக்கறை இல்லாது இன்னொரு ஆடவன் தனது வீட்டில் வந்து தங்கியிருக்க அந்தத் தாயார் அனுமதித்து இருந்தார். இந்த நிலைமை பிள்ளைகளின் மனதில் அவமான உணர்வினைத் தோற்றுவிக்கக் காரணமாவதோடு அவர்கள் வெட்கம், அவமானம் என்பவற்றால் தலைகுனிவுக்கு ஆளாகின்றார்கள். இத்தகைய பிள்ளைகள் தாழ்வுச்சிக்கலுக்கு ஆளாகின்றார்கள். உள்ளத்தில் குறைபாடு ஏற்பட்டுள்ள நிலையையும் அவதானிக்க முடிந்தது. இது அவர்களை தங்கள் பாடங்களில் கவனம் செலுத்துவதில் கவனக்குறையினை ஏற்படுத்தி யிருந்தது. இந்த நிலைகள் ஒரே வட்டாரத்தில் உள்ள குடும்பங்களிடையே தவறான புரிந்துணர்வினை மட்டுமன்றி அந்தப் பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடவோ, உதவி செய்யவோ தங்கள் பிள்ளைகளை அனுமதிக்காது தடுக்கின்ற அயலவர்களையும் காணக்கூடியதாக அமைந்தது. இதனால் அந்தப் பிள்ளைகள் சமூகத்தில் இருந்து ஒதுக்கப்படுகின்ற ஒரு நிலையினையும் தோற்றுவித்தது. இவை பிள்ளைகளின் மன அழுத்தம், மனச்சோர்வு, மனமுறிவு போன்றவற்றை ஏற்படுத்தக் காரணமாகின்றது. இதனால் பல எதிர்விளைவுகளை அவர்கள் வளர்ந்து வரும்போது பெற்றுக்கொள்கின்றார்கள். இளமைக்காலத்தே மனதில் பதிகின்ற செயற்பாடுகளின் விளைவுகள் அவர்கள் வளரும்போது வெளியேற

முற்படுவதால் பல குற்றவாளிளை சமுதாயம் உருவாக்குவதற்கு முக்கிய காரணிகளாகப் பெற்றோரும், அயலவரும் அதாவது அவர்கள் வாழுகின்ற சமுதாய அமைப்பும் காரணமாக அமைகின்றது எனலாம். அயலவர்கள் பலர் இவ்விதமான குடும்பங்களில் அனாவசிய தலையீடுகளைச் செய்வதனால் அவற்றின் பக்கவிளைவுகள் பிள்ளைகளைப் பாதிக்கும் என்பதனை அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. வேற்று ஆட்கள் அல்லது புதியவர்கள் அதுவும் ஆண்கள் வந்துவிட்டால் அயலில் உள்ள சில வயோதிகர்கள் அல்லது மணமான பெண்களோ ஆண்களோ புதினம் அறிவதற்காக அங்கு வருகைதருவது கிராமப்புறங்களில் மட்டுமல்ல கனடிய மண்ணிலும் தமிழர்கள் நெருக்கமாக வாழுகின்ற தொடர்மாடிக் கட்டிடங்களில் காணக்கூடியதாகவுள்ளது. வந்தது யார் ஏன்வந்தார் என்ற சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்ற நிலைமைகள் குடும்பம் பிரிவதற்கு அல்லது குடும்பங்களில் பிரச்சினைகள் தோற்றுவிப்பதற்குக் காரணமாக இருக்கின்றது. புதிதாகக் குடியேறிய தனித்தாய்க்கு கனடாவில் பழக்கமில்லாத நிலையில் யாராவது உதவிக்கரம் நீட்டினால் அதனைத் தட்டிக்கழிக்க முடியாத நிலை தோற்றுவது உண்மை. அதனைச் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதும், வீண்பழி சுமத்துவதும் எமது இனத்தின் சாபக்கேடாகும்.

தந்தை இறந்த நிலையில் தாயோடு வாழும் பிள்ளைகளின் மனோநிலைக்கும் தந்தையும் தாயும் பிரிந்து வாழும் பிள்ளைகளின் மனநிலைக்கும் வேறுபாடுகள் உள்ளன. பிரிந்து வாழும் பெற்றோர்கள் தாயைப்பற்றியோ தந்தையைப்பற்றியோ பிள்ளைகளுக்கு முன்னர் குறைகூறாது இருப்பது மிக முக்கியமானது. எனினும் எமது பெற்றோர்களுள் தந்தை தாயைப் பற்றி அவதூறு கதைப்பதும் தந்தையைப் பற்றித் தாய் அவதூறு கதைப்பதும் பிள்ளைகளின் மனதில் பதிந்துவிடுவது மட்டுமன்றி பிள்ளைகளைத் தம்வசம் ஈர்ப்பதற்காக ஒருவர் மற்றவர் மீது குறைகூறுவதும் பிள்ளைகளின்

முன்னால் ஒருவரை ஒருவர் திட்டித்தீர்ப்பதும் பிள்ளைகளை வெகுவாகப் பாதிக்கும் என்பது உளவியலாளர்களின் துணிபு.

முதலாம் வகுப்பொன்றில் தமிழ் கற்கும் மாணவன் ஒருவன் தனது பொருட்களை இன்னொருபிள்ளை தொட்டுவிட்டது என்ற காரணத்தினால் மிக மோசமான வார்த்தைகளை அள்ளிக்கொட்டி இருக்கின்றான். அந்த வார்த்தைகளைக் கேட்ட ஆசிரியை வாயடைத்துப்போனார். அந்த மாணவனை தனியே அழைத்து இந்த வார்த்தைகளை யார் சொல்லித்தந்தார்கள் எனக் கேட்டபோது “எனது அப்பா இப்படித்தான் எனது அம்மாவைப் பேசுவார்” எனப் பதிலளித்துள்ளான். அந்தப் பாலகனுக்கு தான் உபயோகித்த சொற்களின் பொருள் உண்மையிலேயே தெரிந்திருக்கவில்லை. ஆனால் பெற்றோர் அன்றாடம் உபயோகிக்கும் சொற்களைக் கையாடுவது இயல்பே. எனவே பிள்ளைகளை அவர்களின் சூழல் எப்படிப் பாதிக்கின்றது என்பதனை உணர்ந்துகொள்ளமுடிகின்றது. எனவே தாய் தந்தை, உடன்பிறப்புக்கள், அல்லது பெற்றோரின் பெற்றோர் குழந்தைகளின் முன்னால் பாவிக்கும் வார்த்தைப் பிரயோகங்கள் செம்மையானவையாக, மென்மையானவையாக, மேன்மையானவையாக இருக்கவேண்டும் என்பதில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

மணமுறிவுக்கான அல்லது பிரிந்துவாழ்வதற்கான முடிவினை எடுக்கும்முன்னர் இருதரப்பினரும் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிச் சற்றுச் சிந்திக்கவேண்டும். ஆனந்தவிகடனில் ஒரு இளம் பெண்மணி “நான் திடீரென எடுதுக்கொண்ட தவறான முடிவினால் எனது வாழ்வு பாழாகிவிட்டது” என்று மிக வேதனைப்பட்டு எழுதியிருந்தார். அவர் தனது கணவன் சுகவீனமுற்றிருந்த வேளையில் வைத்தியசாலையில் தவறான ஊசி போட்டதால் எயிட்ஸ் நோய் அவருக்குத் தொற்றிக்கொண்டது என வைத்திய சாலையில் வேலைபார்க்கும் ஒரு பணிப்பெண் கூறியதிலிருந்து மனமுடைந்து கணவனை வெறுத்து விவாகரத்துக் கோரியிருக்கின்றார். கணவனோ நன்றாக யோசித்து

ஒரு முடிவுக்கு வா என்று இறுதிவரை கெஞ்சிக் கேட்டிருக்கின்றார். ஆனால் ஆத்திரக்காரருக்குப் புத்தி மத்திமம் என்பதுபோன்று யாரோ சொன்ன பொய்யான செய்தியால் குடும்பத்தையே பிரிந்துவிட்டேன் என்னைச் சேர்த்துவையுங்கள் என்று இன்று மன்றாடுகின்றார். இதிலிருந்து இடையிலே உள்ளவர்களினால் திருமண முறிவுகள் ஏற்படுகின்றன என்பதனை நாம் பல சந்தர்ப்பங்களில் அறிகின்றோம். வீணான சந்தேகம் திருமண முறிவுக்கு ஒரு காரணமாக அமைகின்றது.

மணமுறிவு அல்லது பிரிந்து வாழுதல் என்பது ஒரு நெருக்கடியான காலகட்டத்தோடு மிகுந்த அதிர்ச்சியைத் தரத்தக்கதும் துன்பத்தைத் தருவதுமாகும். எல்லாமே பைத்தியக்காரத்தனமானதாகவும், ஒன்றிலும் நம்பகத்தன்மையற்றதாகவும் காணப்படும். கட்டுப்பாட்டிற்கு உட்பட முடியாதபடி கோபம், தனிமைப்படுத்தப்பட்ட நிலை, குற்றவுணர்வு, எதிர்பார்ப்புக்களற்றதும் உதவியற்றதுமான நிலை போன்ற உணர்வுகளை தோற்றுவிக்கும்.

பேற்றோர்களில் ஒருவர் தங்களது பிள்ளைகளை மணமுறிவு எப்படிப் பாதிக்கும் என்பதனைப் பற்றி மிகத் தீவிர சிந்தனையினைக் கொண்டவராக இருப்பார். மணமுறிவு என்பது மிக நீண்ட காலத்திற்கு பிள்ளைகளின் மனவெழுச்சிப் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவராத ஒன்றாக அல்லது வாழ்வியலில் மறக்கமுடியாத ஒன்றாக அமைந்துவிடுகின்றது. அடிக்கடி இடம்பெறுகின்ற பெற்றோரின் முரண்பாடுகளும், இங்கிதமற்ற குடும்பச் சூழ்நிலையும் சிலவேளைகளில் மணமுறிவு அல்லது பிரிந்துவாழும் நிலையினால் பிள்ளைகள் விடுபட்டு நல்லதொரு சூழலில் வாழுகின்ற நிலையும் தோற்றலாம். ஆனால் மணமுறிவு என்பது உணர்வுபூர்வமாக இயலாதவர்களாக அல்லது கீழ்நிலைக்குத் தள்ளிவிடுவதான நிலையை ஏற்படுத்திவிடுகின்றது. எவ்விதமாக ஒருவன் மாறமுடியுமோ அவ்விதமாக அவனை மாற்றிவிடுகின்ற தன்மை மணமுறிவினால் அல்லது பிரிந்து வாழ்வதனால் ஏற்படக் காரணமாகும்.

எடுத்துக்காட்டாக பிள்ளைகள் நன்கு வளர்ந்து அவர்கள் வேலைகளைத் தேடிக்கொண்டு வேற்று இடங்களுக்குச் சென்றுவிட்ட தாய் தந்தையரிடையே இருந்த பிடிப்பு சற்று விலகிச் செல்வதனை நாம் காண்கின்றோம். அவ்விதமன்றி அவர்கள் இருவரும் ஒருவருக்கு ஒருவர் தாமே துணை என்ற அடிப்படையில் அவர்கள் முன்பிலும் பார்க்க நெருக்கமாக இணைந்து வாழ்வதனை நாம் காண்கின்றோம். மாறாக கணவனை இகழ்ந்துரைத்து அவர்களை உதாசீனம் செய்கின்ற பெண்களையும், பெண்களை உதாசீனம் செய்கின்ற ஆண்களையும் நாம் காணும்போது அவர்கள் மன உளைச்சல், விரக்தி, கோபம், தனிமை உணர்வு, இயலாமை போன்ற உளத்தாக்க உணர்வுகளைக் கொண்டவர்களாக மாறி குடிப்பழக்கம் அல்லது தனித்து வாழுகின்ற நிலையில் மனவழுத்தம் காரணமாக தற்கொலை, கொலை போன்ற வன்முறைச்செயல்களுக்கு உட்படுபவர்களாக மாறிவிடுவதினையும் காணமுடிகின்றது.

இளம் பெற்றாரிடையே காணப்படும் கருத்து வேறுபாடுகள், குடும்ப வன்முறைகள், முரண்பாடுகள் என்பன பிள்ளைகளின் உளத்தாக்கத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துவதனைப் பல ஆய்வுகள் வெளிக்கொண்டுவருகின்றன. இவ்விதம் பாதிக்கப்படுகின்ற பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களாக வரும்போது சமுதாயத்திற்குத் தீங்கிழைப்பவர்களாக மாறிவிடுகின்றார்கள். பிள்ளைகளை இளம் வயதிலிருந்தே நல்ல பழக்கவழக்கமுடைவர்களாக, இன்சொல்லுடையவர்களாக வளர்க்கவேண்டியவர்கள் பெற்றோர்கள். அவ்விதம் அவர்களைப் பெற்று வளர்க்கும்போது அவர்களுக்கு நல்ல வாழ்க்கைச் சூழலை ஏற்படுத்தவேண்டியவர்கள் பெற்றோர். அதனை விடுத்து தங்களுக்குள் முரண்பட்டுக்கொண்டு தினம் தினம் தர்க்கப்பட்டுக்கொண்டோ அல்லது பிள்ளைகளுக்கு முன்பாக வாக்குவாதப்படுவதோ பிள்ளைகளின் மனநிலையைப் பாதிப்பதோடு அவர்களையும் வன்முறைக்கு இட்டுச்செல்லும். இதனையே வள்ளுவர்

"அன்போ டியைந்து வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு"

-என்று கூறுகின்றார். அதாவது அன்புள்ள 'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்' என்பதையும் - ஒரு குடும்பம் பலவிடயங்களைக் கற்றுத்தருகின்றது என்னும கருத்தினையும் முன்வைக்கின்றது. 'குடும்பம் ஒரு ஆலயம்' என்பதும் அது அகப் புறத்தூய்மையை மட்டுமன்றி சமுதாயத்தில் நல்லொழுக்கப் பண்புள்ளவனாக வளர்வதற்கும் குடும்பம் கற்றுத் தருகின்றது என்பதே பொருளாகும். குழந்தைகள் மிக இளமைக்காலத்தே கற்றுக்கொள்வனவே மிக அதிகம். அவர்களின் உளவளர்ச்சியின் மிகப் பிரமிக்கத்தக்க காலம் இளமைப்பருவமே. அகவை ஐந்துவரை அவர்களின் உடல் உளவளர்ச்சிவேகம் மிக அதிகம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்று எம்முன்னோர் கூறிப் போந்தனர். இவற்றை அடிப்படையாகக் கொண்டு நாம் பிள்ளைகளை வளர்க்கும்போது அவர்களுக்கு எந்த இடரும் ஏற்படாதவகையில் வளர்த்தல்வேண்டும். அவர்கள் இன்பம் கவின்நிலை ஏற்படக்கூடிய வகையில் அவர்கள் வாழும் சூழலை ஏற்படுத்தவேண்டும். ஆனால் சில பெறறோரோ பிள்ளைகளைப் பற்றிச் சிந்திப்பதில்லை. அவர்களுக்கு முன்பாகவே வாக்குவாதம், அடிதடி, ஏச்சுப்பேச்சு என ஈடுபடுவதனால் அவர்களின் மனநிலையில் மட்டுமன்றி பழக்கவழக்கங்களிலும் மாற்றங்களை அல்லது பாதிப்பை ஏற்படுத்துகின்ற நிலைக்கு இட்டுச்செல்கின்றார்கள். கணவன் மனைவியைத் திட்டுதல், மனைவி கணவனைத் திட்டுதல், தாக்குதல், தாழ்த்திப்பேசுதல், அடித்தல் போன்ற நிலைகளே பிள்ளைகளைப் பாதிக்கின்றன.

இவ்விதமே பிள்ளைகளுக்குத் தேவையான பாதுகாப்பு, அன்பு, அரவணைப்பு, உணவு, உடை, கட்டுப்பாடு போன்ற அத்தியாவசிய தேவைகள் மறுக்கப்படும்போது அந்தப் பிள்ளைக்கு உளவியற் தாக்கம் ஏற்படுவதோடு அதன் பலனாக அப்பிள்ளைக்கு மனமுறிவு, மனவழுத்தம்

என்பன ஏற்படவும் இதன் பிரதிபலிப்பாக மனநோய் ஏற்படவும் காலாக அமையலாம் என்பதனைப் பல பெற்றோர்கள் உணர்ந்துகொள்வதில்லை. சில பிள்ளைகள் பெரும் சத்தமாக யாராவது கதைப்பதைக் கேட்டாலே பயந்து நடுங்குவதனை அவதானிக்கலாம் - அத்தகைய நிலைமை அவர்களுக்கு வர இவ்விதமான ஏதோ குடும்ப வன்முறை காரணமாக அமைந்திருக்கலாம். இவ்வித நிலைமைகள் பிள்ளைகளைப் பாதிக்காத வகையிலே பெற்றோர் அவர்களின் நலன்களில் அக்கறை கொள்ளவேண்டும். அதற்குத் தாய்மட்டும்தான் பொறுப்பு என்று தந்தை ஒதுங்கிவிடவோ அன்றி ஒதுக்கிவிடவோ முடியாது. இருவருமே அதற்கு பொறுப்பானவர்கள் என்பதனை உணர்ந்து தங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி சதா மனந்திறந்து கலந்துரையாடுவதனால் தங்களிடையே தோன்றும் மனக்குழப்பங்கள், முரண்பாடுகளை நீக்கிக் கொள்ளமுடியும்.

பெரும்பாலான பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு தகவல்கள், மீள உறுதியளித்தல், துணைபுரிதல் ஆகியவற்றில் உதவிசெய்ய வேண்டியவர்களாவர். சிலவேளைகளில் எவ்வாறாயினும் இத்தகைய உதவிகள் கூடியளவில் தேவைப்படும்போது, அவை உடனடியாக இடைவெளியைப் பூர்த்தி செய்யக்கூடியளவிற்கு கிடைப்பதில்லை. இதனால் பிள்ளைகளின் பிஞ்சு உள்ளம் பாதிப்புக்கு உள்ளாகின்றது. உள்ளம் பாதிக்கப்பட்டால் அதனை குணப்படுத்துவது மிக மிகச் சிரமம் என்பதனை பெற்றோர் உணர்ந்துகொள்ள வேண்டும். இவ்விதம் உணர்ந்துகொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தால் அவர்களால் மீண்டும் இணைந்து வாழமுடியும். தந்தை அல்லது தாய் வீட்டில் இல்லாதபோது அவர்கள் ஏதோவொன்றை இழந்துவிட்டதாகவே கருதுவார்கள். அவ்வித மனநிலை குழந்தைகளுக்குத் தோற்றப்படும்போது அவர்களின் எதிர்காலத்தை அது வெகுவாகப் பாதிக்கின்றது என்பதனைப் பல உளவியலாளர்கள் தங்கள் ஆய்வுகளின் ஊடாகக் கண்டறிந்துள்ளனர்.

தாய், அல்லது தந்தை பிரிந்து வாழும்போது பிள்ளைகளிடையே இனந்தெரியாத பயம், கலவரம் என்பன காணப்படும். அவர்கள் எதிலும் முழுமனதுடன் ஈடுபடமுடியாதவர்களாகக் காணப்படுவார்கள். 1992 ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கனடிய புள்ளிவிபரத்தின்படி பிரிந்து வாழும் அல்லது தனித்து தாயுடன் அல்லது தந்தையுடன் வாழும் பிள்ளைகளில் 56மூ தத்தினர் ஏதோ ஒரு நோய்க்கு உட்படுகின்றார்கள் என்பது கண்டறியப்பட்டுள்ளது. மனவழுத்தம் மட்டுமன்றி, அதன்காரணமாக தாயை அல்லது தந்தையைப் பிரிந்துவாழும் பிள்ளைகள் நோய்வாய்ப்படுவது எளிது என வைத்திய அறிக்கைகள் காட்டுகின்றன. பெற்றோர் இருவரும் உள்ள குடும்பத்திலுள்ள பிள்ளைகள் ஒப்பீட்டு ரீதியாக தனித் தனியாகப் பிரிந்த பெற்றோரின் பிள்ளைகளைவிடப் பாதுகாப்பானவர்களாகவும், வசதி, வாய்ப்போடு சொகுசாக வாழ்பவர்களாகவும் காணப்படுகின்றனர். எனவே இவற்றைப் பெற்றோர் கருத்தில் கொள்ளுதல் மிகமுக்கியமாகும்.

கணவனும் மனைவியும் பிரிந்து வாழ நேரிட்டாலும் பெற்றோர் என்ற முறையில் பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக பின்வருவனவற்றில் குறிப்பிடத்தக்களவு அழுத்தத்தை அல்லது பிடிப்பினை ஏற்படுத்தவேண்டும்.

- ❖ பிள்ளைகளோடு அர்த்தமுள்ள தொடர்பினைத் தொடர்ந்து நிலைநிறுத்துதல்.
- ❖ மிக வலுவான குடும்ப உணர்வினை பிள்ளைகளுக்கு வழங்குதல்.
- ❖ பெற்றோரைப் பிள்ளைகள் இலகுவாக அணுகும் தன்மையையும், பிள்ளைகளின் விருப்பத்தைச் செவிமடுக்கக்கூடிய தன்மையையும் பெற்றோர் கொண்டிருத்தல்.

❖ ஒரு தந்தையோ தாயோ தற்போதைய துணையிடமிருந்து ஏற்படக்கூடிய பிணக்குகளிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாத்துக் கொள்ளுதல்.

❖ தாய், தந்தையர் இருவரும் பிள்ளைகளின் வாழ்க்கையில் உண்மையுடனும் ஊக்கத்துடனும் ஒரேவிதமாக விளங்குதல்.

❖ பிள்ளைகளை எவ்வளவிற்கு நேசிக்கமுடியுமோ அவ்வளவிற்கு நேசித்தல். பிள்ளைகளோடு ஈடுபடும் செயல்களினால் அன்பைக் காட்டவேண்டியது பெற்றோரின் முக்கிய பங்களிப்பாகும். பெற்றோர் மனதில் அன்பைத் தேக்கி வைத்திருப்பது பிள்ளைகளுக்குத் தெரியாதுபோகலாம். அவர்களுக்குத் தெரியவைக்க சில நடவடிக்கைகள் தேவை.

❖ பெற்றோரின் மணமுறிவு பிள்ளைகளின் தவறல்ல என்று உணர வைக்கவேண்டும். பிள்ளைகளின் செவிகளில் திரும்பத்திரும்ப இதனைச் சொல்லவேண்டும். அவர்கள் ஒன்றுக்குமேற்பட்ட தடவைகள் இதனைக் கேட்கவேண்டும். அவ்விதம் கேட்கப்படுவதினால் பிள்ளைகளின் மனதில் பயம் நீங்குவதோடு அவர்களுக்கு மனநெருக்கிடை அல்லது மனவழுத்தம் ஏற்படாது தடுக்கலாம்,

❖ பிள்ளைகள் பாதுகாப்பாக உள்ளனர் என்பதனைப் பெற்றோர் உறுதி செய்தல் வேண்டும். அத்தோடு இரண்டு பெற்றோரும் தங்களால் இயன்றனவற்றைத் தொடர்ந்து செய்வோம் என்பதனைத் தெரியப்படுத்தவேண்டும்.

❖ மணமுறிவுக்கு முன்னர் இருந்ததுபோலவே தாய் தந்தை இருவரையும் நேசிக்கவேண்டும் என்பதனைப் பிள்ளைகளுக்குச் சொல்லவேண்டும், பிள்ளைகள் அன்பு செலுத்துவதிலிருந்து மாறத்தேவையில்லை என்பதனை அவர்களுக்குத் தெரிவித்தல் வேண்டும்.

- பிள்ளை தாயோடு வாழுமிடத்துத் தந்தையோடும், தந்தையோடு வாழுமிடத்து தாயோடும் தொடர்பு கொள்ள ஒவ்வொரு பெற்றோரும் பிள்ளைக்குத் துணைபுரியவேண்டும், எடுத்துக்காட்டாக பாடசாலை நிகழ்ச்சிகள், விசேட தினங்கள் போன்றன.

- பிள்ளைகள் சொல்வதற்குச் செவிசாய்க்கவேண்டும். அவர்களின் உணர்வுகளை எடைபோடாது, திருத்தாது, அல்லது மாற்றங்களைச் செய்யாது அவர்கள் உணர்வதினை அப்படியே மதிக்கவேண்டும். பிள்ளைகள் எப்போதும் உங்கள் உணர்வுகளைக் கொண்டிருப்பார்கள் என எதிர்பார்த்தல் கூடாது.

- பிள்ளைகள் தங்கள் உணர்வுகளை வெளிக்கொண்டுவர ஆரோக்கியமானதும், பாதுகாப்பானதுமான வழிகளில் கற்றுக்கொள்ள உதவி தேவை என்பதனை நினைவில் இருத்திக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு சரியான நெறிமுறைகளை வழங்குதல்வேண்டும்.

- பிள்ளைகள் இரண்டு இல்லங்களின் உறுப்பினர்கள் என்பதனை மீள வலியுறுத்தவேண்டும். அவர்கள் குற்றவாளிகள் என்று உணர இடமளிக்கலாகாது அல்லது அவர்கள் உண்மையான அல்லது சிறந்த இல்லம் எது என்பதனை தெரிவுசெய்வதற்கு இடமளிக்கலாகாது.

- பிள்ளைகள் தங்களுக்கு ஒவ்வொரு பெற்றோரிடமும் அவர்களுடன் செலவளிக்கும் நேரம் வெவ்வேறாக இருந்தாலும் ஒரு வீடு உண்டு என்பதனை உணர உதவவேண்டும். அவர்கள் ஒவ்வொரு வீட்டிலும் தங்களுக்கென ஒரு இடம் உண்டு என்று உணரத்தக்கதாக வாய்ப்புக்கள், வசதிகள் செய்து தரப்படவேண்டும்.

❖ பிள்ளைகளுக்கு கட்டுப்பாடு, ஒழுக்கம் என்பனவற்றையும் பாசத்தையும் வழங்கவேண்டும். பிள்ளைகள் அமைப்பு, கட்டுப்பாடு, குறிப்பாக பிரச்சினையான வேளைகளில் அவர்களுக்கு இவை தேவையானவை.

பின்வரும் நடவடிக்கைகளை அல்லது சொல்லாடல்களை பிள்ளைகளுக்கு அல்லது அவர்களுக்கு முன்பாகச் செய்யவதனைத் தவிர்த்துக்கொள்ளுதல் அவசியமாகும்:

❖ பிள்ளைகளிடம் ஒரு பெற்றோர் மற்றய பெற்றோரைப்பற்றி குறைவாக, அல்லது தரமற்று விமர்சிக்கவேண்டாம். பிள்ளைகள் அறிவார்ந்த முறையில் தங்களில் பாதித் தந்தையையும், பாதித் தாயையுமே காண்பார்கள், எனவே ஒரு பெற்றோர் மற்றைய பெற்றோரைப் பற்றிக் குறை குற்றம் கூறுவதால் தனது பிள்ளையையும் குறைகூறுகின்றீர்கள் என்பதாகவே அவர்கள் கருதுவார்கள்.

❖ மணமுறிவு விவரங்களை எல்லாம் பிள்ளைகளுக்கு விவரிக்கக் கூடாது. மணவினை முறிவடைந்ததற்கான காரணங்கள், சட்ட நடவடிக்கைகள், நீதிமன்ற விடயங்கள், பிள்ளைக்கான உதவுதொகை, நிதிசம்பந்தமான விடயங்கள் அல்லது மணமுறிவு தொடர்பான நெருக்கமான விவரங்கள் என்பனவற்றைப் பிள்ளைகளுக்கு தெரியப்படுத்துவது அவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்திவிடும். அவற்றைத் தவிர்த்தல் நன்று. பெரியவர்களின் விடயங்கள் பற்றிப் பேசுவதால் இவை அவர்களைக் குழப்பத்திற்கு ஆளாக்கும்.

❖ பிள்ளைகளை தூதுவர்களாகவோ அன்றி உளவறிபவர் களாகவோ ஈடுபடுத்தக்கூடாது. அது முன்னைய கணவனை அல்லது மனைவியை ஏதோ ஒருவகையில் தொடர்பு கொள்வதற்கான சில வழிகளுக்குப் பொறுப்பாளியாக்கும்.

❖ மற்றப் பெற்றார் கூறுவதனை அல்லது ஊறுசெய்வதனைப் பிள்ளைகளுக்கு மறுதலித்துக் கூறவேண்டாம்.

மாற்றுக் கருத்தைக் கூறுவதோ அன்றி ஒருபக்கத்துக் கதைகளைக் கூறுவதோ தொடர்ச்சி வட்டமாக தொடர்ந்துகொண்டே இருக்கும். இது பிள்ளைகளை குழப்பத்திற்கு ஆளாக்குவதோடு தந்தை தாய் இருவருக்குமிடையே அவர்களைச் சிக்கித்தவிக்கவைக்கும். பிள்ளைகளுக்குத் துணையைத் தெரிந்து கொள்வதற்குப் பதிலாக அவர்கள் "நீங்கள் கேட்கவேண்டியதாயிற்றே நான் மனம்வருந்துகின்றேன்" அல்லது "இது நடக்கும்போது நீங்கள் எப்படி உணருவீர்கள்" என்ற வார்த்தைகளை உபயோகித்தல்.

❖ வளர்ந்தவர்கள் மேற்கொள்ளும் தீர்மானங்களுக்குப் பிள்ளைகளைப் பொறுப்பாளிகளாக்காதீர்கள். பிள்ளைகள் எங்கு வசித்தாலும் சரி ஒருபோதும் பெற்றோரின் நிகழ்ச்சித் திட்டங்களைத் தீர்மானிக்கும் இடத்தில் அவர்களை இருக்க விடலாகாது.

❖ மணமுறிவு தொடர்பாக அல்லது கணவன் மனைவி பிரச்சினை தொடர்பாக பிள்ளைகளை மிக நெருங்கிய நண்பராகவோ நம்பிக்கைக்கு உரியவராகவோ இருக்க அனுமதிக்கக் கூடாது.

❖ பிள்ளைகள் பெற்றோரின் உணர்வுபூர்வமான நலன்களுக்கு பொறுப்பாளர்கள் என அவர்கள் உணரக்கூடாது.

❖ உங்களது மணமுறிவு சம்பந்தமான உணர்ச்சிகளைக் கலந்தாலோசிக்க அல்லது உதவிசெய்ய ஒரு துணைபுரியும் தொடர்பு வலையமைப்பை (supportive network) வேறு பெரியவர்களுடன் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

- ❖ ஏன் மணமுறிவு ஏற்பட்டது என்று பிள்ளைகள் கேட்டால் ஒருவர் மீது மற்றவர் குற்றங்களைச் சாட்டத் தலைப்படாதீர்கள். பிள்ளைகள் ஒருபோதும் சரி பிழையினைச் சீர்தூக்கிப் பார்க்கவோ அன்றி ஒருபக்கம் சாரும் நிலைக்கோ அவர்களை ஆளாக்கக் கூடாது.

- ❖ பிள்ளைக்கான உதவுதொகை செலுத்தப்படாது நிலுவையாக இருந்தால் பெற்றார் பிள்ளையைப் பார்க்கப்போகும் வேளையில் மற்றைய பெற்றார் அதனைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இவ்விரண்டும் சட்டவிரோதமானது. இரண்டுமே வெவ்வேறு விடயங்களாக நீதிமன்றத்தினால் நோக்கப்படும்.


- ❖ பிள்ளைகளின் அன்பைப் பெறுவதற்காக மற்றைய பெற்றாரிடமிருந்து வேறுபடுத்த முனையக்கூடாது. பிள்ளைகள் பரிசில்களை, அல்லது நன்கொடைப் பொருட்களை அனுபவிக்கும்போது, அவர்கள் அந்தப் பொருட்களுக்காக வாங்கித் தந்த பெற்றாரை விரும்புவதாக நினைக்க வைக்கும்.

- ❖ மகிழ்வான வேடிக்கை உணர்வினை கைவிட்டுவிடவேண்டாம். இது மனவழுத்தம் மிக்க வேளையில் உபயோகமானதாக அமையும்.

பிரிந்துவாழும் பெற்றோர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இணைந்துவாழும் பெற்றோரைவிட மிக அதிகமாகும். பிள்ளைகளைக் கண்காணிப்பது பேணி வளரப்பது அவர்களின் பொது நலன்களில் அக்கறையோடு செயற்படுவது என்பன மிக மிகக் கடினமான விடயம். பெண்களைவிட ஆண் பெற்றோருடன் வாழும் பிள்ளைகள் பல சிரமங்களை எதிர்நோக்குவது போன்று ஆண் பெற்றோர் எதிர்நோக்கும் பிரச்சினை அதிகமாக இருக்கும். தந்தையோடு வாழும் பெண்பிள்ளைகளுக்கும் ஆண்பிள்ளைகளுக்குமே வேறுபட்ட விதத்தில் நடந்துகொள்ளவேண்டிய கடப்பாடு பெற்றோருக்கு உண்டு.

பெண்பிள்ளைகள் வளர்ந்து வரும்போது அவர்களின் உடலியல் மாற்றத்திற்கேற்ப அவர்களுக்கு அத்தகைய மாற்றங்கள் தொடர்பாக அவர்களுக்கு விளக்கமளிக்கவேண்டிய கடப்பாடும் உண்மைத் தன்மையும் பெற்றோருக்கு உண்டு. ஆனால் இவ்விடயத்தில் அனுபவத்தோடு கூடிய அறிவுரைகள், விளக்கங்கள், தெளிவுகளை அளிக்கக்கூடியவர் தாய்தான் என்பதில் சந்தேகமில்லை. எனவே பிள்ளைகளின் நலனில் தாய் தனியிடத்தைப் பெற்றுக்கொள்ளுகின்றார். ஆனால் தாயைப் பிரிந்து தந்தையோடு வாழும் பெண்பிள்ளைகள் வளர்ந்து பூப்படையும் வேளை அவர்களுக்குத் தாயின் உதவி இன்றியமையாததாக உள்ளது என்பதனை இருபெற்றோரும் உணர்ந்து கொண்டால் பிள்ளைகளுக்காக அவர்கள் தங்கள் பிடிவாதங்கள், எண்ணப் பாங்குகள், கொள்கைகளை விட்டுக்கொடுத்து பிள்ளைகளின் நலன் என்னும் பொது நலனுக்காக இணைந்து வாழத் தலைப் படுதல் இன்றியமையாததே.





# 7

# குடும்பப் பிணைப்பில் உணவு

குழந்தமைப் பருவத்தே பிள்ளைகளுக்கு உணவூட்டுவதே மிகவும் சிக்கல் வாய்ந்த விடயம் என்பது பெற்றோருக்குத் தெரியும். ஒரு தாய் பிள்ளையை அணைத்து பல கதைகள், பிராக்குகள், விளையாட்டுக்கள் காட்டித்தான் உணவினை ஊட்டுகின்றாள் என்பது அனைவரும் அறிந்ததே! ஆனால் பெரும்பாலான தந்தைமார் இந்த விடயத்தை தெரியாதவர்களாக, அல்லது புரிந்தும் புரியாதவர்களாக, நடந்து கொள்வதும் உண்டு. சில இடங்களில் இந்தப் பாரிய பொறுப்பைத் தந்தையே தாய்போன்று உணவூட்டுவதனைக் காணக்கூடியதாகவும் உள்ளது. பிள்ளைகளின் உடல் நலத்தை நாம் மனதில் கொள்ளுதல்வேண்டும். பிள்ளையின் அன்பை, பாசத்தைத் தம்பக்கம் ஈர்த்துக்கொள்வதற்காக சிலபெற்றோர் பிள்ளைகள் கேட்டதெல்லாவற்றையும் வாங்கித்தருவதோடு அவர்களின் உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவுகளையும் வாங்கிக் கொடுப்பதனை நாம் காண்கின்றோம். மக்டொனால்ஸ், பேகர் கிங் போன்ற அதிவேக உணவு நிறுவகங்களில் - நாவிற்கு சுவையாக பிள்ளைகளை எதிர்பார்த்து உணவினைத் தயாரிக்கும் உணவகங்களில் - பிள்ளைகளுக்கு

உணவினை தினமும் வாங்கிக் கொடுப்பதினால் அவர்களது உடல் நலம் வளர்ந்து வரும்போது கெட்டுவிடும் என்பதனைச் சில பெற்றோர் உணர்வதில்லை. இளமைப் பருவத்தில் எண்ணை, கொழுப்பு, இனிப்பு அதிகமாக உள்ள நாவிற்கு சுவையான உணவினை உண்ணும் பிள்ளைகள் உடற்பருமன் கொண்டவர்களாக தங்கள் இயல்பான செயலூக்கமற்றவர்களாக எதிலும் சோம்பேறிகளாக மாறிவிடும் நிலைமைக்கு ஆளாகப் பெற்றோர்தான் பொறுப்பு என்பதனைக் காலங்கடந்த பின் நினைந்து மனம் வருந்துவதில் பயனேதும் இல்லை. பிள்ளைக்கு உணவூட்டும்போது அது அக்குழந்தையின் உடல்நலம் எதிர்காலத்திற்கும் நிலைத்து நிற்கக்கூடியதா என்பதனை அவதானித்துக் கொள்ளவேண்டும். எனவே பிள்ளைகளுக்கு உணவினைத் தயாரித்துக் கொடுக்கும் போது சில வரன்முறைகளைக் கையாளவேண்டிய பாரிய கடமை பெற்றோருக்கு உண்டு.

சரியானதை உண்ணுங்கள் நாளும் பயிற்சி செய்யுங்கள்- இது நல்லதொரு அறிவுரை என்பது எங்களுக்குத் தெரியும், இதனை நாம் அடிக்கடி கேட்கின்றோம். இது குடும்பத்தவர் அனைவருக்கும் நல்லது. இதன் பொருள் என்ன? இதனை எப்படிப் பின்பற்றலாம்?

இதயநோய் உடல் பருமனோடு தொடர்புடையது என்பது நிபுணர்களின் கருத்தாகும். இது இளம்பருவத்தில் ஆரம்பிக்கின்றது. இரண்டு ஆண்டுக் குழந்தைகளையே இதயநோய், பாரிசவாதம் தாக்குகின்றது என்பது பொது உடல்நலவியலாளர்களின் எச்சரிக்கையாக காணப்படுகின்றது. இரத்த அழுத்தம், சலரோகம் போன்ற வலுவை இழக்கச் செய்யும் நோய்களுக்கு உடல் பருமன் காலாகின்றது.

மேலை நாடுகளில் வாழும் பிள்ளைகளில் பெரும்பாலானவர்கள் உடற்பருமனால் பாதிக்கப்பட்டுள்ளனர். உடற்பருமன் பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கும் இயல்பு வாழ்விற்கும் ஊறுவிளைப்பதாக உள்ளது.

உணவுமுறை ஈரலிப்புக்கொழுப்பு, மொத்தக் கொழுப்பு, சாதாரண சீனிச்சத்து, நார்ப்பொருள் பற்றாக்குறை, பழங்களும் காய்கறிகளும் போன்றனவற்றுடன் தொடர்புடையதாகும். இன்று ஐக்கிய அமெரிக்காவில் ஏறத்தாழ 10மில்லியன் பிள்ளைகள் அளவுக்கு மீறிய எடையைக் கொண்டு உள்ளனர். இது அவர்களிடம் நீரிழிவு, இதயநோய், கண்பார்வைக்குறை, சுவாசநோய்கள் போன்றனவற்றை ஏற்படுத்த வல்லது. வட அமெரிக்காவில் உள்ள பிள்ளைகளில் 90 விழுக்காடான பிள்ளைகள் உடல்பருமன் உள்ளவர்களாக உள்ளனர். பிள்ளைகளின் உடல் நலத்தைப் பாதிக்கும் தன்மை அவர்கள் உட்கொள்ளும் உணவு வகைகளைச் சார்ந்துள்ளது. கொழுப்பு, இனிப்பு, மாச் சத்து என்பன உடல் பருமனுக்குக் காரணிகளாகின்றன.

உடல்நலம் சார்ந்த பழக்கவழக்கங்கள் வீட்டில் ஆரம்பமாகின்றது. பிள்ளைகளை ஊக்குவிப்பதனால் நிறை உணவினை உண்பர், ஊக்கத்துடன் செயற்படுவர், பிள்ளைகள் அளவான நிறையினைப் பேண, நடல்நலன், பொதுநலன் வளர்வுபெற, நல்ல உணவை உட்கொள்ள, நல்ல உடலாட்சிப் பழக்கவழக்கங்கள் வாழ்வெலாம் தொடர பெற்றோர் உதவவேண்டும்.

பிள்ளைகள் நன்கு உண்ணவும், உணரவும் ஏற்ற நடைமுறைகளை பயின்று கொள்ள பின்வருவனவற்றைப் பின்பற்றலாம். உணவு ஊட்டுவதை மிகவும் சாதாரணமானதாக, விளையாட்டாக, நெகிழ்வாக வைத்துக்கொள்ளுங்கள்.

சிறந்த உடல் நலத்திற்காக உணவினைத் தெரிவு செய்வது எப்படி? புரதச் சத்துணவு- சிறப்பாக மீன் நாளாந்த சத்துணவிற்கு தெரிவு செய்யலாம். மீன் வகையில் சல்மன் எனப்படும் மீன் வகை கலோரி, கொழுப்பு என்பன குறைவாகவும் அதிக சத்துக்களைக் கொண்டதுமாகும். மீன் உணவினை உண்ணாதவர்கள் தாவரப் புரத உணவினை மிகச் சுவைபட பிள்ளைகளுக்குச் செய்துதர முன்வரவேண்டும். சோயா, அவரை போன்றன நல்ல புரத உணவுவகை.

அவற்றிலிருந்து விதவிதமான நாவிற்குச் சுவையான உணவு வகையினைச் செய்யலாம். எடுத்துக்காட்டாக 'ஷிவெஜ்ஜி கொட்டோக்' போன்ற பதனிடப்பட்ட புரத உணவுகள் தாராளமாகக் கடைகளில் கிடைக்கின்றன எனினும் இவற்றைச் சாதாரணமாக நாம் வீட்டில் செய்து கொள்ளலாம். இவற்றிற்கான செய்முறைகள் பற்றி அறிந்துகொண்டு அவ்விதம் தயாரிப்பது பெரும் சிரமமாக இருக்கும் என்று கூறுவதற்கில்லை.

பிள்ளைகளை வெற்றி கொண்டு அவர்களுக்கு நல்ல உணவினை ஊட்டுவதற்கு அவர்களோடு இணைந்து செயற்படவேண்டும். உடல் நலன்சார்ந்த நலன்தரு உணவினை உண்ணப் பழக்குதல் வேண்டும். இவ்வித உணவினைக் கண்டுகொள்ளும் போது சிலபிள்ளைகள் முகத்தைச் சுளிப்பதனையும், அந்த உணவினை மறுப்பதினையும் காணலாம். ஆனால் பீனட் பட்டர் சேர்ந்த பாண்துண்டை விரும்பி உண்பார்கள். இந்த உணவில் உடல்நலத்திற்குத் தீங்கான கொழுப்பு அதிகம் உண்டு என்பது எங்கே அவர்களுக்கு விளங்கப் போகின்றது. எனவே அவர்களின் மனதை மாற்றச் செய்வதற்கு அவர்களோடு விளையாடுவது போன்று அவர்களை உணவு தயாரிப்பில் ஈடுபட வைக்கவேண்டும். அதற்கு பின்வரும் வழிகளைக் கையாளலாம்.

❖ அவர்களை சமையற் கட்டில் உதவியாளர்களாக நியமித்தல் அல்லது ஈடபடவைப்பதனால் அவர்கள் தாங்கள் உதவி செய்த உணவு என்னும் பெருமையோடு அதனை உண்பார்கள். மிகச் சிறியவர்களானால் கழுவுதல் எடுத்துத் தருதல் போன்ற வேலைகளில் அவர்களை ஈடுபட வைப்பதனால் அவர்களிடம் இரண்டு விடயங்களை நீங்கள் செய்கின்றீர்கள் என்பதனை கவனத்திற்கொள்ளவேண்டும். ஒன்று அவர்களை மதிக்கின்றீர்கள் என்ற உளப்பாங்கினை அவர்களிடம் வளர்க்கிறீர்கள், அவ்விதமே அவர்களிடம் தாங்களும் ஏதோ செய்தோம், தாய்க்கு அல்லது தந்தைக்கு உதவி செய்தோம் என்றும் எண்ணத்தை ஏற்படுத்தி

அவர்களைப் பெருமைப்படவைக்கின்றீர்கள். அத்தோடு அவர்களுக்கு நல்ல உணவு எது தீங்குவிளைக்கும் உணவு எது என்பதனை யும் எடுத்துக்கூறுவதால் அவர்களைச் சிந்திக்கவும் தூண்டுகின்றீர்கள்.

❖ நமது பெற்றோர் சிலர் ஒரே வகையான உணவினையே தினமும் படைப்பது வழமை. ஆனால் பிள்ளைகள் தாங்கள் தெரிந்து உண்ணக் கூடிய பல வகையான உணவினைப் படைத்தல் முக்கியமானது. ஒரு துண்டு பாண், எட்டு அவுண்ஸ் பால், பழம், சீரியல், மாவுணவுகள், இரண்டு அல்லது மூன்று காய்கறிகள், இரண்டு வகைப் பழங்கள் என்பன அவர்களது நாளாந்த உணவில் மாறிமாறி இடம்பெறவேண்டும். புரதம், கல்சியம் என்பன வளர்ந்துவரும் பிள்ளைகளுக்கு மிகமுக்கியமானது. அவர்கள் விளையாட்டில் கெட்டித்தனமாக திகழ உடல் உறுதி தேவை. எனவே கல்சியம் முக்கியமானது என்பதால் பால் தினமும் இடம்பெறவேண்டும். இவற்றை பலவகையான உணவுவகைகளிலிருந்து தேர்ந்தெடுத்தல் நன்று.

❖ நீங்கள் உண்பதினைப் பார்த்து அவர்கள் சுவைபார்க்க விரும்புவார்கள். அப்போது அவர்களுக்கு சுவைபார்க்கக் கொடுங்கள். ஒருபோதும் அவர்களை புது உணவை உண்ண வற்புறுத்தல் ஆகாது! அவர்கள் பலவிதமான உணவினை உண்ணவேண்டியதனை தெளிவுபடுத்துதல் வேண்டும்.

❖ உணவை உண்ணவைப்பதற்கு பிள்ளைகளை சுற்றுலாக் களுக்கு அழைத்துச் செல்லவேண்டும். அவ்விதம் செல்லும்போது அவர்களே கொண்டு செல்வதற்கான நல் உணவு வகைகளைத் தேர்வு செய்ய விடவேண்டும். பழம், காய்கறிகள், இறைச்சி வகை, மீன், முட்டை, முழுமையான தானியங்கள், பாற்பொருட்கள் போன்றனவற்றைத் தேர்ந்தெடுக்க அறிவுரை நல்கவேண்டும்.

அவர்களுக்கு எப்படி உணவுகளின் பட்டியல்களை வாசிப்பது என்பதனைச் சொல்லித்தர வேண்டும். குடும்ப அங்கத்தினர் அனைவருக்கும் போதுமான உணவினை கணிப்பிட்டு அறிந்துகொள்ளவும் அவர்களைப் பணிக்கவேண்டும். அவர்களையே எல்லோருக்கும் பரிமாறவும் வைக்கலாம்.

❖ கற்றுக்கொள்வதற்கு உணவு மாதிரி நல்லதொரு விடயமாகும், அத்தோடு ஒரு உடல்நலமான பிள்ளையை வளர்த்தெடுக்கவும் இது உதவும். அவர்கள் வேடிக்கையாக செய்யும் சிலவிடயங்களில் தாம் உணராவிட்டாலும் பலவற்றைக் கற்றுக்கொள்ளுகிறார்கள். எனவே சமையல் செய்முறைகளை வாசித்தல், அடிப்படைச் சமையல் முறைகள், மேசைகளை ஒழுங்கமைத்தல், மேசையில் இருந்து உண்ணும் முறைகள், மேசைகளையும் சமையலறையையும் துப்பரவு செய்தல் என்பனவற்றின் மூலம் பிள்ளைகள் பலவிடயங்களைக் கற்றுக்கொள்கின்றார்கள் என்பதனை பெற்றோர் உணர்ந்து கொண்டால் பிள்ளைகளுக்கு நல்ல உணவுவகைகளைக் கொடுப்பதோடு மட்டுமல்லாது பலவிடயங்களை முறைசாராக் கல்விமுறையில் பயின்று கொள்ளவும் வாய்ப்பளிக்கலாம் என்பதனை உணர்ந்து செய்து தர முன்வருவதனால் பிள்ளைகள் தொடர்பான பல சிக்கல்களை இலகுவாக பாதுகாக்கலாம்.

இவ்விடயங்களை அடிப்படையாக நோக்குமிடத்து தாய், தந்தை இருவரதும் ஒருமித்த கவனிப்பு பிள்ளைகளுக்கு இன்றியமையாதது என்பதனை இருவரும் உணர்ந்து கொண்டால் அவர்கள் பிரிந்து செல்ல எடுக்கும் முடிவினை மாற்றிக் கொள்ளலாம்.

பிரிந்துவாழும் பெற்றோர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இணைந்துவாழும் பெற்றோரைவிட மிக வேறுபட்ட தன்மைகளைக் கொண்டவை. இதற்கு பொருளாதார வாய்ப்புக்களைக் கொண்ட

குடும்பங்களாக இருந்தாலும் சரி சாதாரண குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி அரச குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி அவர்களுக்கு இவ்வித பிரச்சினைகள் சிக்கல்கள் இடம்பெறுவது இயல்பே. உணவு ஊட்டுதல், உடை அணிதல் போன்றவற்றில் பெற்றோரின் ஈடுபாடு குடும்பத்திற்குக் குடும்பம் ஆளுக்கு ஆள் அவர்களின் தகுதிகள், மனநிலைமைகள், சமூக அந்தஸ்த்து என்பவற்றினால் வேறுபடுவதினைக் காணமுடிகின்றது.

சமூக தரம் கூடிய உயர்தர குடும்பங்களில் பிள்ளைகளின் வாய்ப்புக்கள் வசதிகளை கையாளும் அல்லது மேற்கொள்பவர்களாக ஆயா அல்லது வளர்ப்புத் தாய் பங்குகொள்கின்றாள். பிறந்ததிலிருந்து ஆயாவுடன் வளரும் குழந்தைகள் அவரையே தமது அன்புக்குரியவராக பாசம் காட்ட முற்படுவதும், இவ்விதம் ஆயாவாக இருக்கும் இளம் பெண்களோடு கணவன்மார் தகாத உறவுகள் கொண்டமை காரணமாக பல மணமுறிவுகள் ஏற்பட்டுள்ளன என்பதும் நாடறிந்த உண்மை. இது இன, மத, நாடு என்ற பேதமற்ற முறையில் பொதுவான ஒரு பிரச்சினையாகக் காணப்படுகின்றது. பிள்ளைகளைக் கவனிக்க நியமிக்கப்படும் தாதிமார் அல்லது ஆயாக்களில் சிலர் பிள்ளைகளைப் பாசம் காட்டி வளர்ப்பதற்கு மாறாக பணத்தில் குறிவைத்து தமது சேவையை உதாசீனம் செய்து பிள்ளைகளுக்குத் தீங்கிழைத்துள்ள பலர் தண்டனை பெற்றுள்ளனர் அல்லது வேலை இழந்துள்ளனர் என்பதும் கருத்திற் கொள்ளத்தக்கது. தந்தை தாய் இருவரும் வேலைபார்க்கும் குடும்பங்களில் இத்தகைய பல செயல்களினால் பிள்ளைகள் உள, உடலியல் பாதிப்புக்களுக்கு உள்ளாகின்ற நிலையினைக் காணலாம். சிற்சில இடங்களில் அடம்பிடித்து அழுத காரணத்திற்காக வாய் பேசத்தெரியாத இரண்டு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளே அடிக்காயங்களிற்கு உள்ளாகியுள்ளமையும், சிலர் இறந்துள்ளமையும் பத்திரிகை வாயிலாகவும், பொலிஸ் புள்ளிவிபரங்களின் வாயிலாகவும் அறியக்கிடக்கின்றன.

மணமுறிவுக்கு கணவன் அல்லது மனைவியின் திருப்தியற்ற பாலியல் செயற்பாடுகள், வேற்று பெண்களிடம் அல்லது ஆண்களிடம் குடும்பத்தில் ஒருவரோ அன்றி இருவருமோ ஈடுபடுவதும் காரணமாக அமைகின்றது. எடுத்துக்காட்டாக உலகறிந்த பிரித்தானிய இளவரசர் சாள்ஸ் டயானா திருமண முறிவுக்கு இளவரசர் சாள்ஸ் கொண்டிருந்த உறவே காரணம் என டயானாவால் ஆரம்பத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. இருந்தாலும் டயானா பிரிந்து வாழ முற்பட்டதும் அவரது இரகசியங்களும் அம்பலத்திற்கு வந்தன. பிள்ளைகளின் நலனில் அக்கறை இல்லாத நிலையையும், அது எடுத்துக்காட்டியது. அமெரிக்கக் குடும்பம் ஒன்றில் - அண்மையில் ஒரு குழந்தை கிடைத்த பின்னர் பல சிக்கல்களை அது கணவன் மனைவியரிடையே ஏற்படுத்தியது. பிள்ளையைப் பார்ப்பதற்காக ஒழுங்கு செய்வதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்கினர் தம்பதியினர். இளம் பெண்களை பிள்ளையைப் பார்ப்பதற்காக ஏற்பாடு செய்ய மனைவியின் மனம் இடங்கொடுக்கவில்லை. அதற்குக் காரணம் தனது கணவனை வரும் இளம்பெண் தன்னிடம் இருந்து கவர்ந்துவிடுவாளோ என்ற ஐயமும், பயமும் காரணமாக அமைந்திருந்தது. கணவன் மீது நம்பிக்கை அற்ற நிலைக்கு அவர்களிடையே இருந்த குழந்தை கிடைக்கு முன்னரான பாலியல் ஈடுபாடு தொடர்பாக கணவனின் அளவுக்கு விஞ்சிய பாசம், பாலியல் உந்துதல் என்பன அவருக்கு இவ்வித சந்தேகத்தைக் கொடுக்கக் காரணமாக இருந்ததால் ஒரு பணிப்பெண்ணைப் பிள்ளையைப் பராமரிக்கத் தெரிவதில் மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தியது. கணவன் நேர்முகப் பரீட்சை வைப்பதனையோ அல்லது தெரிந்தெடுத்துக் கொள்வதையோ அவரது துணைவி விரும்பாததால் அவர்களிடையே பிரச்சினையைத் தோற்றுவித்தது. மனைவி தினமும் வேலைக்குத் தான் போகவேண்டும் பிள்ளையை யாருடன் விட்டுவிட்டுப் போவது என்று மனம் உடைந்து மனவழுத்தம் பெற்றவராக மாற்றமடைந்தார். கணவன் எவ்வளவோ எடுத்துக்கூறியும் கணவன் மீது நம்பிக்கை அற்றவராகவே அவர் காணப்பட்டார். அவர் எடுத்துக்கூறும்

சமாதானங்களையோ அல்லது தீர்வுக்கான வழிகளையோ இவர் சந்தேகக் கண்ணோடு பார்த்ததனால் மனைவி எந்த முடிவையும் எடுக்க முடியாது திண்டாடினார். கணவனோ மனைவிமீது அளவுக்கு மீறிய அன்பை - சீதை மீது இராமன் கொண்டிருந்த அன்பை ஒத்ததாக இருந்தபோதிலும் மனைவியினால் அதனைப் புரிந்துகொள்ளும் மனப்பக்குவம் கைவரவில்லை. ஏதோ மனப்போராட்டத்தின் மத்தியில் ஒரு இளம்பெண்ணை தங்களின் பிள்ளையைப் பார்த்துக் கொள்வதற்காக ஏற்பாடு செய்திருந்தனர். இருந்தும் கணவன் மீதான சந்தேகம் அவளைக் குடைந்து கொண்டு இருந்ததால் நிம்மதி இழந்தவளாக சந்தேகப் பார்வையோடு தனது கணவனையும், அந்த இளம் பெண்ணையும் ஒன்று சேர நோக்கினாள். இந்தச் சந்தேகத்தை- தனது கணவன் தனித்து வீட்டில் இருந்தவேளைகளில் அவளுடன் உடலுறவு கொள்வான் என எண்ணி அதனை- அவனிடம் கேட்கவும் அவள் பின் நிற்கவில்லை. கணவனோ மனைவிமீது தனது அன்பெல்லாத்தையும் கொட்டியதுபோல பிள்ளையின் மீதும் கொட்டிக்கொண்டிருந்தானே ஒழிய அந்தப் பெண்ணோடு தொடர்பு கொள்ளும் நோக்கம் அவனுக்கு இருந்ததில்லை. ஆனால் மனைவியின் இந்தச் சந்தேகம் தான் அவளை வாட்டுகின்றது என்பதனை அறிந்த அவன் அவளைத் திருப்திப்படுத்த படாத பாடுபட்டான். எவ்வளவோ எடுத்துக் கூறியும் அவளை நம்ப வைக்கமுடியவில்லை. கணவன் பொறுமையை இழக்காமல் மனைவியின் வழியிலே சென்று அவளை நம்ப வைப்பதற்கு மீண்டும் மீண்டும் முயற்சி செய்ததன் காரணமாக அவர்களின் குடும்பம் பிரிவினையிலிருந்து தவிர்க்கப்பட்டது மட்டுமன்றி பிள்ளையின் நல்வாழ்விற்கும் அவர்கள் இருவரும் இணைந்து செயற்படவும் வாய்ப்பாக அமைந்தது. இவ்வித குடும்பங்கள் நமது சமூகத்தில் பெண்களை அடிமைப்படுத்தி - சந்தேகம் எழுந்தாலும் வாயைப்பொத்தி வைத்துக்கொண்டு இருக்க வைத்தனவே ஒழிய குடும்பத்தில் சூறாவளியைத் தோற்றுவிக்க பெருமளவில் இல்லை என்பதற்கு பெரும்பாலான பெண்கள் ஆண்களின் தயவில் தங்கியிருக்க வேண்டிய நிலையே காரணமாக இருந்துவந்தது.

இன்று கனடிய மண்ணில் தென்னாசிய மக்களிடையே திருமண முறிவு மிகமோசமாகப் பரவிவருகின்றது என்பதனைப் புள்ளி விபரங்கள் காட்டிநிற்கின்றன. த வீக்லி வொய்ஸ் (The Weekly Voice August 27- Sept 02) என்னும் தென்னாசியச் சமூகத்தைச் சார்ந்த பத்திரிகை ஒன்றில் றிற்றிகா மோகன் (Ritika Mohan) என்பவர் வாழ்க்கைத் துணைவர்களின் தீங்கிழைப்பு அல்லது உதாசீனம் செய்தல் கனடாவில் வாழும் தெற்கு ஆசிய நாட்டினரிடையே மிக உயர்ந்துள்ளது (Spousal Abuse Cases On the Rise Among South Asians) என்னும் தலைப்பிலே ஒரு கட்டுரையை எழுதியிருந்தமை வாசகர்கள் வாசித்திருக்கலாம். அந்தக் கட்டுரையிலே பெண்களைத் தொந்தரவு செய்தல் அல்லது அவர்களுக்குத் தீங்கிழைத்தல் என்பது உடல்சார்ந்ததாக அல்லது பாலியல் ரீதியானதாகவே மிக அதிகரித்து வருகின்றது எனக்குறிப்பிட்ட அவர் கடந்த வருடாந்தம் 200,000பெண்கள் அவர்களது கணவன்மாராலோ அன்றி பொதுச்சட்ட துணைவர்களாலோ பாலியல் ரீதியாகவோ உடலியல் ரீதியாகவோ தாக்கப்பட்டுள்ளார்கள் என்று தகவல்கள் தருகின்றன என்று குறிப்பிடடுள்ளார். தாயக வாழ்க்கை முறைக்கும் கனடிய வாழ்வியலுக்கும் பல வித்தியாசங்கள், தேவைகள் உள்ளன. அதன் காரணமாக குடும்பங்களிடையே பிணக்குகள் அதிகரித்து அது பிரிவினைக்கு இட்டுச் செல்கின்றது என்பது றிற்றிகா அவர்களின் கருத்து.

அண்மையில் திருமணமான அலலது முந்தியே திருமணமான அல்லது பொதுச்சட்டப்படி இணைந்து வாழுகின்ற பெண்களில் பத்துக்கு ஒரு பெண் வன்முறைக்கு ஆளாகின்றாள் என்பதை அறிக்கைகள் காட்டுகின்றன. இதில் 18க்கும் 24க்கும் இடைப்பட்ட வயதினரே கூடுதலாக பாலியல் அல்லது உடலியல் சார்ந்த வன்முறைக்கு ஆளாகின்றனர். எடுத்துக்காட்டாக இந்தியாவைச் சேர்ந்த ஒரு இளம்பெண் ஒரு கணினிப் பொறியியலாளர் ஒருவரை மணமுடித்திருந்தார். அவர் ஒரு பொருளியல் பட்டதாரியாக

இருந்தபோதும் அடிக்கடி அவர்களிடையே ஏற்பட்ட பிணக்குகள் வன்முறையாக மாறியதனால் 5 ஆண்டு கால குடும்ப வாழ்வு மணமுறிவுக்கு எடுத்துச் சென்றது என்று கூறுகின்றார். தன்னை வேலைக்குச் செல்ல அனுமதிக்க வில்லை என்றும், தான் வேலைக்குச் சென்றால் தான் வேறு ஆடவரோடு பழகவேண்டி வரும் என்னும் குறுகிய மனப்பான்மையினால் தான் அடைபட்டு வாழவேண்டியிருந்தது என்றும் கூறிய அவர், "இதனால் எனக்கு ஏற்பட்ட மனமுறிவு மிக ஆக்ரோசமான உரையாடல்களுக்கு எடுத்துச்சென்றது. இதன்விளைவாக உடலியல் வன்முறைக்கு இட்டுச்சென்றது. நாங்கள் பிரிந்து வாழவேண்டி வந்தது" என மனவருத்தத்தோடு தெரிவிக்கின்றார் அந்த இளம்யுவதி. இவ்வித பெண்களுக்கு எதிரான தீங்கிழைப்புக்கள் அவர்களைக் கட்டுப்படுத்துவதற்காகவே மேற்கொள்ளப்படுகின்றன என்பது ஆய்வாளர்களின் துணிபு. பெரும்பாலான ஆண்கள் பெண்களை உடலியல் சாரந்து தாக்காவிட்டாலும் உளவியல் தாக்கம் தரவல்ல வார்த்தைப் பிரயோகங்களையும் நடவடிக்கைகளையும் கையாளுகின்றார்கள் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. தனிமைப்படுத்துதல், அவர்கள் உதவியற்றவர்கள் - பெறுமதியற்றவர்கள் என்பதை உணரவைப்பதற்கான நடவடிக்கைகள் அவர்களை உதவி பெறவோ, அல்லது ஆதரவு பெறவோ முடியாதபடி ஆக்கி விடுகின்றது. தேசிய ஆய்வின் படி பெரும்பாலான ஆண்கள் உடலியல் துன்புறுத்தலைவிட உளவியல் ரீதியாக பெண்களைத் துன்புறுத்துகின்றார்கள் என்பது தெரிய வருகிறது.

இன்னுமொரு தென் ஆசியப் பெண்மணி ஒருவர் தான் தன்னிலும் பார்க்க 12 வயது கூடிய ஒருவரை பெற்றோர் ஒழுங்கின் படி மணமுடித்துள்ளதாகவும், தான் உடல், உளவியல் ரீதியில் மிக மோசமான வதைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் கண்ணீர் மல்க தனது கனடிய வாழ்வை விவரிக்கின்றார். தனது குடும்பத்தின் பெயரைப் பாதுகாத்துக்கொள்வதற்காகத் தான் பொறுமையோடு இந்தச்

சித்திரவதைகளை ஏற்றுக் கொண்டதாகக் கூறும் அவர் 'மார்கழி மாதத்தில் வீட்டின் பின்புறத்தில் கடும்குளிரில் இருக்க வைக்கப்பட்டேன். இவ்விதமாக 10 ஆண்டுகள் பொறுமையோடு வாழ்க்கை நடத்தினேன்' என்று கூறுகின்றார்.


இவ்வித நிலைகள் தென்னாசிய மக்களிடையே காணப்படும்- சீதனக் கொடுமைகளும் இங்கும் இடம்பெறுவதனைக் காண்கின்றோம். இதனால் கணவனின் மட்டுமன்றி மாமன், மாமி, மைத்துனிமார், மைத்துனன்மார் ஆகியோரின் அவமதிப்புக்கும், ஏச்சுக்கும், பேச்சுக்கம் ஆளாகவேண்டிய நிலைமைகளும் காணப்படுகின்றன.


குடிப்பழக்கமுடைய கணவன் அல்லது துணைவர்களினால் குடும்பத்தில் அமைதியின்மையும், பிரச்சினைகளும் இதனால் வன்முறைகளும் இடம்பெறுகின்றன. ஆண்கள் மட்டுமல்ல பெண்களிலும் இன்று அனேகமானோர் குடிப்பழக்கத்திற்கு ஆளாகி அவர்களாலும் குடும்ப வன்முறைக்குத் தூபமிடப்படுகின்றது என்பது உண்மை.

இவ்வித நிலைமைகளுக்கு இடையே அகப்பட்டுள்ள பிள்ளைகள் மிகப்பாரதூரமாகப் பாதிக்கப்படுகின்றார்கள். அவர்களிடம் பயம், அச்சம், விவரமறியாத எதிர்காலத்தைப் பற்றிய ஏக்கம் என்பன மனதில் ஆழமாகக் குடிகொண்டுவிடுவதற்கு இந்தகைய குடும்ப சூழ்நிலைகள் வழி வகுக்கின்றன. அவர்களுக்குத் தேவையான அன்பு, அரவணைப்பு, பாதுகாப்பு, பொழுதுபோக்கு, இன்பகரமான சூழல் என்பன மறுக்கப்படுவதோடு ஏக்கத்தோடு வாழவும் வழிவகுக்கின்றது.

கணவன் மனைவிரிடையே ஏற்படும் பிணக்குகள் பிள்ளைகளை பிற்காலத்தில் அவர்கள் வன்முறையாளர்களாக மாற்றக் காரணமாகின்றது என்பது உளவியலாளர்களின் கருத்து. இளமைக் காலத்தில் அவர்களின் அடிமனதில் பதிந்து விடுகின்ற பல விடயங்கள் அவர்கள் பெரியவர்களாக வளர்ந்து வரும்போது சுயத்தை

அடைகின்றன. இவ்வித நிலைகள் அவர்களை வன்முறையாளர்களாக மட்டுமன்றி போரூக்கமுடையவர்களாக, கொலைகாரர்களாகவும் மாற்றிவிடுகின்ற நிலைக்கு எடுத்துச் செல்கின்றது. எனவே குடும்ப வன்முறைகள் கணவன் மனைவியோடு மட்டுமன்றி பிள்ளைகளின் எதிர்காலத்தையும் மிகவும் பாதிக்கின்றது என்பதனை உணர்ந்து கொள்ளுதல் நன்று.





# 8

# ஆண்களும் மணமுறிவும் பிரிந்திருத்தலும்

மணமுறிவு அல்லது பிரிந்து வாழுதல் என்பது பெண்களைப் பொறுத்தவரை என்னதான் சமத்துவம் பேசினாலும், சம உரிமை கடைப்பிடிக்கப்பட்டாலும் சட்ட நடவடிக்கைகளில் வேறுபாடு உண்டு. பெண்ணின் வீட்டுப்பக்கம் போகாதே எனக் கணவனையோ அன்றி ஆண்துணையையோ கட்டளையிடும் நீதி மன்றம் பெண்களை அவ்விதம் நடத்துவதில்லை. காரணம் பெண்கள் தான் அதிகளவில் பாதிக்கப்படுபவர்கள் என்பதே காரணமாகும். ஒரு ஆண் வருமானமற்றவராகவும், பெண் கூடிய வருமானமுடையவராக இருப்பினும் பெண்ணுக்கு வழங்கப்படும் உரிமை ஆண்களைப் பொறுத்தவரை இல்லை என்றே சொல்லலாம். கனடாவில் மணமுறிவு அல்லது பிரிந்து வாழுதல் என்பது பெண்களுக்கும் ஆண்களுக்கும் ஒரேதன்மையான சட்டவாக்க நடவடிக்கை இடம்பெறுவதில்லை. மணமுறிவு கண்ட அல்லது பிரிந்து வாழும் பெண்ணுக்கு வாழ்க்கைச் செலவுக்கு ஆண் பணம் செலுத்தவேண்டும். ஆனால் ஆண்களைப் பொறுத்தவரை அந்த நிலை சட்டப்படி இல்லை. பிள்ளைகளைப் பார்க்கும் பொறுப்பு பெண்களிடம் ஒப்படைக்கப்படுவதால் ஆண்கள்

பிள்ளைகளைப் பராமரிப்பதற்கான செலவினைக் கட்டவேண்டிய கட்டாயக் கடப்பாடு சட்டப்படி உண்டு. ஆனால், பெண்களைப் பொறுத்தவரை பிள்ளைகளை ஆண்களிடம் விடுத்தால் அவர்களுக்கு எந்தவித பொறுப்போ கடப்பாடோ சட்டப்படி இல்லா நிலையே உண்டு. எனவே ஆண்கள் மணமுறிவு தொடர்பாக தங்கள் உரிமைகள் பற்றிய வினாக்களையும் ஐயங்களையும் எழுப்புவது இயல்பே. பலர் சட்டம் அதுதான் என மனதினில் வேதனையைச் சுமந்துகொண்டு பிள்ளைகள் பிராயமடையும் வரையும் பராமரிப்புக்கான செலவுத் தொகையினைச் செலுத்திக் கொண்டு இருப்பதனைக் காண்கின்றோம். இவர்களிடம் இயல்பாகவே பலகேள்விகள் எழுவது இயல்பே. எடுத்துக்காட்டாக ரொறன்ரோவில் வாழும் கணவன் தன்னை விட்டுப்பிரிந்த மனைவியிடமிருந்து மணமுறிவினை எப்படிப் பெற்றுக் கொள்ளுவது என்பது போன்ற கேள்விகளை ரொறன்ரோவில் உள்ள ஆண்கள் மணமுறிவு நிலையத்தில் முன்வைத்தார். இவ்விதமாக பலரால் அங்கு எழுப்பப்பட்ட கேள்விகளின் சாரம் பின்வருமாறு அமைந்திருந்தது.

1. நான் கடந்த மூன்று ஆண்டுகளாக பிரிந்து ரொறன்ரோவில் வசிக்கின்றேன். எனது மனைவி எட்மின்டனில் வசிக்கின்றார். மணமுறிவுக்காக அவர் எங்கு உள்ளார் என்பதைக் கண்டுபிடிக்க முடியாதுள்ளது. நான் என்ன செய்யலாம்?

2. எனக்கு ஒரு வழக்கறிஞர் உள்ளார். ஆனால் எனக்கு விதிக்கப்பட்ட கட்டணத்தைப்பற்றி எனக்கு ஒரு தவணை தருவார் என்னும் நம்பிக்கை இல்லை. அவர் எனது வழக்கில் நியாயமாக நடந்துகொள்வதாகத் தெரியவில்லை. எனவே நான் தோற்றுப்போகும் நிலையில் உள்ளேன். நான் எவ்விதம் இந்தநிலையில் வெற்றி பெறலாம்? நான் அவரை எவ்விதம் அதிக பொறுப்புள்ளவராக ஆக்கலாம்? என்னிடம் மேலதிகமாக நடந்துகொண்டு கைவிட்டுவிடமாட்டார் என்பதனை எவ்விதம் உறுதிசெய்யலாம்?

3. நான் வேலையிலிருந்து வீடு திரும்பியபோது எனது மனைவி வீட்டின் பூட்டை மாற்றியுள்ளார்? அவர் அதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தாரா?

4. எனது வழக்கறிஞரின் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டினை எதிர்த்து நிற்கமுடியுமா? அவரை நான் கேட்கும் போது அல்லது அவரை நான் நீக்கும் போது எனது கோப்புக்களை எனக்குத் தரவேண்டுமா?

5. எனது மனைவி நீதிமன்றப் பத்திரங்களை இப்போதுதான் அனுப்பியிருந்தார். நான் அதற்குத் தயாராகவில்லை! நான் இந்த நடவடிக்கைகளை எனக்கென ஒரு வழக்கறிஞரை ஏற்பாடுசெய்யும் வரை தாமதப்படுத்தலாமா?

6. எனது மனைவி என்னைத் தாக்கியதற்காக வழக்குத்தாக்கல் செய்யலாமா?

7. எனது சொந்த பிரிவினை உடன்படிக்கையை நானே வரைந்துகொள்ளலாமா?

8. யாராவதொருவர் நீதிமன்றத்தில் பொய் சொன்னால் என்ன நடக்கும்? எப்படி அதை நான் நிரூபிக்கலாம்?

ஒவ்வொரு இணையும் தாங்கள் வாழ்வில் வெற்றிப்பாதையில் செல்வதோடு வாழ்க்கைக்காக துன்பங்கள் கஷ்டங்களையும் அனுபவிப்போம் என்ற நம்பிக்கையில் அல்லது எண்ணத்தில் திருமணம் செய்துகொள்கின்றார்கள். அவர்களுடைய எண்ணங்களுக்கும், தயார்ப்படுத்திக்கொண்டதற்கும் மாறாக பல திருமணங்கள் தோல்வியிலேயே முடிவடைகின்றன. திருமணமான சோடிகளில் மூன்றில் இரண்டு பங்கினர் தமது பின் காலத்தில் ஒன்றாக இணைந்து வாழமுடியவில்லை. மணமுறிவு பெறல் என்பது மிகுந்த பணவிரயம்

தரும் நடவடிக்கை. கனடாவில் 1998இல் மட்டும் 69,000 மணமுறிவுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. விவாக ரத்து அல்லது மணமுறிவு வழக்கறிஞர்களின் அல்லது ஆலொசகர்களின் தீர்மானமல்ல. அது அதில் ஈடுபட்டுள்ள ஆண், பெண் இருவரினது எண்ணத்தையும், முடிவையும், தீர்மானத்தையும் பொறுத்தது. சில பெற்றோர் மிகப்பாரதூரமான பயங்கரமான முடிவுகளுக்கு வருவதும் உண்டு. ‘‘நான் இவ்விதமான ஒரு தொடர்பினை எனது வாழ்வில் கொண்டிருக்கமாட்டேன்’’ ”என்னால் இதனைச் சமாளிக்கமுடியாது” “எனது பிள்ளைகள் இதிலிருந்து மீளமுடியாது” என்பன போன்ற மனப்பயத்திற்கு சிலர் ஆளாகுவதையும் நாம் அறிகின்றோம். இவ்வித நிலைமை பெண்களுக்கு மட்டுமன்றி ஆண்களின் விடயத்திலும் உண்டு என்பதனைப் பல ஆய்வுகள் வெளிக்கொண்டுவருகின்றன.

பிள்ளைகளைப் பராமரித்தல் தொடர்பாக ஆண்கள் மிகவும் ஐயப்பாடுடையவர்களாக உள்ளனர்.

பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் அணுகுமுறைகள் பற்றிப் பலவித கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

1. எனது முந்திய மனைவி இந்த மாகாணத்தைவிட்டு எனது 12 வயது மகனை எனது சம்மதமின்றிக் கொண்டு சென்றுள்ளார். அத்தோடு நாங்கள் இருவருமே இணையான பராமரிப்பாளர்கள். இதில் எனது உரிமைகள் என்ன?

2. நான் இரண்டு ஆண்டுகளாக மணமுறிவு பெற்றுள்ளேன். எங்கள் பிள்ளைகளுக்கு நானும் இணைப்பாதுகாவலன். நான் ஒன்றுவிட்ட செவ்வாயும், புதனும் அவர்களைக் கொண்டுவருகின்றேன். நான் கூடிய காலம் அவர்களை என்னுடன் வைத்திருக்க விரும்புகின்றேன். அவர்களின் தாய் எனது எண்ணம் பற்றி கேள்வி எழுப்புகின்றார். நான் என்ன படிமுறைகளை மேற்கொள்ளலாம்? அத்தோடு அவர் மிக மேலான

வாழ்க்கையினை வாழுகின்றார். நாள்தோறும் புதிய புதிய உடைகளை வாங்குகின்றார். நான் எனது பிள்ளைகளுக்காக வழங்கும் உதவிநிதியை அவர் செலவு செய்வதனை நான் கட்டுப்படுத்த ஏதாவது வழி உண்டா?

3. எனது மகன் எனது முந்திய நண்பியோடு மாகாணத்திற்கு வெளியே வாழுகின்றார். எங்களுக்குள்ளே எழுத்தினாலான எந்தவித உடன்படிக்கையும் இல்லை. அணுகுவதற்கு என்ன உரிமை எனக்கு உண்டு?


4. எனது முன்னைய மனைவி எனது தற்போதைய மனைவி பிள்ளைகளைத் தொந்தரவு செய்வதாகக் குற்றம் சாட்டுகின்றார். அது உண்மையில்லை. அவர் பொலீஸிற்குப் போகப்போவதாக பயமுறுத்துகின்றார். இதற்கு நான் என்ன செய்யலாம்?


5. நான் பிள்ளைகளுக்கான உதவித் தொகையினைச் செலுத்து கின்றேன். ஆனால் அவர்களை அணுகமுடியவில்லை. அவர்களை அணுகும்வரை நான் உதவித் தொகையை நிறுத்தலாமா?

என்பன போன்ற கேள்விகள் ஆண்கள் மணமுறிவு நிலையத்தில் ஆண்களால் எழுப்பப்படுகின்ற வினாக்களாகும். இவற்றிற்கு எவ்விதமான பதில்களை அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள் என்பதும் நாம் ஊகித்து அறிந்து கொள்ளமுடியும். இவ்வினாக்களுக்கு சட்டப்படி இப்படித்தான் முடிவு என்று சொல்லமுடியாது உள்ளது. ஆனால் ஆண்கள் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளச் சட்டம் இடம் கொடுப்பதில்லை. பிள்ளைகளை வளர்ப்பதற்கு தாய்மாருக்கே உரிமை உண்டு என்பது விதி. ஆனால் தாய்மாரின் உடல்நிலை, மனநிலை, என்பனவும் அவர்களின் நடத்தை என்பனவும் அவர்களிடம் பிள்ளைகளை விடாது தடுக்கவும் வழிவகுக்கின்றது.

மணமுறிவு ஏற்படும்போது பிள்ளைகள் பெற்றோர்கள் இருவருக்கும் இடையே அகப்பட்டு அங்கும் இங்கும் இழுபடுகின்ற ஒரு நிலை அல்லது ஒரு பெற்றோரால் ஒருவரிலிருந்து பிரித்துச்செல்லப்படுகின்ற நிலையும் ஏற்படுகின்றது. மணமுறிவு பெற்ற பெற்றார்களின் பிள்ளைகள் எல்லோரும் நிச்சயமாக துன்பத்தை அனுபவிக்கின்றார்கள் என்று சொல்லமுடியாது. எவ்வாறாயினும் சில பிள்ளைகளுக்கு பிரிவினை பாதுகாப்பு அற்ற நிலையையும், நடத்தையில் மாற்றத்தையும் ஏற்படுத்துகின்றது. வெளிப்படையாக பாராமரிப்போரினால் ஒரு பிள்ளையின் பாதுகாப்பற்ற தன்மை ஏற்படுவதினால் ஆண்கள் பிள்ளைகளைப் பாராமரிப்பதற்கான வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்கள் உண்டு.

பிள்ளைகளின் பராமரிப்புத் தொடர்பாக, இரண்டு பிரிந்துபோகும் கட்சிக்காரரும் சில விபரங்களில் அவர்கள் கட்டாயம் உடன்படுதல்வேண்டும். பிள்ளைகள் எங்கே வாழவேண்டும், பிள்ளைகளின் நலனில் எப்படி தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டும் என்னும் நிலைப்பாட்டுக்கு வருதல், எவ்வளவு நேரம் ஒவ்வொரு கட்சிக்காரரும் பிள்ளையுடன் செலவிடவேண்டும், பிள்ளையை விருத்திசெய்ய என்ன பங்களிப்பைச் செய்யவேண்டும் என்பன தொடர்பான தீர்மானங்களுக்கு வருதல் வேண்டும். அதற்காக சில மதிப்பீட்டு வேலைத் திட்டத்தினை சில வழக்கறிஞர்களிடம், அல்லது ஆலோசகர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.





# 9

# பிள்ளைகள் மற்றும் மனைவிக்கான அல்லது துணைவிக்கான உதவிப்பணம்

முன்னரே அதிகாரமளிக்கப்பட்ட செலுத்துகைப்பணத்தின் வழி நீங்கள் பிள்ளைக்கு உதவுதொகையினைச் செலுத்திக்கொண்டிருக் கிறீர்கள் என்றால் உங்கள் பிள்ளை பாடசாலை முடிகின்றவேளை, உதவு தொகையை நிறுத்துவதற்கு சரியானதும் விரைவானதுமான வழி என்ன?

1. நான் மணமுறிவு பெற்று 15 ஆண்டுகள் ஆகின்றன. எனக்கு பிள்ளையிடம் செல்வதற்கு உரிமை இல்லை எனினும் நான் பிள்ளைகளுக்கான உதவித்தொகையை இன்றுவரை செலுத்தியுள்ளேன். எனது பிள்ளைகளில் ஒன்று 21 வயதை அடைந்துள்ளது. அவர் பாடசாலையில் இல்லை என அறிகின்றேன். இன்னும் அவருக்கு நான் பணம் செலுத்து கின்றேன். குடும்ப நலத்திட்டமோ வழக்கறிஞரோ எனக்கு உதவவில்லை, உங்களால் முடியுமா?

2. நான் மணமுறிவு பெற்றுள்ளேன். மற்றும் இரண்டு பிள்ளைகளுக்கு உதவித்தொகை வழங்குகின்றேன். எனக்கு இப்பொழுது ஒரு புதிய துணைவியும் பிள்ளையும் உண்டு. எனது கொடுப்பனவை குறைப்பதற்கு ஏதும் வழி உண்டா?

3. எனது முந்திய மனைவி எனது பெண்பிள்ளையுடன் வேறு இடத்திற்கு இடம்பெயர உள்ளார். நான் ஒரு உண்மையான தந்தையாக இல்லை என்கிறார். எனது மகளை ஒருகிழமைக்கு நானும் அடுத்த கிழமைக்கு அவரும் வைத்திருப்பதாக உடன்பட்டிருந்தோம். நான் அந்தச் சந்தர்ப்பத்திற்கு ஏற்புடையவர் என்பதனை உணர்ந்திருந்தார். இப்பொழுது அவர் தனது மனதை மாற்றிக்கொண்டு இடம்பெயர உள்ளார். என்னால் என்ன செய்யமுடியும்?

4. எனது மனைவி என்னில் பார்க்க கூடுதலாக உழைக்கின்றார். நான் பிள்ளைக்கு உதவித்தொகை இன்னும் வழங்கவேண்டுமா?

5. நான் தற்போது வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளேன். எனது மனைவி எனக்கு உதவுவதாக இல்லை. எனது மனைவியிடம் இருந்து நான் உதவித்தொகை பெறமுடியுமா?

இவ்வாறான வினாக்களை ஆண்கள் பலர் முன்வைத்துள்ளனர். இவர்களுக்கு எவ்விதமான உதவிகளைச் செய்யலாம் என்பதற்கு ஆண்கள் மணமுறிவு நிலையம் பல கருத்துக்களை முன்வைக்கின்றது. எவ்விதம் உதவித்தொகைக்கான வழிகாட்டி வேலைசெய்கின்றது, எவ்விதம் உதவித்தொகை செலுத்துதல் கணிப்பீடு செய்யப்படுகின்றன, பாடசாலை முடிவடையும் போது எவ்விதம் உங்கள் பிள்ளையின் உதவித்தொகையை நிறுத்துவது, இணைந்த வங்கிக் கணக்குகள், பங்குக் கடன் அட்டைகள் போன்ற நிதிவிடயங்கள் தொடர்பானவை சம்பந்தமான ஆலோசனைகள் பல நிறுவனங்களினால் வழங்கப்படுகின்றன.

கடந்த முறை மணமுறிவு அல்லது பிரிந்துவாழ்தல் தொடர்பாக ஆண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான பல விடயங்கள் ஆராயப்பட்டன. அதே தொடரில் பல்முனை சார்ந்து ஆண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள், அணுகுமுறைகள் தொடர்பான விடயங்களை சற்று விரிவாக நோக்குவதாக அமைகின்ற இந்தத் தொடரிலே அணுகப்பட்டுள்ளது. திருமணமாகு முன்பு உள்ள சொத்துக்கள், திருமணத்தின்போது வாங்கிய சொத்துக்கள், உறவினர், உடன்பிறப்புக்கள், பெற்றோர், நண்பர்களிடம் கடன்பட்டு வாங்கிய சொத்துக்களின் உரிமைகள் தொடர்பாக எவ்வித வினாக்கள் எழுகின்றன என்பதனை நோக்குவதாக கட்டுரைத் தொடர் அமைகின்றது.

## சொத்துச் சமத்துவம்

1. மணமுறிவு ஏற்பட்டால் சொத்து எவ்விதம் கையாளப்படும்?

2. குடும்பப் பண்ணையை எனது மனைவி பகிர்ந்துகொள்ள முடியுமா?

3. வீட்டை எப்படி நான் வைத்திருக்கலாம்?

4. எனது மனைவி செலவுகளில் பங்குகொள்வதில்லை அத்தோடு அவர் தனது வருமானம் அனைத்தையும் பதிவுசெய்வதில்லை எனச் சந்தேகிக்கின்றேன். எனக்கு அவரின் கணக்குகளைப் பார்வையிட ஏதாவது வழிகள் உண்டா?

5. நாங்கள் எனது தந்தையிடம் /சகோதரரிடம் /நண்பரிடம் உறவினரிடம் கடன்வாங்கி ஒரு கனரக வண்டியை (Truck) வாங்கியுள்ளோம். மணமுறிவுக்குப் பின்னரும் நான் அதில் அரைப்பங்கை எனது மனைவிக்குக் கொடுக்கவேண்டுமா?

6. நாங்கள் பிரிந்து வாழ்வதிலிருந்து எனது வீட்டின் பெறுமதி குறைந்துள்ளது அல்லது கூடியுள்ளது. இந்த நிலையில் நான் என்ன செய்யலாம்?

7. திருமணத்தினால் நான் ஒரு வீட்டை வாங்கியுள்ளேன். ஆது சமமாகப் பிரிக்கப்படவேண்டுமா?

8. திருமணத்திற்கு முன்பே நான் ஒரு வீட்டை வாங்கியிருந்தேன். அந்த வீட்டில் மணமுறிவுக்குப் பின்னர் எனது மனைவிக்குப் பங்கு உண்டா?

9. எனது மனைவிக்கு ஒரு வாகனத்தை வாங்கிக்கொடுத்திருந்தேன். அந்த வாகனம் எனது பெயரிலேயே உள்ளது. அதில் அவருக்குப் பங்கு உண்டா?

10. நான் மாதாந்தம் எனது வருமானத்தில் ஒரு தொகையை வங்கியில் நிரந்தரச் சேமிப்பில் இட்டு வருகின்றேன். அந்தச் சேமிப்பில் பிரிந்து வாழும் எனது மனைவிக்கு சமபங்கு வழங்கவேண்டுமா?

11. எனது பெற்றோரின் சொத்தை விற்று நான் வாங்கிய வீட்டில் எனது மனைவிக்குப் பங்கு உண்டா?

12. எனது எதிர்காலத் தேவைக்காகச் சேமிக்கப்பட்ட RRSB, Mutual Fund போன்ற சேமிப்புத் திட்டங்களில் எனது மனைவிக்கு நான் பங்கு கொடுக்கவேண்டுமா?

13. நான் மேற்கொள்ளும் தொழிலில் எனது மனைவி வேறு வேலை செய்து வேதனம் பெற்று வரும் போதும் மனைவிக்கு எனது தொழிலில் பங்கு கொடுக்கவேண்டுமா?

- போன்ற மிகவும் கடுமையான கேள்விக் கணைகளை ஆண்கள் வீசி எறிகின்றனர் என்பது பல ஆலோசகர்களின் கருத்தாக உள்ளது. இவ்வித கேள்விகளுக்கு விடை காணப்படுவதற்கு இதற்கென உள்ள ஆலொசனை நிறுவனங்களில் அல்லது சட்டவல்லுநர்களிடம் செல்லவேண்டிய நிலைமையே உண்டு. இந்தக் கேள்விகளுக்குப்

பதிலளிப்பதற்கே பெருந்தொகையான பணத்தினைச் செலவீடு செய்யவேண்டிய நிலை வளர்ச்சியடைந்த நாடுகளில் மிக அதிகம். சொத்தில் பங்குகொடுப்பதிலும் பார்க்க சட்ட வல்லுநர்களுக்குக் கொடுக்கப்படும் பணம் அதிகமாகிவிடும். இரு சாராருமே வீண்செலவு செய்வதோடு நீதி மன்றத்திற்கு அலைவதற்கும் தமது நேரத்தையும் வீணாக்கவேண்டிய நிலை ஏற்படும் என்பதனையும் கருத்திலிருத்திக் கொள்ளுதல் நன்று. எது எவ்வாறு இருப்பினும் மணமுறிவு பெறுவது என்பது உறுதியானால் முதலில் உங்களின் கூட்டுக் கணக்குகளை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மிகமுக்கியமாகும்.

மீதமாக உள்ளதை உங்கள் முதல் மனைவியுடன் பகிர்ந்துகொள்ளுங்கள் அல்லது செலுத்துவதற்கான நிலுவைகள் உண்டெனின் அவற்றைச் செலுத்திவிடவும். வீட்டு அடமானக் கடன்கள் மற்றும் கடன் நிலுவைகளை எப்படிச் செலுத்தப்போகின்றீர்கள் என்பதனைத் தீர்மானித்துக் கொள்ளுதல் முக்கியமாகும். கடன் பெற்றவர்களிடம் உங்களின் புதிய முகவரிக்கு கணக்கறிக்கைகளை அனுப்பும் வண்ணம் பணித்தல் அவசியம்.

கூட்டுக் கடன் கணக்கு உண்டானால் வங்கியில் அந்தக் கூட்டு உடன்படிக்கையை ரத்துச்செய்யும் வண்ணம் வங்கியை எழுத்தில் கேட்டுக்கொள்ளுதல் நன்று. எப்பொழுதும் இவ்விதமாகச் செய்யும் நடவடிக்கைகளின் பிரதி ஒன்றைப் பேணிக் கோவைப்படுத்திக் கொள்ளத் தவறக்கூடாது. அவ்விதம் கடன்அட்டை தொடர்பாகச் செய்யமுடியாத சந்தர்ப்பத்தில் உங்களால் சிலவற்றை முழுமையாகச் செலுத்தமுடியாது. எனவே அந்த நிறுவனத்தை கடன் அட்டைக் கணக்கை நிறுத்திவைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளவேண்டும். தேவையானால் உங்கள் கணக்கில் உள்ள மீதியை வேறு ஒரு புதிய கணக்கைத் திறந்து அதற்கு மாற்றிவிடவும்.

மின்சாரம், நீர், எரி சக்தி வாயு போன்றவற்றின் செலவுத் தொகைக்கான பொறுப்புக்களிலிருந்து முற்றாக உங்களை விடுவித்துக்

கொள்ள வேண்டும். நீங்கள் வேறு இடத்தில் வாழ்வதானால் உங்கள் பெயரை அந்தக் கணக்கறிக்கைகள் அல்லது கொடுப்பனவுப் பட்டியலிடுவதிலிருந்து நீக்கிவிடும்படி எழுத்துமூலம் கேட்டுக்கொள்ள வேண்டும்.

வாடகைக் குடியிருப்பானால் வீட்டு உரிமையாளரிடம் உங்கள் உடன்படிக்கையை இரத்துச்செய்து கொள்ளவேண்டும். நீங்கள் கட்டிய முன்பணத்தினை திரும்பப்பெற்றுக் கொள்ளுதல் அல்லது வேறு கணக்குக்கு மாற்றுதல் வேண்டும்.

நீங்கள் உங்களின் வழக்கறிஞரோடு உரையாடும் போதும், முன்னைய மனைவியுடன் உரையாடும் போதும் அவற்றை ஒரு ஒலிப்பதிவு நாடாவில் பதிந்து வைத்துக்கொள்ளுதல் நன்று. அவ்விதம் பதிவதற்கு முன்னர் நீங்கள் இவற்றைப் பதிவு செய்வதனைத் தெரியப்படுத்தி விடுதல் நன்று. இவ்வித ஒலி நாடாக்களை நீங்கள் திரும்பக் கேட்டு அவற்றை ஞாபகமூட்டுவது நன்மை பயக்கும். வழக்கறிஞரிடம் மீண்டும் தொடர்பு கொள்ளுதல் சிரமமானது அத்தோடு செலவையும் அதிகரிக்கும்.

வீட்டை விட்டு வெளியேற்றப்பட்ட உங்கள் மனைவியை என்ன காரணம் கொண்டும் உள்ளே வர அனுமதித்தல் ஆகாது. அவ்விதம் அனுமதித்தால் உங்களின் கடிதங்கள், தஸ்தாவேசிகளை அழிக்கலாம் அல்லது எடுத்துச்செல்லலாம் என்பதனை நினைவிலிருத்திக் கொள்ளுதல்வேண்டும்.


வீட்டிற்கும் ஏனைய பொருட்கள் வைக்கும் அலமாரிகள் போன்றவற்றின் பூட்டுக்களை மாற்றிவிடவும். இதனால் உங்களைப் பிரிந்து வாழும் துணைவி உங்கள் வீட்டிற்குள் நீங்கள் இல்லாதவேளை வரமுடியாது. இது உங்களுக்குப் பலவிதமான பாதுகாப்பைத்தரும்.

பிள்ளைகளைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பை மிகக்கவனமாகப் பேணிக்கொள்ளுதல் வேண்டும். பாதுகாப்பது தொடர்பான சிறந்த

பதிவினை நீங்கள் பேணிக்கொள்ளுதல் வேண்டும். நாட்குறிப்பேடு, தினக்குறிப்புக்கள் என்பன சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடியன. எனவே அவற்றைத் தகுந்த முறையில் பேணிக்கொள்ளுதல் சிறப்புடைய சத்தியப்பிரமாணமாக அமையும். உங்கள் பிள்ளைகளை அணுகும்போது எவ்வித மன உணர்வினை உங்கள் பெறுகின்றீர்கள், எப்பொழுது அவர்களை அணுகுகின்றீர்கள் என்பன உட்பட நாளாந்த விடயங்களைப் பதிவுசெய்து வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் பிள்ளைகளோடு இருக்கும்போது அவர்கள் எப்படி இருக்கிறார்கள், எப்போது என்ன செய்கிறார்கள் என்பதோடு நீங்கள் எவ்விதம் அவர்களோடு ஈடுபடுகின்றீர்கள் என்பனபோன்ற விடயங்களை எல்லாம் எழுத்தில் வைத்துக்கொள்வது உங்களுக்கு தேவையானபோது ஞாபகப்படுத்திக்கொள்ளவும் சிறந்த வழியாகும்.

நீங்கள் பிரிந்துவாழும்போது அல்லது மணமுறிவுபெற்ற பின்னர் உங்கள் நண்பர்கள், உங்களைச்சுற்றி உள்ளவர்கள், உறவினர்கள், வேலைத்தளத்தில் உள்ளவர்கள் உங்களின் செயலை ஏற்காது மறுத்துரைப்பார்கள் அத்தோடு திருமணத்தொடர்பை நீங்குவதை ஏற்கமாட்டார்கள் என்பதை நீங்கள் கருத்திற் கொள்ளுதல்வேண்டும். அவர்களை நீங்கள் எதிர்கொள்ளப் பயப்பட்டால் உங்களுக்கு எதிரான கருத்துக்களை அவர்கள் கொண்டிருப்பார்கள் என்பதால் நீங்கள் புண்படுத்தப்படலாம். அவர்களின் தொடர்புகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் எப்படியானவர்கள் என்பதனை நீங்கள் கணித்துக்கொள்ளவேண்டும், ஒருபோதும் உங்களால் நிரூபிக்கமுடியாத வற்றை அவர்கள் முன்வைக்கக் கூடாது. அவர்கள் என்ன எண்ணு கின்றார்கள் என்பதனை நீங்கள் முதலில் அனுமானித்துக் கொள்ளவேண்டும். இந்தவழிகளில் உண்மையில் உங்கள் நிலை என்ன என்பதனை அறிந்துகொள்ளலாம். உங்கள் நண்பர்கள் கூறும் அபிப்பிராயங்கள் கருத்துக்களைக் கேட்டுக்கொள்ளுங்கள். ஆனால் அதன்படி நடக்கவேண்டும் என்பதில்லை.





# 10

# தனிப் பெற்றோரும் பிள்ளைகளும்

இன்னும் எம்மவரிடையே திருமண முறிவு அல்லது பிரிந்துவாழும் நிலை நாளாந்தம் அதிகரித்துவருகின்றமை யாவரும் அறிந்த உண்மை. இதற்குப் பல காரணிகள் உண்டு என்பதனை நாம் பார்த்தோம். அண்மையில் கூட பாடசாலைக் காதலுக்காக இளம் வயதில் திருமணம் முடித்து வைத்தனர் பெற்றோர். பெண்பிள்ளைக்கு 16 வயதிலேயே திருமணம் முடிந்துவிட்டது. ஆனால் 20 வயதில் அந்தப்பெண் தனது காதலனோடு இணைந்து வாழ முடியாதவளாக பிரிந்துவாழ்வதோடு மணமுறிவில் போய் நிற்கின்றாள் என்பதற்கான காரணங்களாக நாளாந்தம் அடி உதை தனது காதலனான கணவனிடமிருந்து கிடைக்கின்றது. வீதியில், சனசந்தடி உள்ள இடங்களில் கூட இந்த சம்பவங்கள் நடைபெறுகின்றன என்பதனால் அந்த முடிவுக்கு அந்த அபலைப் பெண் தள்ளப்பட்டமை வியப்பிற்குரியதல்ல. ஆனால் இவ்விதம் இளம் வயதில் திருமணம் முடித்து வைக்கும் நிலை முன்னர் இருந்தது. அவர்களை வழிப்படுத்தி, நெறிப்படுத்தி, பாதுகாத்து பொருளாதார நலன்கள் அளித்துக் காப்பாற்றிவந்தனர் பெற்றோர், உறவினர், நண்பர்கள். ஆனால் இன்று

வெளிநாடுகளில் இந்த நிலை இல்லை என்பது கருத்திற் கொள்ளப்பட வேண்டியதொன்று. இவற்றை விட நன்கு அறிந்த குடும்பங்களில் பேசி வைக்கப்படும் திருமணங்களே முறிவடைகின்றன. திருமண வயது கிட்டத்தட்ட பெண்ணுக்கு 28ம் ஆணுக்கு 32 ஆக இருக்கும் போது திருமணம் நிறைவேறியது. இரண்டு மாதத்தில் பிரிந்து வாழுகின்றாள் பெண். காரணம் மாலையில் நண்பர்களுடன் செல்லும் கணவன் சாமத்தில் 12 அல்லது ஒரு மணிக்கே வீடு திரும்புகின்றார். அத்தோடு மதுப்பழக்கமுடையவர் என்பதும் காரணம் கூறப்படுகின்றது. இங்கே பெண் சொல்வது கேட்கக்கூடாது, அவள் ஆண்கள் சொல்வதைக் கேட்டு அடங்கி இருக்கவேண்டும் என்பது நண்பர்களின் புத்திமதியாக ஆணுக்குக் கிடைக்க அவர் அவர்களிடம் நல்லபெயர் கிடைப்பதற்காக பெண்ணை உதாசீனம் செய்ததோடு மிகத் தாமதமாக இரவில் வரத்தொடங்கியமை குடும்ப வாழ்க்கையைச் சீரழித்தது. இவ்வித திருமணங்கள் தீர விசாரிக்கப்படாமல் அல்லது ஆண் பெண் மன நிலைகள் அறியாமல் அல்லது அறிந்தும் சிலவற்றை மறைக்கின்ற பண்பு எம்மவரிடையே உண்டு என்பதால் - "கட்டையிலை கட்டினால் திருந்தி விடுவான்" என்பது வாழையடி வாழையாக நாம் பின்பற்றி வரும் ஒரு முறை - இதனால் திருமணம் பேச இடையில் நிற்போர் மதுப்பழக்கம் உடையவர் என்பதனையோ நண்பர்களிடம் தினம் தினம் சென்று காலம் களிப்பவர் என்றோ அவரின் உண்மை நிலையை மறைத்துவிடுவதோடு அவரோடு உரையாடுவதனை வைத்து அவர் நல்லவர், நல்ல பண்புடையவர், குணமுடையவர் என்றெல்லாம் முடிவெடுத்து அதனை அழுத்தமாக மற்றவர்களுக்கும் கூறிவிடுகின்ற நிலைமையில்- சிற்சில வேளைகளில் அவ் உண்மைகளைத் திருமணத்தின் பின்னர் அறியும் போது வேதனையும், ஏமாற்றமும், மனவிரக்தியும் ஏற்படுவது இயல்பே.

பெண்ணானவள் திருமணத்திற்கு முன்னர் வேறு ஒரு ஆடவனை விரும்பியிருந்தது பின்னர் தெரியவந்தாலோ அல்லது

திருமணத்திற்கு முன்னர் தெரிந்திருந்தாலோ அதனை சில ஆண்கள் தங்களுக்குச் சாதகமான ஒரு ஆயதமாக எடுத்துக் கொண்டு அதனாலேயே சில பெண்களைச் சவுக்கால் அடிப்பதுபோன்று அவர்களது மனதைக் குத்திக் கிளறி விடுகின்ற நிலைமை குடும்பவாழ்வில் துயரத்தையும் மனவேதனையையும் ஏற்படுத்துகின்றது. அங்கு பெண் தனியே ஒரு வீட்டு வேலைக்காரியாகவும், காமவேட்கையைத் தீர்த்துக் கொள்ளும் ஒரு பொருளாகவுமே கருதப்படுவதனால் வாழ்வியலின் நோக்கம், இன்பம் மறுக்கப்படுவதனால் பிரிவு, மணமுறிவு ஏற்படும் செயல்களும் இடம்பெறுகின்றன.

சிற்சில இடங்களில் எதேதோ கற்பனைகளுடன் திருமணம் செய்துகொள்ளுகின்ற இளம் வயதினர் தங்கள் எதிர்பார்ப்புக்கள் நிவர்த்திக்கப்படாத காரணங்களினாலும் மனவிரக்தி அடைந்து பிரிந்துபோகின்ற செயல்கள் மிக அதிகமானதாக அமைந்துவிடுகின்றது. இவ்விடங்களில் குறுக்க வழிகளில் பணம் பெறவிழைந்து தமது பங்காளியான ஆணையோ அல்லது பெண்ணையோ கடன்பெறத்தூண்டி அப்பணத்தை அபகரித்துக் கொண்டு பெண்ணை அல்லது ஆணை வெளியே விடுகின்ற நிலைமைகளும் கண்கூடு. பெற்றோர், சகோதரங்கள் தமது பிள்ளைகள் அல்லது சகோதரர்கள் நன்றாக வாழவேண்டும் என்னும் நோக்கத்தோடு வீடு வாங்கிக் கொள்வதற்கு பணவசதி செய்து கொடுப்பது வழக்கம். யாழ்ப்பாணத் தமிழர் வீடு சீதனமாகப் பெற்றுக் கொள்வதில் கண்ணும் கருத்துமாக இருப்பது போன்று இங்கும் வீடு வாங்குவதில் போட்டி போட்டுக்கொண்டு வாங்குவது கண்கூடே. அவ்விதம் புதிதாகத் திருமணமான காலத்தில் சகோதரர்கள், பெற்றோர் உதவியுடன் பெற்றுக் கொள்ளும் வீடுகள் கணவனும் மனைவியும் சேர்ந்து வாங்கியதாகவே பதிவில் இடம்பெறுவதோடு சட்டப்படி கருதவும் படுகின்றது. இதனால் திருமணமாகி சிறிது காலத்தில் பிரிந்துபோகின்ற குடும்பத்தினர் அதாவது இளவயதினருக்கு பெரும் பொருளாதார

சிக்கல்கள் ஏற்படுகின்றன. சொத்தைப் பிரித்துக் கொள்ளும் நிலை. பிரிந்து வாழ்வதனால் கிடைக்கக் கூடிய பராமரிப்புச் செலவினங்கள் என்பன பல சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. முற்றாக பெற்றோரிடம் அல்லது சகோதரர்கள் அல்லது நண்பர்களிடம பெற்றுக் கொண்ட கடன் முழுவதையுமே இழக்கவேண்டியதொரு நிலையும் வருவது கவனத்திற் கொள்ளப்படவேண்டியதும் மிக நுட்பமாக கையாளப்படவேண்டியதும் ஒன்றாகும்.


உறவினர் ஒருவரை மணந்துகொண்ட ஆண்மகன் தனது கணக்குக்கள் பலவற்றில் தில்லுமுல்லுகள் செய்த காரணத்தால் பெண்ணின் பெயரில் 50,000 கனடிய டொலர்களை வங்கியில் கடனாகப் பெற்றுக் கொள்ளவைத்து அந்தப்பணத்தைக் கொண்டு தனது சகோதரனின் பெயரில் வீடு ஒன்றை வாங்கிக் கொண்டு வேலைக்கும் செல்லாமல் சமூக நிதியில் காலம் கடத்திக் கொண்டு பிரிந்து வாழுகின்ற ஆணிடம் எதனையுமே பெறமுடியாது அந்தப் பெண் அவதிப்படுவதோடு வங்கிப் பிரதிநிதிகள் அவரைக் கடனை அடைக்கும்படி தொல்லைகள் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் செய்வதறியாது மாட்டிக்கொண்டு விழிக்கும் நிலையும் உண்டு. இவ்விதமே ஆண்களின் முழு உழைப்பையும் உறிஞ்சிவிட்டு அவரை வெளியே விடும் பெண்களும் மலிந்துதான் காணப்படுகின்றார்கள்.


மனைவியை வேலை எதற்கும் அனுப்ப விரும்பாத ஒரு ஆடவன் இரண்டு மூன்று வேலைகள் எனத் திரிந்து தனது வீட்டில் என்ன நடக்கின்றதென்பதனையே அறியாது செயற்பட்டதனால் அந்தப் பெண் வேற்று ஆடவரை நாடி அது கையும் மெய்யுமாகப் பிடிபடவே அந்தக் கள்ளக் காதலனோடு முன்னர் காதலித்து மணந்துகொண்ட கணவனை விடுத்து ஓடிய நிலையும் இங்கே தாராளமாகக் காணப்படுகின்றது. வேற்று ஆடவனோடு தொடர்புகொண்டதற்காக மனைவியைச் சகோதரியைக் கொலைசெய்த நிலைமையும் இங்கு நமது

இனத்தினரிடையே இடம்பெற்றுள்ளமை பத்திரிகை வாயிலாகக் காணப்படுகின்றது.

கனடா போன்ற மேலை நாடுகளுக்கு வரும் இளைஞர்களில் பலர் அங்கு திருமணம் செய்து பிள்ளைகளையும் மனைவியையும் விடுத்து பொருளாதார மோகம் கொண்டு இவ்விடம் வந்து தாம் மணமாகாதவர்கள் என்று மணம்முடித்து இடையில் கைவிடுகின்ற துர்ப்பாக்கிய நிலைகளும் காணப்படுகின்றன. கனடாவில் காணப்படும் பொதுச் சட்ட தம்பதிகள் என்னும் பதம் சட்டப்படி திருமணம் செய்யாது வாழும் உரிமையைத் தருவதனால் பலர் ஏமாற்றப்படுகின்ற சம்பவங்களும் இங்கு இடம்பெறுகின்றன. வலையமைப்புத் தொடர்பாடலால் இன்று பல குடும்பங்கள் சின்னாபின்னப்பட்டுப் போவதனைக் காணமுடிகின்றது. வீட்டில் தனித்திருக்கும் ஆடவர்களும் பெண்களும் மிக இலகுவாக இந்த வலையமைப்பின் மூலம் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுவதனால் அவர்கள் தங்களிடையே ஒரு அந்தரங்கமான தொடர்பினை ஏற்படுத்திக் கொள்கின்றனர். இதனால் பல குடும்பங்கள் பிரிந்துபோவதற்குக் காரணமாக அமைகின்றதோடு இளம்பிராயத்தினர் இதனால் ஓடிப்போதல், வயதிற் கூடியவர்களை மணம் புரிதல் என்பன இடம்பெறுகின்றன. இவை மிக விரைவில் பிரிவு, மணமுறிவுக்கு இட்டுச் செல்கின்றன.தனது மனைவியும் பிள்ளைகளும் வரும்வரைக்கும் ஒரு பெண்ணைத் தமது இடைக்கால வாழ்வுக்குப் பயன்படுத்திவிட்டு அம்போ என நடுத்தெருவில் விட்டுவிடுகின்ற நிலைமையும் காணப்படுகின்றது. இதனால் நம்பி மோசம்போன இளம் பெண்கள் தற்கொலை செய்கின்ற துர்ப்பாக்கிய நிலையும், மனஅழுத்தத்தால் பைத்தியம் பிடித்து வைத்தியசாலைகளில் செலவிடும் நிலைகளும் ஏற்படுகின்றன. எடுத்துக்காட்டாக இங்கு அண்மையில் வந்திருந்த ஈழத்தில் வைத்தியக் கலாநிதியாகக் கடமையாற்றிய ஒருவர் தான் மணமாகாதவர் என்று கூறி இங்குள்ள

ஒரு இளம் யுவதியைத் திருமணம் செய்து கொண்டு வாழ்க்கை நடத்தி அவரை ஒரு குழந்தைக்குத் தாயாக்கியுள்ளார். இதன்பின்னர் அவர் செய்த ஸ்பொன்சர் ஏற்பாட்டால் அவரது மனைவியும் பிள்ளைகளும் வந்துசேர்ந்துள்ளனர். இதன்பின்னர் இங்கு மணமுடித்திருந்த பெண்ணைக் கைவிட்டு மாஜிமனைவியோடு சென்று குடித்தனம் நடத்துகின்ற நிலையில் இங்கு மணமான பெண் விசர்பிடித்து அலையும் நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளாள் என்பன போன்ற காரியங்களும் பல நம்மவர் மத்தியிலே இடம்பெறுகினறன.





# 11

# தனிமையாகிவிட்ட பெற்றோரின் வெற்றி நடை

கனடிய மண்ணில் மட்டுமன்றி உலக நாடுகளிலேயே இன்று கூடுதலான பிள்ளைகள் தனிப்பெற்றோரின் பொறுப்பில் அல்லது மரபுரீதியற்ற இல்லங்களில் வளர்வதினைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்விதம் தனியே பிள்ளைகளைக் கவனிக்கவேண்டிய நிலையில் உள்ள பெற்றோர்கள் தங்கள் குடும்பச்சூழ்நிலைகள் காரணமாக தங்கள் பிள்ளைகளின் இயைவாக்கம் மற்றும் முன்னேற்றப்பாதையில் செல்லல் என்பனவற்றில் எவ்விதமாவது தலையீடுகளைச் செலுத்தும் என்னும் மனத்தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர் என்பது வெளிப்படை. வளர்ச்சியடைந்த நாடுகளில் வாழ்க்கை முறைமை, சட்ட நடைமுறைகள் என்பன பெரும்பாலான தனிப்பெற்றோரை ஆக்கித்தந்துள்ளது. பொதுவிருப்பின் அடிப்படையில் சேர்ந்து சட்டப்படி கணவன் மனைவியாகாது வாழ்க்கை நடத்துதல் அதன்வழி பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளுதல் பின்னர் மனக்கசப்பு ஏற்பட்டு தமது மனரீதியான உடன்பாட்டை விட்டு நீங்குதல் என்பன சர்வசாதாரணமாக இடம்பெறும்

நிலை காணப்படுகின்றது. பாரம்பரியமாக, பரம்பரை பரம்பரையாக தமிழ் பண்பாட்டு நிலை கணவன் மனைவி என்னும் பந்தம் பிரியமுடியாத, பிரியக்கூடாத நிலையினைப் பண்பாக வாழ்வியலின் சிறந்த அம்சமாகக் கொண்டிருந்தது எனினும் இது வெளிநாடுகளில் பரந்துபட்டு வாழும் தமிழர்களிடையே இன்று கேள்விக்குறியாக அமைந்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. மனதால் விரும்பியவுடன் பெற்றோரை விட்டுப்பிரிந்து ஒன்றாக குடித்தனம் நடத்துவதும் பின்னர் விட்டுப்பிரிவதும் சர்வசாதாரணமாக நமது இனத்தையும் தொற்றிக் கொண்டுள்ளமை நமது சமூகத்தினரிடையே ஒரு பெரும் நோயாகக் காணப்படுகின்றது.

பாலிய வயதினரிடையே ஏற்படும் இத்தகைய உறவுகள் நீண்டு நிலைக்கமுடியாமல் மிகவேகமாகப் பிரிந்துபோவதனால் பல தற்கொலைகள், மனமுறிவு அதன்வழி மனவழுத்தம் என்பன ஏற்பட்டு நிரந்தர நோயாளர்களாக மாறிவிடும் நிலையும் ஏற்படுகின்றது. எவ்வாறாயினும் தங்கள் பிள்ளைகளை தகுந்த முறையில் வளர்ப்பது பெற்றோரின் கடனாகும். இவ்விதம் பிரிந்து வாழும் பெற்றோர்களிடையே இருவகையினரைக் காணக்கிடக்கின்றது. ஒன்று பிள்ளைக்குப் பொறுப்பாளியான பெற்றோர் இன்னொருவர் பொறுப்பற்ற பெற்றோர். பிள்ளையையோ அல்லது பிள்ளைகளையோ கவனிக்கும் பொறுப்பில் உள்ள பெற்றோருக்கு பல சிக்கல்கள் சிரமங்கள் ஏற்படுவது இயல்பே. பொறுப்புக்கள் அற்ற பெற்றோர் வாரத்தில் ஒருமுறையோ அன்றி இருமுறையோ பிள்ளையை அல்லது பிள்ளைகளைப் பார்த்து குசலம் விசாரித்துவிட்டு ஏதாவது உணவோ அன்றிச் சன்மானங்களோ கொடுத்துவிட்டுப்போகும் நிலையில் உள்ளவர்களாக இருப்பர். இவர்கள் இருவருமே பிள்ளைகளின் கல்விக்குப் பொறுப்பானவர்களாக இருக்கவேண்டிய கடப்பாடு உண்டு. ஆனால் அவர்களில் ஒருவரே அனைத்தையும் கவனித்துக்கொள்ளும் நிலை காணப்படுகின்றது.

இவ்விதம் தனித்துவிட்ட பிள்ளைகளின் கண்காணிப்பு, பராமரிப்பினைத் தனது பொறுப்பில் கொண்டுள்ள பெற்றோர் பாடசாலைகளில் பிள்ளைகள் வெற்றிநடைபோட பின்வரும் அம்சங்களைப் பின்பற்றுதல் சிறந்த பயன்தரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆகவே அவர்கள் தமக்குமுன்னே உள்ள வாழ்க்கை இடர்பாடுகளை, தடைகளை மீறி வெற்றி நடைபோட அவற்றிற்கு எதிராக திடசங்கற்பம் பூண்டுகொண்டு அவற்றை எதிர்த்து முன்னேற முயற்சிகள் செய்தல் பயன்தரும்.

எந்தவொரு விடயத்தையும் வெற்றியுடன் கையாளுவதற்கு தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளுதல் அவசியம். அவ்விதம் தயார்நிலைக்கு வருவதற்கு ஒழுங்கமைப்பு அவசியமானது. தனிப்பெற்றோருக்கு இணைந்து வாழும்பெற்றோரைவிட வாழ்வில் பலவிதமான இடைஞ்சல்கள் ஏற்படுவது தவிர்க்கமுடியாததே. உங்கள் பிள்ளைகளின் புத்தகப்பையில் பாடசாலையில் இருந்து சில அறிவுறுத்தல்கள் அல்லது குறிப்புக்கள் வைக்கப்பட்டிருப்பதனை மிகக் கவனமாகப் பார்வையிடுதல் வேண்டும். எனவே புத்தகப்பையை நாளாந்தம் பார்வையிடுதல் வேண்டும். மாற்று இடங்களுக்குப் போதல், வெளிக்களச் சுற்றுப்பயணம், புத்தக விற்பனை, விசேட நிகழ்வுகள் போன்றனவற்றிற்கான அறிவுறுத்தல்கள் அல்லது ஒப்புதலுக்கான குறிப்புக்கள் அனுப்பப்பட்டிருக்கலாம். அவற்றைப்பார்வையிட்டு அதற்கு உங்கள் பிள்ளைகளும் ஏனைய பிள்ளைகளோடு இணைந்துகொண்டு செயற்படவேண்டிய நிலைமைகளுக்கான ஒழுங்குகளைச் செய்தல் மிகமுக்கியமானது. உங்கள் பிள்ளைகளின் பாடசாலைப் பொருட்களைத் தினமும் பார்வையிட்டு இல்லாதவற்றை வழங்குவதோடு, சிலவற்றை மாற்றிவிடவும் வேண்டும். இவ்விதமான வளமையான செய்கைகள் உங்களது ஈடுபாட்டுக்கு அழுத்தம் கொடுப்பதோடு பாடசாலையில் முன்னேற்றத்தைத் தருவதோடு உங்கள் பிள்ளைக்கு ஒழுங்கமைப்புக்கான திறன்களை வளர்க்கவும் வழிவகுப்பதாக அமையும்.

பிள்ளையைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பில் இல்லாத பெற்றோருக்கும் பிள்ளையைப் பொறுப்பாகப் பார்த்துக்கொள்ளும் பெற்றோருக்குரியதான பிள்ளையைப் பற்றிய தகவல்களைப் பெறும் உரிமை உண்டு. எனினும் மிகச் சில பொறுப்பாளியாக இல்லாத பெற்றோரே இந்த உரிமைகளைக் கையாளுகின்றார்கள். பொறுப்பாளியல்லாத பெற்றோர் தங்கள் பிள்ளையின் கல்வியில் அக்கறை உள்ளவர்கள் என்பதனைக் காட்டுவதற்கு பிள்ளைகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள 50 வரையான தங்களின் முகவரி இடப்பட்ட கடித உறைகளை வகுப்பு ஆசிரியரிடம் கொடுப்பதன் மூலம் தங்கள் பிள்ளைகளின் நாளாந்த நடவடிக்கைகள், முன்னேற்றம், அவர்களின் பலவீனம் என்பனவற்றை அறிந்து கொள்ள முடியும். இதனால் தங்களின் பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கு அவர்கள் உதவிசெய்ய முடியும். அத்தோடு தமது ஈடுபாட்டையும் காட்டிக்கொள்ளவும் இது வழிசமைப்பதாக அமையும். பாடசாலையில் என்ன நிகழ்ச்சிகள் நடக்கின்றன அவை எப்போது நடக்கின்றன என்பனவற்றை நீங்கள் அறிந்து கொள்ள இது ஒரு வழியாகும். அத்தோடு பிள்ளை மதிய உணவுக்கு என்ன உட்கொள்கின்றார், அவருக்கு நாளாந்தம் என்னென்ன தேவையாக உள்ளது என்பனவற்றை அறிந்துகொள்வதோடு ஆசிரியருக்கும் இந்த மேலதிகமான செயலுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளவும் வேண்டும்.

இரு பெற்றோரும் உள்ள குடும்பத்தினர் ஒருமித்த பெறுபேறுகளினால் பிள்ளைகள் தொடர்பாக அவர்களுடன் சேர்ந்து இன்பத்தை அனுபவிப்பதுபோன்று தனிப்பெற்றோர் அனுபவிக்கமுடியாது. காய்ச்சல், வாந்தி, வயிற்றோட்டம், கண்நோய், அல்லது இதேபோன்ற பயங்கரமான தொற்றுநொய்கள் வரும்போது பெற்றோரில் ஒருவர் வீட்டில் பிள்ளையோடு தங்கி இருக்கவேண்டிய நிலை வருகின்றது. ஆனால் தனிப்பெற்றோருக்கு இந்தச் சூழ்நிலைகள் பெரும் மனக்கவலையையும், சிரமத்தையும் தருகின்றது. சில மருந்துகளை முன்கூட்டியே

வாங்கக்கூடிய நிலைமையும் தனிப்பெற்றோருக்குக் கிடைப்பதில்லை. இதனால் பிள்ளை நோய்க்கு ஆளாகி பாதிக்கப்பட்ட பின்னர்தான் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லவேண்டிய நிலை ஏற்படும். நோய்க்குறிகள் தோன்றியவுடனேயே அவற்றைப் பார்த்து அதற்கேற்ற மருந்துகளை உடனடியாக வைத்தியாசலைக்குச் செல்லாமலே மருந்தகங்களில் வாங்கிக் கொடுக்கும் நிலைமையைத் தனிப்பெற்றோர் பலர் செய்யாது விடுவதற்கு அவர்களுக்குப் போதிய அவகாசம், நேரம் கிடைக்காமையும் ஒரு காரணியாக அமைகின்றது. சிலவேளைகளில் அவர்களின் வேலை நிலைமைகள் இறுக்கமானதாக விடுப்புக் கிடைக்கமுடியாத நெகிழ்ச்சித்தன்மையற்ற நிலைமையைக் கொண்டதாக அமையலாம். அத்தோடு கடைசிநேரத்தில் பின்னுக்கு வரிசையில் நிற்கும் நிலைகளையும் தோற்றுவிக்கலாம் இவ்வித நிலைமைகள் அவர்களை அவசர சிகிச்சைப்பிரிவுக்கு இட்டுச்செல்லக் காலாக அமைகின்றது. இவ்வித தன்மைகள் தனிப் பெற்றோரின் பிள்ளைகளை நீண்ட காலத்திற்குப் பாடசாலையில் இருந்து தடைசெய்யக் காரணமாகின்றது. இவை பிள்ளையின் படிப்பைத் தடைசெய்வதால் அவர்கள் பாடசாலையில் பின்னிற்க வேண்டியவர்களாக ஆகிவிடுகின்றனர். இவற்றில் பெற்றோர் கூடிய அக்கறை எடுப்பதோடு கண்காணிப்புப் பொறுப்பில் இல்லாத பெற்றோரும் உதவிசெய்யும் சந்தர்ப்பத்தையும் நல்கும்.

## பாடசாலை விடயங்களில் ஈடுபாடு கொள்ளுதல்

பாடசாலையில் பிள்ளைகளின் கல்விதொடர்பான விடயங்கள் மட்டுமன்றி வகுப்பறைக் கல்விக்குப் பிறிதான பலவிடயங்களில் பிள்ளைகளை ஈடுபடவைப்பது மிக அவசியமாகும். ஆசிரியர்கள் பிள்ளைகளை ஈடுபடவைப்பதற்கு அவர்களின் ஒத்துழைப்பையும் அதற்குமேலாகப் பெற்றோரின் சம்மதத்தையும் ஒத்துழைப்பினையும் எதிர்பார்ப்பதினைப் பெற்றோர்கள் அறிந்திருத்தல் வேண்டும்.

பாடசாலையில் இடம்பெறும் எந்தவொரு நிகழ்வுக்கும் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் சம்மதமில்லாமல் எதனையும் செய்யமாட்டார்கள். எனவே பெற்றோருக்கோ பாதுகாவலருக்கோ அனுப்பப்படும் குறிப்புக்களில் சம்மதம் தெரிவிக்கவேண்டிய கடப்பாட்டை பெற்றோருக்கு அறிவித்திருந்தாலும் பல பெற்றோர்கள் இவற்றை அக்கறை செலுத்தாது உதாசீனம் செய்துவிடுகின்றார்கள். இதனால் பிள்ளைகளின் ஈடுபாடுகள் பெற்றோரை அறியாமலே புறத்தொதுக்கப்படவும் காரணமாகிவிடுகின்றது. பிள்ளைகளின் நாளாந்தக்கல்வி விடயங்களிலே பெற்றோர் அக்கறை கொண்டுள்ளார்கள் என்பதனை ஆசிரியர்கள் உணர்ந்துகொள்ளும் போது அந்தப்பிள்ளையின் மீது அவர்களின் கவனம் ஈர்க்கப்படுவது சாதாரண விடயமாகும். ஆனால் பெற்றோரின் அக்கறை இல்லை என்றால் அந்தப்பிள்ளை பாடசாலை வகுப்பறைகளில் மட்டுமல்ல பாடவிதானத்திற்குப் பிறிதான மேலதிக நடவடிக்கைகளிலும் புறத்தொதுக்கப்படக் காரணமாகிவிடும். எனவே பெற்றோர் குறிப்பாக பிரிந்து வாழும் பெற்றோர் இருவருமே பிள்ளையின் மீதோ அன்றிப் பிள்ளைகளின் மீதோ மிகுந்த அக்கறை கொண்டுள்ளனர் என்பதனைக் காட்டவேண்டும். பாடசாலைகளில் பலவிதமான அமைப்புக்களை பிள்ளைகளின் கல்வி விருத்திக்காக ஏற்படுத்தி அதற்குப் பொறுப்பாகப் பல்வேறு ஆசிரியர்கள் செயற்படுகின்றார்கள். எடுத்துக்காட்டாக கணினிக் கழகம், கணிதக் கழகம், விளையாட்டுக் கழகம், நடனக் கழகம், இசைக்கழகம், சமூகவியற்கழகம், வாசிப்புக்கழகம், எழுத்துக்கழகம், பொது அறிவுக்கழகம், விஞ்ஞானக் கழகம், புத்தாக்கக் கழகம் என்பனபோன்ற பல கழகங்கள் பாடசாலைகளில் காணப்படுகின்றன. பாடசாலைகளின் தரத்திற்கேற்ப இக்கழகங்களின் செயற்பாடுகள் வேறுபாடுடையனவாக அமைகின்றன. மாணவர்களை ஆளுமை உடையவர்களாக வளர்க்க இத்தகைய கழகங்களின் செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் செய்யமுடியும். ஆனால் பல பெற்றோர்கள் இத்தகைய கழகங்கள் பற்றிய தெளிவு அற்றவர்களாக உள்ளனர். பாடசாலைகளில்

இடம்பெறும் பெற்றோர் ஆசிரியர் சந்திப்புக்களுக்கே பல பெற்றோர்கள் போவது அருமையானதாகவே உள்ளது. இந்த நிலை தனிப்பெற்றோருக்கு சிரமமானதாக அமைந்தாலும் பிள்ளைகளின் நலன் கருதி அவற்றில் ஈடுபாடு கொள்ளவேண்டிய நிலைமையைத் தவிர்த்தல் பிள்ளைகளின் வளர்ச்சிக்கு அவர்கள் செய்யும் தீங்காக அமையும். இதனை விட பெற்றோர்களின் பங்களிப்பு பாடசாலைகளில் பல துறைகளிலும் தேவையானது. எந்தவொரு பெற்றோரும் பாடசாலையில் உள்ள இத்தகைய கழகங்களில் உதவி செய்வதன் மூலம் தங்களின் பிள்ளைகளை மட்டுமன்றி ஏனைய பிள்ளைகளுக்கும் ஊக்கமளிப்பதோடு உதவுவதாகவும் அமையும், வெளிக்கழகச் சுற்றுலா, கணினிக் கழகம் போன்றவற்றில் அவர்கள் தங்கள் பங்களிப்பைச் செய்யமுடியும். இதனால் அவர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியைக் கவனிப்பதோடு அவர்கள் மீது அக்கறை கொண்டுள்ளனர் என்பதனையும் காட்டிக் கொள்ளவும் முடியும். பிரிந்து வாழும் பெற்றோரில் பிள்ளையின் காப்புரிமையைப் பெறாத பெற்றோர் இவ்வித செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் மற்றைய பெற்றோருக்கு தங்கள் பிள்ளைமீதான அக்கறையினை உணர்த்தவும் இத்தகைய வாய்ப்புக்கள், ஈடுபாடுகள் பயனுடையதாக அமையும்.

## ஆசிரியருக்கு உதவிக்கரம் நீட்டுதல்

பிள்ளைகளின் பாடசாலை வாழ்வில் ஆசிரியர்கள்தான் திறவுகோல்களாக விளங்குகின்றனர். பெரும்பான்மையான ஆசிரியர்கள் தங்களை ஆசிரியத் தொழிலுக்கு அர்ப்பணித்தவர்கள், கடினமாக உழைப்பவர்கள். அவர்கள் தமக்குள்ள மிகக் குறைந்தளவான வளப்பயன்பாட்டோடு மிகப்பிரமாண்டமான எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற பாடுபட்டு வருபவர்கள். நீங்களும் ஆசிரியர்களும் ஒரு குழுவாகச் செயற்படுகின்றீர்கள் என்பதனை உங்கள் பிள்ளைகள் உணர்ந்துகொள்ளவேண்டும். பிள்ளைகள் பகிர்த்தறிவதிலும்,

வெற்றிபெறுவதிலும் நிபுணர்கள் என்பதனை மறந்துவிடக்கூடாது. ஏதாவதொரு விடயத்தில் அது பாட ஒப்படையாக இருக்கலாம் அல்லது வேறு ஏதாவது விடயமாக இருக்கலாம் ஆசிரியரின் கருத்துக்கு உங்களால் உடன்படமுடியவில்லை என்றால் அதனை பெரியவரின் விடயமாக மட்டும் வைத்துக்கொள்ளவேண்டுமே ஒழிய உங்கள் பிள்ளைகளுக்கு அவைபற்றிய அபிப்பிராயங்களைக் கூறவேண்டாம். இதனால் பிள்ளைகளின் மனதில் அபிப்பிராயபேதத்தை, தவறான கருத்தை வளர்க்க நீங்கள் காரணமாக அமையாலாம். ஆசிரியர் மீது அவர்கள் தவறான கருத்தைக் கொள்வார்களாக இருந்தால் அது கல்வி விருத்திக்கு குந்தகமாக அமையும் என்பதனை மறந்துவிடலாகாது. ஆசிரியருக்கும் உங்களுக்குமிடையே கதைப்பதற்கு கலந்துரையாடுவதற்கு பாடசாலைக் கதவுகள் எப்பொழுதுமே திறந்திருக்கும். எனவே தொடர்பாடல் பிரயோசனமுள்ளதாக, நன்மை பயப்பதாக அமையவேண்டும். பிள்ளைகளுக்கு முன்னால் நீங்கள் ஆசிரியருடன் முரண்படுவதோ அன்றி கருத்துக்களைக் கூறுவதோ ஆசிரியர் பற்றி கீழான எண்ணத்தைப் பிள்ளைகளுக்கு விதைப்பவராக நீங்கள் ஆகிவிடுவீர்கள். எனவே ஆசிரியரைப்பற்றி பிள்ளை தவறாக நினைத்துக்கொள்ளக் காரணமாகிவிடும். இது பிள்ளைக்கு தீங்கை ஏற்படுத்துவதாக அமையும். உங்கள் பிள்ளை முன்கூட்டியே பிரிந்து வாழும் உங்களிடமே கருத்துமோதல்கள், குழப்பங்களினால் பாதிக்கப்பட்டிருக்கலாம் இவ்விதமான பிள்ளைகளுக்கு மேலும் குழப்பத்தை ஏற்படுத்துவதாக அமையும். எனவே வெவ்வேறு இடங்களில் வதியும் பெற்றோர் முரண்பாடுகளைப் பிள்ளைகளிடம் வளர்க்காது அவர்களுக்கு நன்மை பயக்கும் வழிகளைக் கையாளுதல் நன்மை தரும்.

## கட்டுப்பாட்டு எல்லையினை மதித்தல்

உங்கள் குடும்ப சூழ்நிலைமைகள் விசேடமாக உங்களுக்கு அறைகூவல் விடுவதாக அல்லது எதிர்ப்பானதாக இருக்கலாம். இந்தநிலையில் உங்கள் பிள்ளையின் ஆசிரியர் நல்லதொரு வளமாக உங்களுக்கு இதமானதாகவும், உதவியளிக்கக்கூடியதாகவும் இருக்கலாம் என எதிர்பார்க்கலாம். ஆசிரியர்கள் நோயைக் குணப்படுத்துபவர்களோ அன்றி நடுநிலை வகிப்பவர்களோ அல்ல என்பதனை நீங்கள் நன்கு உணர்ந்துகொள்ளவேண்டும். உங்களுடைய பார்வை உங்கள் பிள்ளை மீதானதாக மட்டுமே இருத்தல் வேண்டும். ஆனால் உங்கள் குழந்தை வகுப்பறையில் உள்ள பல குழந்தைகளில் ஒன்று என்பதனையும் நினைவிருத்திக்கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் பாடசாலை வகுப்பறையில் தொலைபேசியில் தொடர்புகொள்ள முடியாதவர்கள் என்பது பெரும்பாலும் உங்களுக்குத் தெரிந்திருக்கவேண்டிய ஒன்று. அந்த நேரத்தில் அவர்களுடன் தொடர்பு கொள்ள முயற்சிக்கக் கூடாது. அவர்களுக்கு ஏதாவது தெரிவிக்கவேண்டுமாயின் ஒரு குறிப்பை எழுதி அனுப்பிவிடலாம். வகுப்பு நேரத்தில் அவர்களுடன் தொடர்பு கொள்ள முயற்சிக்கக் கூடாது. பாடசாலை நேரம் தவிர்ந்த நேரங்களில் வீட்டிலிருந்து தொலைபேசியில் தொடர்புகொள்ள முயற்சிப்பது பொருத்தமானது அல்ல - இவை சில கட்டுப்பாடுகளை மீறும் செயல்கள் என்பதனை நினைவிருத்திக் கொள்ளுதல் வேண்டும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்னும் பழமொழியை நினைவிருத்தி அளவோடு பழக முயற்சித்தல் நலன் தரும்.





12

# மணமுறிவடைந்து பிரிந்து வாழும் பெற்றோரின், பிள்ளைகள் மீதான பாட்டன் பாட்டிக்கான (Grand Parents) உரிமை

பிள்ளைகள் மீதும் பிள்ளைகளின் பிள்ளைகளான பேரன், பேத்திகள் மீதும் என்றுமே பாசம் மேலானதாக எமது பண்பாட்டில் மட்டுமன்றி வேற்றின மக்கள் மத்தியிலும் உண்டு என்பது கண்கூடு. தாய், தந்தை இருவரும் வேலைக்குச் செல்லும் குடும்பங்களில் பிள்ளைகளை தமது பெற்றோரின் பொறுப்பில் அல்லது பாதுகாப்பில் விடுத்துச்செல்வது சாதாரணமானது. தாய் தந்தையர் இல்லாத விடத்து-அந்தப் பிள்ளைகளுக்கான உரிமை - பேரன் அல்லது பேத்தியிடம் இயல்பாகவே கிடைப்பது சமுதாய ஒழுங்காகப் பின்பற்றப்பட்டு வருவதற்கு நமது சமுதாயத்தின் பாரம்பரியம், பண்பாடு, கட்டுப்பாடு, குடும்பக் கட்டமைப்பு என்பன காரணிகள் ஆகின்றன. மணமுறிவு கண்ட பெற்றோர் இருவருமே பிள்ளைகளைக் கவனிக்காது விடுமிடத்து அந்தப்பிள்ளைகளுக்கான உரிமை யாரிடம் விடப்படலாம் என்பதற்கு-சட்டப்படியான கடப்பாட்டு உரிமை யாரிடம் போய்ச்சேருகின்றது என்பது ஒரு புறமும்- அதாவது முழுநேரமும் பிள்ளைகளைப் பராமரிப்பது

யார் என்பதைப் பொறுத்ததாக அது அமையவும் அதற்கு நீதிமன்றின் அனுசரணையும் தேவைப்பாடானது. உண்மையான பெற்றோர் விரும்பாதவிடத்து அந்தப் பிள்ளைகளுக்கான உரிமையை வழங்கும் பொறுப்பு நீதிமன்றத்தைச் சார்ந்ததாகும்.

1984ம்ஆண்டு பெற்றோரின் மணமுறிவு தொடர்பான மத்தியூ மற்றும் ஸ்பிரோ ஆய்வின்படி குடும்ப நெருக்கடியான காலங்களில் பேரர்களே ஒரு குடும்பத்தின் மிகமுக்கியமானவர்களாகக் காணப்படுகின்றனர் என்னும் முடிவுக்கு வந்துள்ளனர். 1984, 1981 இல் இடம்பெற்ற ஆய்வுகளின்படி அப்பப்பா அப்பம்மா அல்லது அம்மப்பா அல்லது அம்மம்மா போன்றோர் தமது பேரப்பிள்ளைகளின் விளையாட்டுத் தோழர்களாகவும், அவர்கள் பின்பற்றுகின்ற முன்மாதிரியானவராகவும், குடும்ப வரலாற்று ஆசான்களாகவும். பிணக்குகளைத் தீர்ப்பவர்களாகவும், பாதுகாப்பாளராகவும், தற்றுணிவு, தன்னம்பிக்கை என்பவற்றை வளர்ப்பவர்களாகவும் இருக்கின்றார்கள் எனக் குறிப்பிடுகின்றார்கள். (Blau, 1984; Kornhaber & Woodward, 1981). இவற்றோடு Crawford என்பவர் 1987ல் பேரப்பிள்ளைகள் தமது பேரரோடு மிக இறுக்கமாகப் பிணைக்கப்பட்டிருப்பின் பிள்ளைகள் தமது பின்னடிக் காலத்தில் உளவியல் தாக்கங்களுக்கு உள்ளாவது குறைவாகவே காணப்படுகின்றது என்பதனையும் உள்ளடக்குகின்றார். பேரப்பிள்ளைகளோடு மிக நெருக்கமாக வளரும் பிள்ளைகள் பின்னர் நல்ல குடிமக்களாகப் பண்பார்ந்தவர்களாக வளர்கிறார்கள் என்னும் முடிவுக்கு 1981ல் டவுண்ஸ் மற்றும் வெல்ஜ் என்போர் வந்துள்ளனர். **(Downs & Walz, 1981**). பேரப்பிள்ளைகளையும், பெற்றோரின் பெற்றோரையும் பொறுத்தவரை மதித்துக் கருத்திற்கொள்ளுகின்ற இரு அடிப்படை உரிமைகள் காணப்படுகின்றன. ஒன்று பேரப்பிள்ளைகளையும் அவர்களையும் கருத்திற்கொள்வது மற்றது பராமரிப்பும் பேரப்பிள்ளைகளைப் பார்வையிட வருதலுமாகும். சில பெற்றோர் தமக்குள்ள மனத்தாங்கல் காரணமாக தங்கள் பிள்ளைகளையும் தமது பெற்றோர் பார்வையிடாது தடுத்துவிடும்

சம்பவங்கள் பல இங்கு இடம்பெறுகின்றன. இதனால் அவர்களுக்குத் தமது பேரப்பிள்ளைகளைப் பார்ப்பதற்குக்கூட உரிமைகிடைக்காது போகின்ற நிலை ஏற்படுகின்றது. இதனால் அவர்கள் நீதிமன்றங்களை நாடித் தமது பேரப்பிள்ளைகளைப் பராமரிக்கும் அல்லது பார்வையிடும் உரிமையினைப் பெற்றுக்கொள்ள முனைகின்றார்கள்.

பேரப்பிள்ளைகளைப் பார்வையிடுவதற்கான நேரம் காலம் என்பனவற்றை நீதிமன்றம் தீர்மானித்து அட்டவணைப்படுத்தித் தருவதற்கேற்ப தமது பேரப்பிள்ளைகள் தம்மோடு அந்தநேரத்தைச் செலவிடமுடியும். இந்தச் சட்ட நடவடிக்கை ஐக்கிய அமெரிக்க நாட்டில் அரசுக்கு அரசு வேறுபட்டதாக அமைகின்றது. ஆனால் கனடாவைப் பொறுத்தவரை இத்தகைய வேறுபாடுகள் பிரதேச ரீதியாக இல்லை என்றே கூறலாம். பிரபல விளையாட்டு வீரர் ஜோன்சனின் மனைவி கொலைஉண்ட பின்னர் ஜோன்சனின் மீது கொலைக்குற்றம் சுமத்தப்பட்டது. பிள்ளைகள் தாயின் பெற்றோருடன் வாழ அனுமதிக்கப்பட்டனர். கொலைக்குற்றச்சாட்டில் நிரபராதியான பின்னரும் பிள்ளைகளின் உரிமை ஜோன்சனுக்குக் கிடைக்கவில்லை. அரசியல் சாசனத்தின்படி பிள்ளைகளின் சட்டப்படியான உரிமை உடையவர்கள் பெற்றோர்களாயினும் அது நீதிமன்றத்தினால் சந்தர்ப்பம் சூழ்நிலைக்கேற்ப மாறுபடுகின்ற நிலைமையும் உண்டு.

தாய், தந்தையர் இருவருமே நாட்டில் இல்லாத நிலை அல்லது பாரதூரமான குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டு சிறையில் இருக்கும் காலங்களில் பிள்ளைகளைப் பராமரிக்கும் உரிமை சாதாரணமாக பெற்றோரின் தாய், தந்தையரிடம் செல்கின்றது. இதில் தந்தை வழிப் பேரருக்கா அல்லது தாய்வழிப் பேரருக்கா உரிமை என்பதும் சிற்சில வேளைகளில் சர்ச்சைகளை ஏற்படுத்திவிடுகின்றன.

தாய் அல்லது தந்தை பிள்ளைகளைக் கவனிக்காது விடும் சந்தர்ப்பங்களில் அந்தப்பிள்ளைகளைப் பராமரிக்கும் உரிமை

பெற்றோரின் தாய்தந்தையருக்குக் கிட்டுகின்றது. எடுத்துக்காட்டாக பிள்ளைகள்மீது தமது கூடிய அக்கறையைக் காட்டத்தவறும் தாய் தந்தையரிடமிருந்து பிள்ளைகளைப் பெற்றுப் பராமரிக்கும் உரிமையினைச் சட்டப்படி பெறும் தகுதியும் உரித்தும் உடையவர்களாகப் பெற்றோரின் பெற்றோர் காணப்படுகின்றனர். பெற்றோர் பிள்ளைகளைத் தகுந்தமுறையில் கவனிக்காத சந்தர்ப்பங்கள் போன்றனவற்றை நம்பகமாக நீதிமன்றம் அறிந்துகொள்ளும் போது பிள்ளைகளின் பராமரிப்பு உரிமையைப் பெற்றோரின் பெற்றோர் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை அளிக்கின்றது. இதற்கான ஆதாரங்கள் சந்தேகத்திற்கிடமில்லாது நம்பகமானதாக நீதிமன்றத்தில் அத்தாட்சிப்படுத்தப் படும்போது இவ்வுரிமையினைப் பேரப்பிள்ளைகள் மீது அவர்கள் கொள்ள உரித்துடையவர்கள் ஆகின்றார்கள். அதற்கான ஒப்படைக்கப்படும் ஆதாரங்கள், ஆவணங்களின் சாட்சியங்களின்படியே நீதிமன்றம் தனது படிமுறைகளை மேற்கொள்ளும்.

பேரப்பிள்ளைகளைப் பார்ப்பதற்கான அனுமதியினை நீதிமன்றத்தில் பெற்றுக்கொள்வது சர்வ சாதாரணமாகக் கிடைக்கும் தன்மையன்று. பேரப்பிள்ளைகளுக்கு அவர்களைப் பார்ப்பதற்கு பெற்றோர் இங்கு இல்லா சந்தர்ப்பங்கள் அல்லது பிள்ளைகளின் தந்தை அல்லது தாய் இறந்திருந்தால் இந்த உரிமையினைப் பெற்றுக்கொள்ளலாம். சில பெற்றோர்கள் அடிக்கடி வரமுடியாத நிலையில் அல்லது வெகு தூரத்தில் இருப்பின் அவர்கள் இந்த உரிமையினை உபயோகிப்பது கடினமாக இருக்கும். எது எவ்விதமாயினும் பிள்ளைகளைப் பராமரிக்கக்கூடியவர்களும் வேண்டியவர்களும் பெற்றோர்களே என்பதற்கு முன்னுரிமை கொடுககப்படுகின்றது. சில பேரர்களினால் பேரப்பிள்ளைகளோடு கூடிய நேரத்தைச் செலவிட முடியாதுள்ளது என்பதனால் அவர்கள் இந்த உரிமையை உபயோகப்படுத்துவது மிக அரிதே.

பேரப்பிள்ளைகளின் தாய் அல்லது தந்தை இறந்திருந்து இரண்டாந்தாரமான சிற்றன்னையோ அல்லது சிறிய தந்தையோ பேரர்களின் வருகையை விரும்பாது விடுத்தால் அல்லது மறுத்தால் அவர்கள் நீதிமன்றத்தில் பேரப்பிள்ளைகளிடம் வருகைதருவதற்கான உரிமையை விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். அதற்கு அவர்கள் தங்கள் பேரப்பிள்ளைகளின் தொடர்புகள் அவர்களுக்குத் தங்கள் தொடர்பால் எற்படும் நன்மைகள் என்பன உறுதிப்படுத்தப்பட்டு நீதிமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். பேரப்பிள்ளைகளிடம் சென்றுவருவதற்கான உரிமையினைப் பெற்றுக்கொள்வதற்கு நீதிமன்றம் அவர்கள் சித்தசுகவீனம் அற்றவர்கள் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளும். அவ்விதம் அவர்கள் உறுதிப்படுத்திக்கொள்வதோடு பிள்ளைக்கு பேரரின் வருகை எந்தவித தீங்கினையும் எற்படுத்தாது என்பதினை உறுதிப்படுத்திக்கொள்ளவும் வேண்டும்.

சில பிள்ளைகள் திருமணமாகாத பெற்றோருக்குப் பிறந்திருந்தால் இந்த நிலைமைகளில் அவர்கள் சந்தேகத்திற்கப்பால் தங்கள் உறவுமுறைகளை நிரூபிக்கவேண்டியவர்களாக பெற்றோரின் பெற்றோர் ஆக்கப்படுகின்றார்கள். தத்தெடுத்த பிள்ளைகளின் விடயத்திலும் இந்த நிலைமைகளே பின்பற்றப்படவேண்டியுள்ளது.

பெற்றோரின் பெற்றோர்களுக்கும் பேரப்பிள்ளைகளுக்குமான தொடர்பு மிக நெருக்கமானது. அவர்களின் தொடர்பு - அவர்கள் நாளாந்தம் பிள்ளைகளைப் பராமரிப்பவர்களாகவும், அல்லது வார இறுதியில் பராமரிப்பவர்களாகவும் காணப்படுகின்றார்கள். அவர்களுக்கு தமது பேரப்பிள்ளைகளிடம் வருகைதருவதற்கான உரிமை தடைசெய்யப்படும் வரை அல்லது மறுக்கப்படும்வரை அவர்களது உறவு மிக நெருக்கமானதாகவே காணப்படுகின்றது. சில பிள்ளைகளின் பராமரிப்பாளர்கள் உண்மையிலேயே அவர்களின் பேரர்களே. அவர்கள் பேரப்பிள்ளைகளைகளைப் பார்க்கும் சிரமங்கள் அல்லது வருகைதருவதில் கஷ்டங்கள் ஏற்படும்வரை இவை தொடர்கின்றன.

சிற்சில வீடுகளில் பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் பெற்றோர்களுடன் வீட்டின் கீழ்மாடியிலேயே வசிக்கின்றார்கள், அல்லது வளர்கின்றார்கள். எடுத்துக்காட்டாக ஒரு குழந்தை மாதத்தில் இரண்டு வாரங்கள் தனது அம்மம்மாவோடு இருந்து வந்துள்ளது. அவ்விதமே இன்னொரு குழந்தை தனது அப்பம்மாவோடு பல மாதங்களுக்குத் தொடர்ந்து வாழ்ந்து வந்துள்ளது. இன்னும் இருபிள்ளைகள் தாயின் முகத்தைத் தெரியாமலே தனது தந்தையுடனும் அவரின் பெற்றோருடனும் வளர்ந்து வருகின்றார்கள். தாயோ பிள்ளைகளை விடுத்து உல்லாசமாக சுற்றித்திரிகின்றார் அதுவும் வேறு ஆடவர் ஒருவருடன். இதனால் தொடர்புகள் பெற்றோரின் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே காணப்படுகின்றது. இந்த நிலையிலே அவர்களின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டால் அல்லது மறுக்கப்பட்டால் என்ன செய்யலாம் என்பது பற்றி ஆய்வதாகவே இக்கட்டுரை இடம்பெறுகின்றது. கனடா போன்று மேலை நாடுகளில் காணப்படும் உரிமைகள் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளைவிட வேறுபாடுடையது என்பது- சட்டப்படியான சில கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளமை கருத்திற் கொள்ளப்படத்தக்கது. பேரப்பிள்ளைகளைப் பொறுத்தவரை எமது நாடுகளில் தாய்வழிக்கே முன்னுரிமை கொடுக்கப்படுவதற்கு அங்கு காணப்படும் சீதனமுறையும் ஒரு காரணமாக ஆகிவிடுகின்றது. பிள்ளைகளை வளர்க்கும் உரிமை தாயிடம் ஒப்படைக்கப்படுவதன்று. அந்தக்காரணமும் முக்கியமாகக் கொளளப்படுகின்றது. பெற்றோரால் வழங்கப்படும் சீதனத்தில் மிகமுக்கியமாக வீடு காணப்படுகின்றது. இந்த அழியாத சொத்தின் உடைமை தாய்வழியைச் சார்ந்தது என்பது யாவரும் அறிந்ததே.

பெற்றோருக்கும் அவர்களது பெற்றோருக்கும் இடையே மனக்கசப்பு அல்லது வெறுப்பு, பகை என்பன நிலவுமானால் பேரப்பிள்ளைகளைப் பார்ப்பதற்குத் தடை அல்லது இடைஞ்சல் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. இதனால் தமது பேரப்பிள்ளைகளைப் பார்க்கமுடியாத ஏக்கம் பெற்றோரின் பெற்றோருக்கு ஏற்பட வாய்ப்பு

உண்டு. இதனால் சிலவேளைகளில் அவர்கள் சட்டத்தின் துணையை நாடவேண்டியவர்களாக ஆக்கப்படுகின்றார்கள். பெரும்பாலும் பிள்ளைகள் அடைத்து வைக்கப்படுகின்றார்கள் அல்லது வெளியே செல்லவிடுவதில்லை, சரிவரக் கவனிக்கப்படுவதில்லை, பராமரிப்பு ஒழுங்கற்றதாக உள்ளமை, பிள்ளைகளுக்கு மனவழுத்தத்தைக் கொடுக்கும் இடம் போன்ற குறைகளை நீதிமன்றம் செவிமடுக்கும் பட்சத்தில் பிள்ளைகளின் மிக முக்கியமான விருப்பு கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். இந்தச் சந்தர்ப்பங்களில் பெற்றோரின் விருப்புக்குமாறாக பேரப்பிள்ளைகளைக் கவனிக்க அல்லது அவர்களிடம் வருகைதர நீதிமன்றம் அனுமதி வழங்கும் சாத்தியங்கள் உண்டு. ஆனால் பெற்றோரும் பெற்றோரின் பெற்றோரும் பிள்ளைகளுக்கு முன்னால் முரண்படுவதினையோ அன்றி ஒருவர் இன்னொருவரைப்பற்றிக் குறைகூறுவதையோ நீதி மன்றம் ஏற்றுக்கொள்ளாது என்பதனையும் கருத்திற்கொள்ளவேண்டும். பிள்ளைகளை தங்கள் வசம் ஈர்த்துக்கொள்ள அவர்களுக்கு வெகுமதிகள், நன்கொடைகளை கொடுப்பதனால் பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பாதிக்கும் என்பதனையும் இந்த விடயத்தில் நீதி மன்றம் கருத்திற் கொள்ளும் என்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

பெற்றோருக்கும் பெற்றோரின் பெற்றோருக்குமிடையே முரண்பாடுகள், பகைமை உணர்வுகள் தோன்றும்போது இவ்வித பிணக்குகளை நீதி மன்றத்திற்குப் போகாமலே தீர்த்துவைக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதும் உண்டு. இரு குடும்பத்தினாலும் நன்கு மதிக்கப்படுகின்ற ஒருவர் இடையே நடுநிலையாளராகச் செயற்படுவதும் அதனால் இப்பிணக்குகள் தீர்த்துக்கொள்ளப்படுவதும் உண்டு. இவ்வித நடுநிலையாளரினால் தீர்த்து வைக்கப்படாத நிலைமைகளில் அவர்கள் சட்டவல்லுனர்களிடம் ஆலொசனை பெறுவதற்கு ஊக்குவிக்கப்படலாம் அல்லது வழிகாட்டப் படலாம். இவ்வித சட்டம் பலவித சிக்கல்களைக் கொண்டுள்ளதோடு அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் மாநிலத்திற்கு மாநிலம்

அல்லது அரசுக்கு அரசு வித்தியாசமானதாக காணப்படுகின்றது. பல பிள்ளைகள் பெற்றோரைவிட தமது பெற்றோரின் பெற்றோருடனேயே இருப்பதற்கு விரும்பும் நிலைமைகளும் உண்டு. குறிப்பாக பெற்றோரில் ஒருவரை இழந்த அல்லது பெற்றோரில் ஒருவர் மணமுறிவுகாரணமாக வேறுமணம் புரிந்து வாழும் சந்தர்ப்பங்களில் இத்தகைய நிலைகள் ஏற்படுகின்றன. பல பிள்ளைகள் தமது பெற்றோருடைய பெற்றோரின் அரவணைப்பினை நாடிச்செல்லுகின்ற நிலைமைகள் காணப்படுகின்றன. தூர இடங்களில் உள்ள பெற்றோரின் பெற்றோருடன் சென்று அவர்களின் அணைப்பில் வளருகின்ற பிள்ளைகளையும் நாம் நமது சமூகத்தில் மட்டுமன்றி பல்வேறு சமூகத்திலும் காணக்கூடியதாக உள்ளது. பெற்றாரில் ஒருவர் இறந்துவிட்டால் பிள்ளை மற்றப் பெற்றாருடன் இருக்கும் காலத்தில் இறந்த பெற்றாரின் பெற்றோரைப் பிள்ளைகளிடம் வருகைதருவதனைத் தடுப்பது பெரும் குறையான ஒரு செயலாகக் காணப்படுகின்றது. இந்தச் சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தின் உதவியினைச் சில பெற்றோரின் பெற்றோர் நாடுகின்ற சந்தர்ப்பங்களும் உண்டு. இந்த இடத்தில் பிள்ளைகளின் விருப்புக்கு முன்னுரிமை கொடுக்கப்படலாம். அதுவும் நீதிமன்றத்தின் முடிவாகவே அமையும்.

ஒரு பெற்றார் இறந்துபோக மற்றப் பெற்றோருடன் பிள்ளைகள் வளரும் சந்தர்ப்பத்தில் இறந்துபோன கணவனின் அல்லது மனைவியின் தாய் தந்தையரை அவர்கள் தங்கள் பேரப்பிள்ளைகளோடு உறவினைத் தொடர்ந்து பேணவிடாது தடுக்கும் சந்தர்பங்களில் நீதிமன்றம் தலையிட்டு அவர்களுக்கு தமது பேரப்பிள்ளைகளோடு உறவினைத் தொடர்ந்து பேணிக்கொள்ளச் சந்தர்ப்பம் அளிக்கும். கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் பெற்றோரின் பெற்றோராலோ அன்றி ஒன்றுவிட்ட பெற்றோரின் பெற்றோராலேயே வளர்க்கப்படும் பேரப்பிள்ளைகள் தொடர்பாக வெளியிலிருந்து ஆலொசனைகள், உதவிகளை நல்குவதற்கு பல தொண்டர் நிறுவன - சேவை நிலையங்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக பேரரின் சங்கம், ஓய்வுபெற்ற முதியோர் சங்கம்

போன்ற அமைப்புக்கள் இவ்வித சந்தர்ப்பங்களில் பெற்றோரின் பெற்றோருக்கு உதவிகள் நல்கிவருகின்றன. இவ்வித உதவி நல்கும் சமூக அமைப்புக்கள் ஏன் என்ற கேள்வியும் அவற்றால் என்ன பயன் என்ற கேள்வியும் எம்முன்னே எழுகின்றன.

இவ்வித உதவி நல்கும் குழுக்களின் பணிகள், தேவைகள் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் ஆரம்ப பராமரிப்பாளர்களின் பங்களிப்பு அல்லது செயற்பாடுகள் மனவழுத்த நிலைகளை உள்ளடக்கி இருப்பதற்கான சான்றுகளை எடுத்துக்காட்டுகின்றன. இவற்றுள் நிதி, உடல்நல சம்பந்தமான மனவழுத்தம் அல்லது உள நெருக்கடித் தன்மையினைக் கொண்டுவருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. அத்தோடு ஒத்த வயதினரிடையே இருந்து ஒதுக்கப்படுவதான மன உளைச்சல், வாழ்க்கை முறையில் மாற்றமேற்படும் நிலை, தங்களின் பொழுதுபோக்கு நேரத்தினை அல்லது வேலையை இதற்காக விட்டுக்கொடுக்கவேண்டிய தன்மை அல்லது இவ்வித செயற்பாடுகளில் தொடர்ந்தும் பங்குபற்றமுடியாத நிலைமைகள் போன்றவற்றிற்கு சிற்சில வேளைகளில் அவர்களுக்கு ஆலோசனைகள் உதவிகள் தேவைப்படுகின்றன. அந்த நிலைமையினை இவ்வித புற துணை உதவிகள் வழங்குகின்றன. தமது பிள்ளைகள் வேலைக்குச் செல்லும் நிலையில் தங்களின் பேரப்பிள்ளைகளைப் பராமரிக்கும் பணி தங்களிடம் விடப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு எவ்வித பரிகாரங்களைத்தேடலாம் என்பனவற்றிற்கான உதவிகள், தகுந்த ஆலோசனைகளை வழங்கும் நிறுவனங்களின் பணி மிகமுக்கியமாகக் காணப்படுகின்றது.

## மணமுறிவுற்ற பெற்றோரின் பிள்ளைகளுக்கும் பேரர்மாருக்குமான தொடர்புகள்

மணமுறிவுற்ற பெற்றோரின் பிள்ளைகளின் வளர்வில் மட்டுமன்றி பெற்றோருடன் இருக்கும் பிள்ளைகளின் வளர்ச்சியிலும்

அப்பெற்றோருடைய பெற்றோரின் பங்களிப்பு மிகமுக்கியமானது. அவர்கள் குழந்தைப் பராமரிப்பாளர்களாகவும் பிள்ளைகளின் நலனில் அக்கறை உள்ளவர்களாகவும் வளர்த்து வருகின்றார்கள். இதனால் பிள்ளைகளின் மிக நெருக்கமான அன்புக்கும், பாதுகாப்பிற்கும் பாத்திரமானவர்களாக அவர்கள் அமைகின்றார்கள். நமது சமூகத்தில் இத்தககைய பண்பு அதிகமாகக் காணப்படுகின்றது. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் பெற்றோரின் பெற்றோர் பேரப்பிள்ளைகளின் நலனில் மிக அக்கறை கொண்டவர்களாக அவர்களைக் கவனித்து வருவதினைக் காணலாம். அன்பாக அரவணைத்து பேரப்பிள்ளைகளின் தேவைகள் அறிந்து அவர்களைப் பேணி வருகின்ற பண்பு நமது சமூகத்தில் மட்டுமன்றி ஏனைய சமூகத்தவரிடையேயும் உண்டு.

பெற்றோருக்கும் பெற்றோரின் பெற்றோருக்குமிடையே எழுகின்ற பிரச்சினைகள், மனக்கசப்புக்கள் போன்றவற்றினால் பேரப்பிள்ளை களைப் பார்க்கும் அல்லது அவர்களோடு பழகும் வாய்ப்பினைப் பல பேரர்மார் இழந்துவிடுகின்றார்கள். இவைதவிர பிள்ளையைத் தத்தெடுத்த பெற்றோர் உறவினர்கள் அல்லாதவர்களாக இருக்குமிடத்திலும் இவ்விதமான தன்மைகள் அதாவது தமது பேரப்பிள்ளைகள் உரித்துடையவர்களாயிருந்தாலும் சட்டப்படி அவர்கள் உரித்தை இழந்தவர்களாகின்றார்கள். இந்த நிலையில் அவர்கள் நீதிமன்றங்களை அணுகினாலும் அவர்களுக்கு அந்த உரிமை மறுக்கப்படுவதற்கான சந்தர்ப்பம் உண்டு. தத்தெடுக்கப்படும்போது இருபெற்றோர்களாலும் பிள்ளைகள் மீதான உரிமை சட்டப்படி தத்தெடுப்பவர்களுக்குக் கையளிக்கப்படுகின்றமையால் அந்த உரிமை பேரருக்கு இல்லாது போகின்றது. இந்த நிலைமைகள் ஒரு பெற்றார் இறந்தபின்னர் தாயோ அன்றி தந்தையோ வேறு திருமணம் செய்து கொள்ளும் பட்சத்தில் இறந்தவரின் பெற்றோர் தமது பேரப்பிள்ளைகளைப் பார்ப்பதை அல்லது அவர்களிடம் வருகைதருவதை மற்ற பெற்றோர் விரும்பாதவிடத்து இவ்வித பிரச்சினைகள் தோன்றுகின்றன. ஆனால் பேரப்பிள்ளைகளிடம் செல்வது என்பது ஒரு சமகால வாதமாக உள்ளது.

எமது நாட்டில் மணமுறிவு ஏற்படுவது மிக மிகக் குறைவே. மணமுறிவு ஏற்படாத பட்சத்தில் பேரருக்குப் பேரப்பிள்ளைகளைப் பார்ப்பது அல்லது அவர்களோடு பழகுவது பெரும் தடையாக இருப்பதில்லை. பெண்வீட்டிலோ அல்லது மாப்பிள்ளை வீட்டிலோ யாராவது ஒரு பகுதியினருக்குப் பிடிக்காவிட்டால் அவர்களில் ஒருசாரார் அங்கு போவதனைத் தவிர்த்துக்கொள்ளும் பட்சத்தில் அது பேரப்பிள்ளைகளோடு பழகுவதனையும் தடைசெய்வதாக அமையும். எடுத்துக்காட்டாக எனது நண்பர் ஒருவர் தனது மாமன் மாமியாரோடு மனத்தாங்கல் கொண்டு தனது தாய்தந்தையருடன் 12 ஆண்டுகள் மனைவியையும் மகனையும் பிரிந்திருந்தார். பின்னர் ஊரவர்கள் அவர்களைச் சேர்த்துவைத்தார். யார்வீட்டில் இருப்பது என்பதே பிரச்சினைக்குக் காரணமாக அமைந்திருந்தது. பெண்வீட்டில் இருக்கவேண்டும் என்று பெண்வீட்டாரும் இல்லை ஆண்வீட்டில்தான் இருக்கவேண்டும் என ஆண்வீட்டாரும் விரும்பியதன் விளைவே பிரிவுக்குக் காரணமாகியது. கனடாவில் என்றால் இந்தப் பிரிவு நிரந்தரமானதாக மாறிவிடுவதற்கான பல சந்தர்ப்பங்கள் உள்ளன. ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரை அந்த நிலை மிகக் குறைவே. ஆண்களையே நம்பி வாழவேண்டிய பெண்களின் நிலை இன்றும் அவர்களைத் தன்னிச்சையாக நடக்கமுடியாதவர்களாக அடக்கிவைத்திருக்கின்றது. இந்த நிலையோடு சமூகக் கட்டுப்பாடுகள், மரபுகள் என்பனவும் பிரிந்து வாழ்வதனை அங்கீகரிக்காத நிலை காரணமாக அவர்களை மீண்டும் இணைய வைக்கின்றது. குறிப்பாக உறவுகளுக்குள்ளே இடம்பெறும் திருமணங்களில் மணமுறிவு ஏற்படாதவாறு அவர்களைச் சுற்றியுள்ள உறவினர்களே பார்த்துக்கொள்கின்றார்கள். பிரச்சினைகள் தோன்றும்போது ஊரில் உள்ள பெரியவர்கள் சமாதானம் பண்ணி வைக்கின்ற போக்கு இங்கு ஆலொசகர்களால் செய்யப்படும்போது அவை பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைவதில்லை. மணமுறிவு கோருவதற்கு முன்னர் மணமுறிவு ஆலோசகரிடம் ஆலொசனை பெற்றிருக்கவேண்டும் என்னும்

நியதி இங்கு உண்டு எனினும் அவற்றை ஏதோ கடமைக்காக கேட்கிறார்களே ஒழிய தாம் கொண்ட முடிவை மாற்றும் நிலையினைச் சிந்தித்துக்கூடப் பார்க்காதவர்களாக அவர்கள் காணப்படுகின்றார்கள். அவசர முடிவுகளே பெரும்பாலான திருமண முறிவுகளுக்குக் காரணிகளாகின்றன. இதனால் பலகுடும்பங்கள் சீரழிந்து போவதனைக் காணலாம். இந்த நிலைமைகளில் பிள்ளைகளின் பராமரிப்புப்பொறுப்பு தாயிடம் கையளிக்கப்படும் நிலை இருந்தபோதிலும் கனடா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் தந்தைக்கும் அவர்களைப் பார்வையிட அல்லது அவர்களிடம் வருகைதர சட்டப்படி அனுமதி வழங்கப்படுகின்றது. ஆனால் எமது நாட்டில் பராமரிக்கும் பொறுப்பில் உள்ள பெற்றாரைவிட மற்ற பெற்றார் பிள்ளைகளை வந்து பார்வையிடும் நிலை தாயின் மனநிலையைச் சார்ந்ததாகவே காணப்படுகின்றது. அரசாங்கத்தில் உயர்பதவி வகிக்கும் ஒரு நண்பர் திருமணமாகி இரண்டுபிள்ளைகளின் தந்தையாகிய பின்னர் பிரிந்து வாழ்க்கையை நடத்தி வருகின்றார் எனினும் மறுமணம் செய்யவோ அன்றி பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்ளாமல் விடவோ இல்லை. மனைவியின் வீட்டிற்கு அண்மையிலேயே இருந்துகொண்டு பிள்ளைகளை நன்கு கவனித்து அவர்களை பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் வரையும் அவர்களுக்கான செலவினங்களைக் கவனித்து வருகின்றார். இந்த பிரிந்து வாழும் நிலைமைக்கு அவர் ஒருபோதும் தனது மனைவியைக் குறைகூறியது கிடையாது. ஆனால் தனது மாமியார்தான் அதற்குக்காரணம் என்று அவர்மீது குறைகூறிவருகின்றார். இவ்வித தன்மைகள் பெற்றாரோடு ஒன்றாக வாழ்வதன் காரணமாக இடம்பெறுவதினைக் காணமுடிகின்றது. யாருடைய தலையீடும் இல்லாத தனிக்குடித்தனம் இவ்வித நிலைமைகளை தவிர்க்கும் என்பது கண்டறியப்பட்ட உண்மையாகும்.

பிரிந்துவாழும் பெற்றோருக்கு அல்லது மணமுறிவுற்ற பெற்றோருக்கிடையே உள்ள பிள்ளைகளைப் பார்ப்பது அல்லது வருகை தருவது என்பது சற்று சிக்கல் நிறைந்த ஒன்றாகும்.

மணமுறிவுக்கு வன்முறைகள் காரணமாக அமைந்தால் கனடா போன்ற நாடுகளில் தந்தை குறிப்பிட்ட பிரதேசத்தில் நடமாடக்கூடாது என நீதி மன்றத்தின் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டால் அங்கு அவரின் பெற்றோருக்கும் உரிமை தாய்வழியால் மறுக்கப்படலாம். இவ்வித நிலையில் அவர்கள் சட்ட உதவியை நாடியும் பயன் கிடைப்பது அரிதே. இது தொடர்பாக பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இடைத்தர வயதினரிடையே ஏற்படும் மணமுறிவின் விளைவாக பேரப்பிள்ளைகளின் விடயத்தில் பேரரின் பங்களிப்பு என்ன என்பது பற்றி பல ஆய்வுகள் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. மத்தியு மற்றும் ஸ்பிறே (Matthews & Sprey, 1984) ஆகியோர் 1984இல் மேற்கொண்ட ஆய்வின்படி விரிவுபட்ட குடும்பங்களிடையே பேரரின் பங்களிப்பானது பல்வேறுபட்டதாக அமைந்துள்ளது என்பதனை எடுத்துக்காட்டுவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

லேஃகி ஜோன்சன் மற்றும் பாரர் (Leahy-Johnson and Barer) என்போர் 1987ல் மேற்கொண்ட ஆய்வின்படி சமகால சமூகம் பாரிய விரிவான குடும்ப அமைப்பிலிருந்து அணுக்குடும்ப அலகிற்கு அல்லது நவீனகுடும்ப படிமுறைக்கு வளர்வுபெற்று வந்துள்ளது. இந்த அணுக்குடும்ப அமைப்பு பேரர் போன்ற இரத்தமுறை உறவுகளின் தொடர்புகளைத் தனிமைப்படுத்தி தங்களின் இரத்தத் தொடர்புடையவர்களுடனான தொடர்புகளை தேவைக்கேற்ப - தனிப்பட்ட விருப்பு மற்றும் ஒன்றுக்கொன்றான விருப்புக்களின் அடிப்படையிலேயே மேற்கொள்ளுகின்றார்கள் எனக்குறிப்பிடுகின்றனர். எனவே பேரரோடு உள்ள தொடர்புகள் பிள்ளைகள் விடயத்தில் - இருவரும் வேலைக்குப் போகும் பட்சத்தில் அங்கு பிள்ளைகளின் பராமரிப்பின் பொருட்டு பெற்றோரை நாடும் தன்மை காணப்படுகின்றது. இவர்களின் ஆய்வின்படி மணமுறிவடைந்த பெற்றோரால் பேரப்பிள்ளைகள் - பேரரின் தொடர்புகள் தடுக்கப்பட்டதாலோ அல்லது துண்டிக்கப்பட்டதாலோ நிகழ்வதாக மையேர்ஸ் (Myers &Perrin 1993) மற்றும் பெர்ரின் குறிப்பிடுகின்றனர். மணமுறிவடைந்த பெற்றோரால் 60 விழுக்காட்டினருக்கு மேலானோருக்கு

பிராயமடையாத ஒரு குழந்தையாவது உண்டு என்பது அவர்களின் ஆய்வில் கண்டறியப்பட்ட உண்மை. அல்பேர்டா மாநிலத்தில் மட்டும் 54.2 விழுக்காடான விரிவான குடும்ப அங்கத்தவர்கள் தமது பேரப்பிள்ளைகளையோ மருமக்கள், பெறாமக்களையோ பார்வையிடுவதில் சிக்கல்கள், கடினம் இருப்பதாக முறையிட்டுள்ளனர் என அறியக் கிடக்கின்றது.

எமது குடும்ப அமைப்பிலும் இவ்வித சிக்கல்கள் காணப்படுவதனை அவதானிக்கமுடிகின்றது. சில பெற்றோர் தமது பேரப்பிள்ளைகளை பாடசாலைக்குச் சென்று தமது மருமக்களுக்குத் தெரியாதவாறு பார்வையிட்டு அளவளாவி வருவதனைக் காணமுடிகின்றது. அவ்விதமே தனது சகோதரியின் பிள்ளைகளைப் பார்ப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்ட சிற்றன்னை தனது பெறாமக்களை அவர்களின் தந்தைக்குத் தெரியாது சென்று பார்வையிட்டு வருகின்ற நிலைமையைக் கனடிய மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கும் நமதினத்தினரிடையே காணமுடிகின்றது. இரத்த உரித்துடையவர்கள் கூடத் தமது உறவினர்களோடு பழகும் தன்மை இங்கு குறைவடைந்து வருவதற்குப் பல்வேறு காரணிகளை முன்வைக்கலாம். அவசரமான உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருப்பதும் - திருமணம், பூப்புனித நீராட்டு, புத்தாண்டு, பொங்கல், தீபாவளி போன்ற காலங்களில் வாரக்கணக்கில் உறவினர்கள் ஒன்றுசேர்ந்து கூட்டுக்குடும்ப வாழ்க்கையினை அனுபவிக்கும் தன்மை கனடாபோன்ற அவசர உலகில் இடம்பெற முடியாததால் இங்குவாழும் இரத்த உறவினர்களிடையே தொடர்புகள் குறைவடைந்து போவதனைக் காணமுடிகின்றது. இவையும் உறவினர்களைப் பார்க்காது தவிர்த்து வாழ்வதற்குக் காரணிகள் ஆகின்றன.

## மாமியார் மருமகள் சண்டையும் பேரப்பிள்ளைகளும்

மாமியார் மருமகள் சண்டை எல்லா இடங்களிலும் இடம்பெறுவது கண்கூடு. தமிழர்களிடையே மட்டுமன்றி ஆசிய இனத்தவர்களிடையே

மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் இந்தச் சண்டைகள் பொதுவானவையாக உள்ளன. பேரப்பிள்ளைகளை நாம் பார்ப்போம் என்று கூறும் பல மாமிமார், அதனை மருமகளைக் கட்டுப்படுத்தும் ஒரு வழியாகக் கைக்கொள்ளுகின்றமையை முக்கியமானதாகக் காணலாம்.

1970-களில் நான் கொழும்பில் இருந்தவேளை அங்கு தங்கியிருந்த ஒரு மாமியார் தனது மகனின் பிள்ளைகளைப் பார்ப்பதற்கு நான் என்ன வேலைக்காரியா என்று ஆணவத்தோடு, பேரப்பிள்ளைகளைப் பார்ப்பது இழிவான செயல் என்ற நோக்கத்தோடு அதற்கு வேலைக்காரரை அல்லது வேறுயாரையும்தான் அனுப்பிப் பார்க்கவேண்டும் எனக் கூறிய வார்த்தை இன்றும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. இப்படியும் ஒரு தாயா என்னும் கேள்வி எழத்தான் செய்கின்றது. தான் பெற்ற மகனின் பிள்ளையைப் பார்த்தல் என்பதனைவிட தனது மருமகளின் பிள்ளைகளைப் பார்ப்பது என்னும் எண்ணம் அங்கு முன்னணி வகுத்து நின்றதனைக் காணமுடிந்தது. இதே காலப்பகுதியில் இவ்விதமான நிலைப்பாடு பெரியபிரித்தானியா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளிலும் காணப்பட்டதனைக் குறிப்பிடலாம்.

மருமகள் வேலைக்குப் போவதானால் வேலைக்காரப் பிள்ளையை அல்லது ஆயாவை ஏற்பாடு செய்யவேண்டும் என்ற நோக்கமும், அவர்கள் தங்களின் தொட்டாட்டு வேலைகளையும் செய்யவேண்டும் என்பதும் குறிக்கோளாகவும், அடிப்படை எண்ணமாகவும் காணப்பட்டது. தங்கள் பேரப்பிள்ளைகளிடம் அன்பு செலுத்தும் மனப்பான்மையைவிட மருமக்களிடம் ஆதிக்கம் செலுத்தும் திமிரான, அல்லது கீழ்த்தரமான போக்கு மாமிமாரிடம் காணப்படுவதனை இன்றும் அறியலாம். எமது நாடுகளில் வேலை செய்யும் பெண்ணாக இருந்தாலும் சீதனம் வாங்கும் முறைமையும், பெண்கள் தங்களுக்கு அடிமை என்ற எண்ணமும் ஆண்களைவிட மாமியார்மாரிடம் காணப்படுவதினை இன்றும் பார்க்கமுடிகின்றது. சீதனமுறை முடிவுக்குக்

கொண்டுவரப்பட்டுள்ளது என்று எவ்வளவுதான் சொன்னாலும் இன்றும் அதன் முழுவடிவத்தினையும் அழித்துவிட முடியவில்லை. மாறாக ஆண்களுக்கான பற்றாக்குறை ஈழத்தில் குறிப்பாக தமிழர்களிடையே கூடியளவு காணப்படுவதும் இதற்கொரு காரணமாக உள்ளது. வேலை பார்க்கும் பெண்கள் தங்களின் வேலைகளிலும் பார்க்க உயர்ந்த வேலைகளில் பணிபுரிவோரை மணமுடிப்பதையே வழக்காகக் கொண்டிருந்தகாலம் மாறி இப்பொழுது வேலையில்லையென்றாலும் பரவாயில்லை என்ற நிலையில் திருமணம் செய்யவேண்டியவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

குடும்ப ஆய்வாளர்களும், ஆலோசகர்களுமான பெஸ்ரி பிளக்லர் மற்றும் பெவலி மில்ஸ் ஆகியோரிடம் - தாம் தமது கணவரின் சகோதரர்களை ஒரு குடும்பத்தவர் என்ற வகையிலே மாதத்திற்கு இரண்டு மூன்று தடவைகள் பார்க்கின்றோம். அவர்கள் தனது மூன்றுவயதுப் பெண்குழந்தையை கிழமைக்கு ஒருதடவை வைத்துப் பராமரிக்கின்றார்கள். ஆனால் தனது மாமியார் தன்னிடம் தனது பிள்ளையைப் பார்ப்பதற்கு விடும்படி அழைப்பு விடுக்கின்றார். நாங்கள் அவரிடம் விடாலமா என்ற கேள்வியினை எழுப்பி ஆலோசனை கேட்டிருந்தனர். அதற்கு அவர்கள் -

சொந்தக்காரரிடம் நேரத்தைப் பகிர்ந்து கொள்ளுவது என்பது சாதாரண ஒரு விடயம் அல்ல என்றும் எல்லோருக்கும் போதியளவு நேரம் அந்தந்த நாட்களில் கிடைப்பதில்லை என்பதால் எது உங்கள் (தாய், தந்தை, பிள்ளைகள் மட்டும்) குடும்பத்திற்குப் பொருத்தமானதோ அதனைத் தீர்மானித்துச் செய்வதுதான் சரியானது என்றும் ஆனால் மாமியாரின் கோரிக்கையையும் தீர்மானத்தையும் அவர் தானாக பிள்ளையைப் பார்க்கவிரும்புவதனைப் புறக்கணிக்கவேண்டாம் எனவும் குறிப்பிட்டுள்ளதோடு பெரிய குடும்பத்தில் திருமணம் செய்த இதேபோன்ற மனநோக்குடையவர்களின் வரம்புகளுக்குட்பட்ட தன்மைகளையுடையோரின் ஆலோசனையைக் கேட்கும்வண்ணம் எடுத்துரைத்துள்ளனர்.

பெரும்பாலான மாமிமார் தங்களிடம் பேரப்பிள்ளைகளை வார இறுதி நாட்களில் கொண்டுவந்து விடும் வண்ணம் கேட்கின்றனர். சாதாரணமாக கணவன் மனைவி ஒற்றுமையாக இருக்கும் குடும்பங்களில் இத்தகைய செயற்பாடு - அவர்களிடம் பிள்ளைகளை ஒப்படைப்பதில் தவறில்லை. ஆனால் பிரிந்து வாழும் கணவன் மனைவியரிடையே இவை பெரும் பிரச்சினைகளை எற்படுத்த வாய்ப்புக்களை மருமக்களே செய்து கொடுப்பதாக அமைந்துவிடும்.

அமெரிக்காவில் மியாமியில் உள்ள இரண்டு பிள்ளைகளின் தாயிடம் மாமியார் தன்னிடம் பிள்ளைகளை வார இறுதியில் கொண்டு வந்து விட்டுச்செல்லும்படி கேட்டுக்கொண்டார். இவ்வித நிலைமைகளில் சர்வசாதாரணமாக நடந்துகொள்ளாமல் சாதுர்யமாக நடந்துகொள்ளுதல் முக்கியமானதாகும். இந்த நிலையில் அந்த மருமகளோ 'நாங்கள் பிள்ளைகளிடம் இருப்பதும் அவர்களை அழைத்துச் செல்வதும் மிக்க மகிழ்ச்சியான விடயமாக இருக்கின்றது. அதனை பிள்ளைகள் மிக்க விரும்புகின்றார்கள்' என்று கூறி மாமியாரின் பணிப்புக்கு புத்திசாதுரியமாகப் பதிலளித்துள்ளார். மிகவும் பணிவன்போடு மாமியாரிடமோ அல்லது மச்சான், மச்சாள் மாரிடமோ நடந்து கொள்ளுதல் வேண்டும். அண்மையில் இங்கு விபத்தில் உயிரிழந்த ஒருவரின் தமையனார் அந்த உயிரிழந்த தம்பியாரின் பிள்ளைகளைத் தங்களிடம் விடும்வண்ணம் தனது மைத்துனியிடம் கேட்டுக்கொண்டார். ஆனால் அத்தாய் அதற்குச் சம்மதிக்கவில்லை. அதற்கு இரண்டே இரண்டு பிள்ளைகள் அண்ணனும் தங்கையும் ஆறுவயதும் நான்கு வயதும் நிரம்பியவர்கள் - அவர்களைப் பிரிப்பது பொருத்தமானதல்ல என்று அவர்கள் எண்ணியதும் ஒரு காரணமாக அமைந்தது. பேரப்பிள்ளைகளைத் தன்னிடம் விடும்படி கேட்ட மாமியார் அந்தப் பேரப்பிள்ளைகளைப் பார்க்காமலே மறந்துவிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**மருமகன் சிக்கலானவராக இருந்தால் தங்கள் பேரப்பிள்ளைகளைப் பள்ளியில் சென்றுபார்த்துவரும் பேரரும் இங்கு காணப்படுகின்றனர் எனலாம். எனவே பிள்ளைகளைப் பார்ப்பது என்பது குடும்பச்சூழல் அமைதியானதாகவும் ஒற்றுமையாகவும் இருந்தால் உடன்பாடானதாக அமையும். இல்லையேல் பல இடர்பாடுகளைக் காணவேண்டிவரும்.**

மாமியார் மருமகள் சண்டை மட்டுமல்ல சக்களத்திச் சண்டை, மச்சாள்மாரோடு சண்டை என்றெல்லாம் இடம்பெறுகின்றன. அண்மையில் மொன்றியேலில் தமிழ் குடும்பத்தில் ஒரு இளம் பெண் இன்னுமொரு பெண்ணாலேயே கொலை செய்யப்பட்டுள்ளாள் என்றும் அது சொத்துவிவகாரமானது என்றும் வதந்திகள் பரவுகின்றன. கனடாவிற்கு வந்தும் எம்மவரிடையே சொத்துக்காக பாவம் கர்ப்பிணிப்பெண்ணை கொலை செய்யும் அளவிற்கு வன்மமும், குரோதமும் தலைவிரித்தாடுகின்றது என்றால் அந்த பெண் உயிரோடு இருந்தபோது என்ன துன்பங்களை அனுபவித்திருப்பார் என்பது கற்பனை செய்தும் பார்க்கமுடியாதது.

கணவன் வெளியே சென்றவேளை அவளைக் கொலை செய்துள்ளனர் என்றால் பெண்களை ஆண்கள்தான் கொடுமைப்படுத்து கின்றார்கள் என்பதற்கு மாறாக பெண்களைப் பெண்களே கொடுமைப்படுத்தும் நிலையை சற்று நிதானித்து நோக்கத்தான் வேண்டும். திடீரென ஆத்திரமுற்று கணவன்மார் அடித்துவிட்டால் சன்னதம் கொள்வோர் இவ்வித அபலைப் பெண்களுக்கு பெண்களினால் நடைபெறும் துன்புறுத்தல்கள், கொடுமைகள், வன்முறைகளைச் சற்று வெளியே கொண்டுவர முயற்சித்தல் வேண்டும். மகனை மௌனமாக இருக்கவைத்துவிட்டு அல்லது மகன் இல்லாத வேளைகளில் மருமகளைக் கொடுமைப்படுத்தும் மாமிமாரை நாம் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் கண்டிருக்கின்றோம். ஆனால் கனடாவிலும் இப்படியா என்று நோக்கும்போது சற்று வியப்பாகத்தான் இருக்கின்றது.

இந்தியாவில் நெருப்பால் சுடுவது, கொதிநீர் ஊற்றுவது, உணவின்றி வெளியே உதைத்துத் தள்ளி விடுவது போன்ற கொடுமைகள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. ஆனால் இலங்கையில் இவ்வித செயல்கள் மிக மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. இந்தியாவில் சொத்துத் தொடர்பாக பல கொலைகள், வன்முறைகள் பல குடும்பங்களிடையே நடைபெற்றுள்ளன. அத்துடன் ஆண் ஆதிக்கத்திற்கு மட்டுமன்றி மாமியாரின் அடிமையாகவும் மருமக்கள் வாழவேண்டிய நிலைமையும் காணப்படுகின்றது.

இந்த நிலைமை இந்திய நாட்டில் பலவாறான அமைப்பைக் கொண்டு காணப்படுகின்றது. கூட்டுக்குடும்ப வாழ்க்கை அமைப்பினைப் பின்பற்றி வரும் முறை இந்தியாவில் சிற்சில இடங்களில் காணப்படுகின்றன.

இந்திரா காந்தி அம்மையாருக்கு இரண்டு ஆண்குழந்தைகள் மட்டுமே. கணவன் இறந்தாலும் தனது மகன்மாரை ஒழுங்காக வளர்த்து ஆளாக்கினார். இளையமகன் சஞ்சய் இறக்க அவரது மனைவிக்கும் மாமிக்கும் தகராறு. பெரியவீட்டுத் தகராறானாலும் அது வெளியே தலைவிரித்தாடத்தான் செய்தது. பல அரசியல் இடைஞ்சல்களை மருமகள் மேனகா, இந்திராகாந்திக்குச் செய்துவந்தார் என்பது அவ்வப்போது வெளியான செய்திகளாகும். ஆனால் மூத்த மகன் ராஜீவின் மனைவி சோனியாவோ மாமி மெச்சிய மருமகளாக அடக்கமாக வாழ்ந்து அவரின் நன்மதிப்பைப் பெற்றுள்ளார். வெளிநாட்டுக்காரி அதுவும் இலண்டனில் படிக்கும்போது காதலித்துக் கைப்பிடிக்கப்பட்ட அன்னிய நாட்டுப்பெண்ணாக இருந்தும் அவர் இந்திய குடும்ப வாழ்க்கை முறையை நன்கு உணர்ந்துகொண்டு அதன்வழி ஒழுகிவருகின்றார். இதனால் மாமியாரின் அன்பை அவர் பெற்றுக்கொண்டார். ஆனால் இளைய மருமகளோ மாமியாருக்கு எதிராகச் செயற்படத்தொடங்கினார். இதிலிருந்து பெருங்குடும்பங்களிலும் அதுவும் இராஜ குடும்பங்கள்

எனப்படும் குடும்பங்களிலும் மாமியர் மருமகள் சண்டை இல்லாமலில்லை என்பது தெரிய வருகிறது.

ஆனால் தென் இந்தியாவில் அழகாபுரி என்னும் கிராமத்தில் மிகப் பெருந்தொகையான உறவினர்களை உள்ளடக்கியதாக பெரியதொரு கூட்டுக்குடும்பம் ஒரே வீட்டில் வாழ்ந்து வருகின்றது என்றால் யாராலும் நம்பமுடியாததுதான். அதுவும் நூற்றுக்கு மேற்பட்டவர்களைக் கொண்டதான ஒரு மாபெரும் கூட்டுக்குடும்பம் ஒன்று அங்கே அரசாட்சி செய்துகொண்டிருக்கின்றது. ஐம்பத்தி ஒரு ஆண்டுகளுக்கு முன் அழகாபுரியில் அணையைக் கட்டுவதற்காக வடவீரநாயக்கர் குடும்பத்தின் நிலத்தை அரசு கையகப்படுத்தியதனால் ஒன்றாக இருந்த 15 குடும்பங்கள் அப்படியே வந்து அழகாபுரிக்குப் பக்கத்தில் உள்ள ஒரு இடத்தில் குடியேறினார்கள். அவர்கள்தான் இன்று 51 குடும்பங்களாகப் பெருகியுள்ளார்கள். இவர்களுக்கு 150 ஏக்கர் நன்செய் நிலம் உள்ளது, இதில் மாற்றுப்பயிர் செய்கிறார்கள். இவர்களில் ஒருவர் நீதிபதியாகவும், ஒருவர் இரசாயனவியற்துறை விரிவுரையாளராகவும் இருவர் விலங்கியற் துறை விரிவுரையாளர்களாகவும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரிகிறார்கள்.

இவர்களிடத்தில் உள்ள ஒரு சிறந்த முறை வரதட்சணை வாங்குவதோ கொடுப்பதோ கிடையாது. பலர் இவர்களின் குடும்பத்தில் திருமணம் செய்ய விரும்புகிறார்கள். குடும்ப வருமானம் பொதுவானதாகவே அமைவது போன்று செலவினங்களும் பொதுக்கணக்கிலிருந்தே செலவிடப்படுகின்றன. வைத்தியச் செலவோ அல்லது வேறெந்தச் செலவோ பொதுக்கணக்கிலிருந்துதான் செலவிடப்படுகின்றது. இவ்வித கூட்டுக்குடும்ப வாழ்க்கைமுறை பிரச்சனைகளைத் தோற்றுவிக்காததாக அமைகின்றது. 24 அறைகளையும் நான்கு சமையலறைகளையும் பல கூடங்களையும் கொண்டதாக இந்த அரண்மனை கட்டப்பட்டுள்ளது. பொதுவாக ஒரு

தொலைக்காட்சியும், ஒரு தொலைபேசி மட்டுமே உண்டு. வீண் செலவு, ஆடம்பரம் என்பன அற்ற ஒரு அமைதியான சமூகமாக இது விளங்குகின்றது.

வரன்முறை, சீதனம், ஸ்ரீதனம் எனப்படும் சொற்பதங்களுக்கு இவர்களின் குடும்பத்தில் இடமில்லையாதலால் இவர்களிடையே மாமியார் மருமகள் சண்டையும், சக்களத்திச் சண்டையும் ஏற்பட காரணமே இல்லாது போவது சிறப்பானதே.

இங்கே சமதர்ம சமுதாய அமைப்பினை எம்மவர்கள் பின்பற்றுகின்ற நிலைமையைக் காணமுடிகின்றது. இந்த அமைப்புமுறையே தமிழர்கள் மத்தியில் பண்டைக்காலந் தொட்டு நிலவி வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.





# 13

# சக்களத்திச் சண்டையும் குடும்பப் பிரிவினைகளும்

**மா**மியார் மருமகள் சண்டை மட்டுமல்ல சக்களத்திச் சண்டை, மச்சாள்மாரோடு சண்டை என்றெல்லாம் இடம்பெறுகின்றன. இந்த பாரிய பிரச்சினைகள் பல குடும்பங்களைப் பிரித்துள்ளன. உடன்பிறப்புக்களுள்ளேயே பிரிவினைகளை ஏற்படுத்துகின்றன. நான் பெரிதா? நீ பெரிதா? நான் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவள், நீ ஒன்றுக்கும் வழி இல்லாதவள், நான் படித்தவள் நீ படிக்காதவன் போன்ற பேதங்களை மனதில் வைத்துக் கொண்டு வக்கிரபுத்தியோடும், மனத்தாழ்வோடும் ஒருவரைஒருவர் நோக்குவதால் பல குடும்பங்கள் சீரழிந்து நடுத்தெருவுக்கு வந்துள்ளன. இலங்கையைவிட இந்தியாவில் இத்தகைய தன்மை பெரியளவில் இடம்பெறுவதனைப் பத்திரிகைவாயிலாக அறிய முடிகின்றது. மாமியாரை அல்லது கணவனைத் தங்கள் கைக்குள் போட்டுக்கொண்டு சக்களத்திமாரோடு சண்டையிடும் நிலைமை குடும்பத்தில் பல சீர்கேடுகளை ஏற்படுத்தி விடுவது நாமனைவரும் அறிந்ததே. அண்ணனின் அன்புக்காக ஏங்கும்

சகோதரிமாரின் வெறுப்பு அண்ணிமாரில் விழுவதும் ஒரு காரணியாக அமைந்து விடுகின்றது.

ஏதோவொரு மனத்தாங்கல், கீழான மனச்சிந்தனை, தாழ்வு மனப்பான்மை என்பன சக்களத்திகள், மாமி மருமகள், மச்சாள், மைத்துனர் முதலியோரிடையே ஏற்படக்காரணமாக அமைகின்றது. இன்று நிலவும் சூழ்நிலையில் வெளிநாட்டில் உள்ள உறவினர்களிடம் இருந்து எதிர்பார்ப்பதினால் பல சிக்கல்கள் அங்குள்ள குடும்பங்களிடையே எழுவதினை நாம் காணலாம். எடுத்துக்காட்டாக அண்ணனும் தம்பியும் உள்ள ஒரு வீட்டில் அண்ணன், தம்பி குடும்பங்கள் ஒன்றாக இருந்துவந்தன. அண்ணன் வெளிநாடு சென்றதும் தம்பி தனது அண்ணி என்றும் பார்க்காது அவருக்கு தனது மனைவியின் தூண்டுதலினால் பல இன்னல்களை ஏற்படுத்தினான். அண்ணி சிறிதுகாலத்தில் வெளிநாடு செல்ல என வாங்கிய பொருட்களை எல்லாம் வீட்டின் முற்றத்ல் எறிந்துவிட்டான் மைத்துனன். மாமி, மாமன் இந்தக் கொடும்செயலைப் பார்த்துக்கொண்டும் ஏதும் செய்யாது தவித்திருந்தனரே ஒழிய வாய்பேசமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர். இவ்விதமாக பல குடும்பங்களில் பிரச்சினைகள் ஏற்படுகின்றமையினைக் காணலாம். மச்சாள் மாமி பற்றி குடும்ப அங்கத்தவர்கள் அல்லாத நண்பர்களிடம் அல்லது தூரத்து உறவினர்களிடம் குறை கூறிவிடுவதினால் அவர்கள் மூலம் கதைகள் மற்றவர்களை அடையும் போது குடும்பத்தில் பெரும் சூறாவளியை உருவாக்கி பிரிவினையை ஏற்படுத்திவிடுகின்றது. இவ்விதமே சகோதரர்கள் தங்களிடையே முரண்பட்டு பிரிந்து வாழ்வது ஒருபுறமும், மறுபுறம் மைத்துனியை வீட்டைவிட்டு வெளியேற்றுவதும் நடைபெறுகின்றது. இதிலும் மோசமாக மைத்துனியை அடிமைபோல வீட்டில் எல்லோரதும் பணிகளைச் செய்யவைப்பதும் நடைபெறும் விடயமாகும். சிற்சில இடங்களில் கருவினைக்கூட - அது தங்கள் நாளாந்த வேலைகளைச் செய்யவிடாது தடுத்துவிடும் என்பதனால் மகனைக் கொண்டு மருமகளின் கருவைக் கலைக்கவைக்கும் பாரிய கொடுமைகளும் நடந்துவிடுகின்றன. கணவன் மனைவி தனிக்குடித்தனம் போகாத வரை பல குடும்பங்களில் பெரும் இடர்பாடுகளை உருவாக்கி

கணவன் மனைவியினரிடையே பிரிவினையை ஏற்படுத்தும் துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

இந்தியாவில் பல மருமகள்மார் கணவனின் குடும்பத்தினரின் தொல்லைகளுக்கு ஆளாகி வருவதனைக் காணமுடிகின்றது. நஞ்சூட்டுதல், எண்ணெயூற்றி தீமூட்டுதல், எரி திராவகம் வீசுதல் போன்ற கொடுமைகள் பெண்களுக்கு மேற்கொள்ளப்படும் நிலையினை நோக்கும்போது மேலைச் சமூக அமைப்பில் கணவன் மனைவி பிணக்குகள் கொலைகளில் முடிவுற்றாலும் இவ்வித கொடுமைகள் மிகக்குறைவே. கனடாவில் அண்மையில் ஒரு பெண் தன்குழந்தைகளையும், கணவனையும் வெட்டிக் கொலை செய்ததோடு தன் உயிரையும் மாய்த்துக்கொண்டார் என்பது - அவர் சித்த சுவாதீனமற்ற நிலையில் செய்துள்ளதாகத் தெரிய வருகின்றது. எனினும் இங்கு குடும்ப வருமானம், கணவன் மனைவியரிடையே நல்லுறவு நிகழாதமை என்பன காரணிகளாக அமைவதனால் மன அழுத்தத்தினால் சித்தப்பிரமைகள் உருவாக வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. தனது கணவனையும் பிள்ளைகளையும் வெட்டி தனது உயிரையும் போக்கிய அந்தப் பெண் 27 வயதுடையவர் என்பதும் கணவன் 47 வயது உடையவர் என்பதும் கருத்திற் கொள்ளத் தக்கது. அத்தோடு கனடிய சமுதாயத்தில் காணப்படும் சிறிய குடும்ப அமைப்பு முறையிலிருந்து நீங்கி ஏழு பிள்ளைகளை அந்தத்தாய் ஈன்றெடுத்துள்ளார் என்பதும் சற்று வித்தியாசமானதே. இந்த அடிப்படையில் குடும்ப உறவில் விரிசல்கள் விரக்திகள் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு.

கனடிய சமூகத்தில் மட்டுமல்ல பல நாடுகளில் வறுமையை மணமுறிவுக்கு ஒரு முக்கிய காரணியாக ஆய்வுகள் கோடிகாட்டி நிற்கின்றன. இந்த நிலை எல்லா நாடுகளையும் விட ஐக்கிய அமெரிக்காவில் மிக அதிகமாகக் காணப்படுகின்றது. உலகின் பணக்கார நாடு, வல்லரசு, நாகரிகம் படைத்த நாடு, முன்னேறிய நாடு என்றெல்லாம் வேறுபடுத்தி உயர்ந்த அந்தஸ்துக் கொடுத்துப் பார்க்கப்படும் அமெரிக்க நாட்டில் மணமுறிவு ஏற்படுவதும் மறுமணம் செய்து கொள்வதும் சர்வ சாதாரணமானதாகக் கொள்ளப்படுகின்றது.


ஒருவரை ஒருவர் விரும்பி மணமுடித்துக்கொண்ட அமெரிக்க அழகியும் கொக்கி விளையாட்டு வீரனும் அண்மையில் மணமுறிவு கொண்டு பிரிந்துள்ளமையினை பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஆகிய அனைத்து ஊடகங்களும் முன்னுரிமை கொடுத்து வெளியிட்டதை நோக்கும்போது, வறுமை, செல்வம் என்பன மட்டுமன்றி திருமண வாழ்வில் இன்னும் பல அம்சங்களைக் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய நிலை உண்டு என்பதனை எமக்குப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் மணமுறிவினைச் சமுதாயம் விரும்புவதில்லை. முதல் மனைவியை விவாகரத்துச் செய்பவர்கள் மறுதாரம் செய்வது கடினம். அதிலும் பெண்கள் இரண்டாவது திருமணம் செய்வது மிகவும் கடினம். சமுதாயம் அதனை ஏற்றுக்கொள்ளாமையும் ஒரு காரணமாகும். இதனால் இங்கு மணமுறிவுகள் மேலை நாடுகளோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. கணவனிடம் தங்கி வாழும் நிலை, கணவனைப் பிரிந்தால் சமுதாயம் குறைகூறும் என்ற எண்ணம், பிள்ளைகளின் எதிர்காலம் போன்ற காரணங்களினால் பெண்கள் பல இன்னல்களை எதிர்நோக்கினாலும் மணமுறிவு, பிரிந்து வாழுதல் என்பன மிகக் குறைவே. உலக நாடுகள் சபையின் 1996ம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி ஒவ்வொரு 1000பேருக்கும் ஐக்கிய அமெரிக்காவில் 4.3 வீதமானவர்கள் மணமுறிவு பெறுகின்றார்கள். கியூபாவில் 3.7 வீதத்தினரும், ஐக்கிய இராச்சியத்தில் 3.1 வீதத்தினரும், கனடாவில் 2.6 வீதத்தினரும், பிரான்ஸில் 2.7 வீதத்தினரும், சுவீடனில் 2.2 வீதத்தினரும் யேர்மெனியில் 2வீதத்தினரும், போர்த்துக்கலில் 1.4வீதத்தினரும், ஸ்பெயினில் 0.7வீதத்தினரும், இத்தாலியில் 0.5வீதத்தினரும், மெக்சிக்கோவில் 0.4 வீதத்தினரும் திருமணமுறிவு பெறுகின்றார்கள் என்பது கண்டறியப்பட்டுள்ளது. மேலே காட்டப்பட்ட கணக்கெடுப்பிற்கு மேலாக முதல் மணத்தில் முறிவு ஏற்படும் கால அளவிலும், இரண்டாந்தரம் மணம் செய்து கொண்டு வாழும் கால அளவிலும் மாற்றங்கள் காணப்படுகின்றன. ஐக்கிய அமெரிக்காவில்

முதலாவது மண வாழ்வு ஏறக்குறைய 11 ஆண்டுகள் வரை நீடிப்பதாகவும், இரண்டாந்தர மணவாழ்வு 7.6வருடங்கள் வரை நீடிப்பதாகவும் ஆய்வறிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

எனவே இந்த நாடுகளில் குடியேறிய தமிழர்கள் உட்பட ஆசியர்களும் ஏனைய நாட்டவர்களும் தங்கள் நாட்டில் உள்ள மரபுவழிப் பழக்கவழக்கங்களைக் கைவிட்டு இந்த நாடுகளில் பின்பற்றப்படும் சமூக, பண்பாட்டு நியதிகளுக்கு ஏற்ப தங்களையும் மாற்றிக்கொண்டு மேலைக்கலாச்சாரம் காட்டும் பாதையில் தாமும் வாழத் தலைப் படுவதினால் மணமுறிவுகள் அதிகமாவது காணக்கூடியதாக உள்ளது. எனவே எம்மவர் மத்தியிலும் பிள்ளைகள் தாயோடு தந்தையோடு வாழும் நிலை மட்டுமன்றி ஸ்ரெப் பாதர், ஸ்ரெப் மதர் என்னும் இரண்டாந்தர அன்னை, தந்தையினைக் காணும் அவலமும் ஏற்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. பிள்ளைகள் தாய் தந்தையருக்கு மணமுடித்து வைக்கும் கலாச்சாரம் எம்மவர் மத்தியிலும் ஊடுருவத் தொடங்கலாம் என்பது எதிர்பார்க்கக் கூடியதே.

தனித்து இருக்கும் ஆடவரோ பெண்களோ தமது கணவன் அல்லது மனைவி ஊரில் பிள்ளைகளோடு இருக்கும் வேளை இங்கு இன்னொருவரோடு தொடர்புகொள்வதினால் அவர்கள் இங்கு வந்தபின்னர் இணைந்து வாழ முடியாத நிலையினைப் பல குடும்பங்களில் தோற்றுவித்துள்ளது. கனடாவில் திருமணமாகும் ஒவ்வொரு இரண்டு குடும்பங்களில் ஒரு குடும்பத்தில் திருமண முறிவு ஏற்படுகின்றது. அதாவது 50 வீதமான திருமண முறிவுகள் இன்று இடம்பெறுகின்றன என்று ஆய்வறிக்கைகள் காட்டுகின்றன. சமுதாயத்தின் பண்பட்ட நிலையில் மாற்றம்,தளர்ச்சி ஏற்பட்டுள்ளமையினை இது எடுத்துக் காட்டுகின்றது.





14

# ஓரினச்சேர்க்கை சட்டமாக்கப்படுவதால் ஆண் பெண் திருமண உறவைப் பாதிக்குமா?

மேலை நாடுகள் பல தனிமனித சுதந்திரம் என்னும் பெயரினால் ஓரினச்சேர்க்கையினை அங்கீகரிப்பதோடு மட்டுமன்றி சட்டப்படி அதனை ஏற்புடையதாக ஆக்கிக்கொள்ளவும் முனைகின்றன. மனித நாகரிக வளர்ச்சிப்பருவங்களின் பின்னணியில் ஓரினச் சேர்க்கை என்பது ஏற்றுக்கொள்ளப்படாத அநாகரிகமான தொன்றாகக் காணப்பட்டு வந்துள்ளது. மனித உடற்தேவைகளுக்காக பாலியல் தொடர்புகளை மேற்கொள்ளும் உயிரினங்களில் ஓரினச் சேர்க்கை என்பது மனித விலங்குகளிடமே காணப்படுகின்றது என்று கொள்ளக்கூடிய அளவிற்கு அந்தச் செயலுக்கு சட்ட ரீதியான அங்கீகாரமும் சமூக ரீதியான அங்கீகாரமும் கொடுக்கப்பட்டு வருகின்றது. இன்று இதற்கான சட்டமூலத்தை கனடிய உயர் நீதிமன்றம் பரிந்துரைத்ததன் பேரில் அதனைச் சட்டப்படியானதாக ஆக்கிக் கொள்ள கங்கணம் கட்டி நிற்கின்றது போல்மாட்டினின் லிபரல் அரசு. இச்சட்டத்தின் தேவைதான் என்ன? ஓரினச்சேர்க்கையாளர்கள் ஏன் தாம் தம்பதிகள் எனச் சட்டப்படி காட்டிக்கொள்ள விழைகின்றனர். இரு ஆண்கள் திருமணம் முடித்தால்

கணவன், மனைவி என்ற பதத்தின் கருத்து என்னாவது? யாரைக் கணவன் என்பது யாரை மனைவி என்பது? இவ்விதமே பெண்கள் இருவர் மணம்முடித்தால் ஏற்படுவதும் அதுவே. அங்கும் உடற்பலவீனத்தைக் கொண்டு கணவன் மனைவி என்ற பாகுபாட்டைக்காண்பதா? அகராதியில் இதுவரை பின்பற்றப்பட்டுவந்த கணவன் மனைவிப் பதங்களின் கருத்துக்களை மாற்றி அமைக்கவேண்டிய நிலை வருமா? - என்பன போன்ற கேள்விகள் எம்முன்னே எழுந்து நிற்கின்றன.

பழமைவாதம் பேணும் கொன்சவேட்டிவ் கட்சியின் தலைவர் ஸ்ரீபன் காப்பர் இந்தச் சட்டம் அமுலாக்கப்படக் கூடாது என்னும் கருத்தை முன்வைத்துள்ளார். ஆனால் லிபரல் கட்சியோ ஓரினச்சேர்க்கை என்பது தனிமனித உரிமை என்ற அடிப்படையில் மக்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் அதனைச் சட்டமாக்க முனைகின்றது. இது சட்டமாக்கப் படுமானால் இதன்காரணமாக பல மணமுறிவுகள் ஏற்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் காப்பர். இந்த நிலையிலே உலகெங்கும் ஓரினச் சேர்க்கை என்பது பிரச்சினைக்குரிய ஒன்றாக - சமுதாயச் சீர்கேட்டுக்கு இடைஞ்சலாக அமையுமா? - என்பது ஒரு கேள்வியாக எம்முன்னே எழுந்துள்ளது.

ஓரினச்சேர்க்கை எயிட்ஸ் என்னும் உயிர்க்கொல்லி நோய்க்காவியாகவும் உள்ளது என்ற கருத்தும் பண்டு தொட்டு நிலவிவந்த குடும்ப அமைப்பு முறையினைத் தகர்த்து எறியக்கூடிய தன்மை வாய்ந்ததாக அமைந்துவிடும் என்னும் ஐயமும் நிலவி வருகின்றது. மேலை நாடுகளில் குடியேறியுள்ள கீழை நாட்டினர் இந்த விவகாரம் குறித்து கடும் பீதியும் மனக்கிலேசமும் கொண்டுள்ளனர். சில பிள்ளைகளைப் பெற்ற பெற்றோரோ என்மகன் யாரைக்கட்டினாலும் பரவாயில்லை ஒரு ஆணைக்கட்டாவிட்டால் சரி என்று சொல்லுகின்ற அளவிற்கு அவர்கள் ஓரினச்சேர்க்கை உறவினால் மனங்குழம்பிப்போய் இருக்கின்றார்கள் என்பதனை காணமுடிகின்றது.

அவ்வப்போது ஏற்படுகின்ற பாலியல் உணர்ச்சிகளைத் தீர்த்துக்கொள்ளும் தற்காலிக முறையாக இது காணப்படுகின்றது. 'ஆணும் பெண்ணும் சேராவிட்டால் அழகிருக்காது' என்று பாடிய பாவலனின் கூற்றைப் பொய்ப்பிப்பதாக உலகம் மாறிக் கொண்டிருக்கின்றது. பொம்மைக்கும் பொம்மைக்கும் திருமணம் என்று கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால் ஆணுக்கும் ஆணுக்கும் திருமணம் என்பதனை மேலை நாடுகளில் சட்டமாக்கும் நடைமுறைகள் இடம் பெற்று வருகின்றன. பகிரங்கமான இடங்களில் அவர்கள் பரிமாறிக் கொள்ளும் முத்தக் காட்சிகள் போன்றவற்றாலும் முறைகேடுகள் விரைவாகப் பரவிவருகின்றன. விலங்குகள் சிலவேளைகளில் அவை சேரும்போது பார்த்திருக்கும் ஏனைய ஆண்விலங்குகள் மற்றைய ஆண்விலங்கின்மீது ஏறிப்பாய்வதனை - குறிப்பாக நாய், மாடு போன்றனவற்றில் காணலாம். ஆனால் மனித சமூகத்தில் இத்தகைய செய்கைகளை செவிவழியாகக் கேள்விப்பட்டுள்ள நாம் இன்று அவற்றை நேரடியாகப் பார்த்துக் கேட்டு அனுபவிக்கவேண்டிய நிலையில் உள்ளோம்.

ஓரினச் சேர்க்கையில் ஈடுபடும் இருவரிடையே ஏற்படும் நெருக்கமான உறவு அவர்களை ஒரே இடத்தில் வசிக்கவும் வைக்கின்றது. அதனால் அவர்கள் திருமணமானவர்களானால் அவர்களின் இல்வாழ்க்கையில் தத்தம் மனைவியினுடைய (இந்த இடத்தில் மனைவி என்பது பெண்ணையே குறிக்கும்) இல்லற பாலியல் இன்பத்தினை நாடத்தயங்கும் நிலை ஏற்படும். இதனால் கணவன் மனைவியரிடையே உள்ள உறவில் விரிசல் ஏற்படவும் காரணமாக அமையும். ஒரு ஆணோ பெண்ணோ இவ்விதம் ஈடுபடும் போது அவர்களின் மனத்தில் சந்தேகத்தை ஏற்படுத்தவும் காரணமாக அமைந்துவிடுகின்றது. இதனால் அது ஈற்றில் மணமுறிவுக்கு இட்டுச்செல்வதாக அமையும் சந்தர்ப்பங்களும் எம்மிடையே ஏற்பட்டுள்ளது.

ஓரினத் தம்பதியினராகப் பதிவுசெய்துகொண்டால் சட்டப்படி கனடிய ஓய்வூதியத் திட்டத்தினை அவர்கள் பெற்றுக்கொள்ளமுடியும் என்ற நிலைப்பாடு முக்கியமான ஒன்றாக அமைகின்றது.

கடந்த 2004 மார்ச் 8ம் திகதி கனடிய மேல்முறையீட்டு நீதிமன்றம் 'யார் யாருக்கு திருமணம் செய்யலாம்; யார் யாரை ஒதுக்கலாம் என்பன சட்டப்படி அரசாங்கத்தினால் முன்வைக்கப்படவேண்டிய கடமையாகும்' என்பதால் இந்த விடயத்தில் தீர்வுகாணும்படி அரசாங்கத்திற்கு வினாவினை எழுப்பி ஒரு தீர்ப்பை வழங்கியுள்ளது. இதன்படி பாராளுமன்றத்தில் இந்த விடயம் இப்பொழுது சட்டமாக்கப்படுவதற்கு விவாதம் இடம்பெறுகின்றது. இது தனிமனித சுதந்திரத்தைப் பாதிப்பதாகக் கொள்ளப்படுகின்றது. 2003ம் ஆண்டு சூலை மாதம் கனடிய மத்திய அரசு திருமணப்பதிவில் ஓரினத் திருமணத்தைப் பதிவு சட்டப்படி உள்ளடக்கிக் கொள்ளலாம் என்பதற்கான ஒரு சட்ட வரைவினை சமர்ப்பித்திருந்தது. 2003 மார்ச் மாதம் அரசு கனடிய உச்ச நீதிமன்றத்திடம் வேர்மன் முறையிலான (Vermont-style civil union structure) இணைவுச் சட்ட அமைப்பு முறை ஓரின திருமணப் பதிவுக்குப் போதுமானதா என்ற கேள்வியினை எழுப்பியிருந்தது.

மார்ச் 2004இல் கியுபெக் மாகாண நீதிமன்றம் ஓரினச்சேர்க்கையை ஏற்றுக்கொள்ளத் தீர்ப்பளித்துள்ளது. மார்ச் 21, 2004 இல் நியூபவுண்லாந்து-லபறடோர் மாகாண நீதிமன்றம் ஓரின மணத்தைப் பதிவுசெய்யவேண்டும் எனத் தீர்ப்பளித்துள்ளது. இவ்விதமே சூன், 2003இல் ஒன்ராறியோ மாகாண நீதிமன்றம் ஓரின மணத்திற்கான சான்றிதழ் பெறவும் பதிவுசெய்யவும் தீர்ப்பளித்துள்ளது. இந்த அடிப்படையில் செப்டம்பர் 14ம் திகதி மனிற்றோபாவிலும், 16ம் திகதி சஸ்கச்சுவானிலும் நீதி மன்றங்களினால் ஓரினத் திருமணம் சட்டப்படியானதாக்குவதற்கான தீர்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிலையிலேயே இது கனடா முழுமைக்கும் ஏற்புடையதான

சட்டவரைவினைச் செய்ய மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதன் பெறுபேறுகளை நாம் பொறுத்திருந்துதான் பார்க்கவேணடிய கட்டாயம் எம்முன்னே உள்ளது.

ஓரினச் சேர்க்கையின் பிரகாரம் தம்பதிகளாக வாழுவோர் எப்படியோ தத்தெடுத்தோ அன்றி கனடிய பொதுச் சட்டத்தின்மூலமோ தாம் அடைந்த பிள்ளைகளை வளர்க்கும்போது அந்தப்பிள்ளைகள் பாடசாலையில் மற்ற மாணவர்களினால் கேள்விக்கு உட்படுத்தப்படுகின்ற அவமதிக்கப்படுகின்ற ஒரு நிலை தோன்றி உள்ளது. தாய் தந்தை என்னும் நிலையிலே இருவரும் ஆண்களாக அல்லது இருவரும் பெண்களாக இருக்கும்போது பிள்ளைகளை எப்படி எடுத்து வளர்ப்பது என்பதுபோன்ற கேள்விகள் எழுவது இயல்பே. அரசாங்கத்தினால் கிடைக்கின்ற சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவே அதனைச் சட்டப்படியானதாக ஆக்கவேண்டும் என வரிந்துகட்டிக்கொண்டு நிற்கிறார்கள் ஓரினச்சேர்க்கையை வேண்டி நிற்போர். இதனை மனிதாபிமான அடிப்படையில் தனிமனித சுதந்திரம் என்ற போர்வையில் அங்கீகரிக்கவேண்டும் என்னும் கருத்து பரவலாக ஓங்கிவருவதனைத் தடுக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஓரினச் சேர்க்கை பற்றி பாடசாலைகளில் தமது பிள்ளைகளுக்கு விளக்கம் தரவேண்டாம் எனப் பல பெற்றோர்கள் பெரும் குரல் எழுப்பி வருகின்றனர். எமது கலாச்சாரத்திற்கும், மதக்கொள்கைக்கும் ஒவ்வாத அந்த ஓரினச் சேர்க்கைபற்றி பிள்ளைகளுக்கு எதுவும் கதைக்கக் கூடாது என்பது பல இஸ்லாமிய, யூத, கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த பெற்றோரினது வாதமாக அமைந்துள்ளது. இது பல பாடசாலைகளில் உள்ள பெற்றோர் ஆலோசனைக் கூட்டங்களில் எதிரொலித்தமையை பொதுசன ஊடகங்கள் மூலம் அறியமுடிந்தது. இதன் முடிவாக தமது பிள்ளைகளை இவ்விதமான விளக்கமளிக்கப்படும் வேளைகளில் கலந்துகொள்ளாது தவிர்க்க பாடசாலைச் சபை உடன்பட்டுக்கொண்டது.

பாடசாலைகளில் ஓரினத் தம்பதியினரின் தத்தெடுத்த பிள்ளைகள் சிலர் படிக்கின்றார்கள் என்பதன் காரணமாக அவர்களுக்கு அவர்களின் தாய்தந்தையர், குடும்ப உறவு பற்றிய அறிவினை நல்கவேண்டிய நிலையில் பாடசாலைகள் உள்ளன என்பதும் கருத்திற்கொள்ளப் பட்டமையே இதற்கான அடிப்படையாகும்.

கடந்த சூன் 29ம் திகதி 2003இல் ரொறன்ரோ யங் வீதியில் பல்லாயிரக்கணக்கான ஓரினச்சேர்க்கையாளர்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். கனடாவில் ஒன்பது மாகாணங்களிலும் ஒரு பிரதேச ஆட்சிப்பிரிவிலும் ஓரினச்சேர்க்கை மணம் சட்டப்படியாகச் செல்லுபடியாகும் என அதன் நீதிமன்றங்கள் பரிந்துரைத்துள்ளன. இதன்வண்ணம் இங்கு திருமணங்கள் நடந்துள்ளன. இவ்விதம் நடந்த திருமணங்களிற் கூட விவாக இரத்தினைக்கோரி நீதிமன்றத்தில் விண்ணப்பித்துள்ளனர் என்பது தெரியவருகின்றது. இது விரைவில் மலிவடையும் என்று எதிர்பார்க்கக்கூடியதே. ஆண் பெண் இணைந்து பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதில் ஏற்படும் பாச உணர்வு, குடும்பப் பந்தம், குடும்பக் கட்டுப்பாடு என்பன இந்த ஓரின மணத்திலும் அவ்விதமே அமைவுறுமா? ஓரின மண உறவு எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என்பது பொறுத்திருந்து பார்க்கவேண்டியதே. ஆண் பெண் உறவால் வரும் அன்னியோன்னியம், வயோதிகம் அடைந்ததும் குடும்பமாக வாழும்நிலை முதலியன ஓரினச் சேர்க்கையாளர்களிடம் நிலைக்குமா என்பது கேள்விக்குறியே.

திருமணம் என்னும் பதம் இன்று ஆண் பெண் திருமண ஒப்பந்தத்தை மட்டுமன்றி ஆண் ஆணை மணந்து கொள்வது பெண் பெண்ணை மணந்து கொள்வது என்னும் நிலைமையை அடைந்து இன்று உலக நாடுகளிடையே குறிப்பாக வட ஐக்கிய அமெரிக்கா, கனடா, நோர்வே நெதர்லாந்து, பிரான்ஸ் போன்ற மேலை நாடுகளில் பரவி வருகின்றமையோடு அவை சட்ட அந்தஸ்தையும் பெற்றுக்கொள்கின்றன. கனடிய நாடாளுமன்றத்தில் ஓரினத்

திருமணத்தினை சட்டப்படியாக்குவதற்கான சட்டமூலத்தைக் கொண்டு வர அரசாங்கம் முயற்சிக்கும் அதேவேளை எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ்னரும், கத்தோலிக்க, யூத, இஸ்லாமிய மதத்தீவிரவாதிகள் இதனை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்திவருகின்றனர். ஓரினச் சேர்க்கையை விரும்பாதவர்கள் கூட இதற்கு மனிதாபிமான அடிப்படையில் ஆதரவு நல்க முன்வந்திருப்பது இன்னொரு அம்சம். ஓரினச் சேர்வை எதிர்ப்பவர்கள் குடும்ப புனிதத்தன்மையை காப்பாற்றவேண்டும் எனவும் குடும்ப பெறுமானத்தை நழுவவிடாது உயர்த்தவேண்டும் எனவும் வலியுறுத்துகின்றனர். அவர்கள் இதுபோலும் சமய கோட்பாடுகளுக்கு முரணான அத்துமீறல் கூடாது என்னும் கொள்கையை தமது தாரக மந்திரமாகக் கொள்கின்றார்கள்.

திருமண உடன்படிக்கையின் தூய்மையைக் கெடவிடக்கூடாது எனக் கூறுவோர் - அமெரிக்காவில் ஆண்பெண் பாலாரிடையே இடம்பெற்ற திருமணங்களில் 40-50 விழுக்காடு மணமுறிவினை எட்டியுள்ளன. டென்மார்க்கில் ஓரினச் சேர்க்கை மணவினை முறை சட்டப்படி அங்கீகாரம் பெற்றுள்ளது. அங்கு ஓரினச்சேர்வாரர்களிலேயே 23 விழுக்காடான லெஸ்பியன் தம்பதிகளும் 14 விழுக்காடான கேய் தம்பதிகளும் திருமண முறிவைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

பண்டைய திருமண முறைகளில் பணத்திற்காக பெண்களைத் திருமணம் செய்யும் முறையும், லட்சாதிபதிகளை வயது அதிகமாக இருந்தாலும் பார்க்காது திருமணம் செய்துகொள்ளுகின்ற முறையும் 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ்போன்ற நாடுகளில் நிலைபெற்று வந்துள்ளது. பெண்கள் வீட்டுக்குள்ளே அடங்கிக்கிடந்தநிலை மேலை நாடுகளில் காணப்பட்டது. அவர்கள் எதுவுமே தம் விருப்பப்படி செய்யமுடியாதவர்களாகக் காணப்பட்டனர். திருமணம் தொடர்பாகக் கூட அவர்களால் எந்தவொரு தீர்மானத்தையும் சுயாதீனமாக எடுக்கமுடியாத நிலையே காணப்பட்டது. இந்த நிலைமைகள் தனிமனித சுதந்திரத்தைப் பாதிப்பதாகவும் சமய

தாபனங்களே திருமணம் யார் யாருக்கு நடக்கவேண்டும், எப்படி நடக்கவேண்டும் என்பதனைத் தீர்மானித்தும் வந்துள்ளன. பெண்களைப் பெற்ற பெற்றோரும் தமது பெண்களின் உரிமையை முழுமையாக தங்களின் கைகளிலேயே வைத்திருந்தனர்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஐக்கிய அமெரிக்காவில் மிக மோசமானதாகத் தலைவிரித்தாடியது. இதன்காரணமாக நீதிமன்றங்களின் தலையீடு சட்ட நடவடிக்கைகளில் இடம்பெற்றது. 1978இல் நியூயோக் உச்சநீதிமன்றம் கற்பழிப்பு வழக்கில் திருமணத்தின் பின்பும் 'கற்பழிப்பு' சட்டநடவடிக்கை எடுத்தது. திருமணமான தம்பதியினரிடையேயும் கற்பழிப்பு நிகழலாம் என தீர்ப்பு வழங்கியது. 1978ல் நியூயோக்கில் கணவன் தனது முறைப்படி திருமணம் செய்து கொண்ட மனைவியைக் கற்பழித்ததாக ஒரு வழக்கு நீதிமன்றத்திற்கு வந்தது. மனைவியானாலும் விரும்பாதவிடத்து உடலுறவு வலுக்கட்டாயமாகக் கொள்ளுவது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றம் என்பதனை நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்டது. இதன் வண்ணம் அது சட்டமாக நீதி மன்றங்களால் பின்பற்றப்பட்டு வருகின்றது. 1967இல் நியூயோக் மேன்முறையீட்டு நீதிமன்றம் லவிங் எதிர் வேர்ஜினியா என்னும் வழக்கில் எதிராகத் தீர்ப்பு வழங்கியதனால் பெண்களின் சுதந்திரத்தை உரிமையைப் பாதுகாக்க முடிந்தது எனக் காரணம் காட்டி பெண்களுக்கும் ஆண்களுக்கும் தாம் விரும்புபவற்றைச் செய்வதற்கு உரிமை வேண்டும் என வாதிடுகின்றார்கள்.

ஆண் பெண் திருமண ஒப்பந்தம் இடம்பெற்று அவர்களுக்குப் பிள்ளைகள் பிறந்த பின்னரும் கருத்துடன்படாத நிலையில் மேலை நாடுகளில் 50 விழுக்காட்டினர் மணமுறிவுக்கு விண்ணப்பிக்கின்றார்கள் அல்லது பிரிந்து வாழத் தலைப்படுகின்றார்கள். இந்த நிலையில் இளமைக்காலத்து பாலியல் இச்சை காரணமாக தாம் இன்பம் அனுபவிக்கவேண்டும்; அதற்குக் குறுக்கீடுகள் இருக்கக்கூடாது என்ற

நிலையில் ஓரினச்சேர்க்கையினைப் பலர் தெரிவுசெய்கின்றனர். எனவே இந்த உறவு முறையினைப் பலர் எதிர்த்தபோதிலும் - இயற்கைக்கு மாறானது எனக் கூறுகின்றபோதிலும் - பலர் இதில் நாட்டம் கொள்ளத்தான் செய்கின்றனர்.

ஒரு 12 வயதுச் சிறுமி தனது தாய் தந்தையுடன் பிரச்சினைப்பட்டுக்கொண்டு தனது ஓரினச்சேர்க்கை நண்பியுடன் குடிபெயர்ந்து போய் இருந்த கதையினை விவரிக்கும் போது - தனக்கு 11 வயதாக இருக்கும் போது இது நடந்தது. அதுவரை தான் பாடசாலையில் மிகவும் கெட்டித்தனமாக படித்துக்கொண்டிருந்ததாகவும் தனது தாய் இடம்மாறிய பின்னர் தனது நிலையிலும் மாற்றம் ஏற்பட்டதாகவும் குறிப்பிட்ட அவர்- தனது தாயின் விருப்பப்படியே தான் பாடசாலைக்கு உடுப்பு அணிந்து செல்லவேண்டி இருந்தது இதனால் தான் பல துன்பங்களை, ஏனையவர்களால் இம்சிக்கப்படுகின்ற நிலைக்குத் தள்ளப்பட்டேன் என்று குறிப்பிடும் அவர் - தனது தாயை கூடாத வார்த்தைகளால் தான் பேசுவதாகவும் குறிப்பிட்ட அவர்- தான் தற்கொலை செய்யாமல் இருப்பதற்கு என்ன செய்யலாம் என்பதற்கு ஆலோசனையை வேண்டி மின் அஞ்சலில் தனது நிலையை விவரித்துள்ளமையினைப் பார்க்கும்போது பிள்ளைகளுக்கு பெற்றோரின் நடத்தை பல இடர்பாடுகளை அதாவது வெட்கம், தலைகுனிவு, மானப்பிரச்சினை போன்றனவற்றை மற்றவர்களிடையே கொண்டு வருகின்றது என்பது வெளிப்படை.

தாய் தந்தையர் சகோதரங்களின் பிரச்சினைகள் காரணமாக பலர் இன்று குடும்பங்களில் இருந்து வெளியேறி வீதிகளில் அலைந்து திரியும் நிலை காணப்படுகின்றது. ஒன்றில் தாய் நல்லவராகவும் தந்தை கொடியவராகவும் இருக்கும் சந்தர்ப்பங்களில் பிள்ளைகளுக்குப் பல இடைஞ்சல்கள் வீட்டில் ஏற்படத்தான் செய்யும் என்பதை அந்தப் பெற்றோர் உணர்வதில்லை. அவர்களின் பிஞ்சு உள்ளத்தில் விரக்தி, அமைதியின்மை, காழ்ப்புணர்வு என்பன ஏற்பட்டு மனவழுத்தத்திற்கு

ஆளாகின்றார்கள். இதனால் அவர்கள் நாளாந்தம் அல்லல் படுவதைவிட உயிரை மாய்த்துக்கொள்ளலாமா அல்லது வீட்டை விட்டு ஓடிவிடலாமா என்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். இதனால் 12 அல்லது 13 வயதுப் பிராயத்தினரே இவ்வித நிலைக்குத் தள்ளப்பட்டு வீதிக்கு வந்து சேரத்தகாதவர்களோடு சேர்ந்து மது, போதை போன்றவற்றிற்கு அடிமையாகின்ற நிலையினையும் அதன்பால் கற்பழிப்பு, விபச்சாரம் போன்றனவற்றிற்கும் ஆளாகவேண்டியும் வருகின்றார்கள்.

அண்மையில் வயது வந்த தமிழ் பெண்பிள்ளை ஒன்று தனது சோகக் கதையினைக் கூறும்போது தனது மாமனின் கொடுமை காரணமாகவும் தனது தாயின் கையாலாகாத்தனத்தின் காரணமாகவும் வீட்டை விட்டு வெளியேற வேண்டி வந்ததாகக் குறிப்பிட்டிருந்தார். அவர் தனக்குப் பாதுகாப்பான இடத்தினைத் தேடிக்கொண்டு பாதுகாப்பு விடுதிக்குச் சென்றுள்ளார். இவ்விதமாக வயது வந்தவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளத் தெரிந்துவைத்துக்கொள்வதால் பிரச்சினைகளை இலகுவாகவும் சாதுரியமாகவும் எதிர் கொள்கிறார்கள். ஆனால் சிலர் தமது பிரச்சினைகளை எதிர்கொள்ள முடியாத நிலையில் தற்கொலை, மது, போதைப்பொருட்களிடம் தஞ்சமடைதல் போன்ற விரும்பத்தகாத முடிவுகளுக்குத் தம்மை ஆளாக்கிக் கொள்கின்றார்கள் என்றால் அதற்கு குடும்பச் சூழ்நிலையே காரணமாகும். கணவன் மனைவி இருவரும் ஒற்றுமையாக இருக்கும் குடும்பங்களில் ஒப்பீட்டு அடிப்படையில் இந்தக் குறைபாடுகள் மிகக் குறைவாகவே உள்ளன என ஆய்வுகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

திருமண முறைகள் - குடும்ப வாழ்க்கை முறைகள் என்பன பிள்ளைகளின் வாழ்வை அவர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும் தன்மையினை அறிந்து கொண்டாவது கணவன் மனைவி உறவு நன்கு அமைய வேண்டும். வெறுமனே பாலியல் இன்பத்திற்காக மட்டும் அமைவது நல்ல குடும்பமாக அமையாது. பாலியலை நோக்கமாகக் கொண்ட பெண் - பெண் உறவு, ஆண் - ஆண் உறவு நற் குடும்பப்

பண்பை வளர்க்க உதவாது என்பதனை நாம் கருத்திற் கொள்ளவேண்டும்.

திருமண உடன்பாடு என்று ஒன்றில்லை என்று வாதிடும் தன்மை இன்று வலுப்பெற்று வருகின்றது. திருமண ஒப்பந்தம் யாருக்கிடையேயும் இடம்பெறலாம். தமக்கு இன்பம் அனுபவிப்பது ஓரினச்சேர்வாக இருந்தால் என்ன ஆண் -பெண் உறவாக இருந்தால் என்ன என்பன போன்ற கருத்துக்கள் இன்று பரவலாகப் பேசப்படுகின்றன. யாருக்கும் யாருக்கும் திருமணம் என்ற தன்மை பண்டைக்காலம் தொட்டு நம்மவர்களால் மட்டுமன்றி மேலை நாட்டவர்களாலும் ஆண் -பெண் உறவையே கருத்திற்கொண்டு வந்துள்ளது. ஆனால் இன்று மனித நாகரிகமேம்பாடு என்ற போர்வையில் மக்களை மக்களாக அன்றி அவர்களை மாக்களாகவே ஒரு மயக்க நிலையில் வைத்திருக்கவேண்டும் என்ற எண்ணம் தேசிய நல அரசுகள் என்று சொல்லிக்கொள்கின்ற நாடுகளில் குறிப்பாக மேற்குலக நாடுகளில் பின்பற்றப்பட அனுமதி வழங்கப்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே.

ஐரோப்பிய நாடுகள் பல இந்த நடவடிக்கையில் மக்களை மயக்கமடைய வைப்பதில் மிகுந்த கவனத்தோடு செயற்படுவது புலனாகின்றது. மனிதன் சிந்திக்கத் தெரிந்தவன் என்ற பதத்தின் கருப்பொருளை நன்கு அறிந்து கொண்டு அதற்கான எதிர்மாறான திசையில் சிந்திக்கும் சிந்தனாவாதிகளும் நம்மத்தியிலே இருக்கத்தான் செய்கிறார்கள். மறைந்த மேதை சாக்ரடீஸ் ஏன்? எதற்கு? என்று கேட்டமையால் மட்டுமன்றி மற்றவர்களையும் அவ்விதமே சிந்திக்கத்தூண்டிய காரணத்தினால் நஞ்சூட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.

சிந்திக்கத் தலைப்பட்டமையால் உலகில் பல முன்னேற்றகரமான செயல்கள் இடம்பெற்றன. அதேவேளை சிந்தனாசக்தி ஆளும் வர்க்கத்திற்கு எதிராக அமைந்தவேளைகளில்

பல அனர்த்தங்களை சிந்திப்பவர்கள் எதிர்கொள்ளவேண்டித்தான் வந்தது. வலன்ரயினின் வரலாறும் சிந்திக்கத் தூண்டிய செயலாலேயே உலகப்பிரசித்தி பெற்ற கதையாக மாறியது.

மக்கள் தன்னியல்பாகச் சிந்திக்காத மிருகங்களாக வாழ்ந்துவிட்டால் ஆளும் வர்க்கத்தினருக்கு எந்தவித தீங்கும் இல்லாத நிலை நிலைத்திருக்கும். மாறாக மக்கள் சிந்திக்கத் தொடங்கினால்- வினாக்களை எழுப்பினால் அதனால் ஆளும்வர்க்கம் ஆட்டம் காணவேண்டிய நிலை ஏற்படும். இதனால் மக்களை இலகுவாக ஆட்கொள்ளக்கூடிய மதுபானம், பாலியல், மதம் என்னும் அம்சங்களுக்குள் சிக்கித் தவித்திருக்க வைத்திருப்பது சிறந்த ஒரு சாதனமாகப் பல அரசுகள் கைக்கொள்ளுகின்றன. இதன் விளைவே இன்று ஓரினசசேர்க்கைக்கு சட்டமூலாம் பூசி அங்கீகரிப்பதற்கான நடவடிக்கைகள். அமெரிக்க அரசு மட்டும் ஏன் இதற்கு எதிராக செயற்படுகின்றது என்ற வினாவிற்கும் விடை - தம்மைச் சார்ந்த கிறிஸ்தவர்களையும் மதபீடத்தின் செல்வாக்கையும் சரியாது பாதுகாப்பதே அதன் நோக்கம் என்பதனையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

கனடாவில் மக்களின் தலைவர்களான சில அமைச்சர்களே ஓரின அதாவது ஆண்-ஆண் திருமணத்திற்கும், பெண்-பெண் திருமணத்திற்கும் ஆதரவு தந்து அவர்களோடு இணைந்து செயற்படுவதினைக் காணமுடிகின்றது. 2001இல் ரொறன்ரோ மாநகரில் இடம்பெற்ற ஓரினச் சேர்வாரர்களின் பேரணியில் சில அமைச்சர்களும் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. 1976ல் நோர்வே நாடு முதன்முதல் ஒருபால் திருமணத்திற்கு சட்டப்படி அங்கீகாரம் வழங்கியது. அதனைத் தொடர்ந்து பல நாடுகள் இன்று அங்கீகரித்துள்ளன. அங்கீகரித்தும் வருகின்றன. இந்த அடிப்படையிலேயே கனடிய நாட்டுப் பாராளுமன்றத்தில் இதற்கான சட்டமூலம் சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கின்றது. கடந்த கால பாராளுமன்றத்தில் கொண்டு

வரப்பட்ட ஒருபாலுறவுக்கான சட்ட நகல்களை ஆதரித்த அல்லது முன்னெடுத்த லிபரல் கட்சிக்கு கத்தோலிக்க மக்களின் வாக்குக்கள் கிடைக்காது போகும் என 1986ல் பியர் ரியூடோவின் ஆட்சிக்காலத்தில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மாறாக ஒரே அடியாக அதிகப்படியான ஆசனங்களைப்பெற்ற பெரும்பான்மைக்கட்சியாக அது விளங்க கொன்சவேட்டிவ் கட்சியினர் தமது 50 ஆசனங்களில் 16 ஆசனங்களையே காப்பாற்றிக் கொண்டனர் என்பதனை இன்றைய போல் மாட்டின் அரசு அறிந்து வைத்திருக்கின்றது. எனவே மதத்தைக் காட்டிப் பயப்படுத்துவதை அவர்கள் பொருட்டாகக் கொள்ளமாட்டார்கள் என்றே தெரிகின்றது.

பாராளுமன்றத்தில் சில ரோறி உறுப்பினர்களே ஒருபால் திருமணத்தைச் சட்டப்படி அங்கீகரிக்க வேண்டும் என்னும் கூற்றை ஆமோதித்துக் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்கள். இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் ஸ்ரீபன் காப்பரோடு தலைமைத்துவத்திற்காகப் போட்டியிட்ட பிறேயிஸ் பிறின்ரிஸ் என்பவர் கருத்துக் கூறுகையில் நான் விடுதலைக்காகவே நிற்பேன் என்று உரைத்துள்ளார். அவர் குறிப்பிடும்போது “நான் ஒரு பழமைவாதி, அதுதான் என்னைப் பொது வாழ்வில் ஈடுபடவைத்தது. எங்களது வாழ்வின் பாணியினை எமது குணநலனுக்கேற்ப மற்றவர்களோடு முரண்படாது அமைத்துக்கொள்ள உரிமை இருக்கின்றது. நாம் யாரையும் நோகடிக்காது இருப்பதோடு எமது செயல்களுக்கான பலாபலனுக்கு நாமே பொறுப்பேற்கவேண்டும். இவைதான் எமது மேலைச் சமூகத்தின் நவீன தன்னாண்மை. இவைதான் மேலைச் சமுதாயத்தை ஒழுங்காகப் பேணிவருகின்றன. இவை எம் ஒவ்வொருவரையும் சமத்துவமாகவும் கட்டுப்பாடற்றமுறையிலும் வைத்திருக்கின்றது” [‘I am a conservative, and this is the philosophy that guides me in public life. Each of us has the right to fashion our own life to suit our own character without impediment from others, providing we harm no one else and providing we accept the consequences of our own decisions... These are the modern liberties

of our western society. They are the very liberties that underpin western society, and they are owed to each of us equally and unconditionally." - Jim Prentice] எனக்குறிப்பிட்டுள்ளமையினை நோக்கும்போது மேலை நாட்டு அரசியல் வாதிகளின் நோக்கும், போக்கும் ஒருதன்மையானது என்பது புலனாகின்றது. எதிர்க்கட்சி என்றால் அரசாங்கம் செய்வது எல்லாவற்றையும் பிழை சொல்லவேண்டும் என்ற நோக்கம் இருந்தாலும் சிலவிடயங்களில் ஆட்சியாளர்களின் நலன்களாக அல்லது உயர் வகுப்பினரின் நலன்களாக இருந்தால் அவர்கள் இணைந்து நிற்பது அவர்களின் பொது இயல்பு என்பது அனைவரும் அறிந்த ஒன்று. எதிர்க்கட்சித் தலைவர் ஸ்ரீபன் காப்பரின் பேச்சுக்கூட இந்தவிடயத்திலே இருதார மணக் குற்றத்திற்கு அதிகமானவர்களை ஆக்கும் என்ற கருத்தோடு மிகவும் அடக்கி வாசிக்கின்ற நிலையினைக் காணமுடிகின்றது.

எனவே கனடாவில் சட்டப்படி ஒருபாற் திருமண உறவுகள் இடம்பெறவும் மணமுறிவுகள் ஏற்படவும் இடம் அளிக்கப்படுவது காலத்தின் கோலமாக மட்டுமன்றி தடுக்கமுடியாத ஒன்றாகவும் காணப்படுகின்றது. இதற்கிடையே கனடாவில் ஒரு தமிழ் மகனும் அமெரிக்காவில் இரு தமிழ்ப் பெண்களும் இந்த ஓரின திருமணத்தைச் செய்துள்ளனர் என்னும் செய்திகள் மிகவும் வேகமாக மற்றவர்களிடமும் தொற்ற வாய்ப்புக்கள் காணப்படுகின்றன என்பதனையே இந்தச் சட்டமூலம் எடுத்துக் காட்டுகின்றது.

கனடிய சட்ட அறிஞர்கள் பேராசிரியர் சுஜித் சௌத்திரி உட்பட 133 பல்கலைக்கழக சட்டவியற் பேராசிரியர்கள் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற தலைவர் ஸ்ரீபன் காப்பர் மனித உரிமைகள் பட்டயத்தை மதிக்கவில்லை எனக் குரல் எழுப்பியதோடு மட்டுமன்றி எல்லோருமே இணைந்து பகிரங்கக் கடிதத்தையும் அனுப்பியுள்ளனர். இதனால் காப்பர் அடங்கிப்போய்விட்டார் போல் தெரிகிறது. சட்டத்தின் வலு ஓரினத் திருமணத்திற்குச் சார்பாக ஓங்குகின்றது என்பது தெரிகிறது. இது

கீழை நாடுகளையும் ஆட்டிப்படைக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

இதற்கிடையே கனடாவிற்கு எதிராக அமெரிக்காவின் யேசுலான்ட் அதாவது யேசு பூமி என்ற அமைப்பு போர்க்கொடி உயர்த்தியுள்ளமையும் கருத்திற் கொள்ள வேண்டியதே.

ஓரினச் சேர்க்கையினைச் சட்டப்படி திருமண உறவினால் உரித்துடையதாக ஆக்குவதற்கான சட்ட நடவடிக்கைக்கான அடிகோலும் முயற்சியில் கனடிய அரசு இன்று தீவிரமாக ஈடுபட்டுள்ளது. முன்னர் நாம் குறிப்பிட்டதுபோன்று ஓரினச்சேர்வாரர்களின் சட்ட அங்கீகாரம் சமூகத்திற்கு எந்தவிதமான ஒரு தோற்றுவாயைத் தரப்போகின்றது என்பது பலராலும் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வரும் விடயமாகக் காணப்படுகின்றது. ஓரினச் சேர்க்கை என்பது பாலுணர்வின் வெளிப்பாட்டின் ஒரு படியாகக் கொள்ளப்படுகின்றது எனினும் இதற்கு ஏன் திருமண அந்தஸ்த்துக் கொடுக்கப்படவேண்டும் என்பது ஒருபுறமும், ஆண் பெண் உறவினால் ஏற்படும் அன்னியோன்ய நிலை அல்லது உறவு ஒரு பாலரிடம் காணப்படுமா என்பது இன்னொருபுறமுமாக அமைகின்றது. பாலியல் இன்பத்திற்கு ஓரினச் சேர்க்கை சரியானதா இல்லையா என்பது அவரவர் மன நிலையை, மனவெழுச்சியை, உணர்வுகளைப் பொறுத்த நிலை. இதற்கு இளமைக்காலத்திலிருந்து அவர்கள் கொண்டுள்ள நாட்டம், பயிற்சி என்பனவற்றோடு சந்தர்ப்ப சூழ்நிலைகளும் காரணமாக அமைகின்றன என்று ஆய்வுகள் வெளிக்காட்டுகின்றன. அத்தோடு சிலருக்கு இயல்பாகவே ஏற்படும் உணர்ச்சித்தூண்டல்களுக்கான ஹோமோன் சுரப்பிகளின் சமநிலை இன்மையும் காரணமாக அமைவதாகக் கொள்ளப்படுகின்றது. அத்தோடு ஆண்பெண் உறவில் திருப்தி கொள்ளமுடியாதவர்கள் இவ்வித உறவில் நாட்டம் கொள்வதாகவும் அறியவருகின்றது. எது எவ்வாறிருப்பினும் ஓரினச்சேர்க்கை சட்டப்படி

குடும்ப அந்தஸ்த்தை ஏற்படுத்துவதனால் இன்று ஆண் பெண் உறவில் விரிசல்கள் ஏற்படுமா, தனித்தாயாரின் நிலை அதிகரிக்குமா? என்ற கேள்விகள் எம்முன்னே எழுகின்றன. இவற்றை விட ஓரினத் தம்பதியினரினால் தத்தெடுக்கப்பட்டு வளர்க்கப்படும் பிள்ளைகளின் நிலை என்ன? - என்பனவும் எம்முன் எழுகின்ற வினாக்களாகக் காணப்படுகின்றன.

ஓரினச்சேர்வாரர்களிடையே பிள்ளையினைக் கருத்தரிப்பதற்கோ அன்றிப் பெற்று வளர்ப்பதற்கோ வாய்ப்புக்கள் இல்லாத நிலையில் அவர்கள் தத்தெடுக்கும் பிள்ளைகளைத்தான் வளர்க்க முடியும். அவ்விதம் தத்தெடுக்கப்படும் பிள்ளைகளில்- சமுதாயத்தில் தாய் தந்தை எனச் சொல்லப்படும் நிலையில் அவ்வித குடும்பங்களில் இருவரும் ஒரே இனத்தினராக அதாவது ஆண்களாக அல்லது பெண்களாகவே இருக்கப்போகிறார்கள். இவர்களில் அவர்களில் யாரைத் தந்தை என்பது யாரைத் தாய் என்பது என்று பிள்ளைகளுக்கு ஒரு இக்கட்டான நிலையினை ஏற்படுத்தும். இதனால் அவர்கள் சமுதாயத்தில் ஒத்த வயதினரின் கேலிகளுக்கும், நையாண்டிகளுக்கும் ஆளாவது தவிர்க்க முடியாத ஒன்றாக அமைந்துவிட வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன.

ஆண் பெண் உறவில் விரிசல் ஏற்பட்டு அவர்கள் முறிந்து போகும் நிலையே வாழ்வில் மிகவும் மோசமானது. மணமுறிவினை செய்துகொண்ட மத்தியதர குடும்பங்களைச் சேர்ந்த 131 பிள்ளைகளின் தாக்கம் - அது எவ்வளவு தூரத்திற்கு மணமுறிவு காலாக அமைகின்றது என்பதினைக் கண்டறியும் நோக்குடன் 25 ஆண்டுகளாக கலிபோர்னியாவில் ஆய்வினை மேற்கொண்ட உளவியல் நிபுணர் யூடித் வொலார்ஸ்ரெயின் (Psychologist Judith Wallerstein) அவர்கள் மணமுறிவு செய்துகொண்டவர்கள் ''திருமண உறவை முறித்துக்கொள்வது என்பது செய்வதற்கு மிகவும் கடினமானது'' எனக்குறிப்பிட்டதோடு மட்டுமன்றி "மணம் முறித்துக் கொள்வது தனியே

இருவருக்கிடையேயானது என்பதிலும் பார்க்க இது பலரை முறிவடையச் செய்யும்" எனவும் குறிப்பிட்டுள்ளமையின் உள்ளார்ந்த அர்த்தம் மணமுறிவுற்ற பெற்றோரின் பிள்ளைகளுக்கு அதனால் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்துவதோடு அவர்களோடு உறவுடையவர்களுக்குள்ளும் அதன் தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதோடு பல குடும்பங்களுக்கிடையே ஏற்படும் பல பிணக்குகளுக்கு இது காலாக அமைந்து விடுகின்றது. பிள்ளைகளுக்கு மட்டுமன்றி பெற்றோரின் பெற்றோருக்கே பெரும் சிரமங்களை - தங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளைப் பார்க்க முடியாத நிலைகளைத் தோற்றுவிக்கும் எனவும் முன்னர் நாம் கண்டோம். உறவாடி இருந்த பல நண்பர்களை இழக்கவேண்டி வரும். பல குடும்பங்களிடையே இதன் காரணமாக பிணக்குகள் தோன்றும் என்பது நாம் அறிந்ததே. எமது நாட்டில் பெரும்பாலும் திருமண முறிவுகள் ஏற்படுவது மிகவும் குறைவே. இருப்பினும் சொத்துக்கள் தொடர்பான பிரச்சினைகள் குடும்பங்களிடையே பிரச்சினைகளை ஏற்படுத்துவது இயல்பே. அந்த நிலை எமது நாட்டைவிட இந்தியாவில் ஒப்பீட்டு ரீதியில் அதிகமானதே.

பெற்றோரின் மணமுறிவு பிள்ளைகளை உடனடியாகப் பாதிக்கின்றது எனினும் அதன் எதிர் விளைவாக அவர்கள் தொடர்ந்து மனவெழுச்சி எதிர்த்தாக்கத்தினால் துன்பமடைகின்றார்கள். இதனால் அவர்கள் தங்கள் 20, 30 வயதில் தங்களது காதல்லீலைத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளக் காரணமாக அமைகின்றது என யூடித் அவர்கள் தமது ஆய்வினை ஆதாரமாகக் கொண்டு கருத்து வெளியிட்டுள்ளமையினை அவதானிக்கலாம். பிள்ளைகளுக்குத் தரப்படவேண்டிய அன்பு, பாதுகாப்பு, அரவணைப்பு, மதிப்பு போன்ற பெற்றோரால் தரப்படவேண்டிய உளவியல் தேவைகள் அவர்களுக்கு மறுக்கப்படுவதனால் அவர்கள் வளரும்போது நெறிபிறழ்வானவர்களாக வளர்வதற்குக் காரணமாக அமைகின்றது. "மணமுறிவுற்றபோது பெரியவர்கள் எதிர்நோக்கும் அனுபவங்களை ஒத்தனவல்ல பிள்ளைகள் எதிர்நோக்கும் துன்பங்கள். பிள்ளைகள் அனுபவிக்கும் துயரங்கள்

உச்ச நிலையை அடைவதில்லை. அது பின்னர் மட்டம் தட்டப்பட்டுவிடுகின்றது. பெற்றோரின் மணமுறிவு முதல் மூன்று தசாப்தங்களுக்கு பிள்ளைகளைப் பாதிப்பிற்கு உள்ளாக்குகின்றது" என யூடித் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

கனடாவில் 1980க்கும் 1990க்கும் இடையில் தனிப் பெற்றோரின் தொகை 60விழுக்காடுகளால் அதிகரித்துள்ளமையினைப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. இது 15 ஆண்டுகளில் 1.1மில்லியனாக அதிகரித்திருந்தது. இதேவேளை கனடிய சனத்தொகை 30.000 மில்லியனாக மட்டுமே காணப்பட்டது என்பதும் - கனடிய வாழ்வியலில் தனிப்பெற்றோரின் தொகை அதிகரிப்பதற்கான காரணங்களை நாம் விளங்கிக்கொள்ளவேண்டும். இங்கு ஆண், பெண் உறவையோ குடும்ப நிலையையோ பொருளாதாரம் கட்டுப்படுத்துவதில்லை. தனித்தாயாருக்குப் போதியளவு உதவி நிதிகள், பிள்ளைகளுக்கான நிதிகள் என்பன அரசினால் வழங்கப்படுவதினால் சிறு சிறு பிணக்குகளுக்குக் கூட பெற்றோர் பிரிந்து வாழுகின்ற நிலைகள் தோன்றுகின்றன. இவற்றை விட அவர்களிடையே காணப்படும் பாலியல் உறவில் ஏற்படும் மாறுபாடான எண்ணங்களும், செயற்பாடுகளும் காரணமாக அமைந்துவிடுகின்றன. இத்தகைய மணமுறிவுகள் பெற்றோரை விட பிள்ளைகளை நீண்ட காலத்திற்குப் பாதிப்பிற்கு உள்ளாக்குகின்றது என்பதனை நாம் உணர்ந்துகொள்ளத் தலைப்படவேண்டும்.

பிள்ளைகளின் உளவியல், உணர்வியல் தேவைகளை தனிப்பெற்றோரால் பூரணப்படுத்த முடியாது என 'தந்தையில்லை அமெரிக்கா' என்னும் நூலின் ஆசிரியரும் சமூக வரலாற்றாளருமான டேவிட பிளான்கென்கோர்ண் (David Blankenhorn )என்பவர் 'எங்கள் கவனத்தை ஈர்த்துள்ள மிகவும் முரண்பாடான மிகவும் அவசரமான எமது சமூக பிரச்சினை மிகவும் சிக்கல் நிறைந்த தனிப் பெற்றோர் பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு அத்தேவைகளை


நிவர்த்தி செய்யமுடியாதுள்ளமையே" எனக் குறிப்பிட்டுள்ளார். இளம் வயதுடைய ஆண்களுக்கும் பெண்களுக்கும் மிகுந்த நெருக்கமுள்ள பாசமுள்ள பெற்றோரின் அரவணைப்பும் நம்பிக்கையும் மிகவும் அவசியமானது. தனிப் பெற்றோரால் வளர்க்கப்படும் ஆண்கள் இளம் வயதுப் பிராயத்திலேயே மிகுந்த வன்முறையாளராகவும், தகாத பாலியல் தொடர்புகளைக் கொண்டுள்ளவர்களாகவும் வளர்கின்றார்கள். தனிப் பெற்றோரால் வளர்க்கப்படும் பெண்பிள்ளைகளோவெனின் இளம்வயதில் கர்ப்பம் தரித்தலும் ஆரம்ப காலத்திலேயே மணமுறிவினை ஏற்படுத்திக் கொள்ளுதலும்- என்பன ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்ட உண்மைகள்.


பிள்ளைகளின் பாலியல் நெறிப்பிறழ்விற்குப் பெற்றோரும் பொறுப்பேற்கவேண்டும் என்பதனையே இந்த ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. அது பிள்ளைகள் வன்முறையாளர்களாவது - மிக இளம்பிராயத்திலேயே பாலியல் ஈடுபாடுகொண்டு கருத்தரிப்பது மட்டுமன்றி ஆண் பெண் உறவினை விடுத்து ஓரினச் சேர்க்கையாளர்களாக மாறவும் காரணமாகின்றது. பெற்றோருக்கும் இத்தகைய ஓரினச் சேர்க்கை நாட்டங்கள் காணப்படின் அதன் விளைவுகள் அவர்களைவிட அப்படியான பிள்ளைகளை வீதிக்குக் கொண்டுவரக் காலாக அமையும் என்பதினைக் கடந்த பகுதிக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தோம். விரும்பத்தகாத முடிவுகளைக் கணவன் மனைவியர் எடுக்கும்போது அது பிள்ளைகளின் மன உணர்ச்சிகளைப் பாதிக்கும் என்பதனை தாய் தந்தையர் இருவருமே சிந்திப்பதில்லை. தங்களது பிள்ளைகள் தங்களால் அன்பு செலுத்தப்பட்டு வளர்க்கப்படவேண்டியவர்கள் என்பதனையும் உணர்ந்து கொள்ளத் தவறும் பட்சத்தில் இந்த நிலைகள் தோன்றுகின்றன.

பெற்றோரிடையே ஏற்படும் மனக்கசப்பு அவர்களை பிரியவைக்குமானால் அதனால் அவர்கள் வேறு உறவுகளை நாடவேண்டி ஏற்படும் போது அது சிலவேளைகளில் ஒரேபால் உறவாக

அமைந்து விடவும் காரணமாகின்றது. இவை உண்மையிலேயே தங்களுக்குப் பிறந்த பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பாதிக்கின்றது என்பதனைச் சிந்திக்காமல் உணர்ச்சிகளுக்கு அடிமைப்படுவதன் விளைவாக ஏற்படுவதாகும்.

திருமணமாகிய பெற்றோர் பிள்ளைகளைப் பெற்றபின்னர் தமது பிள்ளைகளை அம்போவென விடுத்து மணமுறிவு செய்வது தமது பிள்ளைகளுக்குச் செய்யும் மிகப்பெரும் துரோகமும் தவறும் என்பதனை சற்றுச் சிந்தித்துப்பார்க்கவேண்டும். மணமுறிவுகள் ஏற்படாமல் தடுத்துக்கொள்வதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம். அதுமட்டுமன்றி பிள்ளைகளின் பொது நன்மைக்காக இருசாராருமே ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து இணைந்து போக முயற்சிக்கவேண்டியது கடமையாகும், பிள்ளைகளின் உளம் பாதிக்கப்பட்டு அவர்கள் நீண்டகாலத்திற்கு தாக்கத்தினால் அழிவை எட்டாது பாதுகாத்துக்கொள்ள பெற்றோர் என்ற ரீதியில் தம்மாலான எல்லாக் கைங்கரியங்களையும் செய்யத் தலைப்பட்டால் திருமண முறிவு என்ற நிலையினை வரவிடாது தடுத்துக் கொள்ளலாம். எனவே ஓரினச் சேர்க்கைபோன்ற பிள்ளைகளின் மனதைப் பாதிக்கின்ற செயல்களைச் சமூகத்தில் இருந்து ஒதுக்கித்தள்ள மனதில் வைராக்கியம் கொள்ளுதல் சிறந்ததாகும்.





# 15

# பல்தார மணமும் மணமுறிவும்

பலதாரமணம் என்பது சில சமூகங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகக் காணப்படுகின்றது. நமது தமிழர் சமூகத்திலும் இந்த மணமுறை பன்னெடுங்காலமாக கைக்கொள்ளப்பட்டு வந்துள்ளமையை அறியலாம்.

இஸ்லாமிய மதம் பலதார மணமுறையினை சட்டப்படி அங்கீகரிக்கின்றமை நாம் அறிந்ததே. ஒரு ஆணின் வருமானம், சொத்து, சக்தி என்பன அவன் பல திருமணங்களைச் செய்வதற்குத் தகுதிப்பாடானவையாகக் கருதி அதற்கு வழிவகுப்பதனைக் காணலாம்.

இந்துமதத்தின் தத்துவமே மனித வாழ்வியலில் இல்வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததாகக் கருதப்படுகின்றது. முழுமுதற்கடவுள் சிவனே அர்த்தநாரீசர் என்ற அடிப்படையில் பெண்ணிற்குச் சம உரிமை, சம அந்தஸ்த்து கொடுக்க வேண்டும் என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளார் எனினும் கங்கையினைத் தலையில் கொண்டுள்ளமை மாறுபாடான கருதுகோளைத் தருவதாகக் கொள்ளவும் இடமுண்டு.

கந்தன் இரு மனைவியரைக் கொண்டிருக்கின்ற அம்சமும் ஆண்கள் இருதாரம் செய்து கொள்ளலாம் என்பதனை அறிவுறுத்துவதாகவும் கொள்ளப்படுகின்றது. இருப்பினும் இதன் தத்துவக் கோட்பாடுகளுக்கு வாழ்வியல் விளக்கங்கள் வேறுவிதமான கருத்துக்களைத் தருவதாக உள்ளமையும் கருத்திற் கொள்ளப்படவேண்டும்.

பெண் என்பவள் கருத்தரித்து வயிற்றில் சுமந்து பெற்றெடுத்து வளர்க்கவேண்டிய பௌதிக உடலமைப்புக் கொண்டவளாகப் பிறந்துள்ளமையால் உடலியல் ரீதியில் அவர்களின் நிலை ஆண்களோடு ஒப்பிட்டு நோக்கும் போது பல தடைகளுக்குக் காரணமாக அமைகின்றது.

ஆண்களைப் பொறுத்தவரையில் பல பெண்களுடன் தொடர்புகளை வைத்துக்கொண்டாலும் அதனால் ஏற்படும் தாக்கங்கள் பெரிதாக வெளிப்படுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுவதில்லை. பெண்களைப் பொறுத்த வரையில் ஆண்களுடனான தொடர்பு அவர்களைத் தாய்மைக்கு உட்படுத்துவதனால் அவர்கள் ஒப்பீட்டு ரீதியில் பல இடர்பாடுகளுக்கு உள்ளாவது தவிர்க்க முடியாததே.

வைத்திய வாய்ப்புக்கள், பாலியல் பற்றிய அறிவு வளர்ச்சியடைந்த இந்த நிலையிலும் பெண்கள் பாலியல் தொடர்பினால் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு ஆளாகி அவதியுறும் நிலைமை போன்று ஆண்களுக்கு இல்லை என்றே கூறவேண்டும். எவ்வளவுதான் பாதுகாப்பான முறைகள் ஆண் பெண் உறவிற்கு இருந்தாலும் கூட பெண்கள், குறிப்பாக இளம் பெண்கள் தம்மை அறியாமலே கருத்தரிப்பதும் அதனை இல்லாதொழிப்பதற்கு வைத்திய உதவியை நாடுவதும் தவிர்க்கமுடியாததாக அமைகின்றது. இவ்விதமான இடர்பாடுகள் ஆண்களைப் பொறுத்தவரை இல்லை. இதனால் அவர்கள் தங்களுக்குள்ள உடலமைப்பின் தன்மைகளினால் பல பெண்களோடு

தொடர்புகளை வைத்துக்கொள்ள வாய்ப்பாக அமைந்துவிடுகின்றது. அவ்விதம் பயன்படுத்திக் கொள்பவர்களும் நம்மத்தியில் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

இவற்றை விட ஆண்கள் பல பெண்களை மணந்து கொள்ளும் தன்மை எல்லாச் சமூகத்திலும் நிலைபெற்று வந்துள்ளமை கருத்திற்கொள்ளத்தக்கது. அண்மையில் பல ஆண்கள் பெண்களிடம் காணப்படும் பலவீனத்தை பயன்படுத்திக் கொண்டு அவர்களைத் தமது அடிமைகளாகப் பாவிப்பதுமட்டுமன்றி பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் இயந்திரங்களாகப் பாவித்து வருவதும் கண்கூடு.

பலதாரத்திற்குள் இளம்வயதினரான பெண்கள் பலர் அகப்பட்டு அவதியுறுவது இந்தியாவில் மட்டுமல்ல கனடாவிலும் இடம்பெற்றுள்ளமையினை அறியமுடிகின்றது. பல மத்திய கிழக்காசிய நாடுகளில் இந்த கொடுமை தலைவிரித்தாடுவதனை அறியமுடிகின்றது.

வான்கூவரைச் சேர்ந்த - பலதார மணத்திற்குள் சிக்கிக்கொண்ட 15பெண்கள் வெளிப்படையாகத் தோன்றி கனடாவில் மணம்புரிந்து கொள்வதற்கான வயதெல்லையை அதிகரிக்கவேண்டும் என்பதற்கு ஆதரவாகக் குரல் எழுப்பியுள்ளனர்.

பிறிட்டிஸ் கொலம்பியாவின் பொவுண்டிபுல் தொடக்கம் வினிபெக், மனிரோபா வரையான பலதார மணத்திற்குப் பலியான பெண்கள் சமூகத்தினர் - பாலியற் சுரண்டல், குழந்தைத் திருமணத்திற்கு எதிராக பெண்கள் மகாநாட்டில் முன்வைக்கப்பட்ட பாலியல் சுரண்டல் மற்றும் வயது வராத இளம் பெண்களின் திருமணத்திற்கு எதிரான கருத்துகள் இடம்பெற்ற மகாநாட்டில் கலந்துகொண்டு குரலெழுப்பியிருந்தனர். “இது (மகாநாடு) உண்மையிலேயே எமக்கு பெருமளவில் உதவி செய்கின்றன” என குழந்தைகள் சட்ட வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள், காவல் துறை ஆகியோர் கலந்து கொண்டு வட்டமேசை மகாநாட்டில் கருத்துத் தெரிவித்துள்ளனர். “குழந்தைகள் குழந்தைகள்தான். இளம்

பெண்பிள்ளைகளின் தாயாக உள்ள நான் அவர்களை மிக இளம்வயதில் மணம்புரியவேண்டாம் என அவர்களுக்கு ஆலோசனை வழங்கி ஊக்கமூட்டியுள்ளேன். எனது கருத்துக்களைக் கேட்டுக்கொள்ளவேண்டும்" என்று அங்கு வருகை தந்த இளம் தாயொருவர் கூறியது குறிப்பிடத்தக்கது.

பொண்டியில் பிறந்து வளர்ந்த திருமதி பல்மர் அவர்களும் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டார். பல்மர் அவர்கள் தனது 15ஆவது வயதில் தன்னிலும் பார்க்க 40வயது கூடிய ஒரு முதியவருக்கு மூன்றாவது மனைவியாக வாழ்க்கைப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. கனடாவில் மாகாணங்களுக்கு மாகாணங்கள் திருமண வயது மாறுபடுகின்றது எனினும் கனடிய மத்திய அரசின் சட்டப்படியான திருமண வயது 14ஆக உள்ளது. இந்த நிலையில் மாற்றம் எற்படுத்தப்படவேண்டும் என்பதே பலரின் கருத்தாகும். பெண்கள் பாலியலில் ஈடுபடுவதற்கு 14வயது மிகவும் குறைந்தது. அவர்கள் இதன் காரணமாக பாலியல் சுரண்டலுக்கு ஆளாகின்றார்கள் என்பதே டெபி பல்மர் மற்றும் மார்லின் பல்மர் ஆகியோரின் கருத்தாக அமைகின்றது. 18 வயதிற்கு முன்னர் பல பெண்கள் ஏமாற்றப்படுகின்றார்கள் என்பதும் கற்புச் சுரண்டப்படக் காரணமாகின்றார்கள் என்பதும் கருத்திற்கொள்ளத்தக்கது.

மிகக் கூடிய வயதில் மூத்தவர்களைத் திருமணம் செய்து கொள்ளும் நிலைக்கு இளம் வயதுப் பெண்கள் உள்ளாவதற்கு அவர்கள் உளரீதியில் வளர்ச்சியடையாமையும், எதிர்காலத்தைப்பற்றி அறிந்து கொள்ளாமையும் காரணங்களாகின்றன.

பேதைப்பருவம் எனப்படும் இந்த இளம்வயதினர் வயது வந்த ஆண்களால் ஏமாற்றப்பட்டு, அல்லது கவரப்பட்டு பாலியலுக்கு உள்ளாகின்றார்கள். இதனால் அவர்களின் எதிர்காலமே பாழாவதைக் காணமுடிகின்றது. இந்தியாவில் மட்டுமல்ல கனடா போன்ற வளர்ச்சி

யடைந்த நாடுகளிலும் இவ்விதமான இளம்வயதில் மணம் முடித்துக் கொள்ளும் நிலை பல பெண்களுக்கு ஏற்படுவதை அவதானிக்க முடிகின்றது.

கொடுப்பதில் பெற்றோர் முன்னணி வகிக்கின்றனர் எனினும் கனடா, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் இளம் பெண்பிள்ளைகள் தாமே விரும்பி பெற்றோரின் விருப்பிற்கு மாறாக மணமுடித்துக் கொள்வதினையும் அறிகின்றோம். இந்த நாடுகளில் திருமண வயது 14 ஆக இருப்பதும் இதற்கு ஒரு காரணமாக இருப்பதோடு ஆண்களிடம் காணப்படும் கவர்ச்சி, பொருளாதார பலம் என்பனவும் இதற்கு உந்து சக்திகளாக அமைகின்றன. இந்த நிலை தொடர்ந்து நீடிப்பதால் அவர்களின் வாழ்க்கை இடையிலேயே முறிவடைகின்ற நிலை ஏற்படுகின்றது. அத்தோடு பொதுச் சட்ட (Common Law couple) குடும்ப வாழ்க்கை முறை மணமுறிவினை ஏற்படுத்தக் காரணமாக அமைகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

●●●

*குழந்தைகள் மணமும் பலதார மணமும் மணமுறிவை ஏற்படுத்துகின்றதா?*

*பலதாரமணம் என்பது சில சமூகங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகக் காணப்பட்டுள்ள போதிலும் மணமுறிவு அடைவது ஏன்?*

## குழந்தைகள் திருமணமும் பலபெண்களை மணத்தலும்

பல நாடுகளிலும் திருமணம் என்பது பெயரளவில் ஒருவனுக்கு ஒருத்தி என்னும் கருத்தாக வேதாந்தம் பேசப்பட்டு வந்தாலும் நடைமுறையில் பல பெண்களை ஆடவர்கள் வைத்திருப்பதும், பல பெண்களோடு தங்கள் காதல் இன்பத்தை அனுபவிப்பதும்

பன்னெடுங்காலமாக நிலவிவருவது அனைவரும் அறிந்ததே. மனித குலத்தின் நல நடவடிக்கைகள் நீண்டகால வாழ்வைப் பெற்றுத்தருவதனால் திருமண வாழ்வில் ஒருவனுக்கு ஒருத்தி என்னும் கட்டுப்பாடு சிறப்புடையதாக அமைகின்றது. இன்று உலகில் பரவிவரும் படுபயங்கர நோய்களில் எயிட்ஸ்- எச்ஐவி என்பன மோசமாக மனித உயிர்களைப் பலியெடுத்துவருவதனால் பாலியல் ஈடுபாடு மிகக் கட்டுப்பாடான நிலையில் இருக்கவேண்டியதனைக் காட்டி நிற்கின்றது.

பல திருமணங்களைச் செய்த அல்லது பல பெண்களைத் தமது மனைவியராக வைத்துள்ள ஆண்களினால் பல பெண்களுக்கு பெரும் சிக்கல்கள் ஏற்படட்டுள்ளன. ஆனால் இவற்றை இஸ்லாமிய நாடுகள் பெருமளவில் கருத்திற்கொள்ளாது, பொருளாதார, உடல் நல பேறுகள் நன்றாக இருந்தால் பல பெண்களை வைத்துக் கொள்ளலாம் எனக் கொள்ளப்படுகின்றது. அது பல நாடுகளில் நடைமுறையில் இருப்பதனையும் நாம் காண்கின்றோம். இதனால் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணமுடிப்பதற்காக இஸ்லாமிய சமயத்தைத் தழுவிக்கொண்டு பெயரளவில் இஸ்லாமியராகப் பதிவுசெய்து கொண்டுள்ள பலரைப் பார்த்திருக்கின்றேன். ஒரே வீட்டில் இருந்த மனைவியின் தங்கைமீது மோகங்கொண்ட மைத்துனன் தனது இச்சைக்கு வயதில் குறைந்த அந்தப்பெண்ணோடு உறவு கொண்டாடியதனால் அவருக்கு கருத்தரித்துக் கொண்டதனால் அவர் வேற்று ஊர் ஒன்றுக்குச் சென்று அங்கு இருவரும் இஸ்லாமிய முறைப்படி திருமணம் செய்து கொண்டமையை அறிந்தேன். இவ்விதமாக பலர் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களைத் தமது ஆசைநாயகிகளாக வைத்திருந்துள்ளனர். தமிழ் இலக்கியத்தினைப் புரட்டிப்பார்க்கும்போது இது தெற்றென விளங்கும். மாதவியைத் தனது மனைவியாக வரித்துக் கொண்டு அவள்வீட்டிலேயே, தனது முதல் மனைவி கண்ணகியை விடுத்து தங்கியிருந்தான் என்கிறது சிலப்பதிகாரக் காதை.

தமிழ் இலக்கியங்கள் பரத்தமை, பாற்சேறல் என்பதனை எடுத்துக் கூறுகின்றன. இதன் வழி தலைவி ஊடல்கொண்டு துயர் உறும் காட்சியினை அக்காலப் புலவர்கள் சித்தரிப்பது சுவாரஸ்யம் மிக்கதாக அமைவதனைக் காணலாம்.

பலதார மணம் மனித குலத்திற்குத் தீங்கு பயப்பதாக அமைந்திருக்கும் அதே வேளை சில விலங்குகளுக்கு நல்ல ஆரோக்கியத்தைக் கொடுப்பதாகவும் கொள்ளப்படுகின்றது. அவுஸ்த்திரேலியாவிலுள்ள சிட்னி பல்கலைக் கழகத்தில் வில்லியம் கியூஸ், அவரது சகபாடியான கொப்பன்காகன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த யெக்கப் பூம்ஸ்மா ஆகியோர் மேற்கொண்ட ஆய்வின்படி பாலியல் தொடர்புகளில் எதிர்மாறான விளைவுகளைக் கண்டறிந்துள்ளனர். அவர்கள் சிலவகை மீன்கள், நுண்உயிரிகள், பூச்சிகள், சில விலங்குகள் போன்றவற்றில் அவற்றின் பாலியல் தொடர்பாடல் பற்றிய ஆய்வுகளின்படி பல பெண்களோடு தொடர்புகொண்ட ஆண்கள் மிகவும் உடல் நலம் உள்ளவர்களாக இருப்பதாகவும், பல ஆண்களோடு தொடர்புகொண்ட பெண்கள் உடநலம் குறைந்தவர்களாகக் காணப்பட்டதாகவும் கண்டறிந்தனர். அவர்களின் முடிவின்படி இயற்கையின் தேவைக்கேற்ப பாலியற் தொடர்பினைக் கொள்ளுதல் உடல்நலத்தைப் பாதுகாக்கவும் நோய்எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கவும் காரணமாக அமைகின்றது என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

அவர்களின் ஆய்வின்படி இராணி எறும்பு பல ஆண் எறும்புகளோடு பாலியல் தொடர்பு கொள்ளுவதனால் பரம்பரைத் தன்மையைத் தமது குடியேற்றத்திற்குள் கொண்டிருப்பதோடு நோய்எதிர்ப்பு நிலையையும் கொண்டுள்ளதாகக் கியூஸ் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மனித நடத்தைக்கும் விலங்கின நடத்தைக்கும் பல மாறுபாடுகள் காணப்படுகின்றன. மனித நடத்தையில் இவற்றை ஆராயவேண்டி பல அம்சங்கள் உள.

திருமண முறைகளில் வயதாகாத இளம்பிராயத்தினரைத் தங்களின் பாலியல் தேவைகளுக்காகப் பயன்படுத்துகின்ற நிலை இன்றும் அனேக நாடுகளில் காணப்படுகின்றன. அவர்களின் விருப்பிற்கு மாறாக பாலியல் சூறையாடுகின்ற தன்மையில் 13, 14 அல்லது 15 வயதுப்பிரிவினரான பல இளம் பெண்பிள்ளைகள் பலியாக்கப் பட்டுள்ளனர்.

எனக்குத் தெரிந்த ஒருவருக்குத் திருமணமாகி இரண்டு பிள்ளைகளுடன் அவருடைய முதல் மனைவி இறந்துவிட, அவரின் மனைவியின் சகோதரி மிகவும் வயது குறைந்தவராக இருந்தபோதும் பெற்றோர் அவரின் விருப்புக்கு மாறாகத் திருமணம் செய்து வைத்தனர். இதற்கு அவர்கள் சகோதரியின் பிள்ளைகளைக் கருத்துடன் கவனிக்கவேண்டிய பொறுப்பு வேறுயாரையாவது திருமணம் செய்து கொண்டால் வராது எனக் கூறப்பட்டது. அத்தோடு மருமகன் நல்ல உத்தியோகத்திலும், சீரோடும் இருந்ததும் ஒரு காரணமாகக் கொள்ளப்பட்டது. ஆனால் அந்தக் குழந்தைப்பிள்ளை தனது எதிர்பார்ப்புக்களுக்கு மாறாக தனது வாழ்வு பாழடிக்கப்பட்டமையினால் மனமுறிவுக்கு உள்ளாகி நோய்வாய்ப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் இறந்துவிட்டார். எனவே தனித்துவிடப்பட்ட அவள் கணவர் மீண்டும் ஒரு திருமணத்தைச் செய்து கொண்டார். எனினும் அவர் ஒரே நேரத்தில் பல பெண்களை வைத்துக்கொள்ளும் ஆடவர் வகையைச் சாராதவராகவே கருதப்படுகின்றார்.


ஆனால் பலர் பல பெண்களிடம் தங்களின் காம இச்சைகளைக் காட்டித் திரிவதும் அவர்களின் காரணமாக பல பெண்கள் நோய்வாய்ப்படுவதும் இப்பொழுது சர்வசாதாரணமாகிவிட்டது.

இரண்டு பிள்ளைகளுக்குத் தாயான கொலிவூட் நடிகையான உமா அவர்கள் தனது கணவனை விடுத்து இன்னொரு ஆண்மகனுடன் தொடர்பு கொண்டுள்ளமையை ஊடகங்கள் முன்னுரிமை கொடுத்து

வெளியிட்டுள்ளன. தனது கணவனை விட்டதற்கான காரணம் அவர் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்புகொண்டார் என்பதேயாகும். ஆனால் அந்தத் தவறைச் சுட்டிக்காட்டியுள்ள உமா இன்னொரு ஆடவரோடு உறவு கொள்வதும் கண்டிக்கப்படவேண்டியதே.

பிள்ளைகளின் எதிர்காலத்தை மனதில் கொண்டு கணவன் மனைவி உறவில் விரிசல் ஏற்படாமல் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். பிள்ளைகளின் மீது பாசம் காட்டும் ஆண், பெண் இருவரிடையேயும் அந்தப் பிள்ளைகளின் நலனைக் கருத்தில் கொண்டாவது பிரிந்துவிடாது ஒருமித்து வாழ்தல் முக்கியமாகும்.





# 16

# இரண்டாந்தார மணமும் மணமுறிவும்

கனடா, ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் போன்றவற்றில் இன்று மணமுறிவு பெற்றுக்கொள்ளுதல் மிகச் சாதாரணமான ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது. சமூக அமைப்பில் ஏற்பட்டுள்ள விரிசல், அல்லது உடைசல் அல்லது ஓட்டை என்றுகூட இதனைச் சொல்லக்கூடிய வகையில் இன்று ஆண் பெண் சேர்ந்து வாழுதல், அதன் காரணமாகப் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளுதல் என்பது சர்வ சாதாரணமான ஒன்றாக இருந்தாலும் கூட பலர் இவ்விதம் பொதுச் சட்ட விதிகளின் அடிப்படையில் இணைந்து வாழ்வதனால் கிடைக்கும் தங்கள் பிள்ளைகளை என்ன செய்வது என்று தெரியாது திண்டாடுகின்றனர். பல இளம் வயதினர் தங்களின் பிள்ளைகளை அம்போ என்று நடுத்தெருவில் விட்டுவிட்டு மறைந்து விடுகின்றனர். கடந்த ஆண்டு உடலில் ஏற்பட்ட காயங்களுடன் இறந்த பிள்ளையின் தாய் அந்தப்பிள்ளையைத் தாக்கிக் கொலை செய்த குற்றத்திற்காக தற்பொழுது அதாவது ஓராண்டின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளமை நாமனைவரும் அறிந்த ஒன்று. பல சிசுக்கள் பிறந்தவுடனேயே தனியே விடப்படும் நிலைகளும் பொருளாதார வளர்ச்சி கண்ட நாடுகளிலேயே

அதிகளவில் காணப்படுகின்றன என்றால் ஏழ்மை நிறைந்த நாடுகளின் நிலைமை சொல்லவேண்டியதொன்றல்ல. பல நாடுகளில் ஆண் பிள்ளைகளை விற்றல், பெண்பிள்ளைகளானால் கொலை செய்து வீசி எறிதல் போன்ற கொடுமைகள் நிகழ்வதனை ஊடகங்களின் வாயிலாக அறியமுடிகின்றது.

மேலை நாடுகளில் சட்டங்களில் உள்ள நெகிழ்வுத்தன்மையும், வாய்ப்புக்களும் மேலும் பல பெண்களை வைத்திருக்கவும், பல திருமணங்களைச் செய்யவும் வழிவகுப்பதனை காணலாம். ஒரு ஆணோ பெண்ணோ பொதுச் சட்டத்தின் அடிப்படையில் பதிவுத் திருமணம் செய்யாது சேர்ந்து வாழுகின்ற நிலை அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும். இது பல பெண்களை அம்போ என நடுத்தெருவில் விட்டுச் செல்லும் தன்மையினை ஏற்படுத்துகின்றது. பெண்களில் உள்ள பலவீனம் பிள்ளைகளை வயிற்றில் சுமப்பது. பிள்ளை வளரத் தொடங்கியதும் அந்தக் குடும்பத்தில் பிளவு, பிரச்சினைகள் வளரத் தொடங்குகின்றன. தாயே பிள்ளையின் முழுக்கவனத்தையும் எடுக்கவேண்டிய பொறுப்புக்கு உள்ளாகின்றாள். பிள்ளையின் பராமரிப்பிற்காக தந்தை செலவினைச் செலுத்தவேண்டும் எனச் சட்டம் குறிப்பிட்டாலும் வருமானம் இல்லாதபோது அந்தத் தந்தையால் எதுவும் செலுத்தமுடியாத நிலை ஏற்படும் அல்லது அந்த நிலையினை அவர்கள் வலிந்து ஆக்கிக் கொள்கின்றார்கள். இதனால் பிரிந்து வாழ இத்தகைய சூழ்நிலைகள் அவர்களை உந்தித் தள்ளுகின்றன.

இன்று பலர்- வேலைதேடி கஷ்டப்பட்டு உழைக்க விருப்பமின்மை, குடிப்பழக்கம், சோம்பல், அரசு வழங்கும் சமூக நலப் படி போன்றன இத்தகைய நிலைக்குப் பல குடும்பங்களை இட்டுச் செல்வதினை காணமுடிகின்றது. சேர்ந்து வாழும் பெற்றோரே சமூக நலப் படியினைப் பெற்றுக் கொள்வதற்காகவே தாங்கள் பிரிந்து வாழ்வதாக அரசாங்கத்தை ஏமாற்றும் நோக்குடன் நடந்து கொள்கின்றார்கள். இது தங்களது பிள்ளைகளை தவறான வழிக்கு

இட்டுச் செல்கின்றது என்பதனை அவர்கள் உணர்வதில்லை. பொய்சொல்லி, அரசாங்கத்தின் பணம் என்பதனால் ஏமாற்றி வாழுகின்ற நிலைமையினை யாரிடமிருந்து மறைத்தாலும் சொந்தப் பிள்ளைகளிடமிருந்து மறைக்க முடியாது. இவ்விதமான நெறிதவறிய வாழ்க்கை முறை பிள்ளைகளை தவறான வழிக்கு இட்டுச் செல்கின்றது.

கனடிய புள்ளி விவரத் திணைக்களத்தின் ஆய்வு அறிக்கை கடந்த ஆண்டுகளை விட இந்த ஆண்டு கனடாவில் மணமுறிவுகள் அதிகரித்துச் செல்வதாகவும், அதிலும் இரண்டாந்தாரமாக மணமுடிப்பவர்களின் திருமணம் விரைவாக முறிவடைவதாகவும் தகவல்களைத் தருகின்றது.

குறிப்பாக திருமண முறிவுகளுக்கு மூன்று காரணங்களை முன்வைக்கலாம்.

1.குடும்பத்தினரின் வருமானம்

2.கணவன் மனைவி உறவு நிலை

3.கடன்படு நிலையும் சேமிப்பும்

கீழைத்தேய நாடுகளில் பெரும்பாலான பெண்கள் ஆண்களை நம்பி வாழவேண்டியுள்ளது. ஆனால் கனடா போன்ற மேலை நாடுகளில் ஆண், பெண் இருவரும் வேலை செய்து உழைக்கவேண்டிய நிர்ப்பந்தம் குறைந்த வருமானத்தைப்பெறும் குடும்பங்களுக்கு தவிர்க்க முடியாத சுமையாக அமைகின்றது.

ஆண், பெண் இருவரில் ஒருவராவது ஒழுங்காக வேலை செய்யவில்லை எனின் குடும்பத்தில் பிணக்குகள் தோன்றக் காலாகின்றன. ஒருவரின் உழைப்பில் இன்னொருவர் தங்கியிருப்பது சிலவேளைகளில் பிரச்சினைகள் தோன்றக் காலாக அமைந்து விடுகின்றன. பெண்கள் என்னதான் கூடிய வேதனத்தைப்

பெற்றுக்கொண்டாலும் அவர்கள் மகப்பேற்றுக் காலங்களில் விடுகையில் நிற்கும்போது அவர்களுக்கு எல்லாவகைகளிலும் உதவவேண்டியவர்கள் கணவன்மாரே. அதைவிடுத்து அவர்கள் மனங்கோணத்தக்க வகையில் நடந்துகொள்வதனால் பிரச்சினைகள் தோன்றலாம்.

வன்கூவரில் உள்ள ஒரு குடும்பத்தின் கதையை நோக்குவோம். ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பி இணைந்து வாழ்ந்து பின்னர் மணமுடித்துக் கொண்டார்கள். பெண் தனது கல்வியை முடித்து பல்கலைக்கழகமொன்றில் கடமையாற்றத் தொடங்கினார். ஆணோ தனது படிப்பை முடித்துக் கொள்ளாத நிலையிலும் அவரது கல்வி, பயிற்சி போன்ற இன்னோரன்ன செலவுகளுக்கு துணைவி தனது வருமானத்தில் உதவியதோடு வாடகை, வீட்டுச் செலவுகளையும் கவனித்துக் கொண்டு வந்தார்.

பின்னர் அவர் கர்ப்பமுற்று மகப்பேற்று விடுகையில் நிற்கும்போது கணவன் மனைவியினரிடையே பிணக்குகள் தோன்றின. வேலைக்குப் போவதற்கோ அல்லது வேலை தேடிக்கொள்வதற்கோ கணவனுக்குப் போதிய அக்கறையோ விருப்பமோ இல்லாத நிலையில் மனைவியின் தொல்லையினால் வேலையைத் தேடிக்கொண்டாலும் பொருட்களை வாங்குதல், செலவு செய்தலில் ஆணின் கட்டுப்பாடும், கேள்விகளும் மனைவியின் மனதைப் பாதித்தன. தான் உழைத்து எல்லாச் செலவுகளையும் செய்யும்போது தலையாட்டி எல்லா வாய்ப்புக்களையும் பெற்றுக்கொண்ட கணவன், மனைவி கர்ப்பமுற்றவேளையில் பொருட்களை வாங்குவதிலோ அல்லது வேறு தேவைகளுக்குச் செலவிடுவதிலோ தனது அதிகாரத்தைச் செலுத்தத் தொடங்கியதனால் அந்தக் குடும்பத்தில் பிணக்குகள் தோன்றின. இதனால் அவர்கள் குடும்ப ஆலோசகரை நாடவேண்டி ஏற்பட்டது.

“மிக அத்தியாவசியமான பொருட்களை வாங்கக்கூடிய அளவு வருவாய் இருப்பதே ஒரு குடும்பத்தின் பலத்தினைக் காட்டும் குறியாக உள்ளது, இதனைவிட சாதாரணமாக திருமண வாழ்வின் அமைதியும்

திருப்தியும் ஒரு நல்ல குடும்ப வாழ்வின் குறிகாட்டிகள்'' என குடும்ப ஆலோசனைகள் தொடர்பான ஆராய்ச்சியாளரான றொ'ான் பேர்ன்டென் லெஸ்ரர் குறிப்பிட்டுள்ளமை கருத்திற்கொள்ளத்தக்கது.

இதனை விட தனிப்பட்டவர்களின் பணம்சார்ந்த கூட்டமைப்பில் தனித்துவப் பண்புகளும், பக்கச்சார்பும் நம்பிக்கைகளும் குடும்ப வாழ்வின் அடிப்படைக் கொள்கைகளாகும் என கபிறியேல் (1997) தனது 'தம்பதிகளும் பணமும்' என்ற புத்தகத்தில் குறிப்பிடுகின்றார். இதனை உளவியலாளரும் நிதி திட்டமிடலாளருமான விக்றோறியா எப், கொலின்ஸ் அவர்களும் அனுசரிக்கின்றார். அவர் நிதியினைக் கையாளுதல் குடும்பத்தின் வெற்றிக்கு முக்கியம் என்று குறிப்பிடுவதோடு அதற்கு சுதந்திரம், பாதுகாப்பு, அதிகாரம், மற்றும் அன்பு என்பன "பணத்தின் தூண்டிகளாக'' இருப்பதாக அவர் குறிப்பிடுகின்றார். "பசி வந்திடப் பத்தும் பறந்து போம்'' "பணம் இல்லாதவன் பிணம்'' "பணம் பத்தும் செய்யும்'' என்பனபோன்ற பல முதுமொழிகளை எம்மவர்கள் அடிக்கடி உபயோகிப்பதன் உட்பொருள் எது என்பதனை உணர்ந்து கொள்ளுதல் பயன் தரத்தக்கது. காசேதான் கடவுளப்பா என்பதுபோன்ற நிலை இன்று எம்மவர்களிடையே காணப்படுகின்றது. பணமே திருமணத்தைத் தீர்மானிக்கும் கருவியாகவும் ஆகிவிடுகின்றது. அதுவே இன்று குடும்பங்கள் பிரிவதற்கும் அடிப்படைக்காரணமாக அமைகின்றதனையும் நாம் கருத்தூன்றிக் கவனித்தல் நன்று. இந்த நிதிப் பிரச்சினை நம் ஒவ்வொருவரையும் பாதிக்கின்றது. யாரும் பணத்தின் பாதிப்புக்கு உள்ளாகாமல் வாழமுடியாது. சாலையில் போக்குவரத்து நெரிசலுக்கு உட்பட்டு போராடுவதுபோன்று, சொல்ல முடியாத நினைவில் நிற்காத காரணங்களாக இவை அமைகின்றன. உங்கள் வாழ்க்கையில் வெவ்வேறு காலப்பகுதியில் இவை உங்களில் ஆதிக்கம் செலுத்துவதனைக் காணலாம்.

பணம் மனித வாழ்வில் முக்கியத்துவம் பெறுவதுபோன்று அது மணமுறிவுக்கும் காரணமாக அமைந்து விடுகின்றது. பல

குடும்பங்கள் பணப்பிரச்சினைகளினால் பிரிந்து வாழ்வதினைக் காணமுடிகின்றது.

சில குடும்பத்தினரில் ஒருவர் ஏதோ ஒரு துர்ப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டு தாம் உழைக்கும் பணத்தினை அழித்தொழிப்பதோடு, குடும்பத்தில் பிரச்சினைகள், பிணக்குகள் தோன்றக் காலாக அமைகின்றார். சூதாட்டம், மதுபானம் பாவித்தல், போதைப்பொருளுக்கு அடிமையாதல், மாற்றான் மனை நாடல் போன்றவற்றோடு சிலர் வேலைக்குப் போவதற்கு விரும்பாமை, கணவன் மனைவியருக்கிடையே சந்தேகம் இவற்றிற்கு மேலாக கோபம், பொறுமையின்மை என்பனவும் காரணிகளாக அமைகின்றன.

கணவன் மனைவியரிடையே ஒருவருக்கொருவர் ஏற்படும் கோபம் மணமுறிவில் இட்டுச் செல்வதனை அல்லது பிரிந்து வாழ்வதற்கு இட்டுச்செல்வதினைக் காணலாம். மாமன், மாமி, சகோதரர், மைத்துனர் ஆகியோரில் ஏற்படும் கோபமும் மணமுறிவுக்குக் காரணமாக அமைவதினைக் காணலாம். பின்னர் இவை பற்றி ஆராய்வோம்.

## கனடா, ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் போன்றவற்றில் இப்போதைய மணமுறிவு

எதிர்காலத்தில் பாலியல் தொடர்பின்றி பிள்ளைகளைப் பிரசவிக்கமுடியுமா? பலதார மணம் முடிவடைந்துபோகும் ஒன்றா? என்பன பற்றிச் சிந்திக்கத்தூண்டும் ஒரு நிலையை விஞ்ஞான ஆய்வுகள் ஏற்படுத்தியுள்ளன. அதாவது Gloning எனப்படும் முளை உருவாக்கம் ஆண் பெண் பாலியல் உறவு இன்றியே குழந்தைகளை உருவாக்கமுடியும் என்னும் கண்டுபிடிப்பு இந்த நிலைக்கு மனிதனைக் கொண்டு சென்றுள்ளது. மீன், சில கிருமிகள், நுண்ணுயிரிகள் போன்றவை பாலியல் தொடர்பு எதுவுமின்றி இனப்பெருக்கம் செய்கின்றனவா என்ற கேள்விக்கு விடை காணப்படவில்லை எனினும்

இவை இயற்கையின் படைப்புக்களே என்பதைக் கருத்தூன்றிக் கவனிக்கவேண்டியது அவசியமானது.

பண்டைய காலத்தில் பாலியல் தொடர்பினை அறுப்பதே நிலைபேறான முத்திக்கு வழி எனப் போதிக்கப்பட்டு வந்துள்ளது. உலகியல் துன்ப நிலைக்கு பெண் ஆசை, மண் ஆசை, பொன் ஆசை ஆகியன காரணங்களாக முன்வைக்கப்பட்டன. இது எல்லாச் சமயங்களினாலும் முன்வைக்கப்பட்டு பொதுவான ஒரு கருத்தாகக் காணப்படுகின்றது.

சன்னியாச வாழ்வைக் கைக்கொள்ளும் விதிமுறைகளை இந்து, பௌத்த, சமண, ஜெயனிச, கிறிஸ்த்தவ மதப் பிரிவுகள் முன்வைத்துள்ளமை கண்கூடு. உலகியல் வாழ்வியலின் முக்கியத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்த இந்துத் தத்துவமே ஆண் பாதி பெண் பாதி என்னும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. அர்த்த நாரீஸ்வரர் என்ற பெயர் இறைவனுக்குக் கொடுக்கப்பட்டதன் கருப் பொருள் அதுவாகவே காணப்படுகின்றது. இதற்கு மேலாக சிவலிங்க வழிபாட்டு முறையும் குடும்பப் பிணைப்பினை அடிப்படையாகக் கொண்டதாக ஆண், பெண் இருவரதும் சேர்வின் உட்பொருளைத் தூய்மைப்படுத்துவதாக, உலக வாழ்வின் முக்கியத்துவத்தின் அடிப்படையாக அமைந்திருப்பதைக் காணலாம். இதன் அடுத்துபடியாகவே மோன நிலை, தவநிலை, சன்னியாசம், துறவு என்பன கற்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அடிப்படையில் சமணர்கள் திருமணம் செய்துகொள்வதால் இறைவனை அடையமுடியாது என்ற கொள்கையினைக் கொண்டிருந்தனர். அதுபோன்று பௌத்தமதத்தைத் தோற்றுவித்த கௌதம புத்தர் இளவயதில் திருமணம் முடித்திருந்தாராயினும் உலக மக்களின் அல்லல்களுக்கான காரணங்களைக் கண்டறிய தனது இல்வாழ்வைத் துறந்து சன்னியாசம் பூண்டு போதி மர நிழலில் கடுந்தவமிருந்தார் என்பது வரலாறு.

கிறிஸ்தவ மதகுருமார் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பதும் - அவர்கள் ஆசாபாசங்களைத் துறந்தவர்கள், அவற்றிற்கு அப்பாற்பட்டவர்கள் என்ற அடிப்படையில் இறைவனோடு தொடர்புடையவர்கள் என்ற கருத்தை வலியுறுத்துவதாக அமைகின்றது.

இந்த அடிப்படையில் பார்க்கும்போது பலதார மணம் புரிதல் பண்டைக்காலத்தில் பெரும் குற்றமானதாகக் காணப்படவில்லை என்பதும் கருத்திற்கொள்ளப்படவேண்டியது. பூவுலக வாழ்வில் அது ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் தேவர்களிடம் அவ்வாறான வழக்கம் இல்லை என்ற கருத்தை வலியுறுத்துவதாக சுந்தரரின் வரலாறு சித்தரிக்கப் பட்டுள்ளது. சுந்தரர் தேவலோகத்தில் இருந்தவேளை தேவலோகப் பணிப்பெண்களில் இச்சை கொண்டமையால் சாபமிடப்பட்டு பூலோகத்தில் மனிதப்பிறவி எடுத்து பரவையார், சங்கிலியார் என்னும் இரு பெண்களையும் மணந்து கொண்டார் என்பது வரலாறு.

ஆனால் முருகக் கடவுள் வள்ளி, தெய்வானை என்னும் இரு வரை மணந்துகொண்டார் என்பதும் மனித வாழ்வியலில் மனித சக்தியை அதாவது இரண்டு சக்திகளை பெற்றுக்கொள்வதற்கான ஒரு அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றது. ஆனால் கதை உருவகத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட பெண்களை மணந்து கொள்ளலாம் என்பதனை எடுத்துக்காட்டுவதாகவே கொள்ளக் கிடக்கின்றது.

மனித வாழ்வியல் முறையிலிருந்து விலங்குகளின் வாழ்வியல் முறை, இனப்பெருக்க முறை என்பன வேறுபட்டுக் காணப்படுகின்றன. மனிதனை விட விலங்குகள் பாலியல் உறவு கொள்ளும் தன்மை குறிப்பிட்ட காலப்பகுதியிலேயே இடம்பெறுகின்றது. அதாவது பெண் விலங்குகள் கருத்தரித்துக் கொள்ளவேண்டிய காலத்தைக் காட்டும் உடல் வெப்பமடையும் காலத்திலேயே பாலுறவை விரும்பி ஆண்விலங்கை நாடுகின்றது. அத்தோடு அவ்விலங்கின் பாலியல் தொடர்பு அடுத்த உடல் வெப்பமடையும் காலம் வரையும்

இடம்பெறுவதாக இல்லை. அவையின் இயற்கை அமைப்பாற்றல் அப்படியானதாக அமைந்துள்ளது. எடுத்துக்காட்டாக சிங்கம் உறவு கொள்ளும் காலம் மிகவும் நீண்டதாக அமைகின்றது. பல ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் பெண்சிங்கம் அவ்விதம் பாலியல் உறவை ஏற்படுத்திக் கொள்ளுகின்றது. அதாவது 12 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் சிங்கம் குட்டி போடுகிறதாம். ஆனால் மனித இனத்தின் நிலை அப்படியானதல்ல. மனிதன் நினைத்த நேரம் பாலியல் தொடர்பு கொள்வதற்கான தூண்டிகள் வேலை செய்யத் தொடங்கிவிடுகின்றன. இதனால் பல பிரச்சினைகளை எதிர் கொள்ளும் நிலை மனிதர்களிடையே காணப்படுகின்றது.

கற்பழித்தல் என்பது மனித மிருகங்களை விட வேறு எந்த விலங்குகளிடமும் காணப்படாத ஒன்றாக உள்ளது. ஆறு அறிவு பெற்ற மனிதன் எனப்படுகின்றானே தவிர தனது மனதை, உள்ளுணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாத அளவில் பலாத்காரம், கற்பழிப்பு, தன்னினச் சேர்க்கை, ஒவ்வாத பாலியல் தொடர்பு, கொலை, களவு போன்ற பாதகச் செயல்களில் ஈடுபடுகின்றமைக்கு மனித உடலியல் அமைப்பும் ஒரு காரணமா? - என்ற கேள்வி எழத்தான் செய்கின்றது.

சிங்கம், புலி, பூனை, நாய், ஓநாய் போன்ற விலங்குகள் தாங்கள் பெற்ற குட்டிகளையே தின்று விடுகின்ற நிலை காணப்படுகின்றன. இவற்றைவிட மனித விலங்குகளின் செயற்பாடுகள் சிற்சில வேளைகளில் மிக அதிகமாகவே காணப்படுகின்றன.

ஒருவனுக்குப் பல பெண்கள் என்ற ஆண் ஆதிக்க நிலை பன்னெடுங்காலமாக மனித வரலாற்றில் இடம்பிடித்து வருவது உண்மையே. சில சமய விதிகள் இதற்கு வழியும் வகுத்துக் கொடுத்துள்ளன. இந்த அடிப்படையில் ஆண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களைத் திருமணம் செய்து கொள்ளலாம் எனப்படுகின்றது.

அதனைச் சரியென அந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்கள் ஏற்றுக்கொண்டு நடைமுறையில் கைக்கொள்வதினையும் காணமுடிகின்றது. "We may think of ourselves as a monogamous species, but we're coming from an evolutionary history that's probably slightly polygamous," said Michael Hammer, a research scientist at UA's Arizona Research Laboratories. "If we're shifting toward monogamy, it's so recent it hasn't left an imprint in our genome." (2004) என மக்கேல் ஹமர் தான் மேற்கொண்ட ஆய்வின் விளைவாக எடுத்துக் காட்டியிருப்பது நமது சமுதாயத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பட்ட நிலை நிரந்தரமான ஒன்றாக அமைந்துவிடவில்லை என்பதுதான்.

ஆண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களைத் திருமணம் செய்வதற்குப் பெண்களே தூண்டுகின்ற கட்டமைப்பு சில சமூகங்களிடையே காணப்படுகின்றது. பல பெண்களின் மூலம் தங்கள் குடும்பம் பெரிதாக வளரும். அதிக தொகையான பிள்ளைகள் வந்து சேர்வார்கள். அது தங்களுக்கு நன்மைதருவதாக அமையும் என அவர்கள் கருத்துத் தெரிவிப்பதனை நேரடியாகவே கேட்கக்கூடிய வாய்ப்பு எனக்குப் பலமுறை கிடைத்துள்ளது.

குடும்ப வாழ்க்கை என்பதற்குப் பலரும் பலவிதமான அர்த்தத்தைக் கொடுக்கின்றார்கள். தங்களுக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப அவற்றை மாற்றியும் திரித்தும் கருத்துக் கூறுகின்றார்கள். மனித இனம் கூடிவாழுகின்ற சனக்கூட்டமாக மட்டுமன்றி இணைந்து பண்பாட்டோடு வாழுகின்ற வாழ்க்கை முறைகளைக் கொண்டுள்ளது. இந்த வகையில் மனிதப் பிறவியில் குடும்ப வாழ்வியல் என்பது புனிதமானதாகக் கொள்ளப்படுகின்றது. ஒருவனுக்கு ஒருத்தி என்பது ஏற்றுக்கொள்ளப் படவேண்டிய ஒன்று என்பதனை நாம் பலரை மணமுடித்தல் அல்லது பலருடன் பாலியல் தொடர்புகொள்ளுதல் என்பதனால் ஏற்படும் தீய விளைவுகளால் நாளாந்தம் அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. தகாத உடலுறவு அல்லது பலருடன்

உடலுறவு கொள்வதினால் ஏற்படும் உடல் நோய்கள் பலதரப்பட்டன. எச்.ஐ.வி எனப்படும் நோய்த்தாக்கம் எயிட்ஸ் என மனித உடலை வலுவற்றதாக்கி நோய் எதிர்ப்புச் சக்தியை இழக்கச் செய்து இறக்கவைக்கின்றது என்பது நாம் அறிந்த உண்மை. இன்று உலகநாடுகளை தன் கோரப்பிடிக்குள் சிக்க வைத்திருக்கும் இந்த கொடிய ஆட்கொல்லி நோய்க்கு வயது, பால், ஆண், பெண், பிள்ளைகள் என்ற வேறுபாடின்றி அனைவரையும் அத தாக்கிக் கொண்டு இருப்பதினை அறியமுடிகின்றது. நோய் உள்ள ஒருவருடன் உடலுறவு கொள்ளுவதால் தொற்றிக் கொள்ளும் இந்த நோய் கணவனுடனோ, அன்றி மனைவியுடனோ தொடர்பு கொள்ளும் போது அவர்களையும் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளையும் தொற்றிக் கொள்கின்றது. இதன் காரணமாக இன்று பல நாடுகளிலும் இந்த நோயினால் இறந்துபடுவோர் தொகை அதிகரித்து வருவதைக் காணமுடிகின்றது.


இவை பல மனைவியரை மணமுடிக்கும் முறையினால் கூட பாதிப்பினை ஏற்படுத்துவதினை மறுக்கமுடியாது. ஆண்களோ அன்றி பெண்களோ இந்த நோய்கள் தொற்றிக்கொண்ட ஒருவருடன் தொடர்பு கொள்வதனால் இந்த நோயை வேறு ஆட்களுக்கும் பரப்புபவராக மாறிவிடுகின்றார். இவ்விதம் நோய் தொற்றிக் கொண்டமை கண்டறியப்படுவதனால் பல குடும்பங்கள் மனவிரக்தியின் காரணமாக பிரிவதனைக் காணலாம். இந்த நோய்களும் மணமுறிவுக்கு இட்டுச்செல்லும் காரணிகளாக உள்ளன.


பலதார மணம் கோபக்கனலை ஏற்படுத்துவதும் அதன்வழி குடும்பங்களிடையே பிளவுகளை ஏற்படுத்துவதும் கண்டறியப்பட்ட உண்மைகள். கோபம் காரணமாக பிரிந்து பின்னர் தங்கள் வாழ்வையே பாழடிக்கின்ற நிலைக்குப் பல பெண்களும் ஆண்களும் உள்ளாகி இருக்கின்றனர்.

பெண்களின் மீது ஆண்கள் சந்தேகம் கொள்வதும் ஆண்கள் மீது பெண்கள் சந்தேகம் கொள்வதும் மனக்குரோதத்தை ஏற்படுத்தி அதன்விளைவினால் பல குடும்பங்கள் பிரிந்துள்ளமையினை அறியலாம்.

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

- எனும் பொய்யாமொழியாரின் கூற்று வாழ்க்கைக்கு எத்துணை தேவையானது! கோபத்தினை அடக்கிக் கொள்ளமுடியாத பலரின் குடும்பங்கள் உடைந்து சிதறுண்டு போயிருப்பதனைக் காணலாம். அடுத்து இதை விரிவாகப் பார்க்கலாம்.





17

# சிறுவிடயங்களில் ஏற்படும் சினமும் சீற்றமும் மணமுறிவுகளும்

"சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்" – வள்ளுவம்

- என்பதற்கமைய சினத்தின் காரணமாக பல குடும்பங்கள் பிரிந்து சிதறுண்டு போயுள்ளன. உறவில் விரிசலை ஏற்படுத்த வல்லது சினம். சினம் கொண்டவர் எதிலும் தோல்வியே அடைவதோடு, சினத்தீயினால் தன்னையே சுட்டுக்கொள்ளும் நிலையினையே ஏற்படுத்துகின்றார். கோபம் தலைக்கேறும்போது உணர்ச்சி நரம்புகள் விம்மிப்புடைக்கின்றன. இரத்த நாள, நாடிகள் வேகமாகச் செயற்படுகின்றன. இதயத்துடிப்பும் அதிகரிக்கின்றது. இதனால் இரத்த அழுத்தம் அதிகரிக்கின்றது. இதன் காரணமாக உணர்ச்சி வசப்படும் ஒருவர் தனக்கே தீங்கை விளைவிக்கின்றார். இந்த நிலை குடும்பப்பிரிவினைக்கும் இட்டுச்செல்கின்றது. சாதாரணமாகப் பேசித்தீர்த்துக் கொள்ளக்கூடிய விடயங்கள் பலவற்றிற்கெல்லாம் கடும் கோபம் கொள்ளுவதனால் பலவற்றை இழந்துவிடுகின்ற நிலைக்கு

பலர் ஆளாகி, பின்னர் மனம் நொந்துகொள்வதோடு அவற்றைப் பற்றிக் கவலைப்படுவதனால் மேலும் தங்கள் உடலுக்கு ஊறுவிளைக்கின்றனர். "Divorce-related anger can literally make you crazy — causing you to say and do things you'd never dream of if you were thinking clearly. Even though it's a normal part of the healing process, anger can become a destructive force in your life." *By Jane Nahirny*

குடும்ப நல ஆலோசகரான ஜேன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளமையினை நாம் பிரிந்து வாழுகின்ற பலரிடையே காணமுடிகின்றது. சமுதாயக் கட்டுப்பாடுகள் இறுக்கமாக, பிரிவினை ஏற்பட விடாத நிலையினை பண்டைக்காலம் தொட்டுப் பேணிவந்த மனித வாழ்வியலில் *'மணமுறிவு'* என்னும் கரும்புள்ளி குடும்ப வாழ்வைச் சிதைத்துச் சின்னாபின்னமாக்குவதில் *'கோபம்'* முக்கிய பங்கினை வகிக்கின்றது.

கணவன் மனைவி ஆகிய இருவரிடையேயும் உள்ள உறவு அப்பழுக்கற்றதாக இருக்க வேண்டும். எதனையும் இருவரும் மனம் திறந்து பேசி ஒருவரை ஒருவர் புரிந்துணர்வோடு நடந்து கொள்ளவேண்டியது முக்கியமானதாகவும் குடும்ப வாழ்வின் சிறப்பிற்கும் நீடிப்புக்கும் வழிவகுப்பதாகவும் அமைகின்றது.

கோபம் பிரிந்துவாழத் தூண்டுவதோடு நிரந்தர மணமுறிவுக்கும் இட்டுச்சென்று நீதிமன்றின் படிகளுக்கும் இழுத்துச் சென்று விடுகிறது. இதனால் பாதிக்கப்படுபவர்கள் பிரிந்து வாழும் கணவன் மனைவியர் மட்டுமல்ல அவர்களின் குழந்தைகளும் என்பதனை அறிந்துகொள்ளுதல் மிக முக்கியமானதாகும். பிரிவினை தொடர்பான கோபம் பலரிடையே பல கருத்து மோதல்களை ஏற்படுத்தியுள்ளது. சாதாரணமாக இணங்கிப் போகக்கூடிய ஒருவிடயமாக இருந்தாலும் கோபம் என்பது அதனைச் சிக்கலுடையதாக ஆக்கி உங்களுடைய வாழ்வைச் சீரழிக்கும் ஒரு சக்தியாக அமைவதினைக் காணலாம்.

பலர் கோபத்தீயைக் கட்டுப்படுத்த முடியாதவர்களாக அதன் வழி தாம் சென்று தமது வாழ்வை மட்டுமன்றித் தமது பிள்ளைகளின் வாழ்வினையும் பாழாக்கிக் கொள்ளும் தன்மை காணப்படுகின்றது. பலர் தங்கள் வழிக்கு மற்றவரைக் கொண்டுவருவதற்காக சில தீர்மானங்களை எடுத்து அதில் விடாப்பிடியாக நிற்பதினால் பாரதூரமான விளைவினை எதிர்பார்ப்புக்கு மாறாகப் பெற்றுக் கொள்கின்றனர்.

கோபம் என்பது எங்களனைவருக்குமே பழக்கப்பட்ட தொன்று. யாரும் இதற்கு விதிவிலக்கானவர்களல்ல. கோபத்தைக் கையாளும் நிலைமைகள் மாறுபட்டனவாகக் காணப்படுகின்றன. இந்தக்கோபம் என்பது உணர்ச்சிவசப்படும் நிலையில் ஏற்படுகின்றது. அந்தக்கோணத்தில் பார்க்கும்போது கோபம் நல்லதொரு உறவினை ஏற்படுத்தவும் காலாக அமைகின்றது. ஊடல் பற்றித் தமிழ் இலக்கணம் கூறுகின்றது. ஊடலின் கூடல் இன்பம் பயப்பது. ஊடலுக்கு அடிப்படை கோபம். ஆனால் அது வஞ்சம் தீர்ப்பதாகவோ, வன்மம் நிறைந்ததாகவோ அமைவதில்லை. கோபம் வன்னமத் தீயை வளர்க்குமானால் அதுவே பிரிவினைக்கு, மற்றும் பாரிய பின்விளைவுகளுக்கு இட்டுச்செல்வதாக அமைந்துவிடுகின்றது. “Anger is a very healthy emotion. Healthy anger can tell us if there’s something wrong — something painful and threatening that we need to take care of. It helps us protect ourselves, and to know when people are crossing our boundaries.” vd Chet Mirman, Ph.D., a licensed clinical psychologist and director of The Center for Divorce Recovery - என்பவர் குறிப்பிடுவதனை நோக்கும்போது கோபப்படுதல், அல்லது சினத்தல் சிலவேளைகளில் நன்மை பயப்பதாகவும் அமைந்துவிடுகின்றது.

கோபம், தவறான எண்ணப்பாங்கு போன்றவற்றினால் பிரிந்துவாழும் தம்பதியினர் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்திற்கொள்ளாது தமது எண்ணத்தின் வயப்பட்டவர்களாக ஒருவரை ஒருவர் குறைகூறிக்கொண்டு நிரந்துர மணமுறிவுக்காக நீதிமன்றங்களை

நாடுகின்ற நிலை மிகவும் பாரதூரமான விளைவுகளைப் பிள்ளைகளுக்கு மட்டுமன்றி பெற்றோருக்குமே ஏற்படுத்துகின்றது.

*"எனது கணவன் என்னையும் எனது பிள்ளைகளையும் விட்டுச் சென்றபின்னர் நானும் எனது பிள்ளைகளும் சீரழிந்துபோயுள்ளோம். எனது நண்பர்கள் எல்லோருமே எனக்கு வெவ்வேறுவிதமான ஆலோசனைகளை வழங்கிவந்தனர். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. முன்னேற்றகரமான உங்களது பாதுகாப்பு தகவல்களைப் பார்த்து அவற்றைப் படித்ததன் பின் சட்டத்தின் கீழ் எனது உரிமைகள் என்ன என்பதை அறிந்துகொண்டேன். இப்போது நாங்கள் இதிலிருந்து தப்பிப்பிழைக்கலாம் என்பது எனக்குத் தெரியும். உங்களுக்கு மிக்க நன்றி"* என ரொறன்ரோவைச் சேர்ந்த பிரண்டா, ரி. என்னும் தாயார் தான்பட்ட துன்பங்கள் பற்றி Divorce Resource Canada என்னும் இணைய தளத்தின் மூலம் தான் பெற்றுக்கொண்ட விவரக் கோப்பைப்பற்றி குறிப்பிட்டுள்ளார்.

இவ்விதமே ஒசாவாவைச் சேர்ந்த ஜெரோமி, எல். என்பவர் இந்த கனடிய மணமுறிவு சாதனங்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போது பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "கடந்த இரண்டரை ஆண்டுகளாக நான் 20இலட்சம் டாலர்களுக்கும் மேலாக வழக்குரைஞர்களுக்குச் செலவுசெய்துள்ளேன். இரண்டு வாரங்களுக்கு முன்னர் நான் இந்த பாதுகாப்புப் பொதியினைப் பெற்றுக்கொண்டேன். நான் பிரிந்தவுடனேயே இதனைப் பெற்றிருக்கவேண்டும் என நான் இப்பொழுது உணர்கின்றேன். முன்னரே நான் எடுத்திருந்தால் ஆயிரமாயிரம் டொலர்களை நான் சேமித்திருக்க முடியும். எனது மணமுறிவு இன்னும் முடியவில்லை. இப்போதாவது நான் பெற்றுக்கொண்டுள்ளேன். உங்கள் உதவிக்கு நன்றி"

"எனது மனைவியும் நானும் ஏறக்குறைய ஒரு வருடத்திற்கு மேலாக பிரிந்துவாழ்கின்றோம். அன்றிலிருந்து எனது வாழ்வு நரகத்தில்

வாழ்வதுபோன்றுதான் இருந்தது. அவள் மிக நல்லவள் ஆனால் அவளின் வழக்குரைஞர் உண்மையிலேயே இரத்தம் உறிஞ்சுபவராகவே உள்ளார். எனது வழக்குரைஞரிடம் நான் கேள்விகள் கேட்கும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் அவர் என்னிடம் பணம் அதற்காக அறவிடுகின்றார். நான் உனது பாதுகாப்புப் பொதியினை எடுத்து அதனைப் படித்தபோது சிலவேளைகளில் திருத்திக்கொள்ளக்கூடியதாக உள்ளது. இவ்வாறு யாராவது முன்னர் தந்துள்ளார்கள் என்று என்னால் நம்பமுடியவில்லை. நன்றி!" எனக் குறிப்பிட்டுள்ளார் எட்மின்ரனைச் சேர்ந்த மைக் என்பவர். இவ்விதமாக எம்மவர்கள் சாதாரணமான சிறு சிறு கருத்து வேறுபாடுகளுக்காக உறவைப்பிரித்துச் சென்று தமது வாழ்வை நாசமாக்குவதோடு தமது பிள்ளைகளின் வாழ்வையும் படுகுழிதோண்டிப் புதைக்கின்றார்கள். சகிப்புத்தன்மை மிக்கப் பெற்றோர்கள் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வைக் கருத்திற்கொண்டு தமது பிணக்குகளை விட்டுக்கொடுத்து வாழும் வழிமுறைகளைப் பின்பற்றுதல் எல்லோருக்குமே நன்றி பயப்பதாக அமையும்.

கோபத்தின் போக்கிடமாக நீதிமன்றினைப் பயன்படுத்துதல் என்பது தம்பதியினருக்கு மிகவும் பாரதூரமான தவறான செயலாகும். கோபத்தைத் தீர்த்துக்கொள்வதற்காக தெரிவுசெய்யப்படும் இடமான நீதிமன்றம் ஒரு தவறான இடம். அது பணத்தின் ரீதியிலும் உணர்ச்சியின் அடிப்படையிலும் மிகுந்த செலவினைத் தரும் ஒன்றாகும். சட்டப்படியான மணமுறிவு முன்னெடுப்புக்கள் கோபத்திற்கு மேலும் எரியூட்டவல்ல எண்ணெயாக அமைகின்றது. திருமணத்தின் காரணமாக சொத்துக்களைப் பிரித்துக்கொள்ளுதல் என்பது - மணமுறிவால் என்ன இழப்பு அல்லது மாற்றம் என்பதற்கான காரணங்களை நீதிமன்றத்தில் உங்கள் தரப்பில் வைக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கும் அது உங்களைத் தள்ளி விடுகின்றது. உங்களுடைய கணவனையோ அல்லது மனைவியையோ இதனால் ஒன்றுமில்லாத பிச்சைக்காரராக வங்குறோத்து நிலைக்குத் தள்ளிவிடுகின்றீர்கள். எனது

மூக்குப்போனாலும் பரவாயில்லை எதிரிக்குச் சகுனப்பிழையாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் மதியை மயக்கும் கோபாக்கினியில் இருந்து விடுபட்டு அதற்குக் கட்டுப்படாமல், கோபத்தைக் கட்டுப்படுத்துவதனால் பல நன்மைகள் கிடைக்கின்றன. பல மணமுறிவுகளுக்குக் காலாக அமையும் கோபத்திலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகள் பற்றி அடுத்துப் பார்ப்போம்.

> "சினத்தைப் பொருள்என்று கொண்டவன் கேடு
> நிலத்துஅறைந்தான் கைபிழையா தற்று" - வள்ளுவம் 307

சினத்தைத் துணையாகக் கொண்டு அதன்மூலம் எதனையாவது சாதித்துவிடமுடியும் அல்லது அது தனக்குப் பெருமையை, உயர்வை, தகுதியைத் தேடித்தரும் என எண்ணி அதன் வழி செயற்படுவோர் ஒருபோதும் வெற்றிப்பாதையில் செல்லமாட்டார் என்பது வள்ளுவரின் வாய்மொழி. அதனை மேற்படி குறட்பா எடுத்து உணர்த்துகின்றது. சினத்தைத் தனது இயல்புக் குணமாகக் கொண்டவன் அந்தச் சினத்தீயினாலேயே அழிந்து போகின்ற தன்மையை இந்தக் குறள் விளக்கி நிற்கின்றது. யானை தன் துதிக்கையினால் சேற்றை எடுத்து தனது முதுகிலேயே அப்பிக்கொள்ளவது போன்று கோபத்தினை தனது ஆயுதமாக எடுத்துக்கொள்ளுபவன் அதனால் தனக்குத்தான் தீங்கை ஏற்படுத்திக் கொள்கின்றானே தவிர அதனால் மற்றவர்களுக்குத் தீங்குவருவது இல்லை.

ஒருமித்து தமது வாழ்வை ஆரம்பித்த கணவன் மனைவியரில் பலர், திருமணவாழ்வின் பயனாக அடையவேண்டிய பயன்களில் ஒன்றான பிள்ளைப் பேற்றைக்கூடப் பெற்றபின்னர் அந்தப் பிள்ளைகளைத் தாய், தந்தை என்ற நிலையில் இருந்து ஆதரவுதந்து வளர்க்கவேண்டிய பாரிய பொறுப்பு சமுதாயத்தில் உண்டு - மனிதப் பண்பாட்டியல் வரலாற்றில் காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வருகின்ற ஒரு நடைமுறை என்பதிலும் பார்க்க மனித நாகரிகமும் கூட - அதனை மறந்து, ஏதோ

கணவன் மனைவியரிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகள், தவறுகள் காரணமாக அவர்கள் பிரிந்து வாழமுற்படுவது சமுதாயத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஒன்றன்று. ஏதோ கணவன் மனைவியர் இருவரிடையேயும் ஏற்படும் பிணக்குகள் காரணமாக ஏற்படும் நடத்தை, மனப்போக்கு, விரக்தி, சந்தேகம், வருமான மூலங்கள், பொருளாதார நிலைமைகள் போன்ற காரணங்களினால் அவர்கள் ஒருவரை ஒருவர் குறை, குற்றம் சுமத்திக்கொண்டு பிரிந்துவாழ முற்படுகின்றார்கள். இவற்றின் பயனாக அவர்கள் நிரந்தரமாகவே பிரிவதற்கான மணமுறிவு வரை செல்வதற்குத் தயாராவதற்கு அவர்களிடையே ஏற்படும் கோபமே காரணமாகின்றது. இணைந்து வாழக்கூடிய தன்மைகள் இருந்தபோதிலும் வைராக்கியம், கோபம், ஆத்திரம், ஆணவம் என்பன அவர்களை மீண்டும் இணையவிடாது மணமுறிவுக்கு இட்டுச்செல்லுகின்றதனைக் காணமுடிகின்றது.

தாம் அப்படி மணமுறிவுக்கான நீதிமன்ற அணுகுமுறைகளைப் பின்பற்றிய பின்னரும் சிலர் மீண்டும் இணையலாம் என்ற எண்ணப்பாங்கு உடையவர்களாக இருப்பதும் உண்மையே. முன்னர் குறிப்பிட்டது போன்று கணவனோ அல்லது மனைவியோ பிரிவினைக்குப் பின்னர் வேறு மறுமணம் செய்துகொள்ளும்போது முன்னைய கணவனோ மனைவியோ கோபத்தினால் செய்வதறியாது ஆத்திரம் தலைக்கேற ஏறுமாறாக நடந்து கொள்ளுகின்ற சந்தர்ப்பங்களும் இடம்பெறுவதனைக் காணலாம்.

கோபம் வரும்போது அதனைத் தணித்துக்கொள்ள என்னசெய்யலாம் என்பது பற்றி கலிபோர்னியாவைச் சேர்ந்த மனவழுத்தத்திற்கான வைத்தியக் கலாநிதி Dr. Andrea Brandt, Ph.D. M.F.C.C. அவர்கள் ஆய்வினை மேற்கொண்டு சில ஆலோசனைகளை முன்வைத்துள்ளார். அவரின் கருத்தின்படி நீங்கள் கோபமுற்றிருந்தால்:

- **அதனை எழுதுங்கள்:** ஒரு நாட்குறிப்பேட்டை அல்லது ஒரு கடிதத்தை எழுதுங்கள்

- **கத்தித் தொலையுங்கள்:** உங்கள் வாகனத்தின் அல்லது வீட்டின் சன்னல்களை அடைக்கமுடியுமானால் அவற்றை நன்கு மூடிவிட்டு அல்லது உங்கள் தலையணைக்குள் தலையைப் புதைத்துக்கொண்டு சத்தம்போட்டு கத்துங்கள். அதனால் உங்கள் உடலில் உள்ள தீய சக்தி சற்றுக்குறைவடைவதோடு உங்கள் சினத்தீ அணைந்துவிடும்.

- **அதைப்பற்றிக் கதையுங்கள்:** நீங்கள் கோபத்தில் இருக்கும்போது உங்களது சொந்த துணையமைப்பினை விருத்திசெய்வது அவசியமானதாகும். எனவே உங்களின் துணைவியிலோ அன்றித் துணைவரிலோ கோபத்தைக் காட்ட எத்தனிக்காது உங்களுடைய மிக நெருக்கமான நண்பர் ஒருவருடனோ அல்லது இருவருடனோ இதைப்பற்றிக் கதையுங்கள். அல்லது கோபத்தைச் சமநிலைப்படுத்தும் நிபுணர் ஒருவரிடம் சென்று கதையுங்கள்.

- **தொழில் தேர்ச்சிபெற்ற நிபுணர்களிடம் உதவி பெற்றுக்கொள்ளுங்கள்:** கோபம் ஒரு அடைத்து மெழுகிடும் கருவியாக நடந்துகொள்ளக் கூடியது என்பதனை நினைவில் இருத்திக் கொள்ளுங்கள். உங்களின் கோபம் மற்றைய உணர்வுகளை எல்லாம் மழுங்கடிக்கச் செய்துவிடக்கூடியதும், ஈடுபடுவதற்கு மிகவும் கடினமானதுமாகும். “ஒன்றை இழந்துவிடல், மனக்குழப்பமெய்தல், மனவேதனையடைதல் போன்றவற்றிலும் பார்க்க கோபத்தை உணர்ந்துகொள்ளலாம்” என Dr. மரியம் அவர்கள் குறிப்பிடுகின்றார். உங்களுடைய கோபத்திற்கான வரலாற்றை அல்லது கதையை நீங்கள் ஒரு கோபத்தை ஆற்றுப்படுத்தக் கூடியவர்களிடம் கூறுவதன் மூலம் அதிலிருந்து விடுதலை பெறமுடியும்.

❖ **உங்களது "மூலாதார நம்பிக்கைகளை" மீள்பரிசீலனை செய்யவும்:** நாம் கோபத்தினால் ஒரு விரலை ஒருவருக்கு எதிராக நீட்டும்போது உண்மையிலேயே மூன்று விரல்களை நாம் பின்புறமாக நம்மை நோக்கி நீட்டுகின்றோம். இளமையில் நாம் கோபம் கொள்ளும் தன்மைகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் மாறான கருத்துக்களை நாம் வளர்ச்சியடைந்து வரும்போது கொள்கின்றோம். இளமையிற் கொண்ட கருத்துக்கள் நிராகரிக்கப்படுகின்றன அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்கனவாக அமைவதில்லை.

❖ **திருமண முறிவுக்கு நீங்களும் பங்கு என்னும் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுங்கள்:** நல்ல மணமுறிவு என்னும் தனது நூலில் கொன்ஸ்ரன் அஃரோன்ஸ் என்பவர், "மணமுறிவினை ஏற்படுத்தியதில் எந்தவொரு தம்பதியின் மணமுறிவிலும் சமமான அளவிலோ அன்றி ஒருவர் மட்டும்தான் தனித்துக் காரணம் என்றோ சொல்ல முடியாது" என்று குறிப்பிடுகின்றார். அத்தோடு கோபம் மணமுறிவினை ஏற்படுத்துவதில் ஒரு மிக முக்கியமான ஊக்கியாகும் என்பதனையும் அவர் குறிப்பிட்டுள்ளார். கோபம் உங்களைப் பழைய சிந்தனைகளுக்கே இட்டுச்செல்லும் என நீயுயோக்கைச் சேர்ந்த உளவியல் சிகிச்சை நிபுணர் சிந்தியா காலர்சன் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

❖ **உங்களை எது உந்தி முன்னுக்குத் தள்ளுகின்றது என்பதனைக் கற்றுக்கொள்ளுங்கள்:** உங்கள் கோபத்திற்கான காரணத்தை அதனை வெளியே காட்டுவதற்கு முன்னர் அறிந்து கொள்ள முற்படுங்கள். அத்தோடு அதனை எந்தச் சக்தி வழிநடத்துகின்றது என்பதனையும் அறிந்து கொள்ளுங்கள்.

❖ **உங்கள் பிள்ளைகளைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்:** பிள்ளைகளை உங்கள் துணைவரோடு உள்ள பிணக்குகளில்

ஈடுபடுத்தாதீர்கள். பிள்ளைகளின் நலனைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கு முன்னால் உங்கள் கோபத்தையோ அல்லது உங்கள் துணைவரின் கோபத்தையோ காட்ட முனையாதீர்கள்.

❖ **உங்களின் முரண்பாடுகளை மிதமான நிலையில் வைத்திருங்கள்:** "உங்களுடைய போராட்டத்தை மிகவும் கவனமாகக் கையாள முயற்சியுங்கள். மிகக்குறைந்தளவான வெறுப்பைக் காட்ட முனையுங்கள். மிக முக்கியமான கருதுகோள்களை - அம்சங்களை நினைவிலிருத்திக் கொள்ளுங்கள். சிறிய விடயங்களை அப்படியே விட்டுவிடுங்கள்" என றொட்றிக்குஅஸ் குறிப்பிடுகின்றமைக் கேற்ப நீங்கள் உங்கள் பிரச்சினையைக் கையாள முயற்சிக்கவேண்டும்.

❖ **கோபத்தை வெளிப்படுத்தும்போது நான் என்னும் செய்தியை பயன்படுத்துங்கள்:** "நீ ஒரு உதவாக்கரை, எப்பொழுதுமே தாமதம்தான்" என்பனபோன்ற வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்துவதற்குப் பதிலாக "நீங்கள் தொலைபேசியில் அழைக்காததால் நான் ஏமாற்றமடைந்துள்ளேன்" என்பது போன்ற வார்த்தைப் பிரயோகங்களை உபயோகியுங்கள். அது கோபத்தை வெளிப்படுத்தாமல் இருப்பதற்கான நல்லதொரு உபாயமாகும்.

❖ **உங்கள் திருமணத்தினால் ஏற்பட்ட இழப்பினை மீளப்பெற்றுக் கொள்ள உங்களுக்கு நேரத்தை ஒதுக்கிக்கொள்ளுங்கள்:** அவசரக்காரனுக்குப் புத்தி மத்திமம் என்பதுபோன்று, கோபத்தின் பயனாக அவரப்பட்டு எடுக்கப்படும் முடிவுகள் பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்துகின்றன. மணமுறிவின் பின்னர் அதிலிருந்து மீண்டுகொள்ளும் போக்குக்கள் இரண்டு வருடங்களாவது எடுக்கும் என இதுதொடர்பான நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். "நீங்கள் எவ்வளவு தூரம் துன்பப்படுகின்றீர்கள் என்பதனை உணர்ந்துகொள்வது மிக முக்கியமானது" என

அ∴.ரோன் என்பவர் குறிப்பிடுகின்றார். உங்கள் உணர்ச்சிகளை வெற்றிகரமாகக் கையாளும் தன்மை உங்களை மேலும் சக்திவாய்ந்த இடத்தில் கொண்டு சென்றுவிடும்.

❖ **மறந்துவிடுதல், அப்படியே போகவிடுதல், தொடர்ந்து செல்லல்:** கோபம் உங்களுக்கு வாய்ப்பான - மனதுக்குச் சரியானதாக அமையலாம். ஆனால் அது தொடர்ந்து உங்கள் முன்னைய கணவன் அல்லது மனைவிமீது இருக்குமானால் நீங்கள் ஒருபோதும் சந்தோசமாக இருக்கமுடியாது. அந்தச் சிந்தனை சதா உங்களைத் தொடர்ந்து அரித்துக்கொண்டே இருக்கும். அதனால் இன்பகரமான வாழ்வை வீணடிக்கவேண்டி வரும். வீண் பொருட்செலவும் ஏற்படும் என்பதனையும் மனத்தில் கொள்ளுதல் நன்று. மாறாக பிள்ளைகளைப் பொறுத்தமட்டிலும் இது பெரும் பாதிப்பாக அமையலாம். எல்லாவற்றையும் மறந்துவிட்டு இனி என்ன நடக்கப்போகின்றது என்பதில் புலனைச் செலுத்துவதனால் வாழ்வை நல்லமுறையில் அமைத்துக்கொள்ளலாம்.

மணமுறிவின் விளைவாக உங்களின் முன்னைய கணவனோ அல்லது மனைவியோ அதிக கோபமாக இருப்பாரானால் நீங்கள் எவ்விதம் அந்தக் கோபத்தைத் தணிக்க நடந்துகொள்ளலாம் என்பது பற்றிய விளக்கங்களை பார்ப்போம்...

**சந்தேகம், சந்தேகம் . . . .**

**அது குடும்ப உறவைச் சிதைத்துச் சின்னாபின்னப்படுத்தும் ஆலகால விஷம்.**

**பிறன்பொருளாள் பெட்டுஒழுகும் பேதைமை ஞாலத்து**<br>**அறம்பொருள் கண்டார்கண் இல் - திருவள்ளுவம் - 141**

பிறன் மனைவியையோ அன்றி வேறொரு ஆடவனையோ தனது துணையிருக்கும் நிலையில் விரும்புவது பேதைமை என வள்ளுவர் குறிப்பிடுகின்றார். ஒருவனுக்கு ஒருத்தி என்னும் உயரிய நோக்கு நம்முன்னோர் நமக்கு வகுத்துச் சென்ற உயரிய வழி. காமக் கிளர்வு மனிதன் பிறந்ததிலிருந்தே தோன்றிய ஒரு உள் உணர்வு. இதற்கு மனித குலம் விதிவிலக்கல்ல எனினும் கணவன் மனைவியருக்கு இடையே உள்ள உறவு பலமானதாக ஒருவரை ஒருவர் நம்பும் தன்மை கொண்டதாக மிக இறுக்கமானதாக அமைந்திருத்தல் குடும்ப வாழ்வை நிலைநிறுத்துவதாக அமையும். ஆனால் ஒருவர் மீது இன்னொருவர் சந்தேகம் கொண்டால் அது விபரீதமான விளைவினை ஏற்படுத்தும் என்பது வரலாறு கண்ட உண்மை. கணவன் அல்லது மனைவியின் மீது சந்தேகம் என்னும் வியாதி ஏற்பட்டுவிட்டால் அந்த மனவியாதிக்கு மருந்து கொடுப்பது மிகக் கடினம். அது சதா மனதை அரித்து அரித்து தீவிரப்படுத்திக் கொண்டிருக்குமே ஒழிய அது ஒருபோதும் தணிந்துவிடாது. இதற்கு பல விடயங்கள் சான்றுகளாக - எண்ணெய் ஊற்றி மேலும் அந்தத் தீயை எரியூட்டுவதாகவே அமைந்து விடுகின்றன. கணவன் இன்னொரு பெண்ணுடன் சாதாரணமாகக் கதைப்பதே மிகப்பெரும் தவறாகக் காணப்படுவதுபோன்று, மனைவி இன்னொரு ஆடவனுடன் கதைப்பது - ஏன் தனது உடன்பிறந்த சகோதரனுடன் அன்பாகக் கதைப்பது அல்லது பழகுவதுகூடப் பலருக்கு சந்தேகத்தை ஏற்படுத்திவிடுகின்றது. இதனால் பல குடும்பங்களில் பிளவுகள், பிரிவுகள் ஏற்படுவதனையும், ஏற்பட்டுள்ளதனையும் காண்கின்றோம்.

எடுத்துக்காட்டாக தனது கணவனின் அலுவலகத்தில் வேலைசெய்யத் தொடங்கிய பெண்மணி ஒருவர், தனது கணவன் வேறு பெண்களுடன் அன்பாகக் கதைப்பது, பழகுவது என்பது அந்த மனைவிக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அதனால் அந்தப் பெண்மணி பொறாமைத் தீயில் சிக்கிக்கொண்டுள்ளார். அந்த அலுவலகத்தில் புதிதாக வேலைக்குச் சேர்ந்து கொண்ட ஒரு

பெண்மணியைப் பற்றி அவளது கணவன் தினமும் அவளின் திறமை, அவளின் ஆக்கத்திறன், செயற்பாடுகள், விருப்பு, சக்தி என்பன பற்றிக் கதைத்துக் கொண்டே வந்தார். இது அவரின் மனைவிக்கு சற்று எரிச்சலை மட்டுமல்ல பொறாமையையும் ஏற்படுத்தியது. இதனை நேரடியாகவே ஒருமுறை கணவனிடம் கேட்டுவிட்டாள். அதாவது அந்தப்பெண் வேலைசெய்பவர்களில் ஒருவரா அல்லது அதற்கு மேலாக ஏதாவது தொடர்பு உண்டா என அவர் மனதில் புகைந்து கொண்டிருந்த தீயை வெளியே கொட்டிவிட்டார். அதன் பின்னர் அந்தப் பெண்மணியைப் பற்றி கணவன் அதிகம் கதைப்பதை குறைத்துக் கொண்டார். இந்த அமைதி மேலும் அவளைத் துன்பத்திற்கு உள்ளாக்கியது. ஒருமாதமாகப் பொறுத்துப் பார்த்தாள். கணவன் எதுவுமே அந்தப்பெண்ணைப் பற்றிப் பேச்செடுப்பதாக இல்லை. இறுதியாக நேரடியாகக் கேட்டே விட்டாள். அதன் பின்னர் தன் உணர்வினை அல்ல கணவனை நம்ப வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டாள். இவ்விதமாக தாமாகவே சில தவறான முடிவுகளை எடுத்துக்கொண்டு சந்தேகத் தீயில் தம்மை மாய்த்துக் கொள்வதனால் கணவன் மனைவியினரிடையே கோபத்தீ மூண்டு ஈற்றில் பிரிவினையில் முடிவடைய வைப்பதனைக் காணலாம்.

பொறாமை என்பது இயல்பான ஒன்றென்பது வரலாற்றுரீதியாக நாம் கண்டறிந்த உண்மை. ஒருவர் மீது மிகுந்த அன்பைக் காட்டும்போது இன்னுமொருவர் நெருக்கமானவராக இருந்தால் அதனால் பொறாமை ஏற்படுவது இயல்பே. குறிப்பாக அண்ணன் மீது மிகுந்த பாசம் வைத்திருந்த தங்கைக்கு அண்ணன் திருமணமாகி தனது மனைவி மீது பாசத்தைக் காட்டியதனைப் பொறுக்கமுடியாதவளாக பொறாமை கொண்டு கவலைப்பட்ட சம்பவங்கள் பல இடங்களில் நிகழ்ந்துள்ளன. அன்பை வெளியே காட்ட முடியாத நிலையில் அல்லது காட்டாமல் மனதில் வைத்திருப்பதினால் சிலர் தவறான முடிவுக்கு வந்து அதனால் தங்கள் மனத்தின் எண்ணப்படி ஆடுகின்ற சந்தேகங்களுக்கு அடிமையாகின்ற நிலைமைகளும் குடும்ப உறவுகளைப் பிரித்துள்ளதனைக் காணமுடிகின்றது. சந்தேகம் என்பது அனுபவ

முதிர்ச்சியின்மை, பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்னும் மனோநிலை, நல்ல நிலையில் அமையாத உறவுமுறை போன்றவற்றினால் ஏற்படுகின்றது.

*"The Seven Year Itch"*, என்ற படத்தில் கதாநாயகனின் மேல்மாடி அயலவராக நடிக்கின்றார் மார்லின் மென்றோ. அவரின் நடிப்பும் கவர்ச்சியும் அனைவரும் அறிந்த ஒன்றே. அவர் கதாநாயகனிடம் அவனது மனைவி அவனைக் காதலிக்க வில்லையா என்று கேட்கின்ற ஒரு காட்சி படமாக்கப்பட்டிருந்தது. அதன்படி பொறாமைத் தீ எவ்விதம் குடும்பத்தினை ஆட்டிப்படைக்கின்றது என்பதனை அந்தப்படம் மிகத் தத்ரூபமாக எடுத்துக் கையாண்டுள்ளது. கோவலன் மாதவிபால் மோகங்கொண்டு தன்னைப் பிரிந்து சென்று வாழ்ந்ததால் கண்ணகி பொறாமை கொள்ளவில்லை. மாறாகத் தனது பொருட்கள்-செல்வத்தையே உவந்தளித்து வந்துள்ளாள். காதலன் வேறு ஒருத்தியை விரும்புகின்றான் எனத் தெரிந்து கொண்டு அதற்குப் பதிலடிகொடுக்க நினைத்த மாதவியின் குடும்பவாழ்வு அத்தோடு முடிவுக்கு வருகின்றது. கோவலன் பொறாமை கொண்டு அவளை நீங்கிச் செல்கின்றான். பிரிவினை ஏற்படுகின்றது. பொறாமை, கோபம் என்பன ஒருவரை எத்துணை தூரம் ஆட்டிப்படைக்கின்றது என்பதனை நாம் வரலாற்று ரீதியாகக் காண்கின்றோம். பல குடும்பங்களிலே சந்தேகத்தின் காரணமாக பிரிவினை ஏற்படுகின்றதும் அந்தப் பிரிவினை கோபத்தீயினால் நிரந்தரமாகவே மணமுறிவுக்கு இட்டுச் செல்வதனையும் காணலாம்.


"பொறாமை என்பது மனித உணர்ச்சிகளின் அடிப்படையான ஒன்று. அத்துடன் அது கடினமானதும் புரிந்துகொள்ள முடியாததும் ஒன்று" என ஒட்டாவாவைச் சேர்ந்த உளவியலாளர் Larry Cebulski. குறிப்பிடுகின்றார். "நாங்கள் பொறாமைப்படுவதைத் தவிர்த்துவிடலாம் என நான் நினைக்கவில்லை" எனக் குறிப்பிடுவதோடு "பொறாமை கொள்ளுதல் எமது உள்ளார்ந்த பரிணாம வளர்ச்சிப் படியின் ஒரு

பகுதி. எமது பண்டைய வரலாற்றின் படி ஆண்கள் பிள்ளைகளுக்கும் மனைவிக்கும் உணவினையும் ஏனைய தேவையான பொருட்களையும் தேடிக் கொண்டு வந்து கொடுக்கவேண்டிய கடப்பாடுடையவர் எனப் பெண்துணையால் அதாவது மனைவியினால் எதிர்பார்க்கப்பட்டிருந்தான். ஆனால் ஒரு ஆண் வேறு ஒரு பெண்ணின் மீது விருப்பைக் காட்டினால் அல்லது கொண்டிருந்தால் அது துணைவிக்கு பொறாமையை ஏற்படுத்தும். அத்தோடு அது ஆணின் தவறைத் தடுப்பதற்கு சில நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்னெடுத்துச் செல்கின்றது" என Cebulski குறிப்பிடுகின்றார்.

ஆனால் எல்லாவிதமான பொறாமை உணர்வுகளும் சரியானதா என்று பார்ப்போமேயானால் அது சரியானது என்று கூறமுடியாத அளவிற்குத் தவறான வழிகளுக்கு இட்டுச் சென்றுள்ளதைக் காணமுடிகின்றது. வேலை செய்யும் இடத்தில் இன்னொரு வேலையாளுடன் தொடர்பு கொண்டுள்ளதாக கணவனை அல்லது மனைவியை சந்தேகப்படுகின்ற அல்லது குறைகூறுகின்றதற்குப் போதிய சான்றுகள் கிடையாது. ஆனால் அது மாறாக கணவன் மனைவியிடையே உரசல்களையும் உறவில் விரிசலையும் தேவையற்ற முரண்பாடுகளையும், பிடிப்பற்ற நிலையையும் ஏற்படுத்துகின்றது. இதனால் கணவனோ மனைவியோ அந்த சூழலில் இருக்கப்பிடிக்காத வேற்று இடத்திற்குச் செல்வதற்கும் காரணமாக அமைந்துவிடுவதனையும் காணமுடிகின்றது. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்பது போன்று சதா தொல்லையும் சந்தேகமும் உள்ள இடத்தில் இருப்பதற்குப் பதிலாக அமைதியைத் தேடி ஓடுகின்ற பலரை நாம் காண்கின்றோம். இயந்திர மயமான வாழ்வில் பகல் முழுவதும் வேலையில் ஈடுபட்டுவிட்டு வீடு வருவோருக்கு வீட்டில் அமைதி, சந்தோசம், நிம்மதி என்பன கிடைக்கக்கூடிய இயல்பான வாழ்வு நிலை வீட்டில் இருக்கவேண்டும். அது கிடைக்கவில்லை என்றால் பிணக்கு வெடிப்பது எதிர்பார்க்கக்கூடிய ஒன்றாகவே இருக்கும்.

பலகுடும்பங்களில் பொறாமை, சந்தேகம் ஏற்படுவதற்கு ஒருவரை ஒருவர் சரிவரப் புரிந்து கொள்ளாமை, அவர்களின் விருப்புக்கள், வெறுப்புக்கள் தேவைகள்பற்றிக் கலந்துரையாடாமை, அதனைச் செவிமடுக்காது விடுதல் போன்றன காரணங்களாகின்றன. கணவனின் தேவைகள், விருப்புக்களுக்கு மனைவி செவிசாய்க்காது விடுதலும் மனைவியின் விருப்புக்கள் தேவைகளுக்கு கணவன் செவிசாய்க்காது போதலும் அவர்கள் தங்களின் தேவைகளில் மட்டுமே புலனைச் செலுத்துவதும் காரணமாகின்றன. தங்களைப் பற்றி மட்டுமே சிந்திப்பதோடு மட்டுமல்லாது மற்றவர்கள் தங்களைப் பற்றி அக்கறை செலுத்த வில்லையே என மனதில் நினைத்துக் கொண்டு தப்பாக எடைபோடுவதும் அதனால் சந்தேகத்தையும், பொறாமையையும் மனதில் வளர்த்துக் கொள்ளுவதினாலும் பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றன.





# 18

# இலங்கை, இந்திய நாடுகளில் மணமுறிவும் அதன் தாக்கங்களும்

# மரபு வழி முறைகளும் மணமுறிவும்

இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் குடும்ப வாழ்க்கை ஒப்பந்தத்தை நீண்டு நிலைகொள்ளத் தக்கவகையில் பண்டு தொட்டு பேணப்படும் மரபு வழிகள் முக்கிய பங்காற்றுகின்றன. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் குடும்ப அமைப்பு முறை சமுதாயக் கட்டுக்கோப்புக்களுக்கு உட்பட்டதாக அமைந்துள்ளது. கணவன் மனைவியரிடையே ஏற்படும் கருத்துவேறுபாடுகளை பெரிதாக விடாது தடுத்து அவற்றை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிகின்ற தன்மை சமுதாயத்தின் முக்கிய பணியாகக் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக குடும்பத்தில் உள்ள பெரியவர்கள், முதியவர்கள், நண்பர்களின் தலையீடுகள் காரணமாக இருதரப்பினரிடையேயும் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது மிக முக்கியமானதாக உள்ளது. மேலைநாடுகளில் குடும்ப உறவினர்கள், அல்லது நண்பர்களின் ஆலோசனைகளைவிட

அதற்கான ஆலோசகர்கள் இந்த விடயங்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இவ்விதமான கற்றறிந்த துறைபோன நிபுணர்களின் ஆலோசனைகளை நாடவேண்டி வாய்ப்புக்கள் அந்தநாடுகளில் இல்லை என்றே கூறலாம். ஆனால் கணவன் மனைவியர் மணமுறிவினைக் கோரவேண்டுமானால் முதலில் குடும்ப மணமுறிவு, நல்லிணக்க ஆலோசகர்களிடம் இரு தரப்பினரும் ஆலோசனை பெற்றிருக்கவேண்டியது மிக முக்கியமானதாகும். அல்லது நீதிமன்றம் அதனைச் செய்யும்படி பணிக்கும். எனவே இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் மீளச் சேர்த்து வைத்தல், பிணக்குகளைச் சமரசம் செய்து வைத்தல், நியாயபூர்வமான காரணிகள், மரபுமுறைப் பழக்கவழக்க முறைகள் என்பனவற்றின் பாற்பட்டதாகவே மணமுறிவுகள் இடம்பெறுகினறன. இவற்றைவிட வேறு பல விடயங்கள் திருமண ஒப்பந்த உடன்பாட்டை நீக்கிவிடுவதற்கான காரணிகளாக அமைகின்றன. குறிப்பாக சீதனம், சொத்து என்பன முக்கிய இடத்தினை வகிக்கின்றது. மேலை நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மணமுறிவினை மேற்கொள்வது என்பது மிகக் கடினமான ஒன்றாகவே காணப்படுகின்றது.

இவற்றைவிட சட்டப்படியான மணமுறிவுக்கு விண்ணப்பிக்கும் போது அங்கு பின்பற்றப்படும் சட்ட நடைமுறைகள் இஸ்லாமிய மணமுறிவுச் சட்டங்கள் வேறானவையாகவும், ஏனைய சமூகத்தினரின் மணமுறிவுச் சட்டங்கள் வேறானவையாகவும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இஸ்லாமிய திருமணச் சட்டம் பலதார மணத்தை அங்கீகரிக்கின்றது. ஆனால் இந்து திருமணச் சட்டம் அதனை ஏற்றுக்கொள்வதாக இல்லை. ஒருவனுக்கு ஒருத்தி என்ற சட்டத்தினையே இந்தியாவும் இலங்கையும் அமைத்துக் கொண்டுள்ளன. மதுரையின் உச்ச நீதிமன்றம் தலாக் அல் பிதர் என்னும் முறையினை 'ஷரியத்' சட்டத்தின் கீழ் ஏற்றுக்கொண்டது. இதன்படி மதகுருவிடம் ஆலோசனை அல்லது இணக்கப்பாட்டுக்கான குடும்பத்தினரின் புத்திமதிகள் கேட்கப்பட்ட பின்னர் நீதிமன்றம் மணமுறிவினை ஏற்றுக்கொள்ளும் முறையினை இந்த

நடைமுறை மேற்கொள்ள வாய்ப்பளித்துள்ளது. இந்த நடைமுறையினை இந்திய உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு அதனை சட்டபூர்வமானதாக கைக்கொள்ளலாம் என ஆதரித்துக் கருத்து வெளிட்டுள்ளது. (இந்து பத்திரிகை மார்ச் 28, 2002)

இந்தியாவில் இடம்பெறும் மணமுறிவுகள் இதில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையுமே பெரும் சிக்கலுக்குள் மாட்டிவிடுவதோடு அவர்களைப் பெரும் அழிவுக்குள்ளும் அமிழ்த்திவிடுகின்றது. இதில் ஈடுபடுபவர்களை மட்டுமன்றி பிள்ளைகள், மற்றும் குடும்ப உறுப்பினர்களின் உறவுகளையும் இது பிரச்சினைகளுக்கு ஆளாக்குகின்றது. இன்றும் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் 'மணமுறிவு' என்பது ஒரு கூடாத அல்லது கெட்ட செயலாகவே பார்க்கப்படுகின்றது. இந்திய இலங்கைச் சமூகங்களிலே திருமண முறிவு என்பது கீழ்த்தரமான ஒன்றெனக் கருதப்படுகின்றது. அமெரிக்காவிலேயே உலகில் மிகக்கூடிய அளவு மணமுறிவுகள் இடம்பெறுகின்றன. கிட்டத்தட்ட 50 விழுக்காடான மணமுறிவுகள் இங்கு இடம்பெறுவதற்கு இளவயதில் திருமணம் செய்தல், கல்வியறிவு குறைவாக இருத்தல், குறைந்தளவு வருமானம், கலப்பு மணங்கள் என்பன முக்கிய காரணிகளாகின்றன. அமெரிக்காவில் மிகக் கூடுதலான மணமுறிவுகள் ஆபிரிக்க – அமெரிக்கர்களிடையே காணப்படுகின்றது.

இந்தியாவில் மிகக்கூடுதலான மணமுறிவுகளுக்கு ஒத்தியைவின்மை, ஆளுமையின்மை, சீதனம், இயல்திறனின்மை, குழந்தைப்பாக்கியம் இல்லாமை, அல்லது இவை தொடர்பான முக்கிய காரணிகளான குடும்பங்களுக்கிடையே ஒத்திசைவு இன்மை போன்ற காரணிகள் அதிகளவு பங்களிப்பனவாகக் காணப்படுகின்றன.

மேலை நாடுகளில் சமூக பொருளாதார மாற்றங்களினால் குடும்ப அமைப்புமுறைகளிலும் மாற்றங்களைக் கொண்டுவரக் காலாக அமைந்துள்ளன. இதனால் பண்டைக்காலந்தொட்டுப் பின்பற்றப்பட்டுவந்த

கிறிஸ்தவ மதத்தின் பிடியிலிருந்து மக்கள் நழுவி தாம் நினைத்தவாறே மணமுறிவினை செய்து கொள்வதும் மறுமணம் செய்து கொள்வதும் சர்வ சாதாரண விடயமாக மாறிவிட்டது. ஆனால் இந்தியாவில் மணமுறிவின் பின்னர் மறுமணம் செய்யம் தன்மை ஆண்களைப் பொறுத்தவரை இலகுவானதாகக் காணப்படுகின்றபோதிலும் பெண்களுக்கு அது பெரும் கஷ்டத்தையும் சிக்கலையும் தருகின்ற விடயமாகக் காணப்படுகின்றது. இதிலும் கீழ் மத்திய தரக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களிடையே இந்த நிலை கூடியளவு தாக்கத்தைக் கொடுப்பதாக அமைகின்றது. மணமுறிவு கொண்டு பிரிந்து வாழும் பெண் பின்னர் திருமணம் செய்து கொள்ளமுடியாத துர்ப்பாக்கிய நிலை மரபு வழியாகப் பின்பற்றப்பட்டு வந்ததொன்றாகும். இந்தியாவில் உள்ள சாதியமைப்பு முறையும் இந்துமத பாரம்பரியங்களும் பெண்களுக்கான மறுமணத்தினை பின்தள்ளி விடுவனவாக உள்ளன. இவற்றைவிட மணமுறிவுக்கான முக்கிய நடைமுறைகள் அனைத்தும் குடும்பம் தொடர்பான ஒன்று. தனியே கணவன் மனைவியரிடையேயான தனித்துவமான ஒன்றாக அங்கு கொள்ளப்படுவதில்லை. கூட்டுக்குடும்ப வாழ்க்கை மிகவும் ஆழ்ந்தமுறையில் பின்பற்றப்படுவதும் இதற்கு ஒரு காரணமாகும். பல குடும்பங்கள் பெரியவர்களின் பணிப்பின் படியே செயற்படுகின்றன, ஒழுகத்தலைப்படுகின்றன. இதனால் மணமுறிவு ஏற்படுவது மிகக் குறைவே. மணமுறிவு தொடர்பான விவரங்கள் பத்திரிகைகளில் வரும்போது அது சம்பந்தப்பட்ட இரு குடும்பத்தினரினதும் அழுக்குகளை வெளியே கொண்டுவருவதாக அமைந்து விடுகின்றது. கணவனின் குடும்பத்தைப்பற்றிய தகவல்களைப் பெண்குடும்பத்தாரும், பெண்குடும்பத்தைப்பற்றிய தகவல்களை மாப்பிள்ளை குடும்பத்தாரும் எடுத்துரைக்கும்போது அவை பத்திரிகையாளர்களுக்கு விருந்தாக அமைந்துவிட்டாலும் அவை அந்த இரு குடும்பத்தினரினதும் எண்ணக் கருத்துக்கள், தகைமைகள், போன்றவற்றை அம்பலப்படுத்துவதால் அவர்கள் அவமானப்படவேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.

பிள்ளைகள் உள்ள குடும்பங்களிடையே பிணக்குகள் ஏற்படுமாயின் அவர்களில் யார் பிள்ளைகளைப் பராமரிக்கின்றார்களோ அவர்களின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே பிள்ளைகள் வாழவேண்டியவர் களாகின்றார்கள். தாயோடு பிள்ளை வளர்கின்றது என்றால் தந்தை அந்தப்பிள்ளையைப் பார்க்கச் செல்வதில்லை. மனைவியின் மீது உள்ள வெறுப்புக் காரணமாகவோ அன்றி மனைவியின் பெற்றோர் சகோதரங்களில் உள்ள வெறுப்புக்காரணமாகவோ பிரிந்து கொள்ளும் பெற்றோரில் ஒருவர் பிள்ளையையும் பார்க்காது வெறுத்து ஒதுக்குகின்ற தன்மை இந்தியாவில் அதிமாகவுள்ளது. இதனால் தந்தையை அல்லது தாயை இழந்த பிள்ளையாகவே அந்தப் பிள்ளை வளரவேண்டியுள்ளது.

## இந்திய மணமுறிவுப் பிரச்சினைகள்

❖ தன்னியல்பின்மை

❖ சீதனம்

❖ மணமுறிவு குடும்ப விடயமாக உள்ளமை, குடும்பத்தினரின் தலையீடுகள்

❖ சாதியமைப்பு முறைகள் - கிராமப்புறங்களில் இவை சில சாதியினரிடையே மணமுறிவை ஆதரிக்கும் நிலை அல்லது ஊக்குவிக்கும் நிலை காணப்படுதல்

❖ மிக உயர்ந்த கல்விபெற்றவர்களும் மற்றும் உயர்ந்த சமூக பொருளாதார தரத்தில் உள்ளவர்களும் உதவ முற்படுவதனால் சில சாதியினரிடையே இது தொடர்பற்ற காரணங்களுக்காக மணமுறிவு ஏற்படத் தூண்டுகின்றது

❖ இந்து மதத்தினரிடையே மணமுறிவை நிறுத்துவதற்கோ அன்றி அதனை ஊக்குவிப்பதற்கோ எந்தவிதமான கோட்பாடுகளும் இல்லாமையும் ஒரு காரணமாக அமைகின்றது.


- மணமுறிவுகளை குறைகூறுவதாக பாரம்பரிய விழுமியங்களும், நம்பிக்கைகளும் அமைந்துள்ளமையால் மணமுறிவு இடம்பெறுவது குறைவே


- பிள்ளைகளின் எதிர்காலம் மணமுறிவோடு தொடர்புடையதால் மணமுறிவுக்குப் போவதைத் தடுக்கின்றது

- பெண்கள் மணமுறிவினால் பெரும் கஷ்டங்களுக்கு உள்ளாவதால் அவர்கள் பொறுமையோடு வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். ஆனால் பெண்ணின் தாய் தந்தையர் அன்றிச் சகோதரர்கள் பெண் உடலியல், உளவியல் பாதிப்புக்கு உட்படக்கூடியளவிற்கு தாக்கம் கணவனால் ஏற்படுகின்றது என உணர்ந்து பெண்ணை அழைத்துச் செல்வதால் மணமுறிவு ஏற்படுவது இயல்பாகின்றது. இது மொத்தக் குடும்பத்தின் பொறுப்பாகவும், செயலாகவும் கருதப்படுகின்றது. அதாவது கணவனின் குடும்பத்தினர் தங்களின் குடும்ப அலுவலாகவும், பெண்குடும்பத்தினர் தங்கள் குடும்ப அலுவலாகவும் செயற்பட - ஒரு போட்டி மனப்பான்மையில் யார் பெரிது யார் சிறிது என்ற எண்ணப்பாங்கிற் செயற்பட விழைவதனால் ஏற்படுகின்றது.

- மிகவும் நன்கு அறியப்பட்ட தனிப்பட்டவர்களால் மீண்டும் இணக்கப்பாட்டை ஏற்படுத்த எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றியளிக்காது போகும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டால் அது மணமுறிவுக்கு இட்டுச்செல்லும்.

- தனிப்பட்ட காரணங்கள் மிக விரைவாகவே குடும்பக்காரணங் களாக மாற்றமடைகின்றன.





# 19

# இந்திய மணமுறிவு ஆலோசனையில் உள்ள சிக்கல்கள்

இந்தியாவில் எங்குபார்த்தாலும் மணமுறிவுக்கு எதிரான ஆலோசனை, மணமுறிவு நடைமுறைகளின்போது ஆலோசனை, மணமுறிவின் பின் ஆலோசனை என்பன எப்பொழுதுமே சிக்கலான ஒரு விடயமாகக் காணப்படுகின்றன. மேலை நாடுகளின் மணமுறிவு தொடர்பான ஆலோசனைகளைவிட இந்தியாவில் இது சிக்கல்வாய்ந்த ஒரு விடயம். மணமுறிவினால் குழந்தைகளும் தனிப்பட்டவர்களும் மிகவும் பாதிக்கப்படுகின்றார்கள். அவர்களுக்கு உண்மையிலேயே ஆலோசனைகள் வழங்கப்படவேண்டியது முக்கியமானதாகும். இந்தியாவில் குடும்பத்தினரே ஆலோசகர்களாக அமைகின்றார்கள். இதனால் ஆலோசனைகள் சிலவேளைகளில் ஒரு பக்கம் சார்ந்ததாக அமைந்து விடுகின்றது. மணமுறிவினை நிறுத்துவதற்குப் பதிலாக மணமுறிவை ஊக்குவிப்பதாக - அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளை உந்துவதாக குடும்பத்தினரின் ஆலோசனைகள் பெரும்பாலும் இடம்பெறுகின்றன. இதனால் இணைந்து வாழவேண்டிய பலகுடும்பங்கள்

மற்றவர்களின் தலையீடுகளினால் பிரிந்து வாழவேண்டி வருவதோடு மணமுறிவுக்கும் இட்டுச் செல்கின்றது. இவற்றைவிட சமூக இடவினைகள் மணமுறிவோடு தொடர்புடையதாக அமைந்துவிடுகின்றது. இதனால் சிலர் மணமுறிவை ஊக்குவித்து அதிலிருந்து ஒதுங்கிக்கொள்ளும் உறுப்பினர்களும் உள்ளனர். இவை பெரும் சிக்கல்களை உருவாக்குவதாக அமைந்துவிடுகின்றன.

குடும்ப உறவு என்பது கணவன் மனைவியினரிடையே ஒருவரை ஒருவர் மதித்து அவர்களின் தேவைகள், விருப்பு, வெறுப்புக்களைப் புரிந்து கொண்டு விட்டுக்கொடுப்புடன் நடந்துகொள்வதினால் மணமுறிவு ஏற்படாத வகையில் அன்னியோன்யமான குடும்ப உறவை வளர்த்துக் கொள்ளமுடியும். இதற்கான ஆலோசனைகள் திருமணத்திற்கு முன்னரோ அன்றிப் பின்னரோ புதிதாக மணமுடிக்கப் போகின்றவர்களுக்கோ அன்றி மணமுடித்தவர்களுக்கோ வழங்கப்படுவதில்லை. இந்தியாவில் கல்வியறிவு குறைந்த குடும்பங்களிடையே கிராமங்கள் தோறும் மருத்துவ மாது ஒருவர் ஆலோசனை வழங்கி வருவது வழமை எனினும் இவர்கள் மணமுறிவு தொடர்பான ஆலோசனை வழங்குவதற்கான நிபுணத்துவம் பெற்றவர்கள் அல்லர். அவர்கள் குடும்பக்கட்டுப்பாடு, மகப்பேறு தொடர்பான ஆலோசனைகளையே வழங்குகின்றனர்.

நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் மணமுறிவு மிக நல்லதென்ற நினைவில் இருக்கலாம். அல்லது ஏதோ பெரிய சுமையில் இருந்து விடுபட்டதாக நினைவு கூரலாம். ஆனால் மணமுறிவின் பின்னர் ஏற்படும் மன உளைச்சல், மனவேதனை, மனவழுத்தம், இனம்புரியாத இழப்பு, மகிழ்சியற்ற நிலை என்பன மனத்தை உறுத்தும் சம்பவங்களாக அமைந்து விடுகின்றன. வாழ்க்கையில் மிகவும் மனதில் துன்பம் தருகின்ற ஒரு செயலாக மணமுறிவு ஏற்படுகின்றது. மணமுறிவின் தாக்கங்கள் - ஆண்களோ, பெண்களோ எவராயினும் சரி மணமுறிவு, பிரிந்து வாழுதல் என்பன மனதில் சொல்லொணாத்துன்பத்தைத் தருகின்றது என்பது அந்தப் பிரிவினை அனுபவித்தவர்களின்

அனுபவங்களினூடாகப் பார்க்கும் போது தெளிவாகின்றது. மணமுறிவு பல வழிகளிலே உணர்ச்சிகளை மனதிலே எழச்செய்வது இயல்பே. இவ்விதம் எழும் உள்ளத்து உணர்வுகள் பல வகைப்பட்டனவாக அமைகின்றன.

மணமுறிவு மாற்றம் அடைந்து கொண்டிருக்கும் காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். சில நாடுகளில் மணமுறிவின் அளவு குறைவடைந்து செல்வதனையும் சில நாடுகளில் என்றுமில்லாத அளவிற்கு அதிகரித்துச் செல்வதனையும் புள்ளிவிவரக் கணக்கெடுப்புக்கள் காட்டி நிற்கின்றன. மணமுறிவு அதிகரிக்கும் நாடுகளின் பண்பாட்டு விழுமியங்களையும் மணமுறிவின் அளவு குறைவடைந்த நாடுகளின் விழுமியங்கள் - காரணங்களையும் கண்டறிதல் பயன் தரும். மணமுறிவுக்கு மன உணர்ச்சி ஒரு காரணமாக அமைகின்றது. அந்த மன உணர்ச்சி மணமுறிவின் பின்னரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அந்தத் தாக்கங்களைப் பற்றிய சில விடயங்கள் பற்றி மேலெழுந்த வாரியாக நோக்கும்போது சில அம்சங்கள் தெளிவாகின்றன.

❖ **பணம் சொத்து என்பனவற்றின் இழப்பு**

மணமுறிவின் பின்னர் நீங்கள் சேர்ந்து வாழ்ந்த வீட்டிலிருந்து ஒருவரோ அல்லது இருவருமோ வேறு இடங்களுக்குச் செல்லவேண்டிவரும். மேலை நாடுகளில் தங்களின் வருமானத்திற்கு ஏற்ப சிறிய வீடுகளுக்கோ அன்றி தொடர்மாடிக் கட்டிடங்களுக்கோ தனிக்குடித்தனம் நடத்தச்செல்ல வேண்டியது அவசியமானது. இலங்கை, இந்தியா போன்ற இடங்களில் என்றால் சீதனமாகப் பெண்ணுக்குக் கொடுத்த வீடாக இருந்தால் ஆண் அந்த வீட்டைவிட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்படும். அவர் தனது தந்தை தாயினுடைய வீட்டிற்கோ அல்லது உடன் பிறப்புக்களுடனோ தங்கவேண்டிய நிலை ஏற்படும். இதனால் புதியதொரு வாழ்க்கைமுறையினை

ஆரம்பிக்கவேண்டிய நிலை ஏற்படலாம். தளவாடங்கள், சமையல் பாத்திரங்கள் போன்ற பொருட்களை வாங்கவேண்டிய நிலையும் ஏற்படும். இதனால் பணவிரையம் ஏற்படும். வீடு போன்ற சொத்துக்களையும் இழக்கவேண்டி வரும். வாழ்வை நல்ல முறையில் அமைத்துக்கொள்ள நல்ல தகுதியானதும், மதிக்கத் தக்கதானதுமான பணவருவாயைத் தேடிக்கொள்ளுதல் வேண்டும்.

### ❖ வாழ்க்கையின் எதிர்பார்ப்புக்களின் இழப்பு

மணவாழ்வில் நினைத்திருந்த கற்பனைக் கோட்டைகள் தகர்ந்து விழுவதற்கு மணமுறிவு காரணமாக அமைகின்றது. எதிர்காலத்தில் எப்படி எப்படியெல்லாம் வாழுவோம் என மிக உயர்வான எண்ணங்களை எண்ணியிருந்த நிலையில் திடீரென மாற்றம் ஏற்படுவதனால் அது மனதில் பெரும் வேதனையை ஏற்படுத்தி உங்களைச் சோர்வடைய வைப்பதோடு எதிர்காலம் பற்றிய ஒரு சூனிய நிலையை அல்லது பயத்தினைத் தோற்றுவிக்கும். கீழைத்தேய நாடுகளில் பலர் மணமுறிவின் பின்னர் தற்கொலை செய்வதற்கு இவ்வித மனக் கிலேசம் ஒரு காரணமாக அமைகின்றது. எதிர்காலம் சூனியமாக மனக்கண்முன் காட்சிதரும் வேளைகளில் மனவழுத்தம் ஏற்பட்டு உடல் நல, உள நலக் கோளாறுகளைத் தருகின்றன. எனவே இத்தகைய சந்தர்ப்பங்களில் மனம் தளராத உள உறுதியோடு செயற்படுதல் வேண்டும். இல்லையேல் மணமுறிவுக்கு முன்னரே இவைபற்றிச் சிந்தித்து நடந்துகொள்ளுதல் பொருத்தமானதாகும்..

### ❖ சமூக அந்தஸ்த்தினை இழந்தல்

மணமுறிவுற்றவர் என்பதனால் சமூகத்தில் உள்ள நிலையில் பாரிய சரிவு ஏற்படுகின்றது. பெண்களைப் பொறுத்தவரை இது கூடியளவு பாதிப்பை ஏற்படுத்துகின்றது. குறிப்பாக கீழைத்தேச நாடுகளில் மணமுறிவு பெற்றவர்கள் பல்வேறு வகையான இடர்வினைகளுக்கு உள்ளாகின்றனர். சமூகம் அவர்களை ஒதுக்கிவைக்கவே விழைகின்றது.

சுற்றாடலில் உள்ளவர்கள் இழிவாக நோக்குவர். இதனைவிட மணமுறிவு அடைந்தவர்கள் தனிமைப்பட்டுவிட்டதாகவும், ஒதுக்கப்பட்டுவிட்டதாகவும், வாழ்வில் தோல்வியினைக் கண்டுவிட்டதாகவும் நினைக்கத் தூண்டுகின்றது. இந்த மனவோட்டங்கள் கவலையை ஏற்படுத்துவனவாக அமைகின்றன. ஆனால் மணமுறிவு கண்டவர்கள் தாங்கள் தனித்தவர்கள் என்றோ அல்லது ஒதுக்கப்பட்டவர்கள் என்றோ அல்லது வாழ்வில் தோல்வி கண்டவர்கள் என்றோ எண்ணுவதனை விடுத்து. மணமுறிவு பெற்ற ஏனையோரின் வாழ்க்கைமுறைகளை சற்றுக் கவனித்து அப்படியானவர்களோடு கதைப்பதன் மூலம் மனத்தில் எழுகின்ற உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு முன்னேற்றப் பாதையில் செல்ல முனைதல் வேண்டும்.

### ❖ நண்பர்களையும் உறவினர்களையும் இழத்தல்

திருமணத்தின் பயனாக வந்துசேர்ந்த நல்ல நண்பர்களையும் கணவன் மனைவியின் மூலமான உறவினர்களையும் இழக்கவேண்டிய நிலை மனதில் வேதனையைத் தரும் இன்னொரு சங்கடமான நிலையை ஏற்படுத்தும். குறிப்பாக கணவனின் அல்லது மனைவியின் சகோதரங்களுக்கு நீங்கள் பிரிந்து செல்வதனால் அவர்களின் தொடர்புகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய நிலை அல்லது அவர்களுடன் இதுவரை இருந்துவந்த தொடர்புகளை மாற்றிக் கொள்ளவேண்டிய நிலை ஏற்படும். அவர்களோடு இதுவரை மேற்கொண்ட தொடர்புகளையோ அன்றி அதேவிதமாகவோ பழகுவதை நீங்கள் நிறுத்துவது நன்மைதரும். அவர்களோடு அதேமாதிரியான தொடர்புகளை வைத்திருப்பதற்காக நீங்கள் பகீரதப்பிரயத்தனம் எதனையும் செய்தல் பொருத்தமானதாக அமையாது. மணமுறிவின் பின்னர் எல்லாவிடயங்களிலுமே மாற்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டியது அவசியம். நண்பர்களில் யாரை நம்புவது யாரை நம்பமுடியாது என்பதுகூட பிரச்சினைக்குரியது. மணமுறிவின் பின்னர் நீங்கள் நல்ல நண்பரைத் தேடிக்கொள்வதோ அல்லது தெரிந்துகொள்வதோ

முக்கியமானதாகும். நண்பர்களாக இருந்தவர்கள் உங்கள் துணைவருக்குச் சார்பாக நடந்துகொண்டால் அதனை தீவிரமானதாகக் கருத்திற்கெடுக்காது விடுதல் நன்று.

❖ **இணைந்து வாழுகின்ற பெற்றோரை உங்கள் பிள்ளைகள் இழக்கின்றார்கள்**

உங்களுக்கு பிள்ளைகள் உண்டாயின் மணமுறிவு உங்களை மட்டுமன்றி அவர்களையும் பாதிக்கப்பட்டவர்களாக ஆக்குகின்றது. பிள்ளைகளின் கவலை உங்களுக்குத் துன்பத்தையும் கடினமான நிலையையும் ஏற்படுத்தும். பிள்ளைகள் உங்கள் மீது வெறுப்படையவோ அன்றிக் கடினமாக நடந்துகொள்ளவோ கூடும். பெற்றோர் என்ற கணிப்பில் பிள்ளைகளுக்குத் தருகின்ற பாதுகாப்பு சக்தியை இழக்கின்றீர்கள். பெற்றாரியப் பங்களிப்புக்கு சவாலாகவும் எதிரிடையாகவும் அமைகின்றது. மேலாதிக்கத் தன்மையை, உரிமையை இழக்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இந்த நிலை மணமுறிவடைந்த பின்னராக ஏற்படக்கூடிய மனப் பளுவைத்தருகின்றது. இது தொடர்பாக மணமுறிவுற்ற பெற்றோரிடம் ஆலோசனைகள் கேட்பது நன்மை தரும். அவர்களுக்கு எது நல்லவழிகளில் வேலைசெய்கின்றது என்பதனை அறிந்து அதன்வண்ணம் பிள்ளைகளின் எதிர்காலத்தை மனதிலிருத்தி அதற்கேற்பத் திட்டமிட்டுச் செயற்படலாம். பிள்ளைகளின் நிலை முன்னேற்றமடையவும் பெற்றோர் என்ற நிலையில் உங்களுடைய மனநிலையில் திருப்தி காணவும் உதவுவதாக அமையும்.

❖ **நீங்கள் மிகவும் விரும்புகின்ற ஒருவரை இழப்பதனால் ஏற்படும் மனவேதனை**

உங்களுடைய தொடர்புகள் மிகமோசமானதால் நீங்கள் மணமுறிவுக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டிருந்தாலும் நிலைமைகள் எப்பொழுதுமே அவ்விதம் இருப்பதில்லை. ஒரு நேரம் நீங்கள் இருவருமே ஒருவரை ஒருவர் மிகவும் விரும்பிக்

காதலித்திருப்பீர்கள். அதனைச் சற்றுச் சிந்தித்துப் பார்த்தல் உங்கள் எண்ணத்தை மாற்ற உதவும். என்னென்ன விடயங்கள் உங்களின் தொடர்புகளை நெருக்கமாக்கின என்பதனைப் பின்னோக்கிப் பாருங்கள். இப்பொழுது மீண்டும் அவ்விதமான ஒரு தொடர்புபற்றி நினைக்கும்போது எவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பதனை மனதிலிருத்திப்பாருங்கள். எனவே தனிமையை நிறுத்தி மீண்டும் இணைந்து கொள்ள முயற்சிக்கலாம் அல்லது இன்னொரு தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

இன்று நடைமுறையில் உள்ள பிரிவினை அல்லது மணமுறிவு பற்றிய நிலைமைகளைப் பார்ப்பது அதனைப் பற்றி அறிந்துகொள்வதற்குப் பின்வரும் தகவல்கள் பயன்தரக் தக்கதாகக் காணப்படுகின்றன.

1. பெற்றோர்கள் இருவருக்குமிடையே மிகமோசமான பிரச்சினைகள் இருந்தாலும்கூட அவர்கள் ஒரே வீட்டில் வாழ்வதனால் பிள்ளைகள் நல்ல நிலையில் உள்ளனர்.

2. இளம் பெண்பிள்ளைகள் ஆண்பிள்ளைகளைவிட குறைந்தளவே மணமுறிவினால் பாதிப்புக்கு உள்ளாகின்றார்கள்.

3. இளங்குழந்தைகளைப் பராமரிக்க தாய்மாருக்கும் வளர்ந்த பிள்ளைகளைப் பராமரிக்க தந்தைமாருக்கும் முடிகின்றது. எனவே தாய் தந்தை இருவரும் பிரிந்து வாழ விழையும்போது குழந்தைப் பருவத்தினரை தாய்மாரும் வளர்ந்த பிள்ளைகளைத் தந்தைமாரும் வைத்துப் பாதுகாப்பு வழங்க வேண்டும்.

4. மணமுறிவு தொடர்பான சட்ட விடயங்களில் வளர்ந்த பிள்ளைகளோ அன்றி பதின்மவயதினரோ பங்குகொள்ளுதல் சரியானது. ஆனால் இரு பெற்றோரினதும் உணர்வுப் பிரச்சினை-மனவெழுச்சிச் சிக்கல்களில் இரு பெற்றோரும் அனுபவம்

பெற்றுக்கொள்ளுகின்ற விடயங்களில் அவர்கள் பங்கு கொள்ளக்கூடாது.


5. ஒன்றிரண்டு பிள்ளைகளோடு உள்ள கனடிய குடும்பங்கள் தவிர்ந்த ஏனைய குடும்பங்கள் தாய் தந்தை என்ற நிலையின்றி ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் என்ற நிலை இருப்பதனால் அவர்களின் பிள்ளைகள் என்ற எண்ணப்பாங்கே காணப்படுகின்றது.

6. சாதாரணமாக பிரிந்துவாழத் தொடங்கி ஒரு ஆண்டின்பின்னர் ஆணின் வருமானம் முன்னர் இருந்த நிலைக்குத் திரும்புகின்றது. ஆனால் பெண்ணின் நிலை 75 விழுக்காட்டினால் வீழ்ச்சி காண்கின்றது.

7. கனடாவில் மணமுறிவின் அளவு குறைந்துள்ளது. அது எதிர்வரும் ஆண்டுகளில் மேலும் குறைவடையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

8. கனடாவில் இடம்பெற்ற திருமணங்களில் அரைப்பங்கிலும் குறைந்தளவே வாழ்க்கை முழுமையும் நீடிக்கின்றது.

9. அரைப்பங்குக்கு மேலான குடும்பங்களில் 18 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகள் இல்லாத நிலை உண்டு.





# 20

# பெண்கள் மீதான வன்முறைகள் ஒருபோதும் சமாதானப்படுத்தப்படவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதவொரு குற்றச்செயல்

**வ**ன்முறை என்பது உடலியல் ரீதியாகவோ அல்லது உளவியல் ரீதியாகவோ ஒருவரைப் பாதிப்புக்கு உட்படுத்துவதனைக் குறிக்கும். பாகிஸ்தான், இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் பாலியல் வன்முறைகளும், பெண்களைத் துன்புறுத்துதல், அவமானப்படுத்தலும் போன்றனவற்றுள் பெரும்பாலானவை மணமுறிவுக்கு இட்டுச்செல்லும் காரணிகள் மட்டுமன்றி அவை பெண்களை நிர்க்கதியாக, வழியற்றவர்களாக நட்டாற்றில் விடும் தன்மையையும் பெற்றுள்ளன. கடந்த 2005 மே 11ம் திகதி வங்காள தேசத்து சபாலி என்னும் 26 வயது நிரம்பிய இளம் தாய் தனது இரண்டரை வயதுக் குழந்தையைக் காப்பாற்றவேண்டும் என்பதற்காகத் தனது கண்களில் ஒன்றை விற்பதற்கு முன்வந்து அதனைப் பத்திரிகையிலும் விளம்பரப்படுத்தியிருந்தார். அவர் அதற்கு அளித்த விளக்கம் - "எனது கணவன் என்னைக் கைவிட்டுவிட்டார். நான் எனது குழந்தையைப்

பாதுகாப்பதற்கு வேறு வழி தெரியவில்லை. எனது கண்களில் ஒன்றை விற்றாவது எனது குழந்தையைப் பாதுகாக்க விரும்புகின்றேன். எனக்கு அதிகம் பணம் தேவையில்லை. எனது மகளோடு வாழவேண்டும் என நினைக்கின்றேன். நான் ஒரு பணப்பிசாசு அல்ல. நான் வீட்டுவேலை செய்யும் பணிப்பெண்ணாகவோ அல்லது உடைதயாரிக்கும் நிறுவனத்திலோ வேலை தேடுகின்றேன். எனக்கு குழந்தை ஒன்று இருப்பதனால் ஒருவரும் வேலை தருவது இல்லை. நான் பிச்சைகூட எடுக்க முயற்சித்தேன். நான் ஒரு இளம்பெண் என்பதனால் யாரும் எனக்கு ஒரு செப்புச்சல்லிகூட பிச்சையளிக்க முன்வரவில்லை'' - என்று அவர் தனது சோகக் கதையைச் சொன்னதை அவதானிக்கும்போது பெண்களுக்கான பாதுகாப்பு எவ்வளவு என்பது புலனாகின்றது. பெண்களைக் கைநீட்டி அடிப்பதும், அவர்கள் தங்களுக்கு அடங்கி நடக்கவேண்டியவர்கள் என்பதும் பண்டைக் காலந்தொட்டு ஆண்களினால் பின்பற்றப்படும் வழக்காகக் காணப்படுகின்றது. இவ்விதமாகப் பாதிக்கப்பட்டுள்ள பெண்கள் தென்னாசியாவில் ஒரு மில்லியனுக்குமேலாக உண்டு என ஐ.நா. ஆய்வுகள் புலப்படுத்துகின்றன.

> ''வலியார்முன் தன்னை நினைக்கத் தான் தன்னின்
> மெலியார் மேல் செல்லும் இடத்து''

-என வன்முறை பற்றி வள்ளுவரே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சொல்லியுள்ளார். வலியவர்கள் தம்மை எதிர்த்து நிற்க முடியாதவர்களைத் தாக்குவதும் அன்றி எளியவர்கள் பாதிப்புக்கு உள்ளாக்குவதும் 'வன்முறை' என்ற பதத்தினுள் அடங்கும். எனவே தனக்கு எந்தவகையிலும் ஒப்பற்ற ஒருவரைத் துன்புறுத்த முயல்வது தவறு என்பதனை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். எனவே பெண்கள், குழந்தைகள், வயோதிகர் ஆகியோர் உடலியல் ரீதியில் வலுவற்றவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் மீது வலுவுள்ளவர்கள் தங்கள் பலப்பரீட்சையைக் காட்ட முனைவது எத்துணை தவறு

என்பதனை உணர்ந்து கொள்ளுதல் அவசியமானது. உடலியல் பலம், பொருளியல் பலம் என்று கொள்ளும்போது சிற்சில வேளைகளில் அல்லது இடங்களில் ஆண்கள் மட்டும்தான் அதற்கானவர்கள் என்று கொள்ளுதலும் பொருத்தமற்றது. சில பெண்களே ஆண்களை ஆட்டிப்படைக்கும் நிலையும் - அவர்கள் உடல் வலுக்கொண்டவர் களாகவும் பொருளியல் வலுக்கொண்டவர்களாகவும் - ஆண்கள், பிள்ளைகள், வயோதிகர்களை வன்முறைக்கு உள்ளாக்குபவர்களாகவும் திகழ்கிறார்கள் என்பதும் கருத்திற்கொள்ளற்பாலது. இது ஒப்பீட்டு ரீதியில் மிக மிகக் குறைவாக இருப்பதனால் அவை பெரிதாகச் சமூகத்தில் தெரிவதில்லை என்பதும் உண்மையே.

பெண்கள் மீதான வன்முறைகள் அவர்களின் உடலியல் பலவீனம், பொருளாதாரப் பலவீனம், சமூகத்தில் அவர்களின் நிலை, சட்டமூலமான பாதுகாப்பு போன்ற முக்கிய காரணிகளினால் தீர்மானிக்கப்படுகின்றன. சிற்சில சமூக அமைப்புக்களில் பெண்கள் இரண்டாந்தரமானவர்களாக கணிக்கப்படுவது கண்கூடு. பெண்களுக்கு சம உரிமை வழங்க பல நாடுகள் இன்னும் முன்வரவில்லை என்பது அண்மையில் துருக்கி, ஈரான் போன்ற மத்திய ஆசிய நாடுகளில் நிகழ்ந்த பெண்களின் உரிமைப்போராட்டங்கள் எடுத்துக்காட்டுகின்றன. மேலை நாடுகளோடு ஒப்பிடும்போது பெண்கள் கல்விவாய்ப்பில் சமவாய்ப்புக் கிட்டுவதனால் அவர்கள் பொருளாதார ரீதியும் சம சந்தர்ப்பம் பெற்று தங்கள் காலில் நிற்கின்ற தன்மை காணப்படுகின்றது. ஆனால் கீழைத்தேய நாடுகளில் ஆண் ஆதிக்க நிலையை மேம்படுத்துவதற்கு அங்கு நிலவும் பொருளாதார நிலைமை, சமூகத்தில் பெண்ணின் கணிப்பு என்பன பெண்கள் மீதான வன்முறைகளுக்கு முக்கிய காரணிகளாகின்றன. குடியேறிய நாடுகளில் வன்முறைகள் வேறு தன்மை வாய்ந்தனவாக அமைவதற்கு அங்கு காணப்படும் சூழ்நிலைகள் காரணமாகின்றன. புதிய சூழ்நிலைமைகள் மரபுமுறையாகப் பின்பற்றி வந்த சமூகக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட வழிவகுக்கின்றது. திருமணப் பந்தத்தால் கட்டுப்பட்ட ஆணும் பெண்ணும்

தங்களின் வாழ்வைக் கட்டுப்படுத்திக் கொண்டு- எதிர்நோக்கும் தொல்லைகள் துன்பங்களை மனதில் அழுத்தி வாழ்க்கையை ஓட்டிச் செல்லும் நிலைமையில் மாற்றம் ஏற்படுகின்றது. இதனால் கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து சுதந்திரமாக வாழக்கூடிய சூழ்நிலை குடும்பம் என்ற பரிணாமத்தில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. கீழை நாடுகளில் காணப்படுவதுபோன்ற வன்முறைகள் பிள்ளைகள்மீதோ அன்றி மனைவியர் மீதோ மேற்கொள்ள முடியாத சட்டத்தினாலான கட்டுப்பாடு மேலை நாடுகளில் அதிகமாக இருப்பினும், கனடா போன்ற பல்லின மக்கள் வாழுகின்ற பல் கலாச்சார நாடுகளில் பெண்கள் மீதான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படத்தான் செய்கின்றன. பெண்கள் பல காரணங்களுக்காக தமது கணவன்மாரின் வன்முறைக்கு உள்ளாவதைக் காணமுடிகின்றது. ஆப்கான் நாட்டைச் சேர்ந்த ஒரு குடும்பத்தில் அடிக்கடி வன்முறை இடம்பெறுவதனை அந்தப் பாதிப்புக்கு உள்ளான பெண்ணின் வாயிலிருந்தே கேட்கமுடிந்தது. கணவன் தான் உழைப்பதை எல்லாம் தனது உறவினர்களுக்கு அனுப்புவதனால் எழும் கருத்து மோதல் வெடித்து வன்முறைக்கு இட்டுச்செல்கின்றது. வேலையில்லாது இருக்கும் அந்தப் பெண் தனது இரு குழந்தைகளுடனும் பிரிந்து வாழ்வது பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பாதிக்கும் என்ற நோக்கோடு தொல்லைகளுக்கு உட்பட்டு வன்முறைக்கு ஆளாகி வாழ்ந்து கொண்டிருப்பதனை அறியமுடிகின்றது. பிரிந்து வாழுதல் மேலும்பல சிக்கல்களைத் தரும் என்ற நோக்கோடு வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கும் பெண்கள் எம்மத்தியில் இருக்கத்தான் செய்கின்றார்கள். பூட்டிய அறைகளுக்குள் நடப்பவை வெளியுலகிற்குத் தெரியாத நிலையில் அவை முற்றி வெடிக்கும்போது மனவழுத்தம், மனமுறிவு, உளவியல் பாதிப்பு போன்றவற்றோடு கொலைகளும் இடம்பெறுவதனைக் காணமுடிகின்றது.

பெண்கள் மீதான வன்முறைகள் இடம்பெறுவதற்கு மேற்கூறிய காரணங்களோடு இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் பெண்களிடம் எதிர்பார்க்கப்படும் சீதனமுறையும் கொடுமை நிறைந்த வன்முறைப்

பாதிப்புக்கு அவர்களை உள்ளாக்குவதனை அறியலாம். பெண்கள் மீதான வன்முறைகள் உடலியல் ரீதியில் அமையாவிட்டாலும் உளவியல் ரீதியில் பாதிப்பை ஏற்படுத்துவது மிக அதிகம். இலங்கையில் இருந்து மணம்பேசி தனது உறவினரை மணமுடித்த இளம் பெண் ஒருவர் இரண்டு ஆண்டுகள் கணவனோடு இலண்டனில் வாழ்ந்த போது சீதனம் பெறுவதற்காக கணவனாலும் அவரின் தாய், சகோதரங்களாலும் இம்சிக்கப்பட்டு உறவினரிடம் செல்வதாகக் கூறி ஏமாற்றப்பட்டு இலண்டனில் இருந்து கனடிய விமான நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு நிர்க்கதியாக விடப்பட்ட அப்பாவிப் பெண்ணின் நிலை ஆணின் வன்முறைக்கு உட்பட்டதிலும் பார்க்க மாமி, மச்சாளின் வன்முறைக்கு உட்பட்டு அவர் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதனை அறியும்போது ஆண்களால் மட்டும்தான் பெண்களுக்கு வன்முறை நிகழ்கின்றது என்பதல்ல பதிலாகப் பெண்களுக்குப் பெண்களாலும் வன்முறை மேற்கொள்ளப்படுகின்றது என்பதனையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டும். கனடா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் அண்மைக்காலங்களில் ஆண்-ஆண், பெண்-பெண் உறவுமுறைகள் புதிய குடும்ப அமைப்பை ஏற்படுத்தியிருப்பது பெரும் வாதப்பிரதிவாதங்களைக் கொண்டுள்ளது எனினும் அவர்களுள்ளும் வன்முறைகள் இடம்பெறுவதும் இதனால் பலவீனமானவர்கள் பாதிக்கப்படுவதும் மிக அதிகரித்து வருவதனைக் காணலாம். ஆண்மை நிறைந்த பெண்களும், பெண்மை இயல்புகொண்ட ஆண்களும் எமதுமத்தியில் வாழத்தான் செய்கின்றார்கள். எனினும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது எமக்குக் கிடைக்கும் தகவல்களின்படி பெண்கள் மீதான வன்முறைகள் அதிகமானதாகவே காணப்படுகின்றன. பெண்கள் மீதான வன்முறைகள் பின்வரும் அம்சங்களைக் கொண்டுள்ளதை புள்ளி விவரக் கணக்கெடுப்புக் காட்டி நிற்கின்றது.

- பெண்கள் மீதான வன்முறைகள் உயிராபத்தானது. ஒன்ராறியோ மாகாணத்தில் ஒவ்வொருமாதமும் தற்போதைய அல்லது

முந்தைய ஆண் துணைவரால் 3-6 எண்ணிக்கை வரையிலான பெண்கள் கொலை செய்யப்படுகின்றார்கள்.

- வன்முறைக்கு குடும்பத்திலோ அன்றி சமூகத்திலோ இடமில்லை
- வன்முறை கற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பயின்றுகொண்ட ஒரு நடத்தை. எனவே இது மாற்றப்படவேண்டியது.
- வன்முறை ஒரு தெரிவாகும்
- வன்முறை ஒரு அதிகாரம் தொடர்பான நடவடிக்கை
- வன்முறை ஒருபோதும் சமாதானங்கூறப்படமுடியாதது. எந்தவொரு பெண்ணினது நடத்தையும் - வன்முறை சமாதானப்படுத்தவோ, அன்றி சகித்துக்கொள்ளவோ வைக்காது.
- ஒரு பெண் தீங்கிழைக்கப்படுவதற்கு ஒருபோதும் பெண் பொறுப்பாளியாக இருக்கமுடியாது. தாக்குதல் செய்பவரே வன்முறைக்குப் பொறுப்பாளியாவார்.
- வன்முறை கட்டுப்பாட்டை மீறுகைக்குக் காலாக அமையாது. கட்டுப்பாடு தாக்குபவருக்கே தேவையானது.
- வன்முறை எல்லா வகுப்பாரிடையேயும், வர்க்கத்தினரிடையேயும், இனத்தினரிடையேயும், பண்பாட்டுக்குழுக்களிடையேயும் இடம்பெறுகின்றது

வன்முறை என்னும் அம்சம் மிகச் சிக்கலானது. நாம் சமூக, தனித்துவ, பொருளாதார, அரசியல், பண்பாட்டு, சமய பகுப்புக்களுக்குள்ளே நின்று ஒரு பல்பண்பாட்டியல் கட்டுமானத்தளத்திலிருந்து அவற்றை விளங்கிக்கொள்ளுதல்வேண்டும்.

குடியேறிய பெண்களும் பிள்ளைகளும் குறிப்பிடத்தக்க தனித்துவமான பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள், அவையாவன:

❖ வகுப்புவாதம்

❖ குடிவரவுக் கொள்கை- சட்டதிட்டங்கள்

❖ மொழியை விளங்கிக்கொள்ளமுடியாத தடைகள்

❖ சேவைகளை அடையக்கூடிய அல்லது பெற்றுக்கொள்ளக்கூடிய தன்மை- குறைந்தளவே கிடைக்கப்பெறும் தன்மை

❖ நீதி நிர்வாக அமைப்பில் நம்பிக்கையீனம்

❖ தனிமைப்படுத்தப்படல்

❖ பொருளாதார தராதர கீழ் நிலை

- போன்ற காரணிகளோடு பெண்களில் பின்வருவோர் கூடியளவிற்கு வன்முறைக்கு உள்ளாகின்றார்கள்.

❖ காது கேட்காது அல்லது கேட்டல் குறைவாக உள்ளவர்கள்

❖ உடல் வலுக்குறைந்தவர்கள் (உடல் ஊனமுற்றோர்)

❖ வேலையிழந்தோர்

❖ கல்வியறிவற்றோர்

❖ வயோதிகப் பெண்கள்

❖ ஓரினச் சேர்வாரர்களான பெண்கள்

❖ சமய, அல்லது இன அடிப்படையில் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள்

- மொழியடிப்படையில் சிறுபான்மைச் சமூகத்தைச் சார்ந்தவர்கள் இவற்றைவிட வருமானம் போதியளவிற்கு இல்லாதவர்கள் அல்லது குறைந்தளவு வருவாயைப் பெற்றுக்கொள்பவர்கள்

பெண்களோ, குழந்தைகளோ அன்றி சமூகத்தில் உள்ள ஒருவரோ பாதிப்புக்கு உள்ளாகும் போது சமூகத்திற்கு தலையீடு செய்வதற்கான தார்மீகப் பொறுப்பும் உரிமையும் உண்டு. வன்முறைபற்றித் தெரிந்துகொண்டுள்ளதும் மிகவும் தாக்கமுள்ளதுமான சமூகமே தனது தலையீடு காரணமாக வன்முறையினைத் தடைசெய்யவும், குறைத்துக்கொள்ளவும் முடியும். கூட்டுக்குடும்ப அமைப்பு முறை பின்பற்றப்படும் நாடுகளில் சமூகக் கட்டுப்பாடுகள் இவற்றைக் கட்டுப்படுத்துகின்றன. பெரியோர் சொற்கேட்டல், பெரியோரை மதித்தல், சமூகம் கூடாதென ஒதுக்கியவற்றை மேற்கொள்ளாது ஒழிதல் போன்றன கீழைத்தேச நாடுகளின் மரபுவழியானவை. இவற்றின் காரணமாக சமூகத்தில் இடம்பெறும் விடயங்கள், நிலைமைகளில் அந்தச் சமூகத்திலுள்ள பெரியவர்கள், அறிஞர்கள், அனுபவம் நிறைந்தவர்கள் தலையீடு செய்யும் உரிமையினை அந்தச் சமூகங்கள் அவர்களுக்கு வழங்கியுள்ளன. அதனால் அவர்கள் சொற்கேட்டு பணிந்து நடக்கும் நிலை காணப்படுகின்றது. முதுமைதான் அந்தச் சமூகங்களில் வலிமை நிறைந்ததாக காணப்பட்டது. முதுமையடைந்தவர்கள் தம்மிலும் வலியவர்களானாலும் இளமைத்துடிப்பும் உடல்வலிமையும் உடையவர்களைக் கட்டுப்படுத்தும், தண்டிக்கும் உரிமை உடையவர்களாகக் காணப்பட்டனர். இவை சமூகத்தில் உள்ள வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் நிறுவன அமைப்புக் கொண்டனவாக அமைந்தன. அந்த நிறுவன அமைப்பின் வடிவே கிராம சபைகள், பஞ்சாயத்துக்கள் என வளர்வு பெற்றுள்ளன.

**ஆண், பெண் இருவருமே மனித இனத்தைச் சார்ந்தவர்கள் எனினும் அவர்கள் உடலியலால் வேறுபட்டவர்கள். இயற்கையின் கொடையில் ஆண் பலசாலியாகவும், கடினமான தொழில்களைச்**

செய்யும் வலிமைகொண்ட உடலமைப்பை உடையவனாகவும், பெண் மென்மையான உடலமைப்பினைக் கொண்டதோடு மட்டுமல்லாமல் இனவிருத்திக்கான மூலமாகவும் விளங்குகின்றாள். பிள்ளையைத் தனது வயிற்றில் சுமத்தல், பெற்றெடுத்தல், பால்கொடுத்தல் போன்ற செயல்களோடு உடலமைப்பிலும் மாறுபட்டவளாகக் காணப்படுகின்றாள். ஆண் தனக்கு உள்ள உடல் வலிமையினால் வெளியே சென்று கடின உழைப்பினை மேற்கொள்ள பெண் வீட்டில் இருந்து வீட்டுப்பணிகளோடு பிள்ளைகளையும் வளர்த்துவரும் பெரும் சேவையினை ஆற்றி வருவது நாமறிந்ததே. பெண்கள் குடும்பவன்முறை, வேலைத்தள துன்புறுத்துதல், பாலியல் துன்புறுத்துதல் அல்லது கற்பழிப்பு, பாலியல்ரீதியாகத் தொல்லைப்படுத்துதல் போன்றனவும் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் தீங்கிழைப்புக்களாகும். சுர்லொட் பஞ் (**Charlotte Bunch**) என்னும் ஆய்வாளர் ''பெண்களுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறையே உலகின் மனித உரிமைமீறல்களில் மிகவேகமாகப் பரவிவரும் வன்முறையாகும். இதன் வடிவங்கள் முனைப்பானதும் தெளிவற்றதுமானதும் - இதன் விருத்தியின் ஆழ்தடங்களின் விளைவுகளையும் கொண்டுள்ளது. ஆனால் இது உலகிலுள்ள பண்பாடுகளில் வெளிப்படாத அளவிற்கு ஆழப்பதிந்துள்ளது. இன்னும் இந்த கொடூரச்செயல் அகற்ற முடியாததாகவுள்ளது. இதன் தன்மையை ஒருமுறை அறிந்துகொண்டால் - ஒரு அதிகார அமைப்பு தொடர்ந்து பேணப்படுகின்ற ஒரு வழியின்- தராதரத்தின் அம்சமாகும் இதனை இல்லாது அழித்தொழிக்கமுடியும்''

உடலியல் வேறுபாடுகள் காரணமாக ஆண்கள் அதிகாரம் செலுத்தப் பிறந்தவர்கள்; பெண்கள் அடங்கிப்போக வேண்டியவர்கள் என்னும் கருத்து மிக நீண்ட நெடுங்காலமாக நமது சமுதாயத்தில் நிலைகொண்டுவிட்டது. ஆனாலும் தாயைத் தெய்வமாக மதிக்கும் பண்பினைக்கொண்டது நமது சமுதாயம். மனைவியை - பெண்பிள்ளை களை- ஏன் சகோதரிகளைக் கூட சமத்துவமானவர்களாக மதியாத

நிலை இன்றும் காணப்படுகின்றது. தாயிடம் அளவிலாப் பாசத்தினைக் கொண்டுள்ள ஆண்கள் ஏனைய பெண்களை தாயின் தானத்திலிருந்துப் பார்க்க மறந்துவிடுகின்றார்கள். குடும்பத்தில் பெண்கள் தமக்குப் பாரமானவர்கள் என்ற எண்ணம் தந்தை, சகோதரங்களிடையே நிலவுவதனையும் காணக்கூடியதாகவுள்ளது. 'தாய்க்குப்பின் தாரம்' என்னும் முதுமொழி எமது பண்பாட்டோடு இரண்டறக்கலந்தவொன்று. ஆனால் நம்மில் பலர் தாய்க்கு அடுத்த நிலையில் வைத்து தாரத்தைப் பார்க்கத் தவறுகின்றோம். அதன்விளைவாக பல குடும்பங்களில் பிணக்குகள் ஏற்படுகின்றன. இவை குடும்ப வன்முறைகளாகவும் வெடிக்கின்றன. தாயைக் கைநீட்டித் தீண்டப் பயப்படும் நிலை தாரத்தைக் கைநீட்ட முற்படும்போது அல்லது உதாசீனம் செய்யும்போது, அல்லது துன்புறுத்த முற்படும்போது வருவதில்லை என்பதனை நாம் சற்று உணரவேண்டும்.


"குடும்ப வன்முறை" என்பது பல வேறு வகைப்பட்ட தீமைசெய்யும் தன்மையைக்கொண்ட பதமாகும். அது தவறாக நடத்துதல், கவனியாதுவிடுதல், தவறான உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டுத் தீங்கிழைத்தல், தாக்குதல் அல்லது அடித்தல், உடலுக்கு ஊறுவிளைக்கக்கூடிய வகையில் தாக்குதல், உடன்பாடற்ற பாலியல் வல்லுறவு, உடன்பாடற்ற பாலுறவினால் உடலுக்குத் தீங்குவிளைத்தல், ஒரு பொருளை அல்லது ஆயுதமொன்றை பயன்படுத்தி பாலுறவு கொள்ளுதல், குற்றவியல்சார்ந்த பாதகமான துன்புறுத்துதல், போலிக்குற்றம் சுமத்தித் துன்புறுத்தல், ஏசி அல்லது மிரட்டிப் பயமுறுத்துதல், தொல்லை கொடுத்தல், தொந்தரவுசெய்தல், வேடிக்கைசெய்தல், கேலிசெய்தல், வசைமொழிதல், அடக்குதல், பணியவைத்தல், கொலைமுயற்சி, கொலை போன்றவைற்றை உள்ளடக்கியதாகும். குடும்ப வன்முறை என்பது பொதுவாக வெளியே தெரிவதில்லை. கணவனுக்கும் மனைவிக்குமிடையே இடம்பெறுவதாகவும் அல்லது ஒன்றாக இருக்கும் குடும்ப உறுப்பினர்களிடையே ஏற்படுவதாகவும் அமைந்துவிடுகின்றது. இதனால்

இவை முறையீடுசெய்யாத நிலையில் வெளியே வருவதில்லை. குடும்ப நிலை கருதி பெரும்பாலான குடும்ப வன்முறைகள் மூடி மறைக்கப் படுகின்றன. குடும்ப அங்கத்தவர்களிடையே உள்ள தொடர்புகளின் காரணமாக இவை வெளியே தெரிவதில்லை. குடும்ப வன்முறை என்பது சட்டத்திற்கு முரணானது என்றாலும் வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள சட்ட அமைப்புக்களுக்கும், இறுக்கமான நடைமுறைகளுக்கும் கீழை நாடுகளில் உள்ள சட்ட அமைப்புக்குமிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. சட்டத்திற்கு எதிரானதாக குடும்ப வன்முறை காணப்பட்டபோதிலும் அவை நாட்டுக்கு நாடு வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. 1999ம் ஆண்டு கனடாவில் மேற்கொள்ளப்பட்ட பொதுச் சமூக கணிப்பீட்டின்படி திருமணமான, அல்லது பொது உடன்பாட்டில் சேர்ந்துவாழுகின்ற சோடிகளிடையே 1999க்கு முந்திய ஐந்து ஆண்டு காலப்பகுதியில் கனடாவில் 690,000 பெண்களும், 549,000 ஆண்களும் ஏதோ ஒருவகையில் குடும்ப வன்முறைக்கு ஆளாகியுள்ளார்கள் என்பதனை ஆய்வு காட்டுகின்றது.

**கனடாவில் இன்று குடும்ப வன்முறைகள் மிகப்பாரதூரமாக அதிகரித்துவருவதாக ஆய்வுகள் காட்டுகின்றன. 2002ம் ஆண்டு 94 பிரிவுகளில் உள்ள பொலீஸ் நிலையங்களில் துன்புறுத்தல் பற்றிய முறையீடுகள் செய்யப்பட்டுள்ளன. இக் கணிப்பீட்டின்படி எல்லா குடும்ப வன்முறைகளிலும் 62 சதவீதமான வன்முறைகள் கணவன் மனைவி அல்லது கூடிவாழும் துணைவர்களினால் ஏற்பட்டதாகும். இதில் கூடியளவு பாதிக்கப்பட்டவர்கள் பெண்களே. இதில் 85 சதவீதமான பெண்களும், 15 சதவீதமான ஆண்களும் குடும்ப வன்முறைகளுக்கு ஆளாகியுள்ளனர் என பொலீஸ் அறிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன.**

பெண்கள் மீதான வன்முறைகள் ஒருபோதும் சமாதானப் படுத்தப்படவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதவொரு குற்றச்செயல் - ஐ.நா நிபுணர்.





# 21

# இந்திய திருமணச் சட்டமும் முஸ்லிம் பெண்களின் நிலையும்

முஸ்லிம் திருமண ஒப்பந்தங்கள் இந்துமத மணவினையை விட வித்தியாசமானதாகும். முஸ்லிம்களின் திருமண முறைகள் பாரசீக முறைகளின் அடிப்படையைப் பின்பற்றிய வகையில் முஸ்லிம் சட்டங்கள் பிறிதானவையான சட்டக்கோப்புக்களைக் கொண்டுள்ளன. இது இந்தியா, இலங்கை போன்ற முஸ்லிம்கள் கணிசமான தொகையில் வாழும் இடங்களில் பிரத்தியேகமான சட்டவாக்க நடவடிக்கைகளால் உறுதிப்படுத்தப்பட்டுப் பின்பற்றப்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே. முஸ்லிம் திருமணச் சட்டங்கள் அவர்களின் மத, மரபு வழிக் கொள்கைகளுக்கு ஏற்ப இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. முஸ்லிம் மத மரபுகளின்படி ஆண் ஆதிக்க நடைமுறைகள் முக்கியம் பெறும் வகையிலே ஒரு ஆண் பொருளாதார, உடல் வலு இருக்கும் நிலையில் அவர் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணந்துகொள்ள அவர்களது மத, சமூக, மரபு முறைகள் அனுமதிக்கின்றன. இந்த நடவடிக்கைகள் பெரும்பாலான இஸ்லாமிய நாடுகளில் பின்பற்றப்படுவதினைக் காணலாம். இதனால் பல ஆண்கள் தாம்

முதல் மணம் முடித்துக்கொண்ட பெண்களை உதாசீனம் செய்வதற்கோ அன்றி அவர்களுடனான திருமண ஒப்பந்தத்தை முறித்துக்கொண்டு விடுவதற்கோ சந்தர்ப்பம் அதிகமாகக் காணப்படுகின்றது. இஸ்லாமியச் சட்டம் பலதார மணத்தினை ஏற்றுக்கொள்கின்றது எனினும் அது ஆண்களுக்கு மட்டுமே ஏற்புடையது எனவும் கொள்ளப்படுகின்றது. ஒரு பெண் பல ஆண்களை ஒரே நேரத்தில் மணமுடிக்க முடியாத நிலைமைக்கு அவள் தனது வயிற்றில் கருவினைச் சுமப்பதே ஒரு காரணமாகக் கொள்ளப்படுகின்றது. ஆண்களைப் பொறுத்தவரையில் "சேறுகண்ட இடத்தில் மிதித்து தண்ணீர் கண்ட இடத்தில் கழுவிக் கொள்ளலாம்" என்ற கருத்திற்கமைய அவர்கள் எதுவும் செய்யலாம் ஆனால் பெண்கள் அடங்கி நடக்கவேண்டியவர்கள், அடக்கிக்கொள்ள வேண்டியவர்கள் என்ற மனோநிலை சமூகத்தில் பண்டைக்காலந்தொட்டு நிலவிவருவதினைக் காணமுடிகின்றது. இந்த முறைக்கு அவர்கள் தமது மத வேதமாகிய குரானைக் சாட்சியமாக்கிக் கொள்கின்றார்கள்.

பெரும்பாலான நாடுகளில் திருமண முறிவுகள் எடுத்தமாத்திரத்தே இடம்பெறும் நிலைமை காணப்படுவது போன்று இஸ்லாமிய சட்டத்தின்படி இடம்பெறும் திருமண முறைகளினால் பெண்கள் பாதிக்கப்படுவதும் மிக அதிகமானதாகவே காணப்படுகின்றது. கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் அபலைகளாக, தாம்பெற்றெடுத்த பிள்ளைகளுடன் நடுத்தெருவில் விடப்படும் நிலை காலத்திற்குக் காலம் அதிகரித்து வந்துள்ளமையினை இலங்கை, இந்தியா, சோமாலியா, எதியோப்பியா போன்ற நாடுகளில் காணமுடிகின்றது.

ஆங்கில ஆட்சிக்காலத்தில் 1869 ஆம் ஆண்டு நிறைவேற்றப் பட்ட இந்திய மணமுறிவுச் சட்டத்தின்படி ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தைத் தவிர்ந்த ஏனைய இந்திய மாநிலங்களில் வாழுகின்ற ஒரு பெண் கணவனைத் தவிர்ந்த ஒரு ஆணோடு தொடர்பு கொண்டால் மட்டும் அது அவளை மணமுறிவுக்கான காரணமாகக் கொள்ள

இடமளித்தது. இதன்படி எந்தவொரு ஆண்மகனும் தனது மனைவிக்கெதிராக மணமுறிவைப் பெற்றுக்கொள்ள மனுச்செய்ய உரிமையுடையவனாகின்றான். ஆனால் பெண்ணைப் பொறுத்த வரை இந்தவிடயம் சற்றுக்கடினமானதாகவே காணப்படுகின்றது. இந்தச் சட்டத்தின்படி எந்தக் கணவனும் திருமண ஒப்பந்தத்தை நீக்கிக் கொள்வதற்காக மாவட்ட நீதிமன்றிலோ அல்லது உயர் நீதிமன்றிலோ முறையீடு செய்யலாம். அதாவது திருமண ஒப்பந்தத்தின் சத்தியப்பிரமாணத்தை மீறி வேறு ஆடவனோடு பாலியல் தொடர்புகொண்ட குற்றத்திற்காக மணமுறிவினைப் பெற்றுக்கொள்ள இந்தச் சட்டம் ஆணுக்கு வசதியளிக்கின்றது.

அவ்விதமே ஒரு பெண் தனது கணவன் வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்வதற்காக கிறிஸ்தவ மதத்திலிருந்து மாறியிருந்தால் அல்லது வேறு மதத்திற்கு மாறியிருந்தால் அவனிடமிருந்து மணமுறிவைப் பெற்றுக்கொள்வதற்கு மாவட்ட நீதி மன்று அல்லது உயர் நீதிமன்றில் விண்ணப்பிக்கமுடியும். வேறு பெண்களோடு தொடர்புகொண்டிருந்தால், அல்லது வேறு பெண்ணோடு தொடர்புகொண்டு இருதார மணம் புரிந்திருந்தால் அல்லது தன்னினச்சேர்க்கையில் ஈடுபட்டிருந்தால், அல்லது விலங்கினப்புணர்வில் ஈடுபாடுகொண்டிருந்தால், அல்லது கற்பழிப்பில் ஈடுபட்டிருந்தால் அல்லது இவற்றொடு தொடர்புகொண்டு கைவிடப்பட்டிருந்தால் அல்லது மன்னிக்க முடியாத குற்றமிழைத்திருந்தால் அவர்கள் மணமுறிவு பெற்றுக்கொள்ள உரித்துடையவர் என அந்தச் சட்டம் விதந்துரைப்பதிலிருந்து ஆண்களுக்கும் பெண்களுக்கும் சட்டத்தினால் பாதுகாப்பு அளிக்கப்படும் தன்மைகள் வேறுபாடுடையனவாகக் காணப்படுகின்றன.

1986ம் ஆண்டின் முஸ்லிம் பெண்கள் சட்டவியற் கோவையின் படி ஒரு பெண் விவாகரத்துப் பெறுவதற்கு - “மணமுறிவு பெற்ற பெண்” என்ற பதத்தினை ஒருவர் பெற்றுக் கொள்வதற்கு அவர் முஸ்லிம் பெண்ணாகவும், முஸ்லிம் சட்டத்தின்படி மணமுடித்தவராகவும்,

அந்தச்சட்டத்தின்படி தனது கணவனிடம் இருந்து முஸ்லிம் விவாகரத்துக் கோரியிருத்தலும் வேண்டும்.

அத்தோடு மணமுறிவு பெற்ற பெண்ணின் "இதாத் காலம்" எனப்படுவது -

1. மணமுறிவு நாளிலிருந்து மாதவிடாய் உள்ள பெண்ணாயிருந்தால் மூன்று மாதவிடாய்க் காலமாதல் வேண்டும்.

2. மாதவிடாய் வராது கர்ப்பனியாக இருந்தால் மூன்று சந்திரமாதங்களும் அத்தோடு -

3. மணமுறிவு பெற்றவேளை அவர் கருத்தரித்திருந்தால் பிள்ளை பெற்றுக்கொள்ளும் வரை அல்லது கரு கலையும் வரை காத்திருத்தல் வேண்டும்.

பெண்களைப் பொறுத்தவரை சட்டப்படியான பாதுகாப்பு முஸ்லிம் சட்டத்தின்படி பின்வருமாறு அமைகின்றது: அ). "இதத் காலம்" முழுமையும் முந்தைய கணவனால் பராமரிப்பு பணம் வழங்கப்பட வேண்டும்.

ஆ). அவளது மணமுறிவுக்கு முன்னரோ பின்னரோ பிறந்த பிள்ளைகளுக்கு நியாயபூர்வமான பராமரிப்புத் தொகையினை முந்தைய கணவன் பிள்ளை பிறந்ததில் இருந்து இரண்டு ஆண்டுகளுக்கு வழங்குதல் வேண்டும்.

இ), முஸ்லிம் சட்டத்தின்படி திருமணத்தின் போது வழங்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்ட 'மகர்' எனப்படும் தொகைக்குச் சமமான தொகை கொடுக்கப்படவேண்டும்.

ஈ). பெண்ணின் உறவினர், நண்பர்கள் அல்லது கணவன் அல்லது கணவனின் உறவினரால் திருமணத்தின் போதோ அல்லது அதற்கு

முன்பாகவோ அல்லது பின்னராகவோ கொடுக்கப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் அவளுக்குக் கொடுக்கப்படவேண்டும்.

அவ்வாறு குறிப்பிட்ட தவணைக்குள் கொடுப்பனவுகள் நிறைவு செய்யப்படாதவிடத்து மணமுறிவுற்ற பெண் நீதிமன்றத்தினை நாடினால் அதனால் பாதிக்கப்படுவது முந்தைய கணவனாகவே இருப்பார். அது மட்டுமன்றி போதியளவு வருவாய், சொத்து உள்ளவராக இருந்தால் அவர் நீதிமன்றை அவமதித்த குற்றத்தின் கீழும் தண்டனை பெற்றுக்கொள்ளவும் இது வழிவகுக்கின்றது.

பெண்களைப் பொறுத்தவரை பலதரப்பட்ட சட்டவரையறை களைக் கொண்டுள்ளதாக - முஸ்லிம் சட்ட அமைப்பு மத, மரபு ரீதியானதாகக் கொள்ளப்பட்டாலும் அவர்களுக்குப் பாதுகாப்பளிக்கும் சரத்துக்களும் சட்டவடிவமைக்கப்பட்டதாக இந்திய சட்டவியல் கோவையில் இடம்பெற்றுள்ள அதே தன்மைகள் இலங்கை, இந்திய முஸ்லிம் சட்ட வரைவுகளிலும் இடம்பெற்றுள்ளமை அவதானிக்கத் தக்கது.

1954ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட முஸ்லிம் சட்ட இணைப்பு, 1974ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திருத்த மசோதாக்கள் மேலும் மணமுறிவு பெற்ற முஸ்லிம் பெண்களின் பொருளாதார தரத்தைப் பேணுவதற்கான வழிவகைகளை வரையறுக்கின்றன. கணவனால் கொடுக்கமுடியாத நிலையில் உறவினர்களினால் வழங்கப்படவேண்டும் என்பதும் அல்லது கிராமிய முஸ்லிம் 'வொ.'.ப்' சபை பொறுப்பேற்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எழுத்துருவில் சட்டமாக்கப்பட்ட பல விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்கள் இந்த நாடுகளில் நிலவுவது கண்கூடு. மணமுறிவுற்ற பெண் பிரிந்துவாழுங்காலத்தில் தனது வருவாயைக் காட்டாது அல்லது மறைக்க முற்படும் ஆண்கள்

எம்மிடையே உள்ளமைபோன்று இந்தியா, இலங்கை நாடுகளிடையே உண்மையான வருவாயையோ சொத்தையோ கணக்கிடமுடியாத நிலையும் சிக்கலைத் தருகின்றது.

கனடிய மண்ணில் எம் இனத்தைச் சார்ந்த பல குடும்பங்கள் பிரிந்து வாழுகின்ற நிலைமை காணப்படுகின்றது. பிரிந்து வாழும் நிலையில் பிள்ளைகளுக்கு பராமரிப்புத் தொகை கொடுக்கவேண்டும் என்பதற்காக தாம் செய்யும் வேலையை விடுத்து சமூக உதவு நிதி (Welfare) பெற்றுக்கொண்டு தமது வாழ்நாளை மண்ணடிக்கும் பலரை நாம் காண்கின்றோம். தமது பிள்ளைகள் என்பதனையே மறந்து, அவர்களின் நல்வாழ்வை மறந்து- கணவன் மனைவியினரிடையே ஏற்படும் நீயா? நானா? - ஒருகை பார்ப்போம் என்று பகைமை பாராட்டி தமது வாழ்வைக் குட்டிச்சுவராக்கும் நிலை எமது சமூகத்தில் மலிந்து கொண்டு வருவதற்கான காரணங்கள் பற்றி முன்னர் நாம் ஆராய்ந்துள்ளளோம். வீண் சந்தேகங்கள், கணவன் மனைவியினரிடையே நல்லுறவின்மை, விட்டுக்கொடுக்காமை போன்ற சாதாரண விடயங்களை முன்வைத்து பிரிந்து வாழுகின்ற நிலை கனடா போன்ற மேலை நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் நம்மவரிடையே பல்கிப் பெருகி வருவதனைக் காணலாம்.

பண்டைய தமிழர் திருமணத்தில் களவியலைப் போற்றி வந்துள்ளனர் என்பதற்கான ஆதாரங்கள் சங்க இலக்கியங்களில் உண்டு. ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஒருவரை ஒருவர் யாரும் அறியாத வண்ணம் விரும்பி பின்னர் மணமுடித்து வாழும் முறை களவொழுக்கத்தின் பாற்படும். களவொழுக்கம் பண்டைய தமிழ்ச் சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட ஒன்றாக இருக்கவில்லை. அது காதல் மணமாகக் காணப்பட்டது. சங்க இலக்கியங்கள் இவற்றை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. பின்னர் வந்த ஆரிய முறைகளிலேயே காதல் ஒழுக்கம் கூடாவொழுக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வால்எயிறு ஊறிய நீர்

எனக் காதற்சிறப்பினை வள்ளுவர் எடுத்துரைப்பதைக் காணலாம். கணவன் மனைவியின் இறுக்கமான வாழ்க்கையினை அவர் எடுத்துக்கூறாமல் இல்லை. அன்றில் பறவை எப்படித் தனது சோடியை இழந்தால் உயிர் வாழமாட்டாதோ அவ்விதமே பண்டைக்காலத்து காதலால் உடன்பட்டுவாழ்ந்த தமிழர்களிடையே உடன்கட்டை ஏறும் வழக்கமும் இருந்து வந்துள்ளது. தமது காதலை மறக்கமுடியாத நிலையில் உடன்கட்டை ஏறியுள்ளனர். இது மிக அண்மைக்காலம் வரை நிகழ்ந்துள்ளது. பண்டாரவன்னியனின் காதலி தனது காதலன் இறந்த செய்திகேட்டுத் தானும் நஞ்சருந்தி மாண்டாள் என்பது வரலாறு.

இந்துத் திருமண முறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஒருவனுக்கு ஒருத்தி என்னும் முக்கிய கருத்தினை முன்வைப்பதாக வேதங்கள் ஆகமங்கள் கூறினாலும் மனித நடைமுறையில் இந்துக்களின் வாழ்வியலில் ஆண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணந்து வாழ்ந்ததற்கான வரலாறுகள், கதைகள் பலவுள. இந்தியா சுதந்திரம் அடைந்தபின்னரும், சட்டத்தின் படி ஒருதார மணத்திற்கு மேல் மணத்தலாகாது என்று சட்டம் கொண்டுவரப்பட்ட பின்னரும் இந்துக்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணம்புரிந்துகொள்ளும் நிலை காணப்படுகின்றது. இது அரசியல் வரை பிரச்சினையைத் தருகின்ற ஒரு விடயமாக மிகவும் சூடுபிடித்த விவாதக் களத்திற்கு இட்டுச்சென்ற ஒன்றாகக் காணப்பட்டது. ஒன்று முஸ்லிம்கள் பலதார மணம் புரியலாம் என்ற சட்டம், இன்னொருபுறம் இந்துக்கள் பலதார மணம் புரியக்கூடாது என்ற சட்டமும் அங்கே நிலவுவது பல பிரச்சினைகளுக்கு இட்டுச்சென்றது. இன்னொரு மனைவியினை மணந்துகொள்ள அல்லது வைத்துக் கொள்ள விரும்புகின்ற இந்துக்கள் தாங்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்புவதற்காக முஸ்லிம்களாக மாறுகின்ற நிலையினைத் தோற்றுவித்தது. இதனால் இது இந்துமதத்தினருக்கு ஒரு தலையிடியாக மாற்றம் கண்டது.

இந்தநிலை பெரும் வாதப்பிரதிவாதங்களை பாராளுமன்றத்திலும் வெளியேயும் ஏற்படுத்தியது. இதன் விளைவாக இந்திய உச்ச நீதிமன்றத்தின் 2000ம் ஆண்டு மே 5ம் திகதியின் தீர்ப்பின்படி புதிதாக முஸ்லிம்களாக மாறி மணம் புரிந்துகொண்டவர்கள் மீது இந்துமதச் திருமணச் சட்டத்தின்கீழ் பலதாரக் குற்றம் சுமத்தப்பட்டு வழக்குத் தொடரப்பட வேண்டும் என விதித்தது. எனவே இந்துக்களாக இருந்து திருமணத்திற்காக மதம் மாறுபவர்களை அது தடுத்து நிறுத்தியது எனலாம்.

சாதாரண இந்துக்களின் திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதாகவே வேத ஆகமங்கள் குறிப்பிடுகின்றன. இந்துக்கள் எதிர் பாலார் இருவருக்கிடையே ஏற்படும் ஒரு தொடர்பானதாக திருமண வைபவத்தினைக் கருதிக் கொள்ளாமல் அது ஒரு புனிதம் நிறைந்த ஒன்றாகவே கருதுகின்றார்கள். இது இரண்டு தனிப்பட்டவர்களுக்கிடையே இடம்பெறும் இணைப்பு என்பதிலும் பார்க்க இரண்டு குடும்பங்களுக்கிடையே இடம்பெறும் இணைவாகவே இது கருதப்படுகின்றது. திருமணம் என்பது வாழ்வு பூராவும் நீடிக்கும் ஒரு உடன்படிக்கையாகவே கருதப்படுகின்றது. அத்தோடு ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே ஏற்படுத்தப்படும் ஒரு சமூகக் கட்டுப்பாடாக அமைகின்றது.

திருமணம் என்பது தூய்மையானதாக, புனிதம் நிறைந்ததாக அது சொர்க்கத்தில் முடிவெடுக்கப்பட்ட ஒன்றாகவே இன்றும் கருதப்படுகின்றது. இது குடும்பத்தைத் தொடர்கின்ற ஒன்றாக அன்றி தமது மூதாதையருக்குத் தமது கடன்களைச் செலுத்துவதாகவும் அமைகின்றது எனக் கருதப்படுகின்றது. வேதத்தின்படி ஒருவன் தனது மாணவப் பருவத்தை முடித்த பின்னர் குடும்பத்தனாக அதாவது கிரகஸ்தனாக மாற்றமடைகின்ற நிலையினை இது குறிக்கின்றது எனக் கொள்ளப்படுகின்றது.

இந்துத் திருமணங்களில் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பிச் செய்வதிலும் பார்க்க பெற்றோர், உற்றோர், உறவினர்களால் பேசி முடிவெடுக்கப்படும் முறையிலேயே அதிகளவு திருமணங்கள் நடைபெறுகின்றன. தனது மகனோ மகளோ மணப்பருவம் எய்தியதும் அவர்களுக்கான பொருத்தமான சோடியை தங்கள் சமூகக் கட்டுப்பாடுகளுக்குள் நின்று தேடுகின்றார்கள். அதாவது சாதி, சமயம், பிறப்புக் குறிப்பு, சொத்து, பொருளாதார மற்றும் சமூக அந்தஸ்து, விருப்பு என்பனவற்றின் அடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படுகின்றது. இந்த முறைகள் இன்று ஆசையின் அடிப்படையில் சீதனம் என்னும் ஒரு நிலைக்குக் கொண்டு சென்று விட்டுள்ளது. இந்தச் சீதனமுறை இன்று பல குடும்பங்களில் பிரச்சினையைத் தோற்றுவிப்பதாகவும், மணமுறிவுக்கு இட்டுச்செல்வதாகவும் அமைகின்றது. இத்தகைய பேசிச்செய்யப்படும் திருமணமுறைகளில்கூட சமூகத்திற்குச் சமூகம், இடத்திற்கு இடம், குடும்பத்திற்குக் குடும்பம் வேறுபட்டதாகவே காணப்படுகின்றது. ஆனால் திருமணச் சடங்குகள், வழமைகள் எல்லாம் கிட்டத்தட்ட ஒரே முறையிலேயே இடம்பெறுகின்றன எனலாம்.

காதல் திருமணங்கள் ஆண், பெண் இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பித் திருமணம் செய்கின்றதனைக் குறிக்கின்றது. ஆனால் இத்தகைய திருமணங்களை இந்துத்துவச் சமூகம் வரவேற்பதில்லை. சாதாரணமான இந்துக்கள் பண்டைய முறையிலே பழமையின் பிடியில் சிக்கியவர்களாக பேசித் தீர்மானிக்கப்படும் திருமணத்தையே செய்கின்ற நிலை இன்றும் காணப்படுகின்றது. காதல் திருமணத்தினை பெரும்பாலான இந்துமத குருக்கள் செய்துவைப்பதில்லை, அங்கு சாதி, சமய நிலவரங்கள் கருத்திற் கெடுத்துக் கொள்ளப்படுவதே இதற்குக் காரணமாகும்.

மகாபாரதத்தின் படி ஒரு பெண் பூப்படைந்த பின்னர் திருமணம் செய்வதற்கு மூன்று ஆண்டுகள் காத்திருக்கவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்பின்னர் அவள் தனக்கு விரும்பிய வரனைத்

தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் எனப் பீஷ்மர் குறிப்பிட்டுள்ளார். எனவே தனது பெற்றோரோ மற்றவர்களோ பார்க்காமலே அவளால் விரும்பியவனைப் பார்க்கமுடியும் எனப்படுகின்றது. இவ்விதமே அரசகுலத்துதித்த பெண்களுக்கு சுயம்வரம் மூலம் தனது மணாளனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கதை தமயந்தியின் சுயம்வரத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவை ஒருவனுக்கு ஒருத்தி என்ற தூய்மைத் தன்மையைக் காட்டிநிற்பதோடு பெண்களுக்கான உரிமைகள் வழங்கப்பட்டிருந்தன என்பதனையும் காட்டிநிற்கின்றன. நான் காட்டும் மாப்பிள்ளைக்கு நீ கழுத்தை நீட்டு என்று கூறுகின்ற தந்தை, தாய், சகோதரர்களின் விருப்பல்ல, பெண்ணின் விருப்பே சுயம்வரத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டது.

இந்துத் திருமண முறையின் படி ஒருவனுக்கு ஒருத்தி என்பதே இன்று இந்திய சட்டவியல் கோவையின் படி அறுதியாக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்று இந்தியாவில் திருமண முறிவுகள், அதனால் ஏற்படும் தற்கொலைகள், கொலைகள் அதிகரித்தவண்ணம் இருக்கின்றன. பொருளாதார ஏற்றத்தாழ்வு, சீதன முறைகள் இன்றைய திருமண முறிவுக்குக் காரணமாக அமைந்துள்ளன.

இந்த முறை மேலை நாடுகளிலும் 30 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்றுள்ளதாகவும் ஒருவனுக்கும் ஒருத்திக்கும் இடையே இடம்பெறும் திருமணம் வாழ்க்கை முழுமையும் நிலைத்து நீடிக்கும் ஒரு பந்தமாகவும் காணப்பட்டது. திருமண முறிவுகளே இல்லாத நிலையைச் சமூக அமைப்பு காத்து வந்துள்ளது என்பது தெரிய வருகின்றது. எனவே திருமண முறிவுகள் அண்மைக் காலத்திலேயே மனித சமுதாயத்தில் புகுந்துள்ளது என்பதும் அது வேகமாகப் பரவிவருவதும் கண்கூடு.





# 22

# இந்துக்களும் மணமுறிவும்

திருமணமுறிவுகள் இந்து மதச் சமுதாயத்தையும் விட்டுவைக்கவில்லை எனலாம்.

இந்துத் திருமணச் சடங்குகள் ஆதிதிராவிட இனத்தினரின் திருமணச் சடங்குகளில் இருந்து வேறுபட்டனவாக, அவை வர்ணாச்சிரம முறையினை வலியுறுத்துவனவாக உள்ளன. மிகவும் ஏழ்மை நிலையில் இருந்தவர்களை ஒதுக்கி வைத்து நல்ல பொருளாதார வளமுள்ளவர்களிடமிருந்து மதகுருமார் அல்லது பூசகர்கள் தாங்கள் வருவாயைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் சமுதாயத்தைப் பிரித்துவைக்க முற்பட்டனர். இதன் அடிப்படையிலேயே திருமணச் சடங்குகள் இடம்பெறவும் தொடங்கியுள்ளன. ஏழ்மைநிலையில் ஒதுக்கிவைக்கப்பட்ட அல்லது புறந்தள்ளப்பட்டவர்கள் தாம் பரம்பரை பரம்பரையாகப் பின்பற்றி வந்த திராவிடரின் வழக்குக்களையே கைக்கொண்டு ஒழுகலாகினர் என்பதற்கு இன்றும் சான்று பகர்கின்றன. ஆரிய வேதியர்களினால் ஒதுக்கி வைக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பார் தங்கள் மரபுகளைக் கைக்கொண்டு ஒழுகினர் எனினும் அவர்களிடம் புகுத்தப்பட்ட மதச்சடங்குகள், கோயில்கள், பொது நிகழ்வுகள் போன்றவற்றில் அவர்களிடையே நிலைத்துள்ள சடங்குகள்

முன்வைக்கப்பட்ட வேதிய நிகழ்வுகளைப் பின்பற்றுவனவாக அமைந்துள்ளன. காலத்திற்குக்காலம் இந்தத் தாக்கங்கள் அவர்களிடம் ஊடுருவத் தொடங்கியுள்ளன எனினும் திருமணம், பூப்புனித நீராட்டுப் போன்றவற்றில் சடங்குமுறைகள் ஆரிய முறைகளில் இருந்து வேறுபட்டனவாகவே இன்றும் உள்ளன.

ஆதி திராவிடர் மத்தியில் பின்பற்றப்பட்டு வந்த பழக்கவழக்கங்கள் சமூகக் கட்டுக்கோப்பைப் பின்பற்றுவதாக அமைந்திருந்ததால் அங்கு திருமண வைபவங்கள் பெருமளவிற்கு மணமகனும் மணமகளும் தாம் விரும்புபவர்களை மணந்து கொள்ளும் அடிப்படையிலேயே நிகழ்ந்துள்ளன என்பதனை தமிழ் இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. தொன்மைத் தமிழ் இலக்கணமாம் தொல்காப்பியத்தில் காதலொழுக்கம், களவொழுக்கம், என்பன விரித்துக் கூறப்பட்டுள்ளன எனின் தமிழரின் பண்டைய வாழ்வில் இவை பின்பற்றப்பட்டுள்ளன என்பது பொருள். இதனைப் பின்வரும் செய்யுள் எடுத்துக் காட்டுகின்றது.

“பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வோடு திருனெ
முறையறக் கிளந்த ஒப்பினது வகையே”

ஒத்தவர்களான இருவர் தாம் ஒருவரை ஒருவர் கண்டு விரும்பிக் கூடிக்குலாவி மகிழ்ந்து பின்னர் மணவாழ்வில் ஈடுபடுவதனை இதன் வழி அறியமுடிகின்றது. இந்த முறை தனியே தமிழர்களிடம் மட்டும்தான் இருந்துள்ளது என்று சொல்வதிலும் பார்க்க மனித சமுதாயம் தோன்றிய காலந்தொட்டு இத்தகைய வழக்கம் இடம் பெற்றுள்ளமையினை வரலாறு அறிவுறுத்தி நிற்கின்றது. இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவில் இத்தகைய நிலையே இருந்துள்ளது. அதாவது ஆணும் பெண்ணும் தாம் விரும்புபவர்களை மணந்து வாழும் நிலை

காணப்பட்டுள்ளது. மனிதன் சொத்துச் சேர்க்க விழைந்ததன் காரணமாக தனியுடைமைச் சமுதாயம் தோன்றியதன் பயனாக திருமண உறவுகளிலும் சொத்துடைமை, குழுவுடைமை தோன்றி பின்னர் சாதியமும் புகுந்து கொண்டது என்பது வரலாறறிந்த உண்மை.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னர் தமிழர்கள் ஒழுக்கநெறி மீறாதவர்களாக இருந்துள்ளார்கள் என்பது வெளிப்படை. அவர்கள் ஊரறிய வதுவைச் சடங்குகள் செய்யவேண்டிய நிலை அங்கு தோன்றியிருக்கவும் இல்லை; மணமுறிவுகள் ஏற்படவும் காரணங்கள் இருக்கவில்லை. பின்னர் சமுதாயத்தில் ஒழுக்கம் தவறத் தொடங்க ஊரறியத் திருமணம் செய்துவைக்கும் நிலை தோன்றியுள்ளது. இந்த நிலைமையினை தொல்காப்பியர் பின்வருமாறு எடுத்துரைக்கின்றார்:

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

என்னும் (தொல்.கற். 4) சூத்திரத்தினால் எடுத்துரைக்கின்றார். இதனை குறிஞ்சிப்பாவிலே -

"கொடுப்பின் நன்கு உடைமையும் குடிநிரல
எண்ணமும் துணையும் கொரீஇ உடைமையும்"

(குறிஞ். பா. 30-31)

என்பதனால் பெற்றோர் முன்னின்று மணமுடித்துவைத்துள்ளமையும் -

நெடுந்தேர் எந்தை அருங்கடை நீவி
இருவெம் ஆய்ந்த மன்றல்"

என ஆண் பெண் தாங்களே விரும்பித் திருமணம் செய்துகொண்ட நிலையையும் எடுத்துக்காட்டுமாற்றால் அறியக்கிடக்கின்றது.

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உணர்ந்து பாலத தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப"

-எனத் தொல்காப்பியர் ஒருவனை ஒருத்தி விரும்பி ஏற்று இல்வாழ்வில் ஈடுபடுவதே வழக்காயிருந்துள்ளது என்றதனை எடுத்துக்காட்டு கின்றமையை நாம் நோக்கும்போது பண்டைத் தமிழகத்தில் திருமண முறைகள் ஊரறிய- பெரியோர்களால் இவனை, இவளுக்கு எனத் தீர்மானித்து வலுக்கட்டாயமாக- மணமுடிக்கும் நிலை இருக்கவில்லை என்பது தெரிகின்றது. எனவே திருமண முறிவும் அங்கு இருந்திருக்க இடமில்லை எனினும் பரத்தமை பாற்செல்லுதல் வழக்காறாகக் காணப்பட்டுள்ளது. இது தலைவன் தலைவியினரிடையே ஊடலை ஏற்படுத்தி அவர்கள் பிரிந்து வாழும் நிலையைத் தோற்றுவித்தாலும் கூட தலைவியையும் தலைவனையும் சேர்த்துவைக்கும் பெருஞ்சேவையினைத் தோழியும், செவிலித்தாயும் செய்துள்ளனர் என்பதனை அறியும் போது பண்டைய தமிழர்கள் மத்தியில் இன்று கனடா போன்ற நாடுகளில் உள்ள திருமண ஆலோசகர்கள் அல்லது குடும்ப ஆலோசகர்களின் family counsellors, Marriage counsellors சேவை அங்கும் இடம்பெற்றுள்ளமை நோக்கற்பாலது. இன்று பல சமூகத்தவரிடமும் காணப்படும் ஒரு பெண்ணை விரும்பி அவளிடம் தன் காதலை வெளிப்படுத்தும் நிலை பண்டைய தமிழகத்திலும் இருந்துள்ளது. அது இன்று நாம் வாழும் நாடுகளில் சர்வசாதாரணமானதாகக் காணப்படுகின்றது. இதனை dating நாகரிகமாக அழைக்கின்றனர். ஒரு தலைவனும் தலைவியும் தனியே கண்டு உரையாடுவதனையே இது குறிக்கின்றது. வயது வந்த பெண்ணிடம் தலைவன் தன் காதலை வெளிப்படுத்தும் நிலை தமிழ் இலக்கியத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையை அறிந்துகொள்ளலாம். தலைவன் பரத்தமைபாற் சென்றானாயினும் அவன் தலைவியை நிரந்தரமாக விடுத்துப் பிரியும் நிலைமையோ அல்லது தலைமகள் மாற்றான்

ஒருவனை மணந்து கொள்ளும் நிலைமையோ தமிழகத்தின் ஒழுக்கத்தின் பாற்பட்டதாகக் கொள்ளப்படவில்லை. அதனின் மணமுறிவு என்ற பதமும் அங்கு பாவிக்கப்படவேண்டிய நிலை தோன்றியிருக்கவில்லை. எனவே இன்று காணப்படும் இந்திய திருமண முறிவுகள் பண்டைக் காலத்தில் இடம்பெற்றிருக்கவில்லை எனக் கருத முடிகின்றது.

இன்று பொருளாதார நிலைமைகள் மணமுறிவுகளிலும், குடும்ப வாழ்விலும் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. ஒரு குடும்பத்தில் நிலவும் பொருளாதார மந்த நிலை மட்டுமன்றி நாட்டின் பொருளாதார மந்த நிலையும் மணமுறிவில் தாக்கத்தை ஏற்படுத்துவதைக் காணலாம். பிரிந்து தனியே வாழுவதற்குப் போதிய பொருளாதார பலமின்மை மணமுறிவைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டுவதைத் தடை செய்கின்றது என்பதை உலகப் பொருளாதார மந்த நிலைகள் ஏற்பட்ட வேளைகளில் திருமண முறிவுகள் குறைவடைந்து காணப்பட்டமை காட்டுகின்றன.

ஒரு ஆணோ பெண்ணோ தனித்து வாழுவதற்கான பொருளாதார பலமும் அதுபற்றிய நிச்சயத் தன்மையும் மிக முக்கியமானதாகக் காணப்படுகின்றது. எதிர்காலத்தைப் பற்றிய சந்தேகம், பலவீனம் உள்ளத்தில் தோன்றுமானால், தனித்து வாழத் தலைப்படுவது பற்றி மறுபரிசீலனை செய்யத் தூண்டுவதாக அமையும். இவ்வித நிலைமைகள் ஆண், பெண் இருபாலாரையும் சிந்தித்துச் செயற்பட வைக்கின்றன. பொருளாதார பலம் யார் பக்கம் உள்ளதோ - அது ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ இருக்கலாம் - அவர்களின் கை மேலோங்கி நிற்பதைக் காணலாம். ஒருவர் பணிந்து போகவோ அன்றி ஏற்று நடந்து கொள்ளவோ அதுவே காரணமாகின்றது. மனித வாழ்வில் பொருளாதாரம் அதிக செல்வாக்குச் செலுத்தும் காரணியாக உள்ளது.

பொருளாதார நிலைமைகளும், மனமுறிவுகளில் ஆதிக்கம் செலுத்துகின்றன. பெண்களுக்கு உள்ள சட்டப்படியான உரிமைகளும் பொருளாதார அடிப்படையில் அமைந்துள்ளன.

பொருள் இல்லார்க்கு இவ்வுலக வாழ்வில் இன்பம் இல்லை என்பது எவ்வளவு தாக்கத்தை மனித வாழ்வில் கொண்டுள்ளது என்பது கருத்திற் கொள்ளக்கூடியது.



# குறிப்புகள்